உதயன்

சுடர் 30 கதிர் 305 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 10, ஞாயிற்றுக்கிழமை 27.09.2015

வெளிநாட்டு நாணயமாற்று சேவை
யாழ் நகரில் நம்பமுடியாத அதிகூடிய நாணயமாற்று பெறுமதியை வழங்குகின்றோம்.
GTV Enterprises (Pvt)Ltd.
Tel : 021 221 7224
No. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

# சர்வதேசத்துடன் இணைந்த பொறிமுறையே பொருத்தம்

## இந்திய அரசின் நிலைப்பாடு அதுவே என்கிறார் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ்

நியூயோர்க், செப்ரெம்பர் 27
இலங்கை முன்பிருந்த நிலையில் இருந்து ஒரு கடல் மாற்றம் போன்று மாறியுள்ளது. நீதிக்காக நாம் நிற்கிறோம். அதே நேரம் இலங்கையின் இறைமைக்கும் மதிப்பளிக்கின்றோம். போர்க்குற்றங்களை விசாரிக்க இலங்கை உள்நாட்டு மற்றும் சர்வ தேச நீதிப் பொறிமுறை கலந்த திட்டமொன்றை உருவாக்குவதே பொருத்தமாக அமையும். அது தான் அனைவருக்கும் வசதியானது என இந்தியா தெரிவித்துள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இந்

பக்.24






சாவுத் தண்டனை வேண்டாம்

விரிவு பக்.02

## மைத்திரி -மோடி நியூயோர்க்கில் பேச்சு



நியூயோர்க், செப்.27
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
இலங்கை நேரப்படி '

பக்.24

## ஐ.நாவுக்குப் புதல்வரையும் அழைத்துச் சென்ற மைத்திரி

கொழும்பு, செப்.27
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது புதல்வரை ஐ. நா பொதுச் சபைக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபாலவின் புதல்வர் தஹாம் சிறிசேன, நியூயோர்க்கில் ஜனாதிபதி

பக்.24



## ரவிராஜ் கொலையின் சந்தேக நபர் சுவிஸில்

கொழும்பு, செப்.27
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜ் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் சுவிட்சர்லாந்தில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபராகச் சரண்

பக்.24

## இலங்கையின் முடிவை வரவேற்கிறது பிரிட்டன்

ஜெனிவா, செப்.27
ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா உள்ளிட்ட நான்கு நாடுகளால் முன்வைக்கப்பட் டுள்ள தீர்மான வரைவுக்கு இணை அனுசரணை வழங்க இலங்கை எடுத்துள்ள முடிவைப் பிரிட்டன் வரவேற்றுள்ளது.
இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வயர், ஜெனிவா தீர்மானத்துக்கு இலங்கை

பக்.24

## பக்தர்கள் கூட்டம் அலை மோத வல்லிபுர ஆழ்வார் தேரில் வலம்



கரணவாய், செப். 27
வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்று அலை கடலெனத் திரண்டிருந்த பக்தர்களின் அரோகரா கோசத்துடன் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது.
நேற்று அதிகாலை விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து எம்பெருமான் அழகிய தேரிலேறி அடியவர்களுக்குக் காட்சியளித்தார்.
பூசைநேரம் தாமதமாகியமையால் இராகுகாலம் சூழ்ந்துகொள்ள இராகு காலம் கழியும் வரை காத்திருந்து முற்பகல் 10.30 மணிக்கே வல்லிபுரஆழ்வார் தேரேறி வலம் வந்து 12 மணியளவில் இருப்பிடத்தை அடைந்தார்.
அரோகரா கோசத்துடன் அடியவர்கள்

பக்.24

## இலங்கையின் மறுசீரமைப்புக்கு இந்தியாவின் பங்களிப்பு தேவை

### மோடியிடம் வலியுறுத்தினார் பான் கீ - மூன்

நியூயோர்க், செப்.27
இலங்கையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா முக்கிய பங்களிப்பை வழங்கவேண்டும் என்று ஐ. நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.
இந்திய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தபோது

பக்.24


IIS CITY CAMPUS
200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
புதிய பிரிவு ஆரம்பம் : 28.09.2015
HND
Computing and Systems Development
Civil Engineering
Business Management
071 777 5666
021 4900 900

www.sdb.lk
நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி
10.75%
| | | | |
|---|---|---|---|
| | [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | 7.25% | 8.25% | 8.75% |
| [illegible] | 7.45% | 8.42% | 8.79% |
011 5 411 411
SDBL
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுத் தண்டனை உலகில் வேண்டாம்

## உலகத் தலைவர்களிடம் பாப்பரசர் வலியுறுத்து



நியூயோர்க், செப்.27
சாவுத் தண்டனையை நீக்குமாறு உலக நாடுகளிடம் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.
ஐ.நாவின் 70 ஆவது பொதுச் சபைக் கூட்டம், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. இந்த அமர்வின் ஆரம்ப உரை பாப்பரசர் புனித பிரான்சிஸ் நிகழ்த்தினார். இதன்போதே சகல நாட்டுத் தலைவர்களிடமும் அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.
பாப்பரசரின் இந்த உரையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் அமைதியாக, ஆழ்ந்து செவிமடுத்தார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை ஐ.நா. பாதுகாப்புச் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தினார்.
உலக நாடுகளுக்குக் கடனுதவி அளிக்கும் வங்கிகள், நிதி நிறுவனங்களில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். வளர்ச்சி குன்றிய நாடுகளின் மேம்பாட்டுக்காகவே இதுபோன்ற வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளதே தவிர, அவற்றை மேலும் பலவீனப்படுத்துவதற்காக அல்ல.
இதனைக் கருத்தில்கொண்டு, கடனுதவி வழங்கும் வங்கிகள், நிதி நிறு வனங்களின் கோட்பாடுகளில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். அப்போதுதான், நிலையான வளர்ச்சி என்ற இலக்கை எட்டுவது சாத்தியமாகும்.
அதுபோல், ஐ.நா. பாதுகாப்புச் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் பழைமையான கோட்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன. எனவே, அவற்றில் சீர்திருத்தம் செய்வதும் காலத்தின் கட்டாயம்–என்றார் அவர். (த–வ)

# 10 லட்சம் பணத்துடன் கம்பி நீட்டினார் ஆசாமி

## தங்கப் புதையல் கிடைத்ததாகக் கூறி புலோலி ஆசிரியையை ஏமாற்றி

யாழ்ப்பாணம், செப். 27
பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் 10 லட்சம் ரூபா பணத்தை ஆசிரியர் ஒருவர் இழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.
இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் பணத்துடன் தலைமறைவான சந்தேக நபரைத் தீவிரமாகத் தேடி வருவதாகவும் பருத்தித்துறைப் பொலி ஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பாக தெரியவருவதாவது:–
வடமராட்சியில் உள்ள ஆசிரியையும் அவரது கணவனும் வசிக்கும் வீடொன்றுக்குக் கடந்த சில மாதங்களுக்கு முன் வந்த இளைஞர் ஒருவர், தான் வெளியூரைச் சேர்ந்தவர் என்றும், தான் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபடுவதாகவும், தனக்கு தங்குவதற்கு இடம் தருமாறும் கெஞ்சியிருக்கின்றார். வயதுபோன அந்த ஆசிரியையும் அவரது கணவனும் தனியாக வசிப்பதனாலும் இரக்கப்பட்டு அவருக்குத் தங்க இடம் கொடுத்துள்ளனர். மூன்று மாதங்களாக அவர்களுடன் பழகி நம்பிக்கைக்குரிய வராகத் தன்னைக் காட்டியிருக்கிறார் அந்த இளைஞன்.
இதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை வீட்டுக்கு வந்த இளைஞர், தான் வீதிப் புனரமைப்புக்காக மண் வெட்டியபோது புதையல் ஒன்று கிடைத்ததாகவும், அதில் தங்கக் கட்டிகள் இருப்பதாகவும் கூறி பையொன்றைக் காட்டியிருக்கிறார். அதில் சில தங்கங்கள் இருந்ததை தாங்கள் கண்டதாக ஆசிரியை பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கின்றார்.
இந்தப் பையை உங்களுக்குத் தருவதாகவும், எனக்கு இதை வைத்துக் கொண்டு 10 லட்சம் ரூபா பணம் தருமாறும் அவர் ஆசிரியையிடம் கோரியிருக்கின்றார். இதனை அடுத்து ஆசிரியையும் கணவனும் 10 லட்சம் ரூபா திரட்டி அதை இளைஞர் கையில் கொடுத்துள்ளனர். இளைஞரும் குறித்த தங்கக்கட்டிகளைப் பாதுகாப்பாகப் பையொன்றில் போட்டுத் தருவதாகக் கூறி உள்ளே சென்று பின் அங்கிருந்து பணத்துடன் கம்பி நீட்டிவிட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பான முறைப்பாடு கடந்த வியாழக்கிழமை தமக்கு கிடைக்கப் பெற்றதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (த–109)

# 1990 இல் இடம்பெயரும்போது புதைத்த தங்க நகையை 2015 இல் மீட்டார் பெண்

## வறுத்தலைவிளானில் உள்ள தனது காணியிலிருந்து

யாழ்ப்பாணம், செப். 27
வலி வடக்குப் பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டு தனது சொந்தக் காணியில் பாதுகாப்புக் கருதி புதைத்து வைத்த ஒரு தொகுதி தங்க நகைகளைத் தாயார் ஒருவர் கடந்த வியாழக்கிழமை மீட்டெடுத்தார். இது குறித்து அவர் மட்டற்ற மகிழ்ச்சியடைந் துள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–
1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10ஆம் திகதி இரண்டாம் ஈழப் போர் ஆரம்பித்தவேளை வறுத்தலைவிளான் பகுதியில் இருந்து தனது தாயாருடன் இடம் பெயரும் போது பாதுகாப்புக் கருதி ஒரு தொகுதி தங்க நகைகளை தமது வீட்டு வளவின் ஓர் இடத்தில் புதைத்து வைத்து விட்டு வந்துள்ளார் யுவதி ஒருவர்.
இவர்கள் இடம்பெயர்ந்து உரும்பிராய் பகுதியில் வசித்து வந்தனர். குறித்த யுவதியின் தாயாரும் காலமாகிவிட்டார். குறித்த யுவதியும் திருமணமாகிப் பிள்ளைகளுடன் வாழ்கின்றார்.
வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 1000 ஏக்கருக்கு அருகில் உள்ள வேலியோரமே அவர்களது குறித்த காணி அமைந்துள்ளது. இது தொடர்பில் குறித்த பெண் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரின் உதவியை நாடியுள்ளார். இதற்கமைய அவர் மேற்கொண்ட முயற்சியின் பயனாகக் குறித்த பெண்ணின் குடும்பத்தால் கடந்த 25ஆண்டுகளுக்கு முன்னர் புதைத்து வைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் அனைத்தும் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. (த–105)

# தியாகி திலீபனின் நினைவு நேற்று சிறப்புற அனுஷ்டிப்பு




கொழும்பு, செப். 27
நல்லூரில் உண்ணா நோன்பிருந்து உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 28 ஆவது ஆண்டு நினைவு தினம் புலம் பெயர் தேசங்களில் நேற்றுச் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன.
இந்திய– இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதிச் சூழலில் இந்திய அமைதிப் படையினரின் பிரசன்னத்துடன் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றம் சாட்டிய திலீபன், இந்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி நல்லூர் வீதியில் நீராகாரம் இன்றி அவர் போராட்டத்தில் இறங்கினார்.
இராசையா பார்த்தீபன் என்ற இயற் பெயர் கொண்ட திலீபன் 12 நாள்கள் தொடர்ச்சியாக நீராகாரம் எதுவுமின்றி உண்ணாவிரதம் இருந்து செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி கோரிக்கைகள் எதுவுமே நிறைவேற்றப்படாத நிலையில் உயிரிழந்தார்.
கடந்த காலங்களில் இத்தினத்தை விடுதலைப்புலிகளால் எழுச்சி பூர்வமாகத் தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் அரச படைகளின் கட்டுப்பாட்டில் தமிழர் தாயகம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் அந்த நிகழ்வு ஈழ தேசத்தில் கொண்டாடப்படுவதில்லை.
ஆனால் புலம்பெயர் தேசங்களில் அந்த நிகழ்வு வருடாந்தம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. நேற்றைய தினமும் தியாகி திலீபனின் நிகழ்வு உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த–4)

# கைதிகளின் விடுதலைக்காக நேற்று விசேட வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப். 27
நீண்ட காலம் தீர்க்கப்படாத தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டியும், சிறைக் கைதிகளின் விடுதலை வேண்டியும் யாழ்ப்பாணத்தில் நேற்று விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.
யாழ். இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் இந்த வழிபாடுகள் இடம்பெற்றன.
தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டியும், நீண்டகாலம் சிறைகளில் வாடும் சிறைக் கைதிகளின் விடுதலை வேண்டியும் யாழ். கந்தர்மடத்தில் உள்ள இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் ஸ்ரீசிவாகம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானுக்கு நேற்றுப் பிற்பகல் ஒரு மணி முதல் 6 மணி வரை வழிபாடு இடம்பெற்றது. இதில் விசேட பூசைவழிபாட்டுடன் இசைவழிபாடுகளும் இடம் பெற்றன. (த–101)

# மண் சரிவில் ஏழு பேர் சாவு

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட கொத்மலை, ரம்பொடை வெதமுல்ல பிரிவு லிலிஸ்லேண்ட் (கயிறு கட்டி) தோட்டத்தில் இடம் பெற்ற மண் சரிவில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். மீட்புப் பணி யாளர்களால் நேற்று முன்தினம் இரவு வரை 6 சடலங்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை 2 வயதுடைய சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதையடுத்து உயிரிழந்தோர் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிள்ளைகளை உடன் விடுவியுங்கள்

## அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பு நீதியமைச்சருக்குக் கடிதம்

கொழும்பு, செப் 27

அரசியல் கைதிகள் என்ற பெயரில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது பிள்ளைகள் அனைவரையும் பொதுமன்னிப்பு அளித்து உடனடியாக விடுதலை செய்து தங்களின் உண்மையான நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்சவுக்கு அரசியல் கைதிகளின் விடுதலைக்கான மக்கள் அமைப்பு நேற்றுமுன்தினம் அனுப்பிவைத் துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசியல் கைதிகளின் உறவினர்களான பெற்றோர் மற்றும் மனைவி, பிள்ளைகளாகிய நாம் கடந்த 20ஆம் திகதி அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை வேண்டி ஜனாதிபதிக்கும் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஒரு பகிரங்க மடலை அனுப்பியிருந்தோம்.

அதன்பின் கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் தாங்கள் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளைத் துரிதப் படுத்துவதற்காக மேற்கொண்ட - மேற்கொள்ளவுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக வெளியிட்ட சில கருத்துகளையும் ஊடகங்கள் ஊடாக அறிந்துகொண்டோம்.

தங்கள் ஊடக அறிக்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக 2012ஆம் ஆண்டு நீதியமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீம் தலைமையில் விசேட நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த விசேட நீதிமன்றத்தில் 482 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பயங்கர வாதத் தடைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவர்களின் வழக்குகள் உட்பட பாலியல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 346 வழக்கு விசா ரணைகள் 28 மாதங்களில் நிறைவுசெய்யப்பட்டுவிட்டதாகக் கூறியிருந்தீர்கள்.

ஆனால், விசேட நீதிமன்றத் தின் ஊடாக விசாரணைகள் முடிவடைந்ததாகக் கூறிய 346 வழக்குகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய் யப்பட்டவர்களின் வெறும் 4 வழக்குகள் மட்டுமே முடிவடைந்திருக்கின்றன.

ஏனைய 342 வழக்குகளும் பாலியல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பானவை என்பதையும் கூற மறந்து விட்டீர்கள்.

எனவே, இந்த விசேட நீதிமன்றமானது பாலியல் மற்றும் சிறுவர் துஷ் பிரயோகம் தொடர் பான வழக்கு விசா ரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்டதென்பதே உண்மையாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களின் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக அநுராத புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட விசேட நீதிமன்றம் 2013 ஓகஸ்டில்தான் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றிலிருந்து இன்றுவரை தாங்கள் கூறியதுபோன்று 28 மாதங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் 15 வழக்குகளே அநுராதபுர விசேட நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதில் 3 வழக்குகள் தொடர் பாக குற்றச்சாட்டுகள் சுமத் தப்பட்ட 3 அரசியல் கைதிகள் தம்மீதான குற்றச்சாட்டுகளுக்கான வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளக்கூடிய பொருளா தாரப் பின்னணி இல்லாத காரணத்தால் தம் மீதான குற்றச்சாட்டுகளைப் பொறுப்பேற்று தண்டனை பெற்றுள்ளனர்.

கடந்த 25 மாதங்களில் விசேட நீதிமன்றங்களால் நிறைவுசெய்யப்பட்டதாகக் கூறப்பட்ட 346 வழக்குகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்படாது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 4 வழக்குகள் தவிர்ந்த ஏனைய 342 வழக்குகளும் பாலியல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பானவை என்பதே உண்மையாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டவர்களின் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்து வதற்காக ஆரம்பிக்கப்பட்ட அநுராதபுரம் விசேட நீதிமன்றத்தின் செயற்பாடுகள் இவ் வாறிருக்கும் போது ஏனைய மாவட்டங்களிலுள்ள நீதிமன்றங்களின் செயற்பாடுகள் தொடர்பாக நாம் தங்களுக்கு விளக்கவேண்டிய தேவை இல்லையென நம்புகின்றோம்.

நாங்கள் வெளியிட்ட தகவல்கள் தங்களின்கீழ் உள்ள அதிகாரிகள் தங்களுக்கு வழங்கிய பொய்யான தகவல்களாகும். அல்லது தற்போதைய சூழலில் தாங்கள் சர்வதேசத்தையும் எம்மையும் திருப்திப்படுத்துவதற்காக மட்டும் வெளியிட்ட ஓர் அறிக்கையாகும்.

எமது கடிதங்கள்மூலம் எமது பிள்ளைகளின் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறோ அல்லது விசேட நீதிமன்றங்கள், விசேட குழுக்கள் மற்றும் பிரதிநிதிகளை நியமிப்பது போன்ற கருத்துகளின் ஊடாக தொடர்ந்தும் எமது பிள்ளைகளின் விடுதலைக்கான காலங்களை இழுத்தடிப்பதற்கான கருத்துகளையும் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகளிடமிருந்து நாம் எதிர்பார்க்கவில்லை.

சிறைகளில் இருக்கும் எமது பிள்ளைகள் அனைவரும் விசாரணை என்கின்ற பேரில் நீதிக்குப் புறம்பான முறையில் 8 தொடக்கம் 15, 20 வருடங்கள் சிறைத்தண்டனையை அனுபவித்துவிட்டார்கள்.

எனவே, எமது பிள்ளைகள் அனைவரையும் பொதுமன் னிப்பு அளித்து உடனடியாக விடுதலைசெய்து தங்களின் உண்மையான நல்லாட்சி மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்து மாறு வேண்டுகின்றோம்- என் றுள்ளது. (த-சி)

# வங்கி ஒன்றுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்துக்கு முயற்சி

## கிளிநொச்சி முன்பள்ளி ஆசிரியர்கள் சிலர்

கிளிநொச்சி, செப். 27

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வங்கி ஒன்றில் சி.எஸ்.ரி நிறுவனத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பண்ணைப் பணியாளர்கள் கடனுக்காக விண்ணப்பித்துக் கடன் பணம் கிடைக்காதபோதும், அவர்களது சம்பளத்திலிருந்து கடனுக்கான தவணைக் கட்டுப்பணத்தைக் குறித்த வங்கியினர் அறவிட்டுள்ளதாகக் கூறி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயற்சித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் குறித்த வங்கியில் கடன் பெறுவதற்காக சி.எஸ்.ரி நிறுவன பணியாளர்களிடம் இருந்து 700 க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. குறித்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து அவர்களது மாதாந்த வேதனம் வைப்புச் செய்யப்படுகின்ற வங்கிளுக்கான நிலையான கட்டளையும் குறித்த வங்கியினால் பெறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இம்மாதம் தங்களுக்கு வைப்புச் செய்யப்பட்ட சம்பளத்திலிருந்து வங்கி கடனுக்கு என மாதாந்தத் தவணைப் பணம் அறவிப்பட்டுள்ளது. ஆனால் தங்களுக்குக் குறித்த வங்கியினால் இதுவரைக்கும் கடன் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடும் கடன் விண்ணப்பதாரிகள், ஏழு இலட்சம் ரூபா கடனுக்கு விண்ணப்பித்தவர்களிடம் மாதாந்த தவணைக் கட்டணமாக 12 ஆயிரத்து 900 ரூபாவும், ஐந்து இலட்சம் ரூபா கடனுக்கு விண்ணப்பித்தவர்களிடமிருந்து 10 ஆயிரம் ரூபாவும் தவணைக் கட்டணமாகவும் அறவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயற்சித்தனர். ஆனாலும் வங்கியில் முகாமையாளர் இல்லாததன் காரணமாக ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

இது தொடர்பாக குறித்த வங்கி முகாமையாளரை நேரடியாகச் சந்தித்து கேட்டபோது,

தமது வங்கியினால் சி.எஸ்.ரி பணியாளர்களுடைய எந்தப் பணமும் அறவிடவில்லை.சி.எஸ்.ரி பணியாளர்கள் கடனுக்கு விண்ணப்பித்தபோது அது தொடர்பாக நாங்கள் சி.எஸ்.ரி நிறுவனத்தினருக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். எனவே பணியாளர்களுடைய சம்பளத்தை அவர்களே வெட்டி மிகுதிப் பணத்தை மட்டுமே வங்கியில் வைப்பில் இடுகின்றனர். இது தொடர்பாக எமது வங்கியின் மேல் இடத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளேன். அவர்கள் சி.எஸ்.ரி நிறுவனத்தினரிடம் கதைப்பதாகக் கூறியிருந்தார்கள்- என்றார். (த-ரி3-21)

# பெண்களைத் தள்ளி விழுத்தி தாலிக் கொடிகள் அபகரிப்பு

சுன்னாகம், செப். 27

சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் பகல் வேளை இரு வேறு சம்பவங்களில் வீதியால் சென்ற இரு பெண்கள் தள்ளி விழுத்தப்பட்ட பின்னர் தாலிக்கொடிகள் கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன. கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரு வேறு பிரதேசங்களில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் வீதியால் சென்ற இரு பெண்களின் தங்க நகைகள் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அபகரிக்கப்பட்டுள்ளன. சுமார் அரை மணி நேரத்துக்குள் இந்த இரு சம்பவங்களும் இடம்பெற்றன. சுன்னாகம் ஐயனார் ஆலயம் அருகில் இடம்பெற்ற சம்பவத்தின்போது குறித்தபெண்மணி தனது தாலியைக் கைகளால் இறுகப்பிடித்தவாறு கூக்கூரல் இட்டபோதும் வீதியில் தாலியை அறுத்த கொள்ளையர்கள் சம்பவ இடங்களில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இரு சம்பவங்கள் தொடர்பிலும் சுன்னாகம் பொலிஸில் முறையிடப் பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-101-86)

# பாதுகாப்புச் சேவை ஒப்பந்தங்களில் வடக்கு மாகாண சபை முறைகேடா?

## யாழ். மேல்நீதிமன்றில் ரிட் மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், செப் 27

வடக்கு மாகாண சபையின் சில அமைச்சுக்களின் கீழ் சுமார் ஒன்பது கோடி ரூபா பெறுமதியான பாதுகாப்பு மற்றும் துப்புரவுச் சேவைகளை வழங்குவதில் ஒழுங்கீனம் இடம்பெற்றிருப்பதாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனம் ஒன்று நீதிமன்றுக்குச் சென்றிருக்கின்றது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் சுமார் 3 கோடி 35 லட்சம் ரூபா பெறுமதியான ஒப்பந்தமும், வடக்கு கல்வி அமைச்சின் கீழ் சுமார் 5 கோடி 25 லட்சம் ரூபா பெறுமதியான ஒப்பந்தமும் வழங்குவதிலேயே ஒழுங்கீனமும் முறைகேடுகளும், நீதிக்குப் புறம்பான நடைமுறைகளும் இடம்பெற்றிருக்கின்றன என்று குற்றஞ் சுமத்தியுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை நிறுவனம், அதனால் பாதிக்கப்பட்ட தமக்கு நியாயம் கேட்டு இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது. கடந்த வாரம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி வி.மணிவண்ணன் மூலமாக இந்த வழக்கு முன்னெடுக்கப்படுகிறது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சர், வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரை எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிட்டு உறுதிகேள் எழுத்தாணை, ஆணையீட்டு எழுத்தாணை ஆகியவற்றுக்கான விண்ணப்பம் அடங்கிய முதலாவது வழக்கு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை ஏற்றுக்கொண்டுள்ள யாழ். மேல்நீதிமன்றம் மேற்படி வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தரப்புக்கு ஒப்பந்தம் வழங்கியமைக்கு எதிரான இடைநிறுத்திவைக்கும் கட்டளை ஒன்றைப் பிறப்பிப்பது குறித்த ரிட்மனு எதிர்வரும் 6ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது.

இதேவேளை, வடக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு எதிராக தமது வழக்கு அடுத்த வார முற்பகுதியில் தாக்கல் செய்யப்படவிருக்கின்றது என்று மேற்படி பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகமும், பிற அமைச்சுகளும் ஓர் அடிப்படையில், நியாயமானமுறையில் இத்தகைய ஒப்பந்தங்களை வழங்க, மாகாண சபையின் கீழ் இயங்கும் வேறு சில அமைச்சுகளும் பிரிவுகளும் ஒன்றுக்கொன்று முரணான விதிமுறைகளை மேற்கோள்காட்டி ஒப்பந்தங்களை தவறான முறையில் - தம் விருப்புக்கேற்ப வழங்குகின்றன என மேற்படி பாதுகாப்புச் சேவை நிறுவனம் குற்றஞ்சுமத்தியுள்ளது. (த-4)

# மாணவர் குழுக்கள் மோதல்; பீடாதிபதியிடம் வாக்குமூலம்

## கோப்பாய் பொலிஸாருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம் செப். 27

யாழ். பல்கலைக்கழகத்தின் இரு மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதி, பதிவாளர், மற்றும் மூன்று விரிவுரையாளர்களின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு யாழ்.நீதிவான் நீதி மன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

இம்மாதம் 10 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தின் இரண்டு மாணவர் குழுக்களிடையே ஆரம்பித்த மோதல் பல்கலைக்கழகத்துக்கு வெளியேயும் பரவி இராமநாதன் வீதியிலும் நடந்தது. கொட்டன்கள், சைக்கிள் செயின்கள் சகிதம் மாணவர்கள் மோதலில் ஈடுபட்டதைப் பார்த்த பொதுமக்கள் பொலிஸாருக்குச் சம்பவம் தொடர்பாக அறிவித்துள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தபோது மோதலில் ஈடுபட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் புகுந்து மறைந்து கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிசாரினால் மறுநாள் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முதல் அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட்டது. அவ்வேளை விரிவுரையாளர்கள் பொலிஸாரின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவில்லையெனவும் குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து நீதிவானால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மோதலில் ஈடுபட்டவர்களை கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு கட்டளையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் கோப்பாய் பொலிஸாரால் கலைப்பீடத்தின் பீடாதி பதி, பதிவாளர் மற்றும் மூன்று விரிவுரையாளர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களைப் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், சம்பவம் தொடர்பாக வாக்குமூலமளிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (த-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944

விளம்பரம் : 021-493 1111

விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## நவநீதம்பிள்ளை அம்மையாரின் கேள்விக்கு என்ன பதில் பாரதமே!

ஒவ்வொரு நாடும், தனது குடிமக்களைக் காப்பாற்ற வேண்டும். அதனைச் செய்வதற்கு எந்த ஒரு நாடாயினும் தவறும் பட்சத்தில், அதன் நட்பு நாடுகள் தலையிட்டுப் பொதுமக்களைக் காப்பாற்றுவது அவற்றின் கடமை. இது குறித்துத் தெளிவான அனைத்துலகச் சட்டங்கள் உள்ளன.

தனது அயல் நாடான இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில், இந்தியா உரிய நேரத்தில் தலையிட்டு இருப்பின் நாற்பதாயிரம் பொதுமக்களின் உயிரிழப்பைத் தவிர்த்திருக்க இயலும்.

மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருப்பவர் தமிழக அரசியல் தலைவர் எவருமல்லர்; ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையே அவராவார்.

இந்தியாவில் "தந்தி" தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே, நவநீதம்பிள்ளை அம்மையார் வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையில் மிக முக்கியமான, செல்வாக்கு மிக்க நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது இந்தியா. அது இலங்கையில் நடைபெற்ற போரின்போது தலையிட்டு நாற்பதினாயிரம் பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்றி இருக்க வேண்டும் அதனைச் செய்வதற்கான வலு இந்தியாவுக்கு இருந்தது--

ஆனால், இலங்கை சம்பந்தப்பட்ட விவகாரத்தில் இந்தியா செயற்பட்டமுறை ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. அது பெரும் தவறு இழைத்துவிட்டது--

தென்னாபிரிக்காவில் நடைபெற்றதுபோன்று, அது உள்நாட்டுப் பிரச்சினை என்று முத்திரை (Label) ஒட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது-

நாற்பதாயிரம் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்டதை உள்நாட்டுப் பிரச்சினை என்று கூற இயலுமா? அது முழுக்க முழுக்க அனைத்துலக விவகாரமே--

என்று நவநீதம்பிள்ளை எடுத்தியம்பி உள்ளதை இலங்கை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது என்பது மிகுந்த திண்ணம்!

அதற்கான பின்புலத் தகவல்களில் சிலவற்றை இங்கே வரிசைப்படுத்தி நோக்கலாம்:

★ போர் நிறைவுக்கு வந்த கையோடு, இறுதிப் போரில் பொதுமகன் எவரதும் உயிரிழப்பு இல்லாமலே, அது வெற்றி கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தமை.

★ அரசின் மனித நேய நடவடிக்கை நூறு வீதம் வெற்றி கண்டது எனக் கர்ச்சித்தமை.

★ பின்னர் சில நாள்களில், ஒரு சில உயிரழிப்புக்கள் உண்டானது வாஸ்தவம்தான் என்று மெல்லிய தொனியில் விளம்பியமை.

★ அதன் பிற்பாடு குறுகிய காலத்தில் ஒட்டு மொத்தமாக சுமார் 7,700 பொதுமக்களே போரின் போது கொலையுண்டார்கள் என்று மறுத்தான் அறிக்கையும் அரசதரப்பில் இருந்து வெளியானது!

அதன் உள்ளார்ந்த கருத்தும், இலக்கும், நோக்கமும், தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் நடத்தப்பட்ட போதிலும், உயிர் அழிவுகள் குறைவே என்று காட்டுவதாகவே இருந்தது!

இப்போதும், இந்தியாவின் உள்ளாடும் கள்ளாடுமான போக்கு, முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கருத்து வெளிப்பாட்டில் இருந்து துலாம்பரமாகத் தெரிகிறது.

1987 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும், ராஜீவ்காந்திக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்தியப் படைகள் அமைதி காக்கும் படையினர் என்ற வகை யில் இலங்கையில் நிலைகொண்டதும், இங்கி ருந்து திரும்பப் பெறப்பட்டமையும் சமகால வரலாறு.

போரில் இந்தியப் படையினர் பலர் உயிரிழந்தனர் என்பதும் ஊன்றி எழுதப்பட்ட பதிவுகளே.

அதற்கு வஞ்சம் தீர்க்கும் பொருட்டு, நவநீதம்பிள்ளை அம்மையார் இப்போது புட்டுக் காட்டும் நாற்பதினாயிரம் தமிழ் மக்களின் உயிரை இலங்கை விழுங்குவதற்கு, இந்தியா கை அசைத்துள்ளது என்பதை இனியும் நம்பாமல் இருப்பது எவ்வகைப் பொருத்தம்?!

# கிட்டுப் பூங்கா புனரமைப்பு விரைவில் ஆரம்பமாகும்

### மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப், 27

அமைந்துள்ள கிட்டுப் பூங்காவைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் உதவியுடன் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, இந்த ஒப்பந்தம் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். நல்லூர் உற்சவகாலச் செயன்முறை ஏற்பாடுகளினால் குறித்த திட்டம் தாமதப் படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதங்களில் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான நடைமுறைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஐந்து வருட காலப் பகுதியினுள் பூங்காவில் நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுமதி, பூங்காவின் பொதுமக்கள் பாவனைக்கான கட்டணம் முதலிய வற்றை வடக்கு மாகாண விவசாய அமைச்சு தீர்மானித்தாலும், ஐந்து வருடங்களுக்கான கட்டண அறவீட்டு உரிமை யாழ்.மாநகர சபைக்கு உரியதாகவே காணப்படுகிறது.

இதுபோன்ற ஒரு செயன்முறையூடாகவே கிட்டுப் பூங்காவை அபிவிருத்திச் செய்வதற்காக வடக்கு மாகாண விவசாய அமைச்சிடம் தற்காலிகமாக கையளித்துள்ளோம். பூங்கா முழுமையாக விவசாய அமைச்சிடம் வழங்கப்படவில்லை–என்றார்.

யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான கிட்டுப் பூங்காவை ஐந்து ஆண்டுகால அபிவிருத்தித் திட்டத்துக்காக வடக்கு மாகாண விவசாய அமைச்சிடம் கையளிப்பது தொடர்பிலான ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி ஐந்து வருட அபிவிருத்தியின்பின்னர் வடக்குமாகாண விவசாய அமைச்சு, யாழ்.மாநகர சபைக்குக் கிட்டுப் பூங்காவை மீளவும் கையளிக்கும். விவசாய அமைச்சு பூங்கா அபிவிருத்திக்குக் கால நீடிப்பு தேவை என்று கருதினால் பிறிதொரு ஒப்பந்தம் ஊடாகக் கால நீடிப்பைப் பெற முடியும். கிட்டுப் பூங்காவுக்கான அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் விவசாய அமைச்சினால் தயாரிக்கப்பட்டு, மாநகர சபையின் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக அங்கீகாரம் பெறப்படும். பூங்கா அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் விவசாய அமைச்சு செயற்படுத்தும்.

பூங்கா அபிவிருத்திக்கு யாழ்.மாநகர சபை நிதி வழங்கினால், யாழ். மாநகர சபை மற்றும் வடக்கு விவசாய அமைச்சு இணைந்து செயற் திட்டங்களைத் தயாரிக்கும். ஐந்து வருட காலப் பகுதியிலும் பூங்காவின் பராமரிப்பு யாழ்.மாநகர சபைக்கு உரியதாகும்.

ஐந்து வருட காலப் பகுதியினுள் பூங்காவில் நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுமதியை வடக்கு மாகாண விவசாய அமைச்சு தயாரிக்கும்போதும். ஐந்து வருடங்களுக்கான பூங்காவின் பொதுமக்கள் பாவனைக் கட்டணத்தை வடக்கு மாகாண விவசாய் அமைச்சு தீர்மானிக்கும். கட்டணம் அறவிடும் உரிமை யாழ்.மாநகரசபைக்கு உரியதாகும்–என்றார். (த–ரி5)

## அமெரிக்க தீர்மானத்தை ஏற்கக்கூடாது இலங்கை

### திஸ்ஸ விதாரண கோரிக்கை

கொழும்பு, செப் 27

பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய நீதித்துறைக் கட்டமைப்பை பரிந்துரைசெய்துள்ள அமெரிக்கப் பிரேரணையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று முன்னாள் சிரேஷ்ட அமைச்சரும், லங்கா சமசமாஜக் கட்சித் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கோரிக்கை விடுத்தார்.

அமெரிக்கப் பிரேரணையில் பரிந்துரைசெய்யப்பட்டுள்ள விசாரணைப் பொறிமுறையானது சர்வதேச விசாரணைக்கே மறைமுகமாக வழிவகுக்கும் என்றும் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கைக்கு ஆதரவான பிரேரணை குறித்து வினவியபோதே மேற்கண்ட வாறு குறிப்பிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமெரிக்கப் பிரேரணையானது பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய உள்ளக நீதித்துறைக் கட்டமைப்புடன்கூடிய விசாரணைப் பொறிமுறையை முன்னெடுக்கவேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. இது எமது நாட்டின் இறைமைக்கும், சுதந்திரத்துக்கும், நீதித்துறைக் கட்டமைப்புக்கும் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலாகும்.

விசாரணைகள் இடம்பெறவேண்டுமாயின் அது எமது நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்புக்குள்ளேயே நடைபெறவேண்டும். போர்க்குற்றங்கள் தொடர்பில் எமது சட்ட கட்டமைப்பில் ஏற்பாடுகள் இல்லாவிட்டால், விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை எமது சட்ட கட்டமைப்புக்குள் உள்வாங்குவதற்காக நாடாளுமன்றத்தில் சட்டமூலங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதனூடாக அதனைச் செய்யலாம்.

ஆனால், அமெரிக்கப் பிரேரணையின் பரிந்துரையூடாக சர்வதேச தரப்பினரை உள்வாங்கிக்கொண்டே விசா ரணைகள் அமையும். இது எமது சட்ட கட்டமைப்பை சவாலுக்கு உட்படுத்துவதாக அமையும். எனவே, இந்த அமெரிக்கப் பிரேரணையை ஏற்றுக்கொள்ளக் கூடாது என அரசாங்கத்தைக் கோருகின்றேன்–என்றார்.

பொதுநலவாய மற்றும் வெளி நாட்டுத் தரப்புகளின் ஆதரவுடன் உள்நாட்டு விசாரணையை நடத்த வலியுறுத்தி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்துள்ள பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் ஆதரவளிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–சி)

## புத்தளத்தில் சூடு; இளைஞர் சாவு

புத்தளம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட முள்ளிபுரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 26 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரின் மனைவியும் பிள்ளைகளும் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, வீட்டில் இவர் மாத்திரமே இருந்துள்ளார். இவர் [illegible]மையில் உறங்கிக்கொண்டிருந்த போதே, துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சிலாபத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னேஸ்வரம் கிபில்ல வெவ பகுதியைச் சேர்ந்த 21 வயதான இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும், சந்தேகநபர் தப்பிச்சென் றுள்ளார் எனவும் சிலாபம் பொலி ஸார் கூறினர்.

எனினும், சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும், அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் எனவும் சிலாபம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த–சி)

## சர்வதேச விசாரணையிலிருந்து இலங்கை தப்பும் சாத்தியம்

### கூறுகிறது ஏ.எவ்.பி.

கொழும்பு, செப். 27

அடுத்த வாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், இலங்கையில் இடம்பெற்ற நீண்ட உள்நாட்டுப் போரின்போது நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணையை இலங்கை அரசு தவிர்த்துக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக ஏ. எவ்.பி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

போரின்போது இடம்பெற்ற எந்தவொரு விசாரணையானாலும் அதில் வெளிநாட்டு வகிபாகம் இருக்க வேண்டும் எனக் கோரிய முன்னைய தீர்மான வரைவில் நீர்த்துப்போதலை மேற்கொள் வதில் இலங்கை அரசு வெற்றிகரமான முறையில் திரட்டியிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப் பிக்கப்பட்ட வரைபுத் தீர்மா னத்தில் நடைபெறக்கூடிய விசாரணையின்போது வெளிநாட்டு நிபுணர்களை ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் குறித்து பிரஸ்தாபித்திருப்பினும் அந்த நிபந்தனையைக் கட்டாயமான தொன்றாகக் குறிப்பிடவில்லை என ஏ.எவ்.பி. சுட்டிக்காட்டியுள்ளது. (த–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Physics

Physics classes in English Medium / Tamil Medium Personal classes / Group classes
மேலதிக தகவல்களுக்கு :
077 281 4635

## தேவை

சுத்தமான நாவல் விதை தொகையாக எடுக்கப்படும்
தொடர்பு :
ஹேர்பல் ஹெல்த் கோர்ர் சென்ரர்
58 K.K.S வீதி கொக்குவில் T.P: 077 820 1195

## அறைகள் வாடகைக்கு

வெள்ளவத்தையில் அறைகள் நாள் வாடகைக்கு 600/=, 1200/=, 2500/=, A/C, TV - 4000/= (Attached Bathroom) காலி வீதிக்கு முகப்பாக இராமகிருஷ்ண பெட்ரோல் ஷெட்டிற்கு அருகில்.
**Hotel Villa - 0114999944, 0722552222**

## Hair Cutting Workshop

**Sureka Beauty Care's 2 days Hair Cutting Work shop at Jaffna.**
சரியான முறையில் Hair Cut பண்ணுவது எப்படி ? முழுவதும் Practical Class ஆக அமையும். தனிப்பட்ட கவனம் எடுக்கப்படும் Certificate வழங்கப்படும்.
Limited Crowd only.
Sureka : 0779921120
FB : Sureka Beauty Care
max adz

## TOSHIBA COPIERS

NEW STOCK IN FROM EUROPE

MODELS AVAILABLE
Toshiba e-Studio 182
232, 233, 283, 305
355, 455



சிறப்பு விலை தள்ளுபடி
பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள்.

Contact:- 0714 307 660 | Rs. 40,000/-onwards

ABC Trade & Investments (Pvt) Ltd.,
No.03, Bandaranayakapura Road, Rajagiriya.
Tel:- 0115 877 700, Fax:- 0112 868 555
info@abcsrilanka.biz , www.abcsrilanka.biz

## STUDY | WORK | VISIT

Hurry Up! for Oct/Nov 2015 Intake choose from over 300+ courses

USA | UK | Canada | Australia | New Zealand | Singapore | Malaysia | Europe Countries

Diploma's, HND's , Top-Up Programs Undergraduate, Postgradatue, Master's

Business | Marketing | IT | Software Engineering | Bio Science | Medicine |

Minimum Qualifications GCE O/L & A/L No Need IELTS, Financial Assistance, Free Consultation, Offer Letter in 02 weeks. Free Interview Training and minium fees.

We handle Tourist and Visit Visa's to UK, USA, Canada, Swiss, German, Australia and Working Visa's to Middle East (males)

Work Part Time
Apply for PR
Sponsor your family

For More Details:
Salman: 077 2925270
Shanth: 077 1873732

***Conditions Apply***

GREATWAY CONSULTANTS
255H 1/1, Baseline Road, Colombo - 09
Tel: 011 2698939 Fax: 011 2698936
Email: greatway70@gmail.com

## கணக்காளர்/ சிட்டை எழுதுபவர் தேவை( ஆண்/ பெண்)

எமது நிறுவனத்திற்கு முன் அனுபவம் உள்ள, கணக்குகள்,சிட்டைகள் எழுதக்கூடிய ஆகக் குறைந்தது (A/ Level) தகைமையுடையவர் தேவை.
தமது கைப்பட எழுதிய சுயவிவரக்கோவையுடன் , கிராம சேவகரின் சிபாரிசுக் கடிதத்துடன் திங்கள் முதல் சனி வரை காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணிக்குள் நேரில் வரவும்.
திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு : சிவா நறுமணப் பூங்கா
இல-288, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)
தொ.பேசி- 021 222 2567

## After G.C.E. A/L...? What next...?

5 Diplomas - One Course Only

### தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறி

IT+ Spoken English + Sinhala Hotel Management + Self&Skill Development Training Programme

க.பொ.த.(சா/த) மற்றும் (உ/த) பரீட்சை எழுதிய மாணவர்கள், உயர்கல்வி, அரச, தனியார், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் NVQ தர சான்றிதழ் போன்றவற்றை கருத்தில் கொண்டு வாழ்க்கைக்கான தொழில் வழி காட்டல் (Career Internship Programme) எனும் பயிற்சி நெறியின் செயன்முறையினூடாக பின்வரும் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு ஆர்வமுடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வதிவிட, (பொருத்தமான உணவு மற்றும் பாதுகாப்பான தங்குமிட வசதியுடன்) வதிவிடமற்ற முழு நேர அல்லது பகுதி நேர, கணினி, ஆங்கிலம், சிங்கள, அழகுக்கலை மற்றும் சுய விருத்தி பயிற்சிநெறி, பெண்களுக்கான அழகுக்கலை.

**கணினி**
* நவீனகற்பித்தல் மற்றும் தொழில் நுட்ப முறை ஊடான அடிப்படைக் கணினி பாடநெறி.

முதல் பதிவினை மேற்கொளும் 10 மாணவர்களுக்கு பாடநெறிக் கட்டணத்தில் 20% கழிவு வழங்கப்படும்

**ஆங்கிலம்**
* நவீனகற்பித்தல் உபகரணங்கள் மூலம் முற்றிலும்.
* கணினியில் வடிவமைக்கப்பட்ட சர்வதேச பாடநெறி.
அடிப்படையிலிருந்து பேச்சு, கிரகித்தல் பயிற்சி என்பன வழங்கப்படும்.

Daration 75 Days - Full Time

**சிங்களம்**
* தமிழினை தாய்மொழியாக கொண்டவர்களுக்கு நவீன கற்பித்தல் முறைகள் ஊடாக விரைவாகவும், சரியாகவும் சிங்களத்தில் உரையாடுவதற்கு பொருத்தமான முறையில் இலங்கை அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நெறி.

சிங்கள பாடநெறி இலங்கை மொழிகள் திணைக்களதின் விஷேட விரிவுரையாளர் லசித் நலந்த என்பவரால் கற்பிக்கப்படும்

**பெண்களுக்கான அழகுக்கலை**
தற்போதைய இளைஞர் யுவதிகளிடையே மிகவும் அதிக வரவேற்பைப் பெற்றுவரும் அழகுக்கலை சம்பந்தமான பயிற்சி நெறி

பாடநெறி முடிவில் அங்கீகாரம் பெற்ற 05 பெறுமதிமிகு சான்றிதழ் வழங்கப்படும்

**சுயதிறன் விருத்தி**
சர்வதேச தரம் வாய்ந்த சுயமுன்னேற்றத்திற்கான வழிகாட்டலும் பயிற்சியும்

கற்கை நெறிகள் கொழும்பு மற்றும் கல்முனை கிளையில் இடம்பெறும்.

**குறிப்பு:**
அனைத்து பாடநெறிகளும் முழுமையானதமிழ்மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும். உங்கள் விண்ணப்பத் தினைப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கல்வி தராதரப் பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9×4)அளவுள்ள தபாலுறையில் 45 ரூபாய் முத்திரை ஒட்டி தராதரப் பத்திரத்துடன் இணைத்து பதிவுத் தபாலில் 09.10.2015 இற்கு முன்னர் அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் மேல் மூலையில் 01 - 11 வகுப்புவரை என்று எழுதி அனுப்பவும்.

இளைஞர்களுக்கான ஹோட்டல் முகாமைத்துவம்

கற்கைநெறி ஆரம்பம் 15.10.2015

**BLOOMING BUDS E BESTCAMPUS**
Thavadi Road,
Suthumalai, ManiPay
021 225 6641,
071 566 9641

## பங்குதாரர்கள் தேவை

எமது Blooming Buds பாடசாலை திறமையான நிர்வாகத்துடன் தெமட்டகொட, புத்தளம், சுதுமலை ஆகிய இடங்களில் சர்வதேச பாடசாலை, ஆசிரியர் பயிற்சிப் பாசறை, ஆங்கிலப்பேச்சு பயிற்சிப் பாசறை, சிறப்பு நிலைக் கல்விப்பயிற்சி நிறுவனம்,தொழில் வழிகாட் டல் பயிற்சிநெறி, மேலதிக வெளிநாட்டு பட்டப்படிப்பு, மேலதிக GAQ, BA பட்டப்படிப்பு போன்றன வெற்றிகர மாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் எமது நிறுவனத்தின் புதிய கிளைகளை சுன்னாகம், சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஸ்தாபிக்க இருப்பதால் ரூபா 5 லட்சம் முதலீடு செய்யக்கூடிய பங்குதாரர்கள் தேவை. முதலீடு செய்பவர்களுக்கு பங்கு இலாபமும் நிறுவனத்தில் நிர்வாகி பதவியும் வழங்கப்படும். இந் நிறுவனத்தில் முதலீடு செய்ய விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

**Blooming Buds International School**
*390/2/1 Base Line Rd, Dematagoda Colombo 09*
PV 94034
தொடர்புகளுக்கு: 071 566 9641/ 077 152 9731/ 075 493 3349 / 011 267 7641 / 021 225 6641

## பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

**English Medium (Gr 1 - 11) All Subjects**
**10 மாதங்கள் தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது.

தொடர்புகள்: தெமட்டகொட, புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் [சுதுமலை], கல்முனை

ஐந்து வருடங்களாக சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுநர் ஆசிரியர்களைப் பயிற்றுவித்த எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்களை எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்.

**தகைமைகள்**
- க.பொ.த சாதாரண தரம் 6பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60நாள்களிற்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயாதினம் உட்பட அரசவிடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30 - 5.00 மணி வரை வேலை நாள்களாகும்.

கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும்.

**பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கட்டணம் 34,500/= ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத் தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.**

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் [9X4] அளவுள்ள தபாலுறையில் 45 ரூபாய் முத்திரை ஒட்டி தராதரப்பத்திரத்துடன் இணைத்து பதிவுத்தபாலில் அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் மேல் மூலையில் 01 - 11 வகுப்பு வரை என்று எழுதி அனுப்பவும்.

ஆசிரிய பயிற்சி டிப்ளோமாவில்
சிங்கள டிப்ளோமா
ஆங்கில டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது)
ஆங்கில இலக்கிய டிப்ளோமா
சுயதிறன் விருத்தி டிப்ளோமா
கணினி டிப்ளோமா

**என்பன இலவசமாகக் கற்பிக்கப்படும்.**

*பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி*
**Officer**
**Blooming Buds International Teaching Training Institute**
*Thavadi Road, Suthumalai, Manipay*
PV 94034
தொடர்புகளுக்கு: 071 566 9641/ 077 152 9731/ 011 267 7641 / 021 225 6641

## CALL TAXI சேவை

- குளிரூட்டப்பட்ட சிறிய பெரிய கார், வான் CALL TAXI சேவை.
- அழைத்து 10 நிமிடத்தில் உங்கள் வீட்டு வாசலில் ( யாழ் நகர பகுதிக்குள்)
- ஒரு வழிக்கட்டணம் மட்டும் அறவிடப்படும். (Drop Hire only)
- நீண்ட தூர பயணங்களுக்கு விசேட கட்டணக்கழிவு.
- திருமணத்திற்கான வான், கார் சேவைகள்.

1 Km- 45/=

உடன் அழையுங்கள் - Jaffna Tours
0773 626230 / 021 567 7 567

## மணமகள் தேவை

அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானத்துறையொன்றில் கலாநிதிப் பட்டப் படிப்பை முடித்து அமெரிக்க முன்னிலைப் பல்கலைக்கழகமொன்றில் பணியாற்றும் யாழ் நகரத்து கௌரவமான இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 1983 ஆம் ஆண்டு, பூர நட்சத்திரத்தில் பிறந்த கிரக பாவம் 3½ உடைய செவ்வாய் தோஷமற்ற 5' 3" உயரமுள்ள தாவரபோசனம் மட்டும் உட்கொள்ளும் இளைஞனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு : 077 936 1273

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்ஸில் தூங்கிய மாணவியுடன் செல்பி எடுக்க முயன்ற இளைஞர் மாட்டினார்

கொழும்பு, செப். 27

பஸ்ஸில் தூங்கிக் கொண்டிருந்த மாணவியுடன் இணைந்து செல்பி எடுக்க முயன்ற இளைஞன் வசமாக மாட்டிக்கொண்ட சம்பவம் ஒன்று காலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காலி அருகே பெந்தோட்டைப் பிரதேசத்தில் பாடசாலை மாணவிகளுடன் பயணித்து கொண்டிருந்த பஸ்ஸில் இந்த விநோதச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் தூங்கிக்கொண்டிருந்த மாணவியின் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்திருந்த குறித்த இளைஞன் ,திடீரெனத் தூங்கிக் கொண்டிருந்த மாணவியின் முகத்துடன் தன் முகம் ஒட்டியிருக்கும் வண்ணமாக நெருங்கிச் செல்பி எடுத்துள்ளார்.

இதனைப் பின்னால் நின்ற மாணவிகள் கண்டு கூச்சல் இட்டதால் ,தூங்கிக் கொண்டிருந்த மாணவியும் விழித்துக்கொண்டார்.

இளைஞன் திடீரென்று பஸ்ஸை விட்டிறங்கி தப்பித்துக் கொள்ள முயன்ற போதும் ஏனைய மாணவிகள் அதற்கு இடமளிக்காமல் மொபைல் போனில் எடுத்த செல்பியை அழிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர். அத்துடன் பஸ்ஸில் பயணித்த மற்றைய பயணிகளும் அவரைப்பிடித்துபடத்தை அழிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.

இதனால் வேறு வழியில்லாமல் எடுத்த செல்பியை அவர்களின் முன்னாலே அழித்துவிட்டு இளைஞன் அவ்விடத்தை விட்டுச் சென்றுள்ளார். (த)

## சட்டவிரோத மருந்துகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, செப்.27

சட்டவிரோதமாக ஒரு தொகை மருந்துகளை நாட்டுக்குக் கொண்டுவந்த ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தியாவின் புதுடில்லியில் இருந்து இலங்கைக்கு வந்த 58 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதாகியுள்ளதாகச் சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபரின் பயணப் பையில் இருந்து மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த நிலையில் விமான நிலையச் சுங்கப் பிரிவினர் இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-10)

## கண்காட்சி

கைதடி, செப் 27

கைதடி கலைநகர் வளர்மதி முன்பள்ளியின் கண்காட்சி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கைதடி மத்தி வளர்மதி கல்விக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-288)


Greatway Commercial
Saturn Lanka Academy
Vacancy

Keys to Success

இலங்கையில் மிகப் பிரபல்யமான கம்பனிகளான சந்தைபடுத்தல் துறையில் இயங்கும் Great way commercial, Daimant innovation group நிறுவனத்திற்கு,யாழ்ப்பாணம்,திருகோணமலை,வவுனியா மாவட்டங்களிற்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன

* விரைவில் முன்னேற விரும்புவோர்களுக்கான அரிய வாய்ப்பு
* 100 % மனஉறுதியோடு,திறனை க் கொண்டு மாதம் குறைந்தது 50000 இற்கு மேல் உழைக்க விரும்புவோர்.

(சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் உடையவர்களுக்கு உயர்பதவியுடன் சேர்க்கப்படுவர்)

(வயது 18 -30 வரை ஆண்,பெண் இருபாலார்களுக்கும்)

Hot line: 076 7766167 ,075 752 8758



உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்
திருவள்ளை கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

கேதார கௌரி விரதம்

விரதாரம்பம் : 22.10.2015 வியாழக்கிழமை
விரத பூர்த்தி : 11.11.2015 புதன்கிழமை

கௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களே!

இன்று 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை முதல் விரதகாரர்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை பதிவுசெய்துகொள்ளலாமென்பதை அறியத்தருவதோடு, இருபத்தொரு நாள்களும் பக்தி சிரத்தையுடன் சிவலிங்க பூஜையில் கலந்து கொண்டு சிவசக்தி ஐக்கிய சொருப மான அம்பிகையின் அனுக்கிரகம் பெற்றுய்ய வேண்டுகின்றோம்.

(64963)(10.15.17) தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்.





நாம் உங்களுக்கு உதவ தயார்

• Visit Visas • Rejected Visas

நிராகரிக்கப்பட்ட மற்றும் புதிய விண்ணப்பங்கள்

*Appeals & Rejected Visas *Special Occasions
*Family & Friends Visit *Medical Visits
*Tourist/Business Visits

| | | |
|---|---|---|
| • Australia | • Italy | • Switzerland |
| • Canada | • Japan | • Sweden |
| • China | • New Zealand | • UK |
| • France | • Netherlands | • USA |
| • Germany | • Norway | |

100% உத்தரவாதம்*

THE VISA CENTRE
Migration, Work & Study Solutions
Level One, 21, Maitland Crescent, Colombo 07.

HOTLINES:
0777 633 955 / 0777 633 977 / 0773 444 447

அனைத்து விதமான கட்டணங்களும் The Visa Centre தலைமை காரியாலயத்தில் மட்டுமே செலுத்தப்படல் வேண்டும்..

Tel: 5 334433 Fax: 5 352303 Email: info@thevisacentre.com
www.thevisacentre.com



Majestic Cineplex Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 / 6.30



சில்வர் 10.15 / 2.15 / 6.15


ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk



டுபாய் நாட்டில் 5 நட்சத்திர ஹோட்டலில்
கிளீனர்ஸ் வேலைவாய்ப்பு


30 கிளீனர்ஸ் ஆண்கள் / பெண்கள்

1100Dhs / சம்பளம் : Rs.39,600/-
கடன்வசதி செய்து தரப்படும்
வயது : 35 வயதிற்கு கீழ்

INTERVIEW 28,29,30.09.2015

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

நிபந்தனைகள் & சலுகைகள் :
• தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வழங்கப்படும்.
• 2 வருட ஒப்பந்தம்
• வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் / வாரத்தில் 48 மணிநேரம் ஒரு நாள் லீவு வழங்கப்படும். • இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும்
• ஒவ்வொரு 2 வருட சேவை முடிவின் பின்னர்.
• ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் டுபாய் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

Hot Line : 072 720 0005

1 DHS = Rs.36.00
அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் ரூ.94,772 அறவிடப்படும்.

max adz

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
ரொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.
Tel : 0112552598|0726999886|0773074744



வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில் கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அண்மையில் இல 174/16 ,வசதியான வீடு ( அறைகள்,
Attached Bathroom வெளி Bathroom, 2 Hall சமையலறை) வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 630 7106



VACANCIES
SALES EXECUTIVE (Male & Female)

We are a company dealing with Children educational programme and there is an exciting & excellent opportunity for Self - motivated, committed indivduals to take up the responsibility as

SALES EXECUTIVE

Requirements
* GCE (A/L) Qualified
* Below 35 years old (School leavers may apply for trainee position)
* Good communication skill in English & Tamil

Benifits
➡ An attractive salary
➡ Travelling allowances
➡ Commissions payments
➡ Telephone facilities
➡ Motorbike allowances
➡ Incentive & Overseas trips for target achievers
➡ Career development (Management position)

If you believe that you are the right cantidate,
Please e-mail or contact immediately
Branch Manager: G.Anthany
Phon No: 077 356 6835, 021 567 1130



Pioneer House (PVT) Ltd.
No.100, 2nd Floor, Manipay Road, Jaffna.
E-mail: jaffnapioneerthouse@gmail.com



Vacancy
Nestle Lanka PLC
Distributor : Thenu Kalanchiyam

Sales rep
1. Education : G.C.E. (A/L) Pass
2. Working Experience in : Minimum 1 year Experience in same field
3. Age Limit : 21 - 35 Years
4. Language Skill : English and Sinhala will be considered additional
5. Salary Scale

| | For 100% Achievement | For 103% | For 106% Achievement |
|---|---|---|---|
| Basic Salary | 20,000 | 20,000 | 20,000 |
| Incentives | 52,000 | 54,500 | 57,000 |
| Lunch Allowance | 3,000 | 3,000 | 3,000 |
| Motor bike Maintenance Allowance | 14,000 | 14,000 | 14,000 |
| | 89,000 | 91,500 | 94,000 |

Computer Operator
Stock Maintainer
Accountant Assistant (Female, Need in Thirunelvely)

Contact :- 021 492 1258, 077 213 1448

(64954)(10.17.15)



நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறி!
School of Nursing IVA
ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி



க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
உயரம் 4 அடி 10 அங்குலம்

Medical Laboratory Technology Assistant
ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி



6 மாத நிறுவனத்தினுடனான பயிற்சிக்குப் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்

மருந்தாளர் பாடநெறி

அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு வகுப்புக்கள் நடைபெறும்.

நடாத்துவர் : வைத்தியர் ராஜவேலாயுதம்

| யாழ்ப்பாணம் | மட்டக்களப்பு | வவுனியா | கல்முனை |
|---|---|---|---|
| இல 323, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.071-6722350, 0718-722 353 | இல. 61/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.0718-722 352, 0718-722 353 | இல. 36/1, 40/1, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. தொ.பே. 0718-722 351, 0718-722 353 | இல. 76A, பொலிஸ்நிலைய வீதி, கல்முனை. தொ.பே. 067 2226900, 0719926680, 0710770770 |

Registered Education Institute in the republic of Sri Lanka

NTS P.V. 91973
பிரதான காரியாலயம்
அய்வா
தொ.பே. 021 221 7411
E-mail manojhewaduwa@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு வைத்திருந்தவர் ரூ.25 ஆயிரம் இழந்தார்

யாழ்ப்பாணம், செப். 27

ஒரு லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று.

கிளிநொச்சி, பெரியகுளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டில் கசிப்புடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

பதில் நீதிவான் சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேகநபர் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(த–4–ரி3)


HOME GATE

www.homegate.lk

Search Ends Here

THE GATE OPENS ON

12 : 12 : 2015 @ 3 PM

Rathamson Partners (P) Ltd.
No. 146/F/46, Pearl Park Complex,
Negambo Road, Wattla.

0777 860 400

## சிறுகதைப்போட்டி-2015

**நோர்வே முத்தமிழ் அறிவாலயம் நடத்தும் இலங்கை மாணவர்க்கான சிறுகதைப் போட்டி 2015 அறிவிக்கப்பட்டுள்ளது.**

- போட்டியில் முதற்பரிசு பெறும் கதைக்கு 25,000 ரூபாவும், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே 15,000, 10,000 ரூபாவும் பரிசாக வழங்கப்படும். பாராட்டுப் பெறும் பத்துக் கதைகளுக்கு, தலா 2000 ரூபா வும் வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 31.10.2015. மேலதிக விவரங்கள் அனைத்தையும் முத்தமிழ் அறிவாலய இணையத் தளத்தில் பார்வையிடவும்.

இணைய முகவரி: www.Muthtamil.com
முகநூல்: Muthtamil Arivalayam

**நோர்வேயில் தமிழ்மொழிக்கல்வியில் 27ஆவது ஆண்டை நிறைவுசெய்யும் முத்தமிழ் அறிவாலயம் மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக மூன்றாவது முறையாக அனைத்திலங்கை ரீதியில் மாணவர் சிறுகதைப்போட்டியை நடத்துகின்றது.**

### போட்டி நிபந்தனைகள்

1. இலங்கைப் பாடசாலை மாணவர்கள் அனைவரும் இப்போட்டியிற் கலந்து கொள்ளலாம்.
2. கதைகள் மாணவரது கையெழுத்தில் தபால்மூலம் அல்லது மின்னணுப் பிரதி மூலம் அனுப்பப்படவேண்டும். (பதிவுத் தபாலைத் தவிர்க்கவும்)
3. கதைகள் மாணவரது சொந்தப் படைப்பே என்பதைப் பாடசாலை அதிபர் கையெழுத்திட்டு உறுதிப்படுத்த வேண்டும்.
4. போட்டி முடிவு திகதி 31.10.2015.
   குறித்த திகதிக்குப் பின் எம்மைச் சேரும் கதைகள் போட்டியிற் சேர்க்கப்பட மாட்டா! முடிவுகள் முத்தமிழ் அறிவாலய முகநூலிலும் இணையத்தளத்திலும் வெளியிடப்படும்.
5. போட்டிக்காக அனுப்பப்படும் சிறுகதைகள் போட்டி முடிவுகள் வெளியாகும் வரை வேறு ஊடகங்களிற் பிரசுரிக்கப்படக்கூடாது.

**முதற்பரிசு 25,000 ரூபா**
**இரண்டாம் பரிசு 15,000 ரூபா**
**மூன்றாம் பரிசு 10,000 ரூபா**

மேலதிகமாகத் தெரிவாகும் பத்துக் கதைகளுக்கு தலா 2000 ரூபா ஆறுதற் பரிசாக வழங்கப்படும்.

**முக்கிய குறிப்பு:-** மாணவர்களது தொலைபேசி இலக்கம் பாடசாலை முகவரி, வீட்டு முகவரி என்பன தனியான தாளில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

இணையத்தளம்: www.muthtamil.com
முகநூல்: Muthtamil Arivalayam
மின்னஞ்சல்: mtarivalayam@gmail. admin@muthtamil.com
அஞ்சல் முகவரி:
Muthtamil Arivalayam,
Herslebs gate 43,
0578 Oslo, Norway.

(64861)(10.15.17)

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான தரம் வாய்ந்த ஆங்கில கற்கை நெறிகள் ஆரம்பம்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR** 120 Hours

சரளமாக பேச பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி

**CIMA, ACCA, CA, AAT, HND, Banking, University, College of Education**

ஆகியவற்றின் கற்கை நெறிகளை தொடர ஆங்கிலம் உங்களுக்கு தடையா??

சகல கற்கை நெறிகளுக்குரிய ஆங்கில அறிவினை 100% வழங்குகிறோம்.

**DIPLOMA IN ENGLISH** 200 Hours

New Batches Start On :

| | | |
|---|---|---|
| B1 : 30-09-15 at 9.00 am | B3 : 03-10-15 at 9.00 am | B5 : 05-10-15 at 9.00 am |
| B2 : 01-10-15 at 2.00 pm | B4 : 03-10-15 at 2.00 pm | B6 : 05-10-15 at 2.00 pm |

**Study IELTS at CIL & Get 6+ Band**

**SPOKEN SINHALA CLASSES**

BI : Sat & Sun - 9.30-11.30am B2 : Sat & Sun - 3.00 - 5.00pm

CIL
Cambridge Institute of London
No : 17, 3rd Lane, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108

02.10.2015

உதயன் இல்

திருமணத் திருநாளுடன் தொடர்புடைய

திருமண மண்டபங்கள்

நகையகங்கள்

வீடியோ அன் போட்டோ ஸ்தாபனங்கள்

அலங்கரிப்பு நிலையங்கள்

புடவையகங்கள்

இன்னும் பல விவரங்கள் அடங்கிய

மாங்கல்யம்

சிறப்பிதழை எதிர்பாருங்கள்



உங்கள் விளம்பரங்களும் இந்த சிறப்பிதழில் இடம்பெற வேண்டுமா?

உடன் தொடர்புகொள்ளுங்கள்

021 492 7411 078 264 5009

LITRO GAS

LITRO Gas நிறுவனத்தின் விசேட விலைத் தள்ளுபடி

LITRO Gas விற்பனையில் முன்னணி நிறுவனமான S.V. முருகேசு நிறுவனத்தினால்

August 20ஆம் திகதி தொடக்கம் Octobe 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தாங்கள் கொள்வனவு செய்யும் Litro Gas நீல நிற வெற்று சிலிண்டர்களுக்கு விசேட விலைத்தள்ளுபடி வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்.

மிகவும் பாதுகாப்பானதும் தரம்மையானதும் நீடித்த பாவனையுமான Litro நீல நிற சிலிண்டர்களே புத்தியுள்ள இல்லத்தரசிகளின் ஒரே தெரிவு!




4080/= விசேட விலை 3400/=

2585/= விசேட விலை 2250/=



இச் சலுகையினை தங்களுக்கு அருகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட லிற்றோ காஸ் முகவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

S.V. முருகேசு

இல.106,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் அமைந்துள்ள எமது

லிற்றோ காஸ் விநியோக நிறுவனத்திலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்

கையிருப்பு உள்ளவரை மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

தொடர்புகளுக்கு - 021 492 5830, 078 564 6505


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் இந்

## 125 ஆவது ஆண்டு நிறை

### கல்விசார் பெருந்தகையீர்!



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்று தனது 125ஆவது வயதை அடைந்திருப்பதையிட்டு அகமகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையில் வடபகுதியில் கல்விப்புலத்தில் தனக்கென ஒரு தனியான இடத்தை வகுத்த இந்துக் கல்லூரி அன்று முதல் இன்று வரை கல்விக்கும் ஏனைய துறைகளுக்கும் தனித்துவமான ஒரு இடத்தை இந்நாட்டில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் வகுத்துக்கொண்டிருப்பது மனமகிழ்ச்சியைத் தருகின்றது. இந்து சமய மக்களின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய பாதையில் பல நல்லறிஞர்களையும் திறமைசார் அறிஞர்களையும் உருவாக்கிய பெருமை இப்பாடசாலைக்கு உண்டு.

ஆதீனம் இல்லை என்ற குறையை நீக்கி ஆதீனத்தை உருவாக்கிய முதல்வரையும் உருவாக்கியது இப்பாடசாலை. அவர்களினால் இயற்றப்பட்ட இப்பாடசாலை கீதம் இன்றும் இப்பாடசாலையில் ஒலித்துக் கொண்டிருப்பதும் அகிம்சைவழி ஞானி மகாத்மாகாந்தி, துறவில் சிங்கம் சுவாமி விவேகானந்தர் போன்றோர்கள் தடம் பதித்த இப்பாடசாலை எங்களின் நாட்டின் தனித்துவமான சொத்தாகும். இப்பாடசாலை இன்று 125ஆவது அகவை அடைந்திருப்பது அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள். இக்கல்லூரி இன்னும் பணி செய்து வளர்ச்சி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்



ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ பண்பாட்டு சூழலில் கற்கும் பாடசாலைகள் கல்வித்துறையில் முன்னுரிமை கொண்டிருந்த காலத்தில் ஆறுமுக நாவலர் ஆங்கிலமொழி மூலமான தரமான கல்வியை இந்துப்பாரம்பரிய பண்பாடுகளுக்கு ஏற்ப சைவச்சூழலில் மாணவர்களுக்கு கல்வி போதிப்பதற்காக1872இல் சைவப்பிரகாச வித்தியாலத்தை நிறுவினார். இதுவே 1890இல் சைவபரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டு இந்து உயர் பாடசாலையானது. இதன் ஆரம்பகர்த்தாக்களா அட்வகேட் சி.நாகலிங்கம், மு.பசுபதிச்செட்டியார் ஆகியோர் விளங்கினர்.

ஆரம்ப காலங்களின் பிடியரிசி,வீட்டுக்கொருதேங்காய்,தென்னங்கன்று,வர்த்தக பெருமக்களின் நிதி உதவி போன்றவற்றின் மூலம் கல்லூரியின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு இந்தக் கல்லூரி ஆரம்பிக்கும் போது எண்பதாக இருந்த மாணவர்தொகை 1891இல் இருநூற்றிநாற்பத்தெட்டு ஆக உயர்ந்தது.இதன் முதல் தலைமை ஆசிரியராக திரு. என்.அப்பாப்பிள்ளை அவர்கள் கடமையாற்றினார்.பின்னர் அரச அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதோடு இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் என அழைக்கப்படலாயிற்று.

1911இல் கல்லூரி சஞ்சிகையினை வெளியிட்டதுடன் கொக்குவில், உரும்பிராய், நெடுந்கோட்டை, காரைதீவு ஆகிய தேசங்களில் எல்லாம் தன் கிளைக்கல்லூரிகளை நிறுவியதுடன் சகல பாடசாலைகளும் இணைந்து பொதுப்பரீட்சை நடாத்தியது.1971 இல் இருந்து இன்று வரை தமிழ் மக்களின் இனப்பிரச்சினையில் பல தியாகங்களைப் புரிந்துள்ளது. பின்னர் 1984 மார்கழி மாதம் 27ஆம் திகதி இக் கல்லூரி தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

இவ்வாறு பல சான்றோர்களின் முயற்சியினால் வளர்க்கப்பட்ட இக் கல்லூரி பல புனிதர்கள் கால் பதித்தமையால் புனிதம் பெற்று பார் புகழும் கல்லூரியாக மிளிர்கிறது. 1897 தை மாதம் 24ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் வருகை தந்து உரையாற்றினார்.1906இல் கலை விமர்சகரும் சிவ நடனம் என்ற நூலை எழுதியவருமான கலாயோகி டாக்டர் ஆனந்த குமாரசுவாமி வருகை தந்தார்.அதன் பின்னர் 1927ஆண்டு11ஆம் மாதம் 27ஆம்திகதி மகாத்மா காந்தி அவர்கள் வருகை தந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

2006ஆம் ஆண்டு சித்திரை மாதம் 7ஆம் திகதி தவத்திரு ரவிசங்கர் குருஜீ வருகை தந்து உரையாற்றினார். 2012ஆம் ஆண்டு தை மாதம் 23ஆம் திகதி முன்னாள் இந்திய குடியரசுத் தலைவரும் அணுவிஞ்ஞானியுமான உயர்திரு. டாக்டர்.அப்துல்கலாம் அவர்கள் வருகை தந்து உரையாற்றினார். பின்னர் கல்லூரியின் பழைய மாணவரும் விஞ்ஞானியுமான பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் அவர்கள்15ஆம் திகதி சித்திரை மாதம் 2014இல் கல்லூரிக்கு வருகை தந்து தன் கல்லூரித் தாயை மகிழ்வித்ததோடு மட்டுமல்லாது புதிய சிந்தனை ஊற்றெடுக்க உரையாற்றினார்.

இவ்வாறு பல்துறை விற்பன்னர்களின் வருகையினால் பெருமை பெற்ற கல்லூரி அன்று தொடக்கம் இன்று வரை பல்வேறுபட்ட சாதனைகளை தேசிய சர்வதேசரீதியில் நிகழ்த்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரி தனது வித்துக்களை பல்துறை விற்பன்னர்களாக பார் எங்கும் பரவச் செய்து பயன் தரு விருட்சமாக பார் போற்ற வாழ்த்துகின்றோம்.

அதிபர் ஐ.தயானந்தராஜா
யாழ்ப்பாண இந்துக் கல்லூரி.
"தமிழர் தலை நிமிர் கழகம்"





தாய் நிலத்திலும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் பார்வையின் வழி நின்று, இப் பூமிப்பந்தின் அனைத்து இடங்களிலும், தலை நிமிர்ந்து வாழும் இந்துவின் மைந்தர்களின் ஆளுமைகளை செதுக்கிய நம் அன்னைக்கு இப்போது அகவை 125. நாம் அனைவரும், பெருமையிலும், நன்றியுணர்விலும், தோழமையுணர்விலும் திளைக்கும் வருடம் இது.

எமக்கெல்லாம் எம் கல்லூரி, அன்னை எனினும் எமது சமூகத்திற்கோ அவள் குழந்தை. இற்றைக்கு ஒன்றேகால் நூற்றாண்டுகளுக்கு முன்னர், குடியேற்றவாதக் கொள்கைகளால் எமது சுதேச வாழ்முறை சவால்களுக்குட்பட்டது. அக்கால உலகில் வாழ்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள் மாற்றம் பெற்றன. அவற்றை எமது மக்களும் பெற்றுக் கொள்வது தவிர்க்க முடியாத தேவையாயிற்று. எமது சுயத்தை இழக்காமல், அந்த மாற்றங்களுக்கு முகம் கொடுப்பது எவ்வாறு? என்ற கேள்வி எழுந்தது. எமது சமூகம் அதற்கு விடை கண்டது. இந்த மண்ணின் புதல்வர்கள் எமது பண்பாட்டு விழுமியங்களில் வேரூன்றி, மாற்றத்தில் விழுதெறிய வேண்டும் என எமது சமூகம் தீர்மானித்தது. அதன் விளைவாக, பிடியரிசி, வீட்டுக்கொரு தேங்காய் எனச் சிறுகச் சிறுகச் சேமித்து, ஊர் கூடி வளர்த்த குழந்தை தான் எம் கல்லூரி அன்னை.

இதனாலேயே, ஆரம்பத்தில் சுதேசியத்திலும், பின்னர் தேசியத் திலும் எம் அன்னையின் வாழ்வு பின்னிப் பிணைந்திருந்தது. பண்பாட்டுச் செழுமையும், வரலாற்றுப் பாரம்பரியமும் மிக்க எமது சுய அடையாளத்துடன், எந்த முகமூடிகளும் இல்லாது, வேறு அடையாளங்களுள் கரையாது வாழ்வென வேள்வி செய்தது எமது சமூகம். அதில் நூற்றுவராய், ஆயிரவராய், ஆகுதியாயினர் எம் அன்னையின் மைந்தர்கள். அந்த அடிப்படைகளிலிருந்து தடம் விலகாமல், எம் அன்னையும், அவள் தம் மைந்தர்களும், தொடர்ந்து பயணிப்பதே, எம்மைத் தனித்துவமானவர்க ளாக உலகத்திற்கு அடையாளப்படுத்தி வருகிறது.

எமது கல்லூரி அன்னையை, இன்றும், இனியும், என்றும், ஒரு சமூகமாக ஒன்று திரண்டு வளப்படுத்த வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமை. எமது பண்பாட்டை, எமது விழுமியங்களை, இவற்றால் விளைந்த எமது அடையாளத்தை உறுதியாகப் பற்றியபடி, எம் மண்ணில் வேரூன்றி, நவீன உலகில் வாழ்வாங்கு வாழும் இயலுமை கொண்ட தலை முறைகளை உருவாக்கும் வகையில் நாம் செயற்படுவோம்.

இந்த உறுதிப்பாட்டுடன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தி னராகிய நாம், இந்துவின் மைந்தர்கள் அனைவருடனும் இணைந்து, எமது அன்னையின் தாழ் வணங்குகிறோம்.

சி. சுந்தரேஸ்வரன்
தலைவர் பழைய மாணவர் சங்கம்.

மண்ணும் விண்ணும் வியந்துநிற்க, வியத்தகு போதனைகளை பாரெங்கும் நிகழ்த்தி நிற்கும் எம் அன்னைக்கு இந்துவின் சமூகம் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விழா எடுத்து நிற்கும் இவ் வேளையில் நாம் அனைவரும் இணைந்து நின்று இருகரம் கொண்டு உழைப்பதை எண்ணி அகமகிழ்வதுடன் மேலும் மெலும் சாதனைகள் புரிந்து புகழ் ஓங்கி வளம் பெருக்கி உலகத் தமிழர்களை ஒன்றிணைத்து உலகறியச்செய்வாள் ஒரு நாள் அவள் புகழ் ஓங்குக ! ஓங்குக! ஓங்குக!

ஆசிரியர்கழகம்



சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் தமிழர்களின் பெருமை தனை பறைசாற்றிக் கொண்டிருக்கும், தமிழர் தம் தலைநிமிர் கழகமாகப் போற்றும் எங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே சிரேஷ்ட மாணவ முதல்வனாகக் கடமையாற்றுவது என்பது ஓர் அரிதான விடயமே. அதிலும் எங்கள் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் போது நம் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வனாகக் கடமையாற்று வதை நான் கடவுள் தந்த வாய்ப்பாகக் கருதுகின்றேன்

19, 20, 21 ஆம் நூற்றாண்டுகளில் சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள் Dr அப்துல்கலாம் போன்ற உலகம் போற்றும் மாமனிதர்களால் தம் பொற்பாதம் பதிக்கப் பெற்ற நம் கல்லூரி தனது மகத்தான சேவைகளை ஆற்றிய வண்ணம் 125 அகவை களைக் கடந்துநிற்கிறது.

அந்த வகையில் நம் கல்லூரியின் சிறந்த செயற்பாடுகளும், திறமையும், புகழும் பல்லாயிரம் ஆண்டு காலம் அவனியிலே என்றென்றும் நிலைபெற்று நிற்க நம் கல்லூரி அன்னையை வேண்டி வாழ்த்துகிறேன்.

''வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும்......''

ம.சரண்ஜன்
சிரேஷ்ட மாணவமுதல்வன்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

### பாடசாலை அபிவிருத்திச் சங்க



தமிழரெம் வாழ்வினில் தாயென ம... இந்துக் கல்லூரி கல்விப் பணியின... நிறைவு செய்திருக்கும் இவ் வே... செயலாளர் என்ற கோதாவில் 125 ... செய்தி வரைவதில் மட்டற்ற மகிழ்ச்... உண்மையில் இதனை வாழ்த்து... விருட்சமாக நிமிர்ந்து நிற்கின்ற ... தவழ்ந்து. அன்னையின் வள ... பெற்றோராகி 125 ஆவது ஆண்... அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இந்தப் பேறைத் த... நான் இந்தக் கணத்தைப் பார்க்கின்றேன்.

பார் போற்றும் யாழ். இந்துவின் புகழ் சொல்லற்கரியது. இ... தாழ்ந்து போய் விடுவதில்லை. தன் பிள்ளைகள் அத்தனை... எங்கள் அனைவரையும் நிலை நிறுத்தியவள் எங்கள் அன்... யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பெருமை மிகு தருணங்... மொத்த கல்லூரிச் சமூகமும் அன்னையை ஆராதிக்கின்ற... நிறைவில் எங்கள் பணி தொடர பாடசாலை அபிவிரு... கொள்கின்றோம்.

என்றும் மங்காப் புகழ் மிக்க கல்லூரித்தாயின் பெயர் விள... கூறி நிற்கின்றேன்.

"எவ்விடம் போகினும் எத்துயர் நேரினும் எம்மன்னை நின் நல்...

ம.அருள்குமரன் - செய...
பாடசாலை அபிவிருத்...



அன்னை மண்ணில் ஆங்கிலேயரின் அடிமை ஆட்சியில் சின்னத்தனமாய் எம்மினத்தை சிதறடித்த வேளையில் அன்னைத் தமிழ் அறிவையும் அறநெறி சைவசமயத்தையும் மீண்டும் நாளில் தமிழர் வாழ்வு பிரகாசித்திட எண்ணிய பேரறிஞர்கள்

ஒன்று கூடி ஓயாத உழைப்பின் உருவாக்கமாய் உன்னதமான உயர் கல்லூரியை உவந்து சென்றார்கள் அன்புடன் அவர்களின் அறிவுச்சேவையை ஆராதிப்போம். இன்றைய நூற்றி இருபத் தைந்தாம் ஆண்டு விழாவினூடாக நன்றியுடன் வரலாற்று நாயகர்களை நினைவில் நிறுத்துவோம்.

சென்ற நூற்றாண்டில் சிறப்புடன் கற்றுவந்த நாங்கள் தன்னம்பிக்கையுடன் தரமான வாழ்வு வாழ்வதற்கு ஊன்று கோலாயிருந்த உயர் கல்லூரிக்கு உறுதுணையாவோம்.

போராட்ட சூழலில் புலம்பெயர்ந்து சுவிஸில் வாழ்ந்தாலும் வேரோட்டமாகவும் விழுதுகளாகவும் நாம் தாங்கி நிற்போம் பாராட்டுக்குரிய ஆசிரியர் சமூகத்தினரையும் வாழ்த்துவதோடு நேரோட்டமான வாழ்விற்கு வழியமைத்த கல்லூரி சிறப்புப்பெற வாழ்த்துகின்றோம்.

வாழிய யாழ் நகர் இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்

திரு. நீதிராஜா
தலைவர்.

பழைய மாணவர் சங்கம் சுவிஸ்.



இலங்கையின் முதன்மைத் தமிழ்க்கல்லூரியான எமது யாழ் இந்துக் கல்லூரி தனது 125வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் எமது அமெரிக்க பழைய மாணவர் சங்கம் மூலம் இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது கல்லூரி அதிபர்களும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் மற்றும் ஊழியர்களும் கல்வி, கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் தமிழ் மாணவர்களுக்கு செய்யும் சேவையே எம் மாணவர்களை அகில இலங்கையில் மட்டுமல்லாது உலகெங் கிலும் புகழுடன் வாழ வைக்கின்றதென்றால் மிகையாகாது.

தற்போதைய இக்கட்டான ஈழச்சூழலில் யாழ் இந்து செய்யும் இக்கடமை "தமிழரெம் வாழ்வில் தாயென மிளிரும் தனிப் பெரும் கலையகம்" என எம்கல்லூரிக்கீதம் சொல்வது வெற்று வார்த்தையல்ல, முற்றுமுழு உண்மையென உலகுக்கு உணர்த்தி நிற்கிறது.

"கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக" எனும் எமது கல்லூரியின் மகுடவாசகத்துக்கமைய எமது கல்லூரி மாணவர்களும் பழைய மாணவர்களும் ஒழுகி உலகெங்கிலும் பழைய மாணவர் சங்கங்களை தோற்றுவித்து கல்லூரி தொடர்ந்தும் ஈழத்தமிழினத்துக்கு சேவை செய்ய தம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றனர். எமது சங்கமும் இயன்ற வகையில் அவ்வாறு செய்கிறது.

ஈழத்தமிழரின் கலங்கரை விளக்கமான எமது கல்லூரி தனது 125 வருடங்களைப்பூர்த்தி செய்து நிற்பது தமிழரான எம்மை யெல்லாம் பேருவகை கொள்ள வைக்கிறது. எமது கல்லூரி மென் மேலும் புகழ்பெற்று இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்து ஈழத் தமிழருக்கு சேவையாற்றும் ஒரு கல்லூரியாக திகழும் என்பதில் கல்லூரித்தாயின் மைந்தர்களுக்கு எந்த ஐயமும் இல்லை.

"வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்"

நா.ஜெயக்குமார் - தலைவர், ஐக்கிய அமெரிக்கா.



கனடா யாழ் இந்துக் கல்லூரி பழைய ... எமது கல்விக்கண் திறந்த யாழ் இந்து ... சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறே... அனைத்து நிகழ்வுகளையும் பார்த்து... கொண்டிருக்கும் என் இனியவர்களே!

"பார் எல்லாம், படி எல்லாம், என எமக்கு... பாரெல்லாம் பரவி வாழ்ந்து சாதனை ப... பாரெல்லாம் என உலகெல்லாம் உன் புகழ் பாடும் புதல்வர் நாம்

மார் தட்டி உன் நலம் காப்போம் நம் உயிர் உள்ளவரை"

1890ல் சிறு விதையிலிருந்து மரமாகி இன்று பேர்விருட்ச... உனது நிழலில் இனி வரும் பல சந்ததிகள் பலன் ... ஓங்கச்செய்யட்டும்.

தாயின் வாக்கு -
வீழாமலே வாழ்ந்தோம் என்பது பெருமையல்ல
வீழ்ந்தபோதெல்லாம் எழுந்தோம் என்பதே பெருமை.

கதிர் சுப்...
தலைவர்...
பழைய ம...





வையகம் புகழ்ந்திட நியூசிலாந்திலிருந்து அமெரிக்காவரை புகழ்பூத்த முன்னைநாள் மாணவர்களைக் கொண்டு திகழ்ந்திடும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றியிருபத்தைந்தாமாண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ்வேளையில் நோர்வே நாட்டிலிருந்து இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

கல்கத்தா பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணி குமாரசாமி, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரி வி. எம்.ஆசைப்பிள்ளை, கேம்பிறிஜ் பல்கலைக்கழக முதுகணித பட்டதாரி வி. சுபாரட்ணம், நிர்வாகம், விளையாட்டு இரண்டிலும் சிறந்த என். சபாலிங்கம், தமிழ் இலக்கண விற்பன்னர்கள், வித்துவான்கள் கார்த்திகேசு, செல்லத்துரை நவீன இலக்கியகர்த்தாக்கள், பேச்சாளர்கள் சிவராமலிங்கம், தேவன் யாழ்ப்பாணம், ஏரம்பமூர்த்தி இந்தியா விலிருந்து வருகைதந்த நாராயணையர், வி. ராமகிருஷ்ணன், இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் ஆறுமுகசாமி, பொன்னம்பலம் விடுதிப் பொறுப்பாளர் கடுமை, காருண்யம் மிக்க கே. எஸ். சுப்பிரமணியம் என எத்தனை ஆசான்கள்!

முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேம்பிறிஜ் பல்கலைக்கழக முதுகலைமாணி பொன். கந்தையா, சட்டவாளர் வன்னியசிங்கம் கல்வியியலாளர் செனட்டருமான ஏ. எம். ஏ. அஸீஸ், பிரதம நீதியரசர் சர்வானந்தா, சட்டமா அதிபர் சிவபசுபதி, இன்றைய பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் ...

வாழிய யாழ். இந்து நீடு!

கந்தையா சுமலராஜா. - தலைவர்.
பழைய மாணவர் சங்கம், நோர்வே.



"வீடு தோறும் கலையின் விளக்கம் வீதி தோறும் இரண்... நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள் நகர்கள் எங்கும் பல...

அன்பு வணக்கங்கள்.

சைவக்கலாச்சாரத்தையும், தமிழர் கலாச்சா... வரலாற்று பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் இந்... நிறைவினை முன்னிட்டு வெளிவரும் இம் மல... உவகை கொள்கின்றது நியூசிலாந்து யாழ்ப்பாண... சங்கம்.

எம் அன்னையின் இந்த 125ஆம் ஆண்டு நிறைவு விழாவினை சிறப்... சமூகத்திற்கும், பழைய மாணவர் சங்கங்களுக்கும் ஆசி வேண்டி நிற்கின்... கல்லூரியின் மாண்பினையும், கௌரவத்தி னையும் பாதுகாத்து வளர்க்க ... பெருமானின் அருளினை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

" தமிழர் தலை நிமிர் கழகமும் இதுவே"

பழைய மாணவர் சங்கத்தினர், நியூசிலாந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன ஆணைக்குழு அமைக்க முறையானதொரு பொறிமுறை

## முன்னெடுக்க அரசமைப்புச் சபை தீர்மானம்

கொழும்பு, செப்.27

சுயாதீன ஆணைக்குழுவுக்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பதில் முறையான பொறிமுறையைப் பின்பற்ற அரசமைப்புச் சபை தீர்மானித்துள்ளது.

சிவில் சமூக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக அரசமைப்புச் சபை நேற்று முன்தினம் மாலை சபாநாயகர் தலைமையில் கூடியது. 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுவை விரைவில் நியமிக்கவும் அந்த நடவடிக்கைகளில் சிவில் சமூக உறுப்பினர்கள் மூவருக்கும் அதிக பொறுப்புகளை வழங்கவும் இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் சுயாதீன ஆணைக்குழுவுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும் அரசியலமைப்புச் சபையை மீண்டும் ஒக்ரோபர் 9ஆம் திகதி கூட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(த-வ)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்சார் கணக்கியற் கற்கைகளில் முன்னோடியாகத் திகழும் கே.பி.பி.எஸ்



தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரம்மிக்கதொழில்சார்கணக்கியற் கற்கை நெறிகளை வழங்குவதில் ஜாம்பவானாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் கே.பி.பி.எஸ் கம்பஸ் தனது சாதனை வரலாற்றில் மேலும் பல படிகளைக்கடந்து முன் னகர்ந்து கொண்டிருக்கிறது.

தொழில்சார் கணக்கியற் கற்கை நெறிகளின் முன்னணி விரிவுரையாளர்களது ஒன்றிணைந்த முயற்சியினால் உருவாக்கப்பட்ட கே.பி.பி.எஸ் கம்பஸ் இன்று தேசிய மற்றும் சர்வதேச தொழில்சார் கணக்கியற் கற்கை நெறிகளினை வழங்குவதில் நாட்டின் முன்னணி நிறுவனமாகத் தனது திறமையினை நிலைநாட்டிக் கொண்டுள்ளது.

இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம் இலங்கைப் பட்டயக் கணக் கறிஞர் நிறுவகம் ஆகிய இலங்கையின் தேசிய தொழில்சார் கணக்கியற் கற்கை நெறிகளுக்கான அங்கீகரிக்கப் பட்ட கல்விச் சேவை வழங்குநராகத் தொழிற்படுவதோடு ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற முகாமைக் கணக்கியலாளர் நிறுவனத்தின் (சி.ஐ.எம்.ஏ) அனுமதி பெற்ற கற்கை நிறுவனமா கவும் திகழ்கிறது. மேலும் கே.பி.பி.எஸ் கம்பஸ் ஆனது ஐக்கிய இராச்சியத்தின் அங்கீகாரம் பெற்ற பட்டயக் கணக்கறிஞர் நிறு வனத்தின் (ஏ.சி.சி.ஏ) தங்க நிலை அங்கீகாரம் பெற்ற கல்விச் சேவை வழங்கு நராகவும் பதிவு செய்யப்பட்ட கணினி வழிப் பரீட்சை நிலைய ாகவும் தொழிற்பட்டு வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கை அங்கீகாரம் பெற்ற முகாமைக் கணக்கியலாளர் நிறுவனத்தின் (சி.எம்.ஏ.) அனைத்து மட்டங்களுக் குமான அனுமதி பெற்ற கல்விச் சேவை வழங்குநராகவும் இலங்கை வங்கியாளர் நிறுவகம் (ஐ.பி.எஸ். எஸ்) இன் அனுமதி பெற்ற கல்விச் சேவை வழங்குநராகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் கே.பி.பி.எஸ் பெருமையடைகிறது.

ஒப்பற்ற திறமையும் அனுபவமும் மிக்க பல்வேறு துறைசார் நிபுணர்களையும் தொழில்சார் கற்கைகளில் அதிதிறமையான பெறுபேறுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான உயர் விருதுகளையும் பெற்ற வெற்றியாளர்கள் பலரையும் தன்னகத்தே விரிவுரையாளர்களாகக் கொண்டு கே.பி.பி.எஸ் கம்பஸ் ஆனது மாணவர்களை வெற்றியாளர்களாக்கும் தனது மகத்தான வெற்றிப் பயணத்தைத் தொடர்கின்றது.

தொழில்சார் கணக்கியற் கற்கைகளில் தலைசிறந்த விரிவுரையாளராக உள்நாட்டிலும் ஐக்கிய இராச்சியம், மாலைதீவு, மலேசியா போன்ற நாடுகளிலும் தனக்கெனத் தனியொரு இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ள சி. துமிலன் அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் கே.பி.பி.எஸ் கம்பஸ் தனது வெற்றிப் படிகளைத் தாண்டி தொழில்சார் கணக்கியற் துறையின் ஒரு விழுதுவிட்ட நாமமாகத் திகழ் கிறது. நாட்டின் முன்னிலைத் தொழில் முயற்சியாளர்களில் ஒருவராகத் திகழ்ந்து கே.பி.பி.எஸ்ஸின் இன் தாய்க்கம்பனியான புளூ ஓசன் குழுமத்தின் தலைவரும் கே.பி.பி எஸ் கம்பஸ் நிறுவனத்தினுடைய தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் துமிலன் அவர்களது நேரடி வழிகாட்டல் மூலம் சிறந்த தொழில்சார் வலையமைப்பு ஒன்றின்மூலம் அதிசிறந்த விரிவுரையாளர்களையும் இளம் தலைமுறை மாணவர்களையும் இணைத்து கல்வி தொழில்சார் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுடன் மாணவர்களின் எதிர்காலத்துக்கு ஒளியூட்டும் அளப்பரும் பணியை ஆற்றி வருகின்றது கே.பி.பி.எஸ் கம்பஸ்.

> **தலைநகரில் தடம் பதித்துத் தனக் கெனத் தனியொரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ள கே.பி.பி.எஸ் கம்பஸ் தற்போது தனது பயணத்தின் மற்றுமொரு வெற்றிப்படியாக யாழ் மண்ணிலும் தடம் பதித்துள்ளது.**

தலைநகரில் தடம் பதித்துத் தனக் கெனத் தனியொரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ள கே.பி.பி.எஸ் கம்பஸ் தற்போது தனது பயணத்தின் மற்றுமொரு வெற்றிப்படியாக யாழ் மண்ணிலும் தடம் பதித்துள்ளது. தலைநகரில் இலக்கம் 75, காலி வீதி, தெகிவளையில் தனது தலைமையகத்தினைக் கொண்ட கே.பி.பி.எஸ் கம்பஸ் தனது யாழ்ப்பாணக் கிளையை இலக்கம் 281, காங்கேசன் துறை வீதியில் உத்தியோக பூர் வமாகத் திறந்து வைத்துள்ளது. கே.பி.பி.எஸ் மாணவர்களுக்கான தனித்துவமான சேவையை மேம்படுத்த மேலும் ஒரு படியாக கே.பி.பி.எஸ் கம்பஸ் யாழ் பல்கலைக் கழகத்துடன் உடன்படிக்கை ஒன்றினையும் மேற்கொண்டுள்ளது.

திறமையான மாணவர்களைக் கல்வித்துறையில் உருவாக்கி வளர்த்து, மாணவர்களுக்கு தொழில்சார் முகாமைத்துவ மற்றும் கணக்கியற் துறையில் சாவதேச தரத்திலான சேவையை வழங்கி அவர்களது எதிர்காலத்துக்கான சிறந்த தொழில் வாய்ப்பை உறுதி செய்வதோடு வளம் மிக்க சிற்பிகளை உருவாக்குவதில் கே.பி.பி:எஸ் கம்பஸ் உறுதி கொண்டுள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் இயந்திர உலகின் பொருளாதார மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் திறமை வாய்ந்த தொழில்சார் வல்லுநர்களைக் கணக்கியற் துறையில் உருவாக்கிக் கொண்டிருக்கும் கே.பி. பி.எஸ் கம்பஸ் தனது வெற்றிப் பயணத்தில் இணைந்து கொண்டு உங்களையும் ஒரு வெற்றியாளராக்கிக் கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறது. (த)




# நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் விற்பனை பிரதிநிதிகளுக்கு விருதுகள்





இலங்கையின் முதற்தர மூலிகை அழகுச் சாதன வர்த்தக உற்பத்தி நாமமான 'நேச்சர்ஸ் சீக்ரட்ஸ்' உற்பத்திகளைத் தயாரிக்கும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத் தின், விற்பனைப் பிரதிநிதிகளின் வரு டாந்த விருது விழா மற்றும் மாநாடு, அண்மையில் மிக கோலாகலமாக நடைபெற்றதுடன் நாடுதழுவிய ரீதியாக 100 இற்கும் மேற்பட்ட விற்பனை பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் நிறுவனத்தின் தலைவர் / முகாமைத்துவ பணிப் பாளர் சமந்தகுமாரசிங்க தலைமையில் நடைபெற்ற இவ்விருது வழங் கும் விழாவில் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன் போது நேச்சர்ஸ் சீக்ரட்ஸின் வர்த்தக நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து கடந்தாண்டு சிறப்பாக செயற்பட்ட விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் [illegible] வழங்கப் பட்டன.

[illegible] சிறந்தவிற்பனைப் பிரதி நிதிகளுக்கான ஷைனிங் ஸ்டார் (Shining star) விருது உட்பட பலவிருதுகள் வழங்கப்பட்டதுடன் அந்த அத்தனை விருதுகளையும் கொழும்புக்கு வெளிப்பிரதேசங்களை சேர்ந்த விற்பனை பிரதிநிதிகள் வென்றெடுத்தமை விசேட அம்சமாகும்.

இதேவேளை பெண்டா பேபி உற்பத் திகளை அதிகம் விற்பனை செய்த பிரதிநிதிகள் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டை நோக்கி நகரும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் திருச்சபை



**நூற்றாண்டை நோக்கி நகரும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி கொண்டாடப்படுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. இக்கட்டுரைக்கான தகவல்கள் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பவள விழா சிறப்பிதழில் (1916 – 1991) இருந்தும் முன்னாள் பங்குத் தந்தை யூட் நிக்சன் அடிகளாரிடம் இருந்தும் பெறப்பட்டன.**

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்
– யாழ்.பல்கலைக்கழகம்

**போ**ர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கத்தோலிக்க மதம் அக்காலத்திலேயே உரும்பிராய் மண்ணுக்கும் பரவியதா என்பதை அறிவதற்கான தெளிவான சான்றுகள் இல்லை. போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு 32 கோயிற்பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்துள்ளது. ஒவ்வொரு கோயிற்பற்றுக்கும் ஒரு பெரிய ஆலயம் பொறுப்பாக அமைக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் உரும்பிராயில் வாழ்ந்த கத்தோலிக்க மக்கள் அந்தப் பிரதேச கோயிற்பற்றுக்குப் பொறுப்பாய் இருந்த கோப்பாய் குவாடலூப்பே மாதா ஆலயத்துடன் இணைந்திருக்கலாம் என எண்ணப்படுகிறது. அக்காலத்து உரும்பிராய் கத்தோலிக்க மக்கள் கோப்பாய்க்குத் திருப்பலிக்குச் சென்று வந்ததாக மூதாதையர்கள் கூறியதாக வாய்வழிப் பாரம்பரியம் ஒன்று உண்டு.

1658இல் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியதை அடுத்து ஏற்பட்ட கலாபனைகளால் பல கோவிற்பற்றுக்கள் மறைந்து போக கத்தோலிக்கர்கள் மீண்டும் சைவ சமயத்தைத் தழுவினர். போர்த்துக்கேயர் இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டு 250 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரால் விசுவாச வித்து இங்கு விதைக்கப்பட்டது. 1911 ஆம் ஆண்டு உரும்பிராயைச் சேர்ந்த பண்டாரி, கணபதி, சீனியன் ஆகிய மூவரும் கச்சேரி, நல்லூர் வீதியில் உள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலய பணிமனையில் சுவாமி ஞானப்பிரகாசரைச் சந்தித்து கத்தோலிக்க மறையைத் தழுவ விருப்பம் தெரிவித்தனர். ஆனாலும் அக்காலப் பகுதியில் நிலவிய இறுக்கமான சாதி – சமூக ஏற்றத்தாழ்வுகள் காரணமாகத் தோன்றிய எதிர்ப்புக்களையும் சவால்களையும் எதிர்கொள்ள முடியாத நிலையில் அவர்களின் முயற்சி கைவிடப்பட்டது.

5 வருடங்களின் பின்னர் 1916 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 19 ஆம் திகதி மீண்டும் பண்டாரி, கணபதி, சீனியன் ஆகிய அந்த மூன்று பேரும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரிடம் வந்து எவ்வித எதிர்ப்பின் மத்தியிலும் கத்தோலிக்க மதத்தைத் தழுவத் தயார் எனத்தெரிவித்ததை அடுத்து ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி சுவாமி ஞானப்பிரகாசர் முதன்முறையாக உரும்பிராய்க்குச் சென்று கத்தோலிக்க மறையைத் தழுவ விரும்புவோரின் பெயர்களைப் பதிந்தார். இவ்வாறு கத்தோலிக்க மறையைத் தழுவ விரும்பியவர்கள் ஏழைகளாய் இருந்தமையாலும் பல விடயங்களுக்கு மற்றவர்களில் தங்கிவாழ வேண்டியவர் களாய் இருந்தமையாலும் பல இன்னல்களை எதிர்நோக்கினர். இத்தகைய இன்னல்கள் மக்களுக்கு மட்டுமல்ல சுவாமி ஞானப்பிரகாசருக்கும் ஏற்பட்டதாக அவருடைய குறிப்புக்களில் இருந்து அறியவருகிறது. பண்டாரி, கணபதி, சீனியன் ஆகிய மூவரும் சுவாமி ஞானப்பிரகாசரைச் சந்தித்த இரு தினங்களில் குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஒரு காணியியே ஒரு சிறிய கொட்டில் அமைக்கப்பட்டது. முதலாவது கோவிலான இச்சிறிய கொட்டில் கோவிலே சுவாமி ஞானப்பிரகாசரின் தங்கும் இடமாகவும் அதேசமயம் கோவிலாகவும் விளங்கியது. முதலாவது இந்தக் கோவிலானது தற்போதைய ஆலய முன் பக்கத்தில் இருந்து தென்கிழக்குப் பக்கமாக கிட்டத்தட்ட 400 யார் தூரத்தில் இருந்தது. இப்பகுதி முன்னர் அவர்களின் சுடுகாடாகவும் விளங்கியது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இந்தக் கோவிலிலேயே சுவாமி ஞானப்பிரகாசர் 1916 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 18 ஆம் திகதி முதற் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இதுவே உரும்பிராய்ப் பங்குத் திருச்சபையின் ஆரம்ப வரலாறாகும். கோவில் கட்டி திருப்பலி ஒப்புக்கொடுத்த செயலானது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சுவாமியின் இச் செயற்பாடு கிராமத்தில் கலகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்று கத்தோலிக்க உயர் பீடத்துக்கு முறையிடப்பட்டது. ஆயினும் ஆயர் மேதகு கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகை சுவாமி ஞானப்பிரகாசருக்கு ஊக்கமும் உதவியுமே கொடுத்து வந்தார்.

1916 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி உரும்பிராயைச் சேர்ந்த 107 பேர் திருமுழுக்குப் பெற்று திருமறையைத் தழுவிக் கொண்டனர். ஆயர் மேதகு கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகையும் கியோமர் அடிகளாரும் (பின்னர் ஆயர்) வேறு இரு குருக்களும் திருமுழுக்குச் சடங்கை மிகவும் ஆடம்பரமாக நடத்தினர். முன்பு நீதிமன்றத்தில் கிறிஸ்தவர்களுக்கு எவ்வித தொல்லையும் கொடுக்கமாட்டோம் என்று உறுதி கொடுத்தவர்கள் மீண்டும் இப்புதிய கிறிஸ்தவர்களுக்கு தொல்லை கொடுக்கத் தொடங்கினர்.



இந்த நிலையில் திருமுழுக்குக் கொண்டாட்டத்துக்கென மூன்று மடங்காக விஸ்தரிக்கப்பட்ட கொட்டில் கோவிலை 1916ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சுவாமி ஞானப்பிரகாசர் பாடசாலையாக மாற்றித் தானே அந்தப் பாடசாலையின் முதல் ஆசிரியருமானார். கோவில் பாடசாலையாக மாற்றப்பட்டமையால் ஒரு புதிய கோவிலுக்கான தேவை ஏற்பட்டபோது பாசையூர் பங்குத்தந்தையாக இருந்த டெலாஸ் சுவாமியார் உரும்பிராய்க் கோவிற்பற்றிற்கு உதவ முன்வந்து பாசையூர் கத்தோலிக்கர்களிடம் இருந்து பண உதவி பெற்றுக் கொடுத்தார். பாசையூர் கத்தோலிக்கர்களிடம் இருந்தும் வேறு சிலரிடம் இருந்தும் பெற்ற உதவியுடனும் ஒரு புதிய கொட்டில் கோவில் கட்டப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டது. அக் கோவில் தற்போதைய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வளவில் அமைந்திருந்தது. இக்கோவியில் அன்று வைக்கப்பட்டு இன்றுவரை அங்கிருக்கும் மிக்கேல் அதிதூதரின் திருச்சொரூபம் 1875 ஆம் ஆண்டு யாழ் ஆசனக் கோவிலில் ஆரம்பிக்கப்பட்ட மிக்கேல் பக்திச் சபைக்கு உரியதாகும்.

மக்களின் விசுவாச வாழ்வை பிரதிபலிக்கும் கல்லினாலான ஆலயம் ஒன்றைக் கட்டி எழுப்ப முடிவு செய்யப்பட்டு 1932 ஆம் ஆண்டு தை மாதம் 5 ஆம் திகதி அத்திவாரம் இடப்பட்டது. 1932 ஆம் ஆண்டு மே மாதம் ஆயர் மேதகு கியோமர் ஆண்டகை இந்த அடித்தளத்தை ஆசீர்வதிக்க உரும் பிராய் சென்றார். அரைகுறை நிலையில் இருந்த அந்த ஆலயம் 1932 ஆம் ஆண்டு டிசெம்பரில் பெய்த மழையினால் இடிந்து விழுந்து பெரும்சேதத்துக்குள்ளானது. ஆயினும் சுவாமி ஞானப்பிரகாசரின் அயராத முயற்சியால் அடித்தளம் இடப்பட்ட இடத்திலேயே மீண்டும் ஒரு கொட்டில் கோவில் அமைக்கப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டது. இக்கோவிலே பல குருமாரின் முயற்சியில் பல திருத்தங்களைக் கண்டு படிப்படியாக வளர்ச்சி அடைந்து தற்போதைய ஆலயமாக விளங்குகிறது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரே (1916 – 1946) இங்கு விசுவாச வித்தை விதைத்தார் பின்னர் ரி.ஏ.ஜே. மதுரநாயகம் (1946 – 1952) அடிகளார் – வி.சூசைப்பிள்ளை (1952 – 1958) அடிகளார் – ஸ்பம்பத்தி (1958 – 1960) அடிகளார் – கென்றி ஜெலான் (1960 – 1961) அடிகளார் – பஸ்ரியாம்பிள்ளை (1961 – 1962) அடிகளார் ஆகியோர் வழி இங்கு பணியாற்றினர்.

உரும்பிராய்ப் பங்கின் முதல் பங்குத் தந்தையாக பெனட் கொன்சன்ரைன் அடிகளார் (1962 – 1966) (தற்போது அமெரிக்காவில்) பணியாற்றினார். இவர் காலத்தில் முன்பு நடைமுறையில் இருந்து இல்லாமற் போன ஆண் பெண்களுக்கான மரியாயின் சேனைகள் மீண்டும் செயற்படத் தொடங்கின. கோவில் காணியில் சில பகுதிகள் விற்கப்பட்டு கோவில் கட்டட நிதி சேகரிக்கப்பட்டது. மக்கள் வெங்காயம் பயிரிட்டபோது குடும்பத்துக்கு ஒரு முடிச்சு என ஆலயக் கட்டட நிதிக்குக் காணிக்கையாக செலுத்தினர். பீடப்பணியாளர் வருடா வருடம் நடத்தும் கரோல் நிகழ்ச்சி மூலம் பணம் சேகரிக்கப்பட்டு ஆலய கட்டட நிதிக்கு கொடுக்கப்பட்டது. ஆலய வளவினுள் ஆயர் செலவிலே ஒரு கிணறு தோண்டப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்பு பெறப்பட்ட சேமக்காலைக் காணி அளக்கப்பட்டு எல்லை போடப்பட்டது.

என்.எம்.சவிரிமுத்து அடிகளார் (1966 – 1970) பங்குத்தந்தையாகப் பணியாற்றிய போது திருப்பாடுகளின் காட்சி என்றால் அது உரும்பிராய் தான் என்று கூறும் அளவுக்குச் சிறப்புப் பெயர் பெற்று விளங்கியது. இவர் மக்களிடம் காணப்பட்ட கலை ஆர்வத்தை வளர்த்ததோடு பிள்ளைகளிடம் துறவறப் பற்றையும் ஊட்டினார். பின்னர் பேனர் ரட்ணய்யா (1970 – 1971) அடிகளார் ஓராண்டு பணியாற்றியுள்ளார். இராயப்பு யோசப் அடிகளார் (1971 – 1974) (தற்போதைய மன்னார் ஆயர்) ஆற்றிய அப்போஸ்தலிக்கப் பணியும் மக்களின் ஆன்ம வாழ்வில் காட்டிய அக்கறையும் உரும்பிராய் மக்களின் மனதில் இவருக்கு நீங்காத இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. தற்போதைய ஆலயத்தைக் கட்டும் பணியில் இவர் முழு மூச்சுடன் செயற்பட்டார். கடினமான காலத்தில் உணவுக் கூப்பனுக்கு கிடைத்த உலர் உணவுப் பொருள்களைக் குருவிடம் அளித்து அதை விற்று ஆலயத்தை மக்கள் கட்டினர். ஆலயத்தின் பெரும் பகுதி மக்களின் தியாகத்தினாலும் உடல் உழைப்பாலுமே உருவானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராயப்பு யோசப்பு அடிகளாரின் காலத்தில் கட்டப்பட்ட ஆலயத்தின் முடிவுறாத வேலைகள் ஏ.எப்.எக்ஸ்.ஜெயசேகரம் அடிகளாரின் (1974 – 1978) காலத்தில் நிறைவு செய்யப்பட்டது. இவருடைய காலத்திலேயே தற்போது காணப்படும் பங்குப் பணிமனை கட்டப்பட்டது. இதற்கான முழுச் செலவையும் யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையே ஏற்றுக்கொண்டார். ஏ.பிலிப் அடிகளாரின் பணிக்காலத்தில் (1978 – 1980) 1978ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 16 ஆம் திகதி ஆலயத்துக்கு மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டது. சின்னராசா அடிகளார் 1980இல் 3 மாதங்கள் பணியாற்றியுள்ளார். ஆர்.எம்.ஜி.நேசநாயகம் (1981 – 1984) அடிகளார் – கிருபானந்தன் (1984 – 1985) அடிகளார் ஆகியோரும் பணியாற்றியுள்ளார். பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் (1985 – 1988) சேமக்காலைக்கு அதற்குரிய வடிவத்தைக் கொடுத்தார். ஆர்.சி.எக்ஸ். நேசராஜா (1988 – 1993) அடிகளார் காலத்தில் ஆலயத்தை சுற்றி மதில் அமைக்கும் பணி இடம்பெற்றது. ஜே.பி.அன்ரனிதாஸ் (1993 – 1995) அடிகளார் – ஜி.அருள்நேசன் (1995 – 2001) அடிகளார் ஆகியோரும் இங்கு பணியாற்றியுள்ளனர். சி.யே.அன்ரனி பாலா அடிகளார் காலப்பகுதியில் (2001 – 2005) ஆலயத்தின் முன் முகப்பின் இரு பக்கங்களும் கோபுரங்களும் – ஆலயத்தின் முன் பக்க வீதியுடன் இணைந்ததாக பிரதான வாயிலும் அமைக்கப்பட்டு இரு பக்கமும் மரங்கள் நடப்பட்டன.

எஸ்.செபநேசரத்தினம் அடிகளார் காலப்பகுதியில் (2005 – 2008) உரும்பிராய் மக்களின் கல்வியை முன்னேற்றும் நோக்குடன் கல்விக் கழகம் அமைக்கப்பட்டு, கல்வியைக் கற்பிப்பதற்கான மண்டபமும் அமைக்கப்பட்டது. மேலும் ஆலயத்தின் முன்பக்க வளாகம் திருப்பலியை நடத்துவதற்கு ஏற்ற விதமாக இருந்ததை விட மேலும் புற்தரையாக மாற்றியமைக்கப்பட்டதுடன் சேமக்காலையின் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வாயில் கதவு புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஏ.யூட் நிக்சன் அடிகளார் (2008 – 2015 ஒக்டோபர்) காலப்பகுதியில் மகா ஞான ஒடுக்கம் (2011 பெப்ரவரி) 40 நாள்கள் நடத்தப்பட்டது. ஆலயத்துக்கான சுற்று மதில் அமைக்கப்பட்டது. மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்த வைகறை நிலையம் அமைக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு ஒக்சீலியம் சலேசியன் அருட்சகோதரிகள் மடம் இரண்டு மாடிகள் கொண்டதாக அமைக்கப்பட்டுத் திறக்கப்பட்டது. ஆலயத்தின் பீடப்பகுதி இடிக்கப்பட்டு கோபுரம் அமைக்கப்பட்டதுடன் இரு பக்க கைக் கோவில்களும் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு நீண்டகால இடைவெளியின் பின்னர் திருப்பாடுகளின் காட்சி சிலுவையின் அதிர்வுகள் என்னும் தலைப்பில் மேடையேற்றப்பட்டது. நூற்றாண்டை நோக்கி நகரும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப்பங்கு மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பிலா மணியே!

ஒவ்வொரு மனிதர்களும் தனித்துவ மானவர்கள். மனிதனது ஆற்றலும் ஆளுமையும் கூட தனித்துவமானவைதான். ஒவ்வொரு மனிதனுள்ளேயும் அவனுக்கே உரித்தான பல திறமைகள் பொதிந்திருக்கின்றன, புதைந்திருக்கின்றன. ஒருவன்போன்று இன்னொருவன் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறு இருக்கவும் முடியாது.

எமது பழைய பதிவுகளைப் புரட்டிப் பார்ப்போமாக இருந்தால், பாரதியார் போன்று திருவள்ளுவர் இல்லை. தியாகி பொன். சிவகுமாரன் போன்று தந்தை செல்வா இல்லை. நடிகர் விவேக் போன்று வடிவேலு இல்லை. இவர்கள் ஒவ்வொருவருமே ஆற்றலும் அர்ப்பணிப்பும் உள்ளவர்கள்தான். ஆனால் ஒருவர்போல, மற்றவர்கள் மாறுவதற்கு முயற்சி செய்யவில்லை. ஒவ்வொருவருமே தத்தமது பாணியில் பயணித்து மக்களின் மனதில் இடம் பிடித்திருக்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக நாம் எமது பிள்ளைகளையும் மாணவர்களையும் வழிநடத்த அல்லது நல்வழிப்படுத்த முயலும்பொழுது, இன்னொருவருடன் ஒப்பிட்டுப் பேசும் பழக்கத்தை வளர்த்து வைத்திருக்கிறோம். இது ஒரு வேதனையான உண்மை.

அவனைப்பார் 4 மணிக்கு எழும்பிப்படிக்கிறான். ஆனால் நீ..., அவன்ரை எழுத்தைப் பார் உன்ரை எழுத்தையும் பார்..., அவன் எழும்பி எவ்வளவு உசாராய்க் கதைக்கிறான். அவனைப் பார்த்துப் பழகு, அந்தக் காலத்திலே நான் என்னமாதிரி எல்லாம் செய்தனான் ஆனால் நீ...

இவ்வாறாக ஒருவனைப்போல இன்னொருவனை புடம் போட்டு மாற்றுவதற்கு கடுமையாக முனைந்து நிற்கின்றோம். எதற்கு எடுத்தாலும் ஒப்பிட்டுக் கதைப்பதை அன்றாட நடவடிக்கையாகக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவனுக்கான அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அவன் சார்ந்ததாக அவனது நிறைகுறைகள் சார்ந்ததாக அவனது சுபாவம் சார்ந்ததாக இருக்க வேண்டுமே அன்றி, ஒப்பிடும் பொறிமுறையாக இருக்க முடியாது. ஒப்பிட்டு அறிவுரை சொல்ல முயல்வது அவர்களைக் காயப்படுத்தி பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுவதுடன், குளிக்கப்போய் சேறு பூசிய கதைபோல அல்லது பிள்ளையார் பிடிக்க குரங்காக மாறிய கதைபோல் ஆகிவிடுவதுடன் அது அவர்களிடம் பல சுகாதாரப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கும்.

ஒப்பிட்டுப் பேசுவதால் ஏற்படும் தீயவிளைவுகளை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அவற்றில் முக்கியமாவை மனக்குழப்பம், விரக்தி, பொறாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு, கற்றல் செயற்பாடுகளில் ஆர்வக் குறைவு போன்றவையாகும். சகோதரர்களிடையே பொறாமை உணர்வு வளர்வதற்கும் இது காரணமாகி விடுகின்றது.



**பிள்ளைகளை வழிநடத்தும்போது, எமது முக்கியமான இலக்கு எதுவாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும். அந்த இலக்கு பரீட்சைகளில் சித்தி பெறுவதா? உயர்கல்வி கற்பதா? போட்டிகளில் வெற்றி பெறுவதா? செல்வம் சேர்ப்பதா? அல்லது நல்ல மனம் கொண்ட மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக உருவாக்குவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு ஒப்பிட்டுப் பேசப்படும் பேச்சு உதவியாக அமையாது.**

பிள்ளைகளை வழிநடத்தும்போது, எமது முக்கியமான இலக்கு எதுவாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும். அந்த இலக்கு பரீட்சைகளில் சித்திபெறுவதா? உயர்கல்வி கற்பதா? போட்டிகளில் வெற்றிபெறுவதா? செல்வம் சேர்ப்பதா? அல்லது நல்ல மனம் கொண்ட மனிதாபிமானமுள்ள ஒரு மனிதனாக உருவாக்குவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒரு நல்ல மனிதனை உருவாக்குவதற்கு ஒப்பிட்டுப் பேசப்படும் பேச்சு உதவியாக அமையாது.

சுயமாக ஒருவன் சிந்தித்து வாழ்வில் உயர்ச்சி அடைவதற்கு அவனிடமுள்ள திறமைகள் அடையாளப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அந்தத் திசையிலே அவன் முன்னேறுவதற்கு அவன் சார்ந்த அறிவுரைகளும் வழிகாட்டல்களும் உதவியாக இருக்கும். ஆனால் இது ஒருபொழுதும் ஒப்பிட்டுப்பேசும் பேச்சாக அமைந்துவிடக் கூடாது.

*சி.சிவன்சுதன்*
*பொதுமருத்துவ நிபுணர்*
*யாழ்.போதனா வைத்தியசாலை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி பொது நூலகத்தினர் யாழப்பாணம் பூபாலசிங்கம் புத்தக விற்பனை நிலையத்தின் பங்களிப்புடன் உள்ளூராட்சி வாரத்தையொட்டிய புத்தகங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நூலக மண்டபத்தில் நடைபெற்றது. சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் கலந்து கொண்டு புத்தகக் காட்சிப்படுத்தலை திறந்து வைத்தார். நிகழ்வில் பெருமளவு மாணவர்களும் வாசகர்களும் கலந்து கொண்டனர். (ஐ)



இணுவில் அஸ்ரன் சர்வதேசக் கல்லூரியில் ஆக்கத்திறன் கல்விக் கண்காட்சி அதிபர் த.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ.துரைசிங்கம் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும், கண்காட்சியின் சில காட்சிகளையும் இங்கே காணலாம். (ஐ)



வரணி வடக்கு கௌரிபாலன் சைவப்பிரகாச முன்பள்ளியினரின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராக வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் வை.விஜயகுமாரன் உள்ளிட்ட விருந்தினர்கள் மாலையிட்டு வரவேற்கப்படுவதையும் பிரதம அதிதி மற்றும் வரணி வடக்கு கிராம அலுவலர் எஸ். பரமானந்தம் ஆகியோர் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதையும் காணலாம். (ஐ-122)



வடமாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் வடமாகாண அமைச்சர் பா.சத்தியலிங்கத்தால் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து விசேட தேவைக்குட்பட்டோர் மற்றும் பெண்கள் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-402)



நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கந்தபுராணத் தொடர் இசைப் பேருரைப் பூர்த்தி விழாவின் போது. உலகச் சைவத் திருச்சபையின் யாழ். மாவட்டச் செயலாளர் கு.சரவண பவானந்தன் இசைப் பேருரை நிகழ்த்திய கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவுக்கு இசைப் பேருரை வித்தக சிரோன்மணி என்னும் சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்தார். (ஐ)



நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெய்வீக இசை அரங்கு நடைபெற்றது. நிகழ்வில் இறுதி நாள் புலம்பெயர் தேசத்து கலைஞரும் அண்ணாமலைப் பல்கலைக் கழக இசை ஆய்வாளருமான ஈழத்துச் சீர்காழி நயினை சிவமைந்தன் மற்றும் இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் ஆகியோர் இசைக்கச்சேரி நடத்துவதைப் படங்களில் காணலாம். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா ஆசிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் புகழினை போற்றி வவுனியா தரணி வேலு கந்தசாமி எழுதி எஸ்.பி.சாந்தனால் பாடப்பட்ட பக்தி பாடல் இறுவட்டு ஆலயத்தின் கும்பாபிசேக தினத்தன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. ஆலயத்தின் முண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா சிதம்பரபுரம் நாகராஜா வித்தியாலய அதிபர் சி.வரதராஜன் இறுவட்டினை வெளியிட ஆலயத்தின் தலைவர் தருமகுலசிங்கம் பெற்று கொண்டார். (ஐ-421)







சித்தன்கேணி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக வலி மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி.ஐங்கரன். வலி மேற்கு பிரதேசத்தின் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி நிரஞ்சனா.சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர். முன்பள்ளியின் ஆசிரியர் செல்வி லீலாவதி மாரிமுத்து மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டியில் நாட்டிய நாடகத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது. கலைத்திறன் போட்டியில் பங்குபற்றியவர்களை அதிபர், ஆசிரியர் குழாமுடன் படத்தில் காணலாம். (ஐ-10)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பிராந்திய நிலையத்தில் கல்வி மாணிப்பட்ட கற்கை நெறியின் மூன் றாம் வருட ஆசிரிய மாணவர்களால் வித்தியா மணி 2015 சஞ்சிகை வெளி யீடப்பட்டுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச் சின் செயலாளர் சு.ரவீந்திரன் கலந்து கொண்டார். நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அமிர்தலிங்கம். முதற்பிரதி பெற்ற ஈ.எஸ். பி.நாகரத்தினம். வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் சே.உதயகுமார். தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி செல்வராணி இளங்கோ ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண் டனர். (ஐ-10)



கனடா சைவசித்தாந்த மன்றம் பதிப்பித்த கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதரின் திருமுறைப்பெருமை நூல். கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்களின் 100 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் அமைந்துள்ள கணபதீஸ்வரக்குருக்கள் நூல்நிலையத்தில் அண்மையில் வெளியீடப்பட்டது. குறித்த தினத்தில் கணபதீஸ்வரக்குருக்கள் நூல்நிலையத்தில் கலாநிதி சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்களின் திருவுருப்படமும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (ஐ-10)






வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் 2015 ஆம் ஆண்டுக்குரிய பிரமாண அடிப் படையிலான நன்கொடை நிதியில் இருந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், முன்பள்ளிகள், சனசமூகநிலையங்கள், விளையாட்டுக் கழகங் கள் போன்றவற்றுக்குக் கணணிகள், ஒலிபெருக்கி சாதனம், தொலைக்காட்சிப் பெட்டி, சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், பாதணிகள், தளபாடங்கள், நூல்கள் மற்றும் சிமெந்து போன்ற பொருள்களும் தனிப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக தண்ணீர்ப்பம்பி, மீன்பிடி உபகரணங்கள், துவிச்சக்கரவண்டிகள், தையல் இயந்திரங்கள், மரவேலை இயந்திரம், சமையல் தொழில் உபகரணங்கள் ஆகிய பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்துக் கல்லூரி
## றவு சிறப்பிதழ் - 2015











### பிரதி அதிபர்களின் வாழ்த்துச் செய்தி

எமது அன்னையின் 125ஆவது அகவையில் பிரதி அதிபர்களாக நாம் இந்த வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றோம். எம்மைச் சீராட்டி தாலாட்டி அன்னை எவ்வாறு அழகு பார்ப்பாளோ அதே போன்று பள்ளி அன்னை அறிவூட்டி எம்மை வளர்த்துள்ளாள். இத்தகைய அன்னைக்கு இவ் விழாவினை பிரதி அதிபர்களாக இருந்து கொண்டாடக் கிடைத்தமை எமது வாழ்வில் கிடைத்த பெரும் பேறாகவே கருதுகின்றோம். இத் தமிழர் தலைநிமிர் கழகம் மேன்மேலும் அளப்பரிய சாதனைகள் புரிய எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

வாழ்க இந்து
வளர்க புகழ்
வாழிய வாழியவே

திரு. சதா.நிமலன் (நிர்வாகம்)
திரு.ந. பரமேஸ்வரன் (கல்வி அபிவிருத்தி)



### வாழ்த்துரை

இலங்கைத் திருநாட்டில் எங்கும் இந்து மதத்தவர் உள்ளம் இலங்கிடும் ஒரு பெரும் கலையகம் என மிளிரும் எமது யாழ் இந்து அன்னைக்கு நூற்றி இருபத்து ஐந்து அகவை நிறைவு பெற்றிருக்கின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் கனவாக விளங்கிய கல்லூரி இது எண்ணற்ற அறிஞர்களை ஆன்மீக, வாதிகளை உருவாக்கிய பதி இது.

சுவாமி விவேகானந்தரின் திருவடிபட்ட புண்ணிய பூமியான எங்களுடைய இந்துக் கல்லூரி இந்துக்களுக்கு இந்து தர்மத்திற்கு ஆற்றிய பணி சாத்திரமானது போற்றுதற்குரியது.

இந்த வித்தியாலயத்தின் மத்தியில் ஸ்ரீஞானவைரவர் தேவாலயம் அமைந்திருக்கின்றது. சிவஞானத்தை அருளி இக பர நலமருளும் பேரருட் தெய்வமாக. இந்த வைரவப் பெருமான் திருவருள் பொழிகின்றார்.

அறிவும் அருளும் ஆற்றலும் பல்கிப் பெருகும் ஆனந்த நிலையமாக இந்துக் கல்லூரி செழிப்புற்று மிளிர்கிறது இந்து அன்னையின் கல்வி இணைபாட விதான உயர்ச்சியின் நீட்சிக்கும். நூற்றி இருபத்து ஐந்தாம் அகவை விழா மிகச் சிறப்பாக அமையவும் வைரவப் பெருமானின் திருமலரடிகளை வணங்கி, பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பிரம்மஸ்ரீ.க. நிரஞ்சன சர்மா
பிரதமகுரு,ஞான வைரவர் ஆலயம் (ஆசிரியர்)
யாழ்.இந்துக் கல்லூரி.



கோவில் என்றால் சிதம்பரம் என்பது போல, இந்துக் கல்லூரி என்றால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்றால் மிகையாகாது. இப்படியான புண்ணிய பூமியில் தவழ்வதற்கு கிடைத்த சந்தர்ப்பம் எனது பெரும் பாக்கியமே. இந்து அன்னையின் மண்ணை மிதித்தவர்கள் ஏதோ ஒரு துறையில் விற்பனர்களாகத்தான் இருக்கிறார்கள். இவ்வாறான ஓர் உன்னத நிறுவனத்தின் 125ம் ஆண்டு நிறைவு என்பது நாம் மட்டுமல்ல அனைவரும் பெருமைப்படவேண்டிய விடயம்.

மாணவர்களே, கல்லூரி நாட்களில் பாட விதானத்திற்கப்பால் நீங்கள் கற்க வேண்டியவை ஏராளம். இந்து அன்னையில் நீங்கள் கழிக்கும் ஒவ்வொரு நொடியும் அனுபவ ஏணியின் அடையாளப் படிகள். இந்துக் கல்லூரி நாட்களில் நீங்கள் வரையில்லை வழவமைக்கப்படுகின்றீர்கள்.

கல்லூரியில் உங்கள் கல்விசாரா செயற்பாடுகள், கழகங்களுக்கு நீங்கள் ஆற்றும் பங்கு, விளையாட்டுத் துறையில் உங்கள் ஆர்வம், சாரணர் மற்றும் மாணவ முதல்வராக உங்கள் உழைப்பு என்பன நிச்சயமாக உங்களை சிறந்த தலைவர்களாக்கும். அத்துடன் தமிழ்ச் சங்கம், ஆங்கில சங்கங்களினூடாக உங்கள் மொழிவளமை உங்களை மேலொரு படிக்கூட்டும்.

மேலும், 125 வருட நிறைவு என்பது வெறுமனே கல்லூரியின் கட்ட வயது கிடையாது, மேலாக நிறுவனர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் கடும் உழைப்பு, மாணவர்கள், பழைய மாணவர்களின் வளர்ச்சி மற்றும் பங்களிப்பு, உலக பழைய மாணவர் சங்கங்களின் தோற்றம் மற்றும் உதவிகள், இந்துக் கல்லூரி சமூகம், பெற்றோர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பு எல்லாவற்றினதும் நிறைவே இந்த 125வது கொண்டாட்டம். இந்தக் கணத்திலே முன்னாள் அதிபர், ஆசிரியர்களையும் அவர்களின் சேவை மற்றும் இந்து வாழ்க்கை அனுபவங்களையும் நான் இங்கே நினைவு கூர விரும்புகின்றேன்.

நாம் அனைவரும் இந்து அன்னையின் புதல்வர்களாக, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் அன்னையின் வளர்ச்சிக்கு அயராது உழைப்போம்.

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்.

குணரட்ணம் பார்த்தீபன் - தலைவர்.
பழைய மாணவர் சங்கம்.
சிட்னி, அவுஸ்திரேலியா.



ஒரு கல்விக்கூடத்தின் வரலாற்றின் 125ஆண்டுகள் என்பது வரலாறு மட்டுமல்ல, சாதனையும் கூட. அந்த 125 ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு கல்வி புகட்டி பல்வேறு துறைகளில் சாதனை வீரர்களாக பிரகாசிக்க வைத்திருப்பது எங்கள் தாய் இந்துவின் பிரமிக்கத்தக்க சாதனையாகும். இந்துவின் மைந்தர்கள் ஆரம்பத்தில் யாழ் மாவட்டம், வடமாகாணம் என்று சாதனை நிலைநாட்ட ஆரம்பித்து பின்பு தேசிய மட்டத்திலும் நாட்டின் எல்லைகளைக் கடந்து சர்வதேச மட்டத்திலும் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி யாழ் இந்துக் கல்லூரிக்கு புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்

125 ஆண்டு நிறைவையொட்டி யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பு ஏற்கனவே மூன்று மாபெரும் விழாக்களை கொழும்பில் கொண்டாடியதுடன், அவ்வப்போது யாழ் இந்துக் கல்லூரிக்கு நிதி உதவி வழங்கியும் முன்னோடியாக செயற்பட்டதையும் பதிவு செய்து எதிர்வரும் காலங்களிலும் எங்கள் பங்களிப்பைத் தொடர்வோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து, விழாக்கள் யாவும் சிறப்பாக நடைபெற வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

தலைவர்-கொழும்பு



எமது கல்லூரி அன்னையின் நூற்றியிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடும் சிறப்புமலருக்கு ஜேர்மனி வாழ் யாழ் இந்துச் சமூகம் சார்பாக வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இக்கட்டானதொரு காலகட்டத்தில் தமிழ் சமுதாயத்தை சரியான பாதையில் வழிநடத்திட வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்டதே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாகும்.

இந்த கல்விக்கூடம் வெளியேற்றிய மாணவர்கள் பல்வேறு துறைகளில் நிபுணர்களாக அறிஞர்களாக நற்பண்புமிக்க தலைவர்களாக எம் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள். அத்தோடு அவர்கள் எம் கல்லூரியின் தாரக மந்திரமான "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" எனும் வள்ளுவன் வாக்கிற்கு ஏற்ப தாம் வாழும் பிரதேசங்களில் அறிவு பண்பும் நல்லொழுக்கமும் நிறைந்த நன்மக்களாய் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எம் கல்லூரி அன்னையின் புகழ் மேன்மேலும் வளர்ச்சியடைந்து பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்து நிலைபெற வேண்டுமென எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானின் பாதம் பணிந்து மனமார்ந்த வாழ்த்துக்களுடன் விடைபெறுகின்றேன்

ஆர். சி. இராமநாதன் - தலைவர்.
பழைய மாணவர் சங்கம், ஜேர்மனி.

சங்கச் செயலாளரின் செய்தி

...ாயென மிளிரும் தனிப் பெரும் கழகமாம் யாழ்ப்பாணம் ...பணியின் கருத்தூன்றித் திளைத்து 125 வருடங்களை ...இவ் வேளையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ...யில் 125 ஆவது ஆண்டு விழாச் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் ...ற மகிழ்ச்சி.

...வாழ்த்துச் செய்தி என்று கொள்ளுவது தவறு. பெரு...ற்கின்ற கல்லூரித் தாயின் மடியிலே மாணவனாகத் ...ன வள ஆளணியில் ஒருவனாக இருந்து இன்று ...வது ஆண்டு நிறைவுக் காலப்பகுதியில் பாடசாலை ...றைத் தந்தமைக்கு நன்றி சொல்லுகின்ற தருணமாகவே

...ரியது. இந்துக்கல்லூரியின் வாசல் வந்தவர்கள் யாரும் ...அத்தனை பேருக்கும் முத்திரை தந்தவள் - வாழ்வில் ...கள் அன்னை.

...தருணங்களுக்கெல்லாம் மகுடம் வைத்தாற் போல ஒட்டு...திக்கின்ற நிகழ்வில் - இந்த 125 ஆவது ஆண்டு விழா ...அபிவிருத்திச் சங்கத்தினராகிய நாம் திடசங்கற்பம்

...யர் விளங்கப் : பெரும் புகழ் திளங்க வாழ்த்துக் களைக்

...ா நின் நலம் மறவோம்"
...ரன் - செயலாளர்,
...அபிவிருத்திச் சங்கம்.



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எனும் காலத்தால் அழியாத எம் கலைக்கோவிலின் சீரிய பயணத்தின் ஒரு சிறப்பான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

யாழ் இந்துக் கல்லூரி என்பது வெறும் கற்களையும் மண் வளையும் மட்டும் கொண்ட ஒரு கட்டடம் அல்ல, மாறாக எத்தனையோ எம்மக்களின் உதிரத்தாலும், உழைப்பாலும் உரமாக்கப்பட்டு எம் மண்ணோடும் மனதோடும் ஒன்றாகிப் போன ஒரு வரலாற்றுப் பொக்கிசம். எம் கல்லூரித் தாயின் பிறப்பின் பின்னணியே புனிதமானது. அன்று அன்னிய அடக்கு முறைகளுக்கு எதிராக, எம் சுதேசியத்தையும் இறையாண்மையையும் கட்டிக்காப்பதற்காக கருவிலேயே போர்த்தழும்புகளைச் சுமந்து வந்த எம் கலைத்தாய் இன்று தனது 125வது அகவையில் அடியெடுத்து வைத்துள்ளாள். அறிவு அன்னையின் அற்புதச்சேவை நினைவு மலருக்கு ஆசிச் செய்தி தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"வாழிய யாழ் நகர் இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்"

சபா சுகந்தன் - தலைவர்.
பழைய மாணவர் சங்கம் - ஐக்கிய இராஜ்யம்



பாணம் இந்துக் கல்லூரி, 125ஆவது ஆண்டினை அடியெடுத் திருப்பதை நினைவு கூர்ந்து ஒழுங்கு செய்யப் பட்டிருக்கும் கொண்டாட்ட நிகழ்வுகள் அனைத்தும் வெற்றிகரமாக நடைபெற யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விக்டோரியா கிளை, அவுஸ்திரேலிய அனைத்து உறுப்பினர்கள் சார்பாகவும் எனது வாழ்த்துக் களைத் தரிவிக்கின்றேன்.

இந்த விழாவானது யாழ் இந்துக் கல்லூரிச் சமூகத்திற்கு ஒரு மறக்க முடியாத நிகழ்வாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த 125ஆவது ஆண்டு நிகழ்வுக் கொண்டாட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு காரணமாக செயலாற்றிய அதிபர், ஆசிரியர்கள், மற்றும் அனைத்து செயற்குழு அங்கத்தவர்களுக்கும் எமது பழைய மாணவர் சங்கம் பாராட்டினை தெரிவிக்கின்றது.

க. விஜயராஜன் தலைவர் -2015
கல்லூரி பழைய மாணவர் சங்கம் விக்டோரியா கிளை.
அவுஸ்திரேலியா.

...ர் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் ஆசிச்செய்தியை ...ழ் இந்து அன்னையின் 125வது ஆண்டுவிழாவின்போது ...டைகிறேன்.

...ம் பார்த்து பங்குபற்றி பெருமகிழ்ச்சியில் திளைத்துக் ...வாகவே!

...ன எமக்கு அறிவூட்டி
...தனை பல புரிந்து

...வரை"
...ர்விருட்சமாகி காட்சியளிக்கும் யாழ் இந்து அன்னையே ...பலன் பெற்று உலகெலாம் உன்புகழை மேலும்

...மை.
...ஜ் சுப்பிரமணியம்
...தலைவர், கனடா.
...பழைய மாணவர் சங்கம் - கனடா.



எமது கல்லூரியின் நூற்றுயிருபத்தைந்தாவது ஆண்டு விழா விற்கு எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் பொற்பாதங்களை வணங்கி, வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

சிங்கையில் இருக்கும் இந்துவின் மைந்தர்கள் ஒன்று சேர்ந்து உலகளாவியரீதியில் 13வது சங்கமாக இந்த 125வது ஆண்டு நிறைவில் ஆரம்பித்திருக்கின்றோம். எமது சங்கம் சிங்கப்பூர் சங்கங்கள் கூட்டிணைப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய விண்ணப்பித்து இருக்கின்றோம். அப்பதிவு ஏற்றுக்கொள்ளப்பட்ட தின் பின்னரே எமது சங்க நடவடிக்கைகள் விருத்தியடையும்.

எமது அன்னையின் மைந்தர்கள் இன்று உலகின் பல்வேறு நாடுகளில் எல்லாத்துறைகளிலும் பணியாற்றுகின்றனர். உலகத் திலேயே எமது கல்லூரிக்கு மட்டும்தான் இவ்வளவு தொகையான பழைய மாணவர் சங்கங்கள் உற்சாகமாக இயங்குவது எமக்குப் பெருமையே. நாம் எல்லோரும் சேர்ந்து எமது அன்னைக்கு எடுக்கும் எமது கல்லூரியின் 125வது ஆண்டுவிழா சிறப்புடன் நடைபெறவும் மேலும் பல்லாயிரம் ஆண்டுகள் இந்து அன்னையின் பணி தொடர வணங்கி வாழ்த்துகின்றோம்.

"வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்"

சோ. நிரஞ்சன் நந்தகோபன்
தெரிவு...
பழைய மாணவர் சங்கம்- சிங்கப்பூர்.

...ம் இரண்டொரு பள்ளி
...ங்கும் பல பல பள்ளி"
-பாரதியார்

...சாரத்தையும் உயிர் நாடியாக கொண்ட ...இந்து கல்லூரியின் 125 ஆவது ஆண்டு ...மைக்கு நல்லாசிகளை தெரிவிப்பதில் ...ளும் இந்துக் கல்லூரி பழைய மாணவர்

...வை சிறப்பாக முன்னெடுக்கும் கல்லூரிச் ...து நிற்கின்றோம். யாழ்ப்பாணம் இந்துக் ...ழைக்க எல்லாம் வல்ல ஞான வைரவப்

...ம் இதுவே"
எஸ். கௌரி சங்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறக்கப்பட்டது வான்கதவு

கொழும்பு, செப். 27

மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் அவசர வான் கதவொன்று திறக்கப்பட்டுள்ளதால் மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் அநேகமான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய் வதற்கான சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)

# அரசின் தீர்மானங்களை எடுப்பதற்கு விசேட குழு

கொழும்பு, செப்.27

அரசின் உயர்மட்ட அரசியல் முடிவுகளை எடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில் விசேட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மலிக் சமரவிக்கிரம, துமிந்த திஸாநாயக்க, கபீர் ஹாஷிம், சம்பிக்க ரணவக்க ஆகியோரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கியதாக இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்படுகின்ற அரசியல் நெருக்கடி, பொருளாதாரம் உள்ளிட்ட பலதரப்பட்ட முக்கிய பிரச்சினைகளுக்குக் கூடி ஆராய்ந்து தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டதாக இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக அரசின் உயர்மட்ட தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, பொருளாதார ரீதியிலான விடயங்கள் குறித்து முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்திருப்பதாக தெரியவருகிறது. (...)

# புதிய அரசின் பட்ஜெட் நவம்பர் 20 சமர்ப்பிப்பு

கொழும்பு, செப்.27

புதிய அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த முறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும்போது சகல தரப்பினரதும் ஆலோசனைகள் உள்ளடக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கவர்ச்சிகரமான நிவாரணங்களைக் கொண்ட மக்களுக்கு நட்பு ரீதியான வரவு-செலவுத் திட்டத்தையே அரசு முன்வைக்கும் எனவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டார். (த-வ)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் லயன் கதிர்காமத்தம்பி நாகராசா

(இளைப்பாறிய அதிபர் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இணைப்பாளர் - இந்து கலாசார சமூக சேவைகள் அமைச்சு)



தோற்றம் 28.11.1938 — மறைவு 07.10.2006

திதி : பூரணை 27.09.2015

அன்பாய் பண்பாய் அனைவரையும் நேசித்து
அறிவையும் ஆற்றலையும் அள்ளி வழங்கி
அவனியில் என்றும் புகழாய் வாழ்ந்த அன்புத்
தெய்வத்தை இழந்து இன்று அகம் நெகிழ
துவளுகின்றோம் நாளும்.

கே.கே.எஸ். வீதி,
8ஆம் கட்டை,
மல்லாகம். (14,15,16)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசையா பாலசுப்பிரமணியம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பாலசுப் பிரமணியம் 26.09.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் சந்திரகலாவின் அன்புக் கணவரும் ஐங்கரன், ஜெனார்த்தனன், திருக்குமரன், சசிபாலன், தாட்ஷாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபி பாலமுரளி, அனுஷிகா ஆகியோரின் மாமனாரும் சாத்வீகன், ஐஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும், இராசமணி அன்னராசா, இராசலக்சுமி, சேனாதிராசா, ராசையா, ராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
இணுவில். (64952)(14,15,16)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வாசுகி குகராசா



மண்ணில் 16.11.1965 — விண்ணில் 25.09.2015

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாசுகி குகராசா 25.09.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குகராசா மற்றும் புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், பார்த்தீபன், நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாலினி, தர்சினி ஆகியோரின் மைத்துனியும், கஸ்ஸனன், லும்பிகா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.09.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி நாகமுத்து



அன்னை மடியில் - 07.05.1932
ஆண்டவன் அரவணைப்பில் - 25.09.2015

யாழ் நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.02, பெரிய தம்பனையில் வசித்தவரும் தற்போது இல.179/10, 3ஆம் ஒழுங்கை, திருநாவற்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி நாகமுத்து 25.09.2015 வெள்ளிக் கிழமை இயற்கையெய்தினார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (27.09.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.179/10, 3ஆம்
ஒழுங்கை, திருநாவற்குளம்,
வவுனியா.

தகவல் :-
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொடர்பு :
0771654136, 0775155393

## மரண அறிவித்தல்

### திருமதி சிவயோகம் திருஞானம்



வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் திருஞானம் கடந்த 24.09.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானம் அவர்களின் அன்பு மனைவியும் இலங்கைநாயகம், பாக்கியம், காலஞ்சென்ற தவபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆனந்தி(கனடா), பிரதாபன்(லண்டன்), கிருபானந்தி(ஆசிரியர் - யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகதாஸ்(கனடா), மதிவதனி(லண்டன்), நந்தகோபன் (ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஸ்வின் (லண்டன்), அவனியா (லண்டன்), யாசகன்(கனடா), அட்சகன்(கனடா), தளிரினி, தமிழாரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வதிசைநாயத்தின் அன்பு மைத்துனியும் தவநாயகம்(C.D.O), சிவநாயகம்(ஆசிரியர்), லோகநாயகி (திருகோணமலை), தேவநாயகம்(சுவிஸ்), விஜயநாயகி(ஆசிரியர்) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.பகல் 10.30மணியளவில் குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வரணி இயற்றாலை, வரணி.
077 869 0725

தகவல்:
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 15 11 1988 — மறைவு 16 08 2015



### அமரர் சிவானந்தராசா செல்வக்குமரன்
(குமரன்)

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 29.09.2015 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை. (58545,11,15)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் தீர்மானம் முழுமையாக நடைமுறை

## வெளிவிவகார அமைச்சர் மங்கள தெரிவிப்பு

ஜெனிவாவில் அமெரிக்கா சமர்ப்பித்துள்ள தீர்மானம் முழுமையாகச் செயற்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தடைகளை உடைத்து வெற்றி கரமாக முன்னேறியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.
ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
கடந்த பல வருடங்களாக இலங்கையின் செயற் பாடுகள் காரணமாக சர்வதேச சமூகம் நாட்டை வெட்கத்திற்கு உள்ளாகும் யோசனைகளை முன்வைத்தது. 2012 ஆம் ஆண்டு முதல் இலங் கைக்கு எதிரான யோசனைகள் வெற்றி பெற்றதுடன் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டது.
2009 ஆம் ஆண்டு மனித உரிமைகள் சபைக் குள் கொண்டு வரப்பட்ட யோசனையில் இலங்கை அரசு வெற்றி பெற்ற போதிலும் சபையில் முன்வைக்கப்பட்ட இணக்கப்பாடுகளை வெற்றி யடையச் செய்யத் தவறியதால், இலங்கை மக்கள் பெற்ற வெற்றி தோல்வியடைந்தது.
இதன் மூலம் 2012, 2013, 2014,ஆம் ஆண்டுகளில் யோசனைகள் கொண்டு வருவதற்கான வழி வகை ஏற்பட்டதுடன் சபையில் அங்கம் வகிக் கும் பெரும்பாலான நாடுகளுக்கு எதிராக மாறின. இதனால், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அவமானமும் அவமதிப்பு ஏற்பட்டன.
இதனால், பல தசாப்த காலமாக சகல நாடுக ளுடன் இணக்கத்துடன் நடுநிலையாகவும் நட் புறவுடனும் இருந்து, ஐக்கிய நாடுகள் அமைப் பின் கௌரவத்துக்குப் பாத்திரமாக இருந்த நாட் டுக்கும் மக்களுக்கும் இந்த காலப் பகுதி அகௌர வமான காலமாக மாறியது. 2009 ஆம் ஆண்டு மூன்று தசாப்த கால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோதிலும் மக்களுக்கு கிடைக்க வேண் டிய பலாபலன்கள் கிடைக்காமல் போயின.
சுதந்திரமும், ஜனநாயக ரீதியான ஆட்சியும் இல் லாம் போயின. சமாதானமாகவும் ஐக்கிய மாக வாழ வேண்டும் என்ற எமது நாட்டு மக்க ளின் அபிலாஷை அவர்களுக்கு இல்லாமல் போனது.
நல்லிணக்கம் மூலம் இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்ப கிடைத்த சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டதால், நாடு சர்வதேசத்துக்கு மத்தியில் மேலும் தனி மைப்படுத்தப்பட்டது.
2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் மனித உரிமை குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக மௌனம் சாதிக்கப்பட்டது. இதன் காரணமாக நாடு தவறான சர்வதேச அர்த்தப்படுத் தல்களையும், விசாரணைகளையும் எதிர்நோக்கியது.
இந்த நிலையில், 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற் றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமைத்துவத்தின் திடசங்கற்பமான முயற்சியின் பயனாக இலங்கைக்கு மீண்டும் சர்வதேசத்தின் பெறுமதியான மதிப்பு கிடைத்துள்ளது.
உலகத்தின் பெறுமதியை மதிக்கும், பொறுப்பு , நம்பிக்கை மற்றும் சமாதானமான நாடாக இலங்கை மீண்டும் சர்வதேசத்துடன் இணையும் வாய்ப்பைப் பெற்றுள்ளது–என்றார். (த–வ)

## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**S.R பொன்னம்பலம்**
(ஓய்வு நிலை அதிபர் - கோயிலாக்கண்டி)



உதிப்பு 04.07.1924
உதிர்வு 23.09.1991
திதி: 27.09.2015 (பூர்வபக்க சதுர்த்தசி)

இத்தரை சங்கமத்தினுள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
வீடுபேறு பெற்றவர்க்கு அஞ்சலிகள் பல.

மீசாலை. பொ.கனகநாயகி (மனைவி)

(60601) (14,16)

## கண்ணீர் அஞ்சலி



கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த
**இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் (ஆசை அண்ணை)**
அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைவதோடு அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் சிவசேந்தன்(சேந்தன் குடும்பம் - கனடா), கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

## கண்ணீர்க் காணிக்கை

**திருமதி மஞ்சுளா சிவராசா**
அன்புத் துணைவியாரின் இழப்பால் கலங்கி நிற்கும்
யாழ் போதனா வைத்தியசாலையின் அலுவலக உதவியாளர் சே.சிவராசா
அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா அமைதியுற ஆண்ட வனைப் பிரார்த்திக்கின்றோம்.




தோற்றம்: 19.12.1965
மறைவு : 25.09.2015

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
அலுவலக நலன்புரிசங்கம்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**அம்பலவிமுருகன் நிர்மலன்**

மலர்வு 08.12.1988
உதிர்வு 23.09.2012



திதி : 27.09.2015

ஆசையாய் வளர்த்த உன்னை
பாதியிலே பறிகொடுத்து
வேதனையில் துடிக்கின்றோம்.

ஆறாத்துயரில்
அப்பா, அம்மா, சகோதரர்.
சிவன் கோயிலடி, காரைநகர்.

(64901 11,15,16)

## மரண அறிவித்தல்

**திருமதி பூரணம் சுப்பிரமணியம்**



மருதங்கேணி, நாவலடியைப் பிறப்பிடமாகவும் புலோலி மேற்குப் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் சுப்பிர மணியம் 26.09.2015 சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சடையர் சுப்பிரமணியத்தின் (வைத்தியசாலை பரிசாரகர்) அன்பு மனைவியும், சின்னத்தம்பி (பெரியதம்பி - மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்), பாலசுந்தரம் (ஓய்வுநிலை பொலிஸ் சார்ஜன்ட்), பாலரதி (சுவிஸ்), சாந்தநாயகி (செல்லக்கிளி), பாலரஞ்சன் (சுவிஸ்), ஸ்ரீரங்கன் (சுவிஸ்), ஸ்ரீசங்கர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் , அம்பிகாபதி (ராணி), அருள்மலர், அருளானந்தம் (சுவிஸ்), சீராள கந்தபாலன் (ஓய்வு நிலை உப அதிபர்), சரோஜினிதேவி (சுவிஸ்), லக்ஸாயினி (சுவிஸ்), கவிதா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், வேலுப்பிள்ளை (நல்லையா - மருதங்கேணி), காலஞ்சென்றவர்களான செல்லம்மா (வதிரி), முருகேசு (செல்லையா - கரம்பகம்) ஆகியோரின் சகோதரி யும் கௌசலா, தமயந்தி, ரஜீவ் பார்த்தீபன், தேவகி, கபில், பிரதீபன், அனட் தர்சினி, பெனட் அனுசியா, சங்கீதா, வைத்திய கலாநிதி சாரங்கன் (யாழ்ப்பாணம்), சுபந்தன், பிருந்தா, மாதங்கன், சரண்யா, மானுசன், சாருசன், சங்கவி, சஸ்வின் ஆகியோரின் பேர்த்தியாரும், செரின், செரோமி, அபிராம், கவின், கணசியாம், சந்தோஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2015) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி மேற்கு, புலோலி,
0776182031

தகவல்:
[illegible]
மு. சீராள கந்தபாலன்.

## மரண அறிவித்தல்

**திருமதி லூர்த்தம்மா (கமலம்) செபஸ்தியாம்பிள்ளை**



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூர்த்தம்மா செபஸ்தியாம்பிள்ளை 22.09.2015 செவ்வாய்க்கிழமை இறைவ னடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பெர்நாந்து மாரியாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சவரிமுத்து இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சகாயதேவி, சத்திய நேசன்(ஜேர்மனி), சற்குணதேவி, காலஞ்சென்ற சற்குணசீலன் மற்றும் சற்குணபாலன் (நியூசிலாந்து), சற்குணகாந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் அருள்நேசன், அருள்மதி, அருள்செபஸ்ரியன், பமிலா நிலோஜினி, ஜெமிலாரூத் ஆகியோ ரின் அன்பு மாமியும் அருள்தேவா, அருள்தேவி, அனுசியா, டானியல், டொமினிக், கபிரியேலா, அனுஸ்ரன், அனுஸ்ரா, றொஷான், சாதனா, சாதுரியன், நிரிஷ், நிஷ்மிதா, நிஷ்றியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஸ்மிலா, அஜித், பிறின்சிகா, பிறித்திஷா, அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.09.2015) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் காக்கைதீவு புனித அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
077 661 7240, 077 847 3483,
0064 9936 676, 0033 6518 38112

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### வீடு காணி விற்பனைக்கு
சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி வீதியில் 5 பரப்பு,11 பரப்பு மற்றும் வீட்டுடன் கூடிய 7 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 315 1402
071 857 1278

### காணி விற்பனைக்கு
பலாலி வீதி, தபால் பெட்டி சந்திக்கருகில் நி.பர.2 குளி 12.37 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
077 977 3375, 0047 400 42067

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் வடக்கு உடுவில் (றோட்டில்) வீதியில், Green ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து பரப்பு (05) காணி விற்பனைக்கு. இல 17, உடுவில் வீதி, மானிப்பாய்.
தொடர்பு : இரவீந்திரன்
077 727 0310
Sam- UK- London
+ 44 7818557193

### வீடு விற்பனைக்கு
வட்டு தெற்கு யா/ கார்த்திகேசு வித்தியாலய ஒழுங்கையில் பாடசாலைக்கு அருகில் நிலப் பரப்பு 03 குளி 05 விஸ்தீரணமுடைய காணியும் நவீன வசதிகளுடன் கூடிய வீடும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
077 0189 158 , 077 624 9770

### வீடு விற்பனைக்கு
நீர்வேலி தெற்கு, வில்லுமதவடியில் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை
தொடர்பு : 077 922 3441

### வீடு விற்பனைக்கு
வட்டுக்கோட்டை,இலங்கை வங்கிக்கு அண்மையில் 3 ¼ பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 9235 690
077 7740928

### காணி விற்பனைக்கு
நல்லூர், புதிய செம்மணி வீதியில் காணி விற்பனைக்குண்டு. (ஒரு பரப்பு)
தொடர்பு: 071 376 8773
021 223 0378

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
CD 200 Road master
(Red colour)
BCQ xxxx
தொடர்பு : 077 7105 205

### வீடு விற்பனைக்கு
கரவெட்டி மத்தியில் மாணிக்கவாசக வித்தியாலயத்திலிருந்து போகும் தெற்கு ஒழுங்கையில் 2 பரப்பு 3 குளி காணியுடன் சேர்ந்த 5 அறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 076 5654 196 ,021 321 2457

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கோயில் வீதியில் மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 069 0285
றாதா அருமை: 0014 167 955 097

### காணி விற்பனைக்கு
பருத்தித்துறை,யாழ் பிரதான வீதியில் கிராமக்கோட்டில் (ஓராம் கட்டையில்) 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 226 4268, 011 236 5192

### காணிகள் விற்பனைக்கு
கொழும்புத்துறை வீதி,கணக்கர் சந்திக்கு அருகில் இரண்டு பரப்புக் காணித்துண்டும் மற்றும் ஐந்து பரப்பு ஆறுகுளி காணியும் (கிணற்றுடன் கூடியது ) இரண்டு துண்டாகப் பிரித்துக் கொடுக்கப்படும். பிரபல ஆண்கள் பெண்கள் பாடசாலைக்கும் ,கச்சேரிக்கும் அருகில் அமைந்துள்ளது. மற்றும் பிறவுண் றோட், கல்வாரி தேவாலயத்திற்கு அருகில் 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (பிரித்துக் கொடுக்கப்படும்). தொழில் நுட்பக்கல்லூரி, பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கு அருகில் அமைந்துள்ளது.
தொடர்பு : 077 7420240 ,021 222 8005
071 794 3646

## தேவை

### தேவை
யாழ் நகரில் இயங்கும் அச்சகத்துக்கு அனுபவம் உள்ள அச்சு இயந்திர இயக்குநர்கள் தேவை.
(KORA)
தொடர்பு : 077 165 9845

### வேலையாள் தேவை
யாழ்ப்பாணம், Stanly Road இல் அமைந்துள்ள Phone Shop இற்கு வேலையாள் தேவை. (ஆண்/ பெண்)
சம்பளம் -10000
தொடர்பு : 077 310 3205

### வீடு வாடகைக்குத் தேவை
3 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய் போன்ற இடங்களில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 077 391 7091

### ஆசிரியர் தேவை
தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவிக்கு விஞ்ஞானம்,கணிதம் ஆகிய பாடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கு ஆசிரியை தேவை. இடம்- கொக்குவில்
தொடர்பு : 076 807 9161

### உணவகத்திற்கு கீழ்க்கண்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை
* CAPTAINS / STEWARDS
* CLEANING HELPER
* BILLING CLERK (MALE / FEMALE)
* KITCHEN HELPER
* DELIVERY BOYS

நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன்
**28.09.2015 / 29.09.2015**
ஆகிய தினங்களில்
காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை நேரில் வரவும்.

**SHANMUGAS**
53/3, Ramakrishna Road,
Wellawatte, Colombo - 06
Tel: 0112 361 384

### வீடு வாடகைக்கு தேவை
யாழ் நகருக்கு அண்மையில் அல்லது யாழ் நகரில் இருந்து 5Km இற்குள் 3 பேர் அடங்கிய ஆசிரியர் குடும்பம் வசிப்பதற்கு வீடு ஒன்று தேவை
தொடர்பு : 071 582 3089


### வேலையாள்கள் தேவை
வெதுப்பக இயந்திரத்தில் (அவண்) கேக்,பிஸ்கற்,ரஸ்க் போடத் தெரிந்தவர்கள் தேவை. பெண் பிள்ளைகளும் வேலைக்குத் தேவை.
தொடர்பு : 0726 999 345

### வேலையாள்கள் தேவை
இந்தியன் மற்றும் சீன உணவுகள் தயாரிக்க கூடியவர்கள், இலங்கை மற்றும் யாழ்ப்பாண உணவுகள் தயாரிக்க கூடியவர்கள்
சமயலறை உதவியாளர்கள் ,பழரசம் (ஜூஸ்), தயாரிக்க கூடியவர்கள்,
இறைச்சி வெட்டி பொதிசெய்யக்கூடியவர்கள்
உடனடியாகத் தொடர்புகொள்ளவும்
தொடர்பு : 077 440 9991

### வேலையாள்கள் தேவை
மொத்த வியாபார கடைக்கு,
விற்பனையாளர் ,
கொம்பியூட்டர் பில் கிளாக்
பில்செக்கர்,
கணக்கு உதவியாளர்,
காசாளர் மற்றும் உதவியாளர்கள் தேவை.
உணவு மற்றும் தங்குமிட வசதி செய்து தரப்படும்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Kingfisher Marketing (Ltd)
111 & 113, Old Moor Street,
Colombo- 12
011 244 4020 / 0773080328

### பணிப் பெண் தேவை
வெள்ளவத்தையில் வயதான தாயாரைப் பராமரிப்பதற்கும் மூவர் அடங்கிய குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்யக் கூடிய 40 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் உடன் தேவை.
சம்பளம் - 17,000/=
தொடர்பு- 077 581 1009

## ஏனையவை



* பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

### வீடு வாடகைக்கு உண்டு
105, இராசாவின் தோட்டம் ,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. (இருவர் மட்டும் உள்ள குடும்பம்)
தொடர்பு : நேரில் வரவும்

### வீடு வாடகைக்கு
மருதனார்மடம் உடுவிலில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 652 6297

### J.B Construction
பிளையூட் போட்மூலம் சட்டறிங் அடித்து கம்பிகட்டி கொங்கிறீற் போட்டுத் தரப்படும்.
தொடர்பு:-.J.T ஜோன்சன்
077 113 8615

### வேலை வாய்ப்பு
FR Advertising கம்பனியில் வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L , A/L தகைமையுள்ள இளைஞர் யுவதிகள் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் .பயிற்சியளித்து இணைத்துக் கொள்ளப்படுவர். பயிற்சியின்போது அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு :
0775879945,077 526 7295
077 834 6210

### அமெரிக்க வீசா லொத்தர்
13 வருட அனுபவமுள்ள EBS NETTING மூலம் விண்ணப்பிக்க அழையுங்கள்.
தொடர்பு : 077 581 1106

### தவறிவிட்டது
சங்குவேலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த தர்மலிங்கம் உருத்திரகுமார் ஆகிய எனது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், A.T.M card (இலங்கை வங்கி) ஆகியன 12.09.2015 அன்று சங்கானை சந்தைக்கும் H.N.B வங்கிக்கும் இடையில் தொலைந்து விட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:0776570479,0772066096

### டிக்கெட்டிங்
இலங்கையின் பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு டிக்கெட்டிங் வேலை செய்வதற்கு,பயிற்சியுள்ள பயிற்சியற்ற ஆண்,பெண் தேவை. வயது 18-38 தகைமை O/L,A/L சம்பளம் 32000/=OT யுடன் 42000/= தேவைப்படும் பிரதேசங்கள் மன்னார்,கிளிநொச்சி,திருகோணமலை இன்னும் பல பிரதேசங்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. மொழி அவசியமில்லை வரும் நாளில் சேர்க்கப்படுவீர்கள் தொடர்பு கொண்டு நேர்முகப்பரீட்சைக்கு சமுகம் தரவும்.
R.S. International Jobcentre
077 801 6129
No- 48Ay,1/1 ,Hill street Magaragama Road, Dehiwala Colombo

### Total Business Solution
Business Financial Accounting
Management Accounting
Business Automation
Internal Control and Reporting
Call - 077 240 3135

## மணமக்கள் தேவை

### மணமகள் தேவை
1981, பரணி,27 கிரகபாவம்,தனியார் துறையில் உத்தியோகத்தராக கடமை புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு : 077 929 6979

### மணமகன் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1985, சுவாதி, 12 இல் செவ்வாய்,பாவம்-73, ல - சூரி,சந் ,சுக், கே 7 இல் - ராகு Norway இல் உயர்தாதியாகக் கடமை புரியும் பிரஜாவுரிமை உடைய மணமகளுக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள படித்த மணமகனைத் தேடுகின்றனர்.
தொடர்பு :
077 391 7091, 021 320 0847

### மணமகள் தேவை
அரச பதவியிலுள்ள B.A, M.A மணமகனுக்கு மணமகள் தேவை. யாழ். இந்து கௌரவ குடும்பம் 1980, சுவாதி,லக்னத்தில் செவ்வாய் 8 புள்ளிகள். மொத்த கிரகபாவம் 21
தொடர்பு : K.N.Rajah
077 789 3794 உடுவில்

### மணமகள் தேவை
21.12.1978 8.00 Am சிங்க ராசி,பூரம் 2 ஆம் பாதம் நட்சத்திரத்தில் பிறந்த கூட்டுறவு சங்க கடை முகாமையாளர் ஆணிற்குப் பொருத்தமான மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர் . குறிப்பையும் படத்தையும் விரும்பியோர் email2Jeeva@yohoo.couk என்ற மின்னஞ்சலில் அனுப்பவும்
தகவல் : ஜீவன்( சகோதரன்)
077 656 4693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமானுடைய திருவருட் கடாட்சம் பெற்ற சித்தர்களுக்குள் கடையிற் சுவாமிகளும் ஒருவர்

**கடையிற் சுவாமிகள் குருபூசைத் தினம் இன்றாகும். இதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

*கலாபூஷணம்*
*இராசையா ஸ்ரீதரன்*



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமானுடைய திருவருட் கடாட்சம் பெற்ற சித்தர்களுள் கடையிற் சுவாமிகளும் ஒருவர். ஈழநாட்டின் முடிபோல விளங்கும் யாழ்ப்பாணத்தின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாயிருந்த கடையிற் சுவாமிகளின் குருபூசைத்தினம் இன்றாகும். இந்தியாவிலே இருக்கும் கன்னட தேசத்தில் இவர் ஒரு நீதிபதி; சாந்தம் தவழும் முகமும் காந்தஒளி வீசும் கண்களும் கொண்ட இவர் எந்த நேரமும் புன்னகை பூத்த முகத்தவராய் தூய உள்ளத்தவராய்த் திகழ்ந்தார். நீதிபதியாகக் கடமையாற்றிய இவர் ஒருமுறை குற்றவாளி ஒருவருக்கு மரணதண்டனையை விதிக்க வேண்டிய ஒரு தர்மசங்கட நிலைக்கு ஆளானார். அவருடைய மனதிலே, ஒரு மனிதனுடைய உயிரைப் பறிப்பதற்கு உத்தரவிட நான் யார்? எனக்கு என்ன அருகதையிருக்கிறது. இறைவனுடைய படைப்பில் உருவானவனைக் கொல்வதற்கு எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்ற எண்ணம் உதயமாயிற்று.

உடனே நீதிபதிப் பதவியை இராஜினாமா செய்து விட்டு துறவியாகப் புறப்பட்டு விட்டார். இந்த உலக வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு சந்நியாசியானார். அன்று முதலாக இவர் ஒரு விசரர் போலக் காட்சியளித்தார். இறையருளால் அட்டமாசித்திகளும் கைவரப் பெற்ற இவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்த ஒரு சித்தராக மாறினார் பக்தியுடன் இறைபணியில் நின்றார்.

இந்த அளவில் அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. தனக்கு ஒரு நல்ல குருநாதர் வேண்டும் என்ற எண்ணத்துடன் குருவைத்தேடி அலைந்து திரிந்தார். ஈற்றில் ஒரு நல்ல குருநாதர் அவருக்கு அகப்பட்டார். இந்தியாவிலேயுள்ள மைசூர் சிருங்கேரி மடசங்கராச்சாரிய பீடத்தின் 32 ஆவது குருமுதல்வராக இருந்த ஸ்ரீ நரசிம்மபாரதியைக் குருவாகக் கொண்டார். அவர் இவருக்கு நல்லுபதேசம் செய்தார். ஆறாதாரங்களையும் அடக்கி மனதை ஒருவழிப் படுத்தி இறுக்கமான கட்டுக்கோப்பொன்றை மனதிலே உருவாக்கி அவரிடம் ஞான தீட்சை பெற்றார். அன்று முதல் "முத்தியானந்தர்" என்னும் திருநாமஞ் சூட்டப்பெற்று பற்றற்ற நிலையில் ஞான நிஷ்டையில் அமர்ந்தார். பின்னர் உலக ஆசைகளைத் துறந்து சந்நியாசியாகி எந்த நேரமும் சிவசிந்தனையுடன் வாழத் தலைப்பட்டார்.

இப்படியிருக்கும் நாளில் எமது யாழ்ப்பாணத்துப் பெரிய கடை வியாபாரியான வைரமுத்துச் செட்டியார் என்பவர் இந்தியாவுக்குச் சென்றபோது, பூர்வ ஜென்ம புண்ணிய பலனால் சுவாமிகளைச் சந்திக்க நேர்ந்தது. உடனே அவரது திருவடிகளை வணங்கி சுவாமிகளே! நீங்கள் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்துக்கு ஒருக்கால் வரவேண்டும். இது என்னுடைய ஆசை என்று விண்ணப்பஞ்செய்து நின்றார்.

அதற்கு சுவாமிகள் பதிலேதும் சொல்லவில்லை. மௌனம் சாதித்தார். பின்பு சிலநாள் அவ ரோடு இருந்த வைர முத்துச் செட்டியார் இலங்கை வந்துவிட்டார்.

அன்று வெள்ளிக்கிழமை நல்லூர் முருகனை வழிபாடு செய்து விட்டு மத்தியானம் நல்ல பசியோடு இல்லம் திரும்பிய செட்டியாருக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. அவருடைய இல்லத்துக்கு சந்நியாசி ஒருவர் வந்திருந்தார். வந்தவர் மத்தியானச் சாப்பாடு தரவேண்டும். என்று சொல்லி வாழை இலையையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தார். இல்லாளும் சம்மதித்தார்.

தம்முடைய வாழை இலைக்குப் பக்கத்திலே இன்னுமொரு இலையைப் போடச்சொல்லி அதிலும் உணவு பரிமாறச் சொன்னார். மறு பேச்சின்றி அவர் சொன்னபடியே அறுசுவையுணவு பரிமாறப்பட்டது. மதியவேளை பசிக்களையுடன் இல்லம் வந்த செட்டியார். அங்கேயிருந்த சுவாமிகளைக் கண்டதும் ஆச்சரியத்துடன் எப்போது வந்தீர்கள்? எப்படி வந்தீர்கள்? என்று கண்களை அகல விரித்தார். நீ வரச் சொன்னாய்! நான் வந்துவிட்டேன் என்று சொன்ன சுவாமிகள் இலையிலிருந்த உணவைக் காட்டி சாப்பிடுமாறு பணித்தார். இருவரும் மனமகிழ்ச்சியுடன் வயிறார உண்டனர். கடைப்பகுதியில் வாழ்ந்தமையால் கடையிற் சுவாமி என அழைக்கப்பட்டார். இவரது இறுதிக் காலம் நீராவியடியில் அமைந்தது. இவர் 1891ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பூரட்டாதி நட்சத்திரத்திலே சமாதி நிலையை எய்தினார். இன்று அவருடைய குருபூசை நாளில் அவரை நினைந்து வழிபாடு செய்து இன்புறு நிலையை எய்துவோமாக.

# வல்லிபுரக் கோயிலில் 20 திருட்டு ஏழு பேர் நகைகளுடன் மாட்டினர்

யாழ்ப்பாணம், செப். 27

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வாரின் நேற்றைய தேர்த் திருவிழாவில் 20 இற்கும் மேற்பட்ட திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. நீர்கொழும்பிலிருந்து ஹைஏஸ் வாகனத்தில் வந்த பெண்கள் உள்ளிட்ட 7 பேர் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதோடு அவர்களின் மர்ம உறுப்புக்களிலும் வாகனத்திலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இதுவரை 16 பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழாவான நேற்றுப் பக்தர் கூட்டம் நிறைந்திருந்தது. அதில் கலந்து கொள்ளவென நீர்கொழும்பிலிருந்து ஹைஏஸ் வாகனத்தில் 3 பெண்கள் உட்பட 7 பேர் வந்துள்ளனர். அவர்கள் வெளியே வாகனத்தை விட்டுப் பக்தர்களுடன் பக்தர்களாகிவிட்டனர்.

எவருக்கும் தெரியாமலேயே நகைகளைத் தந்திரமாகத் திருடிவிட்டனர். அதன் பின்னரே பக்தர்கள் தமது நகைகளைக் காணாது தேட முற்பட்டுள்ளனர். அவை தொடர்பில் பொலிஸிலும் முறைப்பாடு செய்யத் தொடங்கினர். முறைப்பாடு கிடைத்ததால் பொலிஸாரும் தேடுதலில் ஈடுபட்டனர். அதன்போதே சந்தேகத்தில் ஒரு பெண்ணைப் பொலிஸார் மறித்து விசாரணைக்குட்படுத்தினர். அவரது பதில்கள் மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியதால் அவரிடம் விசாரணையைத் தொடர்ந்தனர். பொலிஸார் அதன் பின்னரே அந்தப் பெண்ணுடன் மேலும் 6 பேர் திருடுவதற்காகக் கோயிலில் களமிறங்கியுள்ளனர் என்பதும் தெரியவந்தது.

பொலிஸார் உசாரடைந்து திருட்டுக்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு அறிவிக்கத் தொடங்கினர். அவ்வாறு அறிவித்ததால் ஆரம் பத்தில் 20 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகின.

பொலிஸார் மேலதிக விசாரணை மூலமாக மற்றைய 6 பேரையும் கைது செய்தனர். அவர்களது முறைப்பாட்டின் பிரகாரம் அவர்களது உள்ளாடைகள், அவர்களது மர்ம உறுப்புக்கள் ஆகியவற்றுக்குள்ளும், வாகனத்தின் இருக்கைகளின் கீழ்புறம், குளிரூட்டி உட்பட பல இடங்களிலிருந்தும் நகைகளை மீட்டனர். அதன்படி 7 மற்றும் 5 பவுண்கள் கொண்ட 2 தாலிக் கொடிகளும், 2 பவுண் நிறையுடைய 2 சங்கிலிகளும் மீட்கப்பட்டன. ஏனைய நகைகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவர்களில் 3 பேர் இந்தியர்கள் எனக் கூறப்பட்டது. அவர்கள் பயணித்த ஹைஏஸ் வாகனமும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (த-4-108-109)


## மரண அறிவித்தல்

### திருமதி தையலம்மா (ராசாத்தி) செல்லப்பா



பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இல. 07, மணல்தரை வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையலம்மா செல்லப்பா 25.09.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ராசா - நேசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கண்மணி மற்றும் ஞானமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தவபாலன் மற்றும் யோகேஸ்வரி, யோகமலர், யோகாம்பிகை, மீனலோசனி, செல்வலோசனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணதேவி, காலஞ்சென்றவர்களான சிவானந்தன், யேசுதாசன் மற்றும் நிர்மலானந்தன், தாகா, காலஞ்சென்ற தவந்தராஜா ஆகியோரின் மாமியும், நித்தியா, சுரேன், நிசாந்தி, பிரசன்னா, சிந்துஜா, சாமினி, சஞ்ஜீற், சஜீவ், தர்சிகா, சர்ஜீன், கலைவதனி, சாமிளா, சுஜீவன் ஆகியோரின் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.07. மணல்தரை லேன்,
கந்தர் மடம்.

தகவல் :-
பிரசன்னா (பேரன்)
077 469 4909

## மரண அறிவித்தல்

### கனகசபை தில்லையம்பலம்



நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 1ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தில்லையம்பலம் 24.09.2015 வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் ஆருயிர் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், பாமினி (ஜேர்மனி), ஜெயந்தி, வசந்தி (ஜேர்மனி), சாந்தி (கனடா), விநாயகமூர்த்தி, பாலமூர்த்தி (கனடா), சுகந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், நவீன குமார் (ஜேர்மனி), கணேசலிங்கம் (ஜேர்மனி), ஜெயக்குமார், சிவகுமார் (கனடா), நிராஞ்சனி, விலாசினி (கனடா), ஜெயராஜ் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், கனகம்மா, காலஞ்சென்றவர்களான தில்லைநடேசு, புவனேஸ்வரி மற்றும் மகேந்திரன், ரோகினி, இராதாகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, சபாரெத்தினம், வீரகத்தி, யோகேஸ்வரி மற்றும் அருணாசலம், யோகேஸ்வரி, மகேந்திரன், வனஜ மலர் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான முத்தையா, நாகபூரணம் ஆகியோரின் சகலனும், சர்மிளா, நர்மதன், வினோதினி, தனேசன், சியாமினி, ஜெனித்தா, சரண்ஜா, ஜென்சிகா, வினோத்குமார், கிரிஷாந், மெலனி, தனியலா, அபிஷன், அபினஜன், அக்ஷயன், மதுராங்கன், மனோஜ், ஜக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஷயன், ஜெலியோன், ஜெய்டன், அஷ்வின், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் வட்டாரம், நயினாதீவு.
0213211762

தகவல் :
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

**விற்பனையாளர் தேவை**
யாழ் நகர் மத்தியில் அமைந்துள்ள வியாபார ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர் ஒருவர் தேவை.
தொடர்பு - 0777701523, 0773116996

**விற்பனைக்கு**
இரும்புப் பட்டறை மேசை உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0776699293, 0778186460

**உதவியாளர் தேவை**
இருவர் மட்டும் உள்ள குடும்பத்துடன் தங்கி இருக்கக் கூடிய பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு : 077 613 8964
(64761)(11.15.15)

**வீடு வாடகைக்கு**
கொக்குவில் கிழக்கு அம்மன் வீதியில் பெரிய வளவுடன் நவீன வசதிகளுடனான வீடு. நிறுவனங்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு : 077 3988612

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ் நீராவியடி பிறவுண்வீதிக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 071 627 4916
(64796)(12.15)

**வீடு வாடகைக்கு**
வெள்ளவத்தையில் Luxury வீடு நாள், கிழமை வாடகைக்கு. A/C, Fully Furnished, Hot water, Cable TV, Fridge, Washing Machine, சமையல் வசதி, Car Park
தொடர்பு : 077 766 7511

**வீட்டு உதவியாளராக பெண்மணியொருவர் தேவை**
கொழும்பில் இருக்கும் யாழ் குடும்பத்தினருக்கு எமது 6,8 வயது குழந்தைகளை பார்த்துக் கொள்வதற்கும், எம்மோடு தங்கியிருந்து வீட்டுப்பணிகளில் உதவி செய்வதற்கும் 40 - 60 வயதில் நற்குணமுள்ள பெண் ஒருவர் தேவை. சம்பளம் - 15000/=+
தொடர்பு - 0773819855, 0773456779

**ARPITEC மண் எண்ணை வாட்டர் பம் விற்பனைக்கு**
மண் எண்ணையில் இயங்கும் பம் 24500 பெறுமதியானது. தற்போது மிகக்குறைந்த விலையில் 17500/= ரூபாய்க்கு விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு -
0242222572, 0750381389

**மணமகன் தேவை**
இந்து 1981இல் பிறந்த உத்தர நட்சத்திரம், கிரகபாவம் 44, சூரியனும் செவ்வாயும் 3ஆம் இடத்திலும், இராகு 7ஆம் இடத்திலும், கேது 2ஆம் இடத்திலும் உள்ள பட்டதாரி மணமகளிற்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு: 077 245 2315

# இராணுவத்தால் கைவிடப்பட்ட ரவை வெடித்து சிறுவன் காயம்

மட்டக்களப்பு, செப். 27

மட்டக்களப்பு ஏறாவூர் புன்னக்குடா கடற்கரையில் நீர்க்காகம் கூட்டு இராணுவ நடவடிக்கையின்போது கைவிடப்பட்டிருந்த துப்பாக்கி ரவையொன்று வெடித்ததில் 9 வயதுடைய சிறுவன் ஒருவன் பலத்த காயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை (26) காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஏறாவூர்– ஹிதாயத் நகர் பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எம் நிப்ரான் என்ற சிறுவனே காயமடைந்தவர். சமீபத்தில் ஏறாவூர் புன்னக்குடா கடற்கரையில் தியகாவா' நீர்க்காகம் என்ற பெயரில் நடைபெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இராணுவத்தினரின் கூட்டு பயிற்சி நடவடிக்கையின் பின்னர் அப்பிரதேசத்தில் வெற்று மற் றும் வெடிக்காத நிலையில் காணப்பட்ட துப்பாக்கி ரவைகளை சிறுவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

குறித்த சிறுவன், மரமுந்திரிகை விதைகளை வெதுப்புவதற்கான சட்டியில் துப்பாக்கி ரவைகளையும் சேர்த்து நெருப்பு வைத்தபோது ரவை வெடித்துச் சிதறியதில் அச்சிறுவனின் வயிற்றில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, சிறுவன் ஏறாவூர் ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

**பணிப்பெண் தேவை**
சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு, வீட்டில் தங்கி இருந்து வேலை செய்யக் கூடிய ஒருவர் தேவை.
தொடர்பு: 0711035422, 0773276502

**தேவை**
கொழும்பில் இருக்கும் ஒரு பெண்மணிக்கு பணியாள் உடனடியாகத் தேவை. யாழ்ப்பாணம் விரும்பத்தக்கது. வயது எல்லை(30-35)வரை விரும்பத்தக்கது.
தொடர்பு : 011 258 6038

**காணி விற்பனைக்கு**
மானிப்பாய் மூத்த தம்பி (பொது சந்தைக்கு முன்) வீதியில் 2 ½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 656 1987
(64978) (12.15)

**வேலையாள் தேவை**
கிறைன்டிங் மில்லுக்கு அனுபவம் உள்ள வேலையாள் தேவை.
தொடர்பு : 0776154941
0779751601

**தேவை**
களஞ்சியக் காப்பாளர்கள் தேவை.
பொருத்தமானவர்கள் நேரில் வரவும்
Coca cola Distributor
Siva brothers
4th Lane, Brown Road, Jaffna

**வாடகைக்கு**
கொக்குவில் கிழக்கு அம்மன் வீதியில் 2 அறைகள் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. (பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு - 0772965017, 0212221956

**தேவை**
அனுபமுள்ள கணக்கு வேலை தெரிந்த மாநகர சபைக்கு உட்பட்ட பெண் பிள்ளை தேவை.
தொடர்பு : 0778314201

# அடுத்த நகர்வுக்காக ஆயத்தமாகும் அரசு

## *நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் குறித்து மைத்திரி - ரணில் தலைமையில் பேச்சு*

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறல் விடயத்தில் அமெரிக்க தீர்மானத்தின் அடிப்படையில் அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க மற்றும் சு.க. முக்கியஸ்தர்கள் அடங்கிய குழுவினர் இவ்வாரம் முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர் என நம்பகரமாக அறியமுடிகின்றது.

ஐ.நா பொதுச் சபையின் 70 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடு திரும்பியவுடன் இந்த முக்கிய கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்படுவதையடுத்து, அதை நடைமுறைப்படுத்துவது குறித்து இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டு முக்கிய தீர்மானங்களை அரச உயர்மட்டம் எடுக்கவுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் முக்கிய வகிபாகத்தை ஏற்றுவரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்களின் ஆதரவுடன் உள்ளக விசாரணை நடத்த வலியுறுத்தி, ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணைக்கு இலங்கை அரசு ஆதரவளிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

மேலும், ஐ. நா மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பரிந்துரைகளை அர்ப்பணிப்புடன் நடைமுறைப்படுத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நியூயோர்க்கில் இடம் பெற்ற பொதுநலவாய நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே இந்த உறுதிமொழியை வழங் கியுள்ளார்.

இந்நிலையில், இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்காவால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை எதிர்வரும் 30 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. இதே வேளை, அன்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனநியூயோர்க்கில்இடம்பெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 70 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றவுள்ளார். இதன்பின்னர் நாடு திரும்பியதையடுத்தே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இவ்வாரம் மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு ஜப்பான் பயணமாகவுள்ளார். எனவே, பிரதமரின் ஜப்பான் பயணத்துக்கு முன்னதாக இந்த முக்கிய கலந்துரையாடல் இடம்பெறும் என்றும் அறியமுடிகின்றது.

மேலும், இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சி களையும் உள்ளடக்கியவாறு கூட்டுப் பொறுப்புடனான நடவடிக்கையொன்றை முன்னெடுக்க அரச உயர்மட்டம் தீர்மானித்துள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது. (த–சி)

UNIVERSITY *of* CAMBRIDGE
ESOL Examinations
Jaffna, Vavuniya & Mannar
**English for Your Children**
உங்கள் செல்லச் சிறுசுகளுக்கான
ஆங்கிலம்
6 வயது முதல் 12 வயது வரையான மாணவர்களுக்கு



YLE
Cambridge Young Learners English Tests
கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் ESOL பரீட்சைகள்
BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927114, 077-8927639
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041, 077-0538523
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னாரில் **Full / Part time**
SPOKEN **English** With Grammar
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்களாக நடைபெறுவதுடன் பகுதி நேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Full time : 3 Months Course Fee : 13250/=
Now prepare for your Academic / General **IELTS**
Sponsor விசாவில் செல்லவுள்ளவர்களுக்கான
IELTS Life Skills A1 B1
Spouse விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK அரசினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சான்றிதழுக்கான பாடநெறி
Hot Line : 0777-596148
Computerized **Accounting**
Accpack + M.Y.O.B. +Quick book + Tally
Monday to Friday 1Week
Sat. / Sunday 1 Month
**AutoCAD**
Monday to Friday 9amto 5pm 3Weeks
Sat. / Sunday only 9am to 5pm 3 Months
பாடநெறி முடிவில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்
BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927114 077-8927639
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041 077-0538523
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124 077-1113205
10, Vaverset Place, Wellawatta. Colombo -06. 585, Peradeniya Rd, Kandy.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
21.09.2015 அன்று
BMICH இல் நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில்
BSc. Eng.(Hons) in Civil Engineering
பட்டத்தை பெற்ற
செட்டிகுறிச்சி பண்டிதரிப்பை சேர்ந்த
**செல்வன் . சோதிலிங்கம் சிவரூபன்**
அவர்களை மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
மாமனார் குடும்பத்தினர்
செட்டிகுறிச்சி பண்டிதரிப்பு

**கண்ணீர் காணிக்கை**



Dialog Jaffna சேவை நிலையத்தின் ஊழியர்
அபர்ணன் அவர்களின் அன்புத் தாய்
**திருமதி மஞ்சுளா சிவராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்
யாழ்ப்பாண சேவை நிலையம்
Dialog Axiata PLC
(64987) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் அத்துமீறலுக்கு எதிராக வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

## கோருகிறது நீதிக்கான வெகுஜன அமைப்பு

யாழ்ப்பாணம், செப். 27

எமது கடல் வளத்தை அழித் தொழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்திய ட்ரோலர் படகுகள் மற்றும் இந்திய மீனவர்களின் வருகையைத் தடுப்பதற்கான தீர்மானம் ஒன்றை வடக்கு மாகாண சபை நிறைவேற்றவேண்டும் என்று சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை – இந்திய அரசுகள் இந்தப் பிரச்சினையை இழுத்தடித்து வருவதாகவும் அந்த அமைப்புக் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னர் போரால் அதிகளவில் மீனவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்தப் பாதிப்பைத் தொடருகின்றதாக தற்போதைய இலங்கை– இந்திய அரசுகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மீனவர்களை மிதிக்கின்ற செயற்பாடாகவே இந்திய ட்ரோலர் படகுகளின் எல்லைதாண்டிய செயற்பாடும் அதன்மூலமாக இலங்கையின் கடல் வளம் மாத்திரமன்றி எமது மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களும் அழிக்கப்பட்டு வருகின்றமையும் மிகவும் கண்டிக்கத்தக்கது. அதன் தொடராகவே கடந்த வாரம் பருத்தித்துறைக் கடலில் கைது செய்யப்பட்ட சம்பவம் அமைகிறது.

இந்த விடயத்தில் இலங்கை, இந்திய அரசுகள் கவனம் செலுத்துவதாகக் காட்டிக்கொண்டு பேச்சுக்களை மேற்கொண்டவாறே காலத்தைக் கடத்துகின்றன. இதுவரை இந்தப் பிரச்சினை தொடர்பாக ஆக்கபூர்வமான எவ்வித தீர்வுகளும் எட்டப்படவில்லை. கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் எவையும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

எமது நாட்டின் கடல் வளத்தை அழிப்பது மட்டுமன்றி எமது நாட்டின் எல்லைக்குள்ளும் அத்துமீறி நுழைந்து எமது கடல் வளத்தைக் கொள்ளையடிப்பதுடன் எமது மீனவர்களின் சொத்துக்களையும் அழிக்கிறார்கள். அவ்வாறு அழிப்பவர்கள் தமிழ்நாட்டின் அப்பாவி ஏழை மீனவர்கள் அல்ல என்பதும் அதிநவீன ட்றோலர்களுக்குச் சொந்தக்காரரான மீன்பிடி முதலாளிகளும் அவர்களுக்காகத் தொழில் புரிவோருமே என்பதனையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எனவே எமது மீனவர்களைக் காக்கும் பொருட்டு இந்திய ட்ரோலர் படகுகளின் பெரும் படையெடுப்பைத் தவிர்ப்பதற்கான தீர்மானம் ஒன்றை வடமாகாண சபை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறான எல்லைதாண்டிய அத்துமீறலுக்கு எதிராக மீனவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கும் பூரண ஆதரவைத் தெரிவிக்கிறோம். இத்தகைய போராட்டங்களைத் திசை திருப்பல்களுக்கு இடமளிக்காமல் இதய சுத்தியுடன் இறுதி வெற்றியை நோக்கி முன் நகர்த்த வேண்டும் என்று அந்த அமைப்புக் கேட்டுக் கொண்டுள்ளது. (த–4)

# முத்தான வியர்வை 2015 நல்லூரில் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப் .27

நல்லூர் பிரதேச செயலகத்தின் முத்தான வியர்வை 2015 நேற்று சனிக்கிழமை நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற்றது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள யாழ்.மாவட்டக் கணக்காளர் திருமதி யூட் வோல்டன் மஞ்சுளா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் தொடக்கி வைத்தார்.

நல்லூர் பிரதேச சமுர்த்திப் பயனாளிகள் 48 பேரின் சுய தொழில் உற்பத்திகள் காட்சியில் இடம்பெற்றன. பயன் தருமரக்கன்றுகள் உட்பட காட்சியில் உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட பலதரப்பட்ட உற்பத்திப் பொருள்கள் பார்வையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வறுமைக் கோட்டில் உள்ள மக்களை இனங்கண்டு அவர்களுக்குக் கடன் உதவிகளை வழங்கி சுய தொழில் முயற்சிக்கு உதவும் திட்டத்தினூடாக அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதும் அவற்றைச் சந்தைப்படுத்த உதவுவதும் இதன் நோக்கம் எனப் பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர் தனது உரையில், திட்டத்தினூடாகப் பயனாளிகளின் வாழ்வாதாரம் சிறந்த வருமானத்துடன் கூடியதாக அமையும்–என்றார்.

உதவித் திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், உங்களது உற்பத்தியும் பொதி செய்தலும் சிறப்பாக அமைவதுடன் தென்பகுதியை நோக்கி நகரக் கூடியதாகத் தயாரிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

உணவுப் பொருள்கள், ஆடை அணிகள் பழவகைகள், மரக்கறிகள், மரக்கன்றுகள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சிற்றுண்டி வகைகள், பனம்பொருள்கள், குளிர்பான உற்பத்திகள் எனப் பலதரப்பட்டவை காட்சிப்படுத்தப்பட்டதுடன், விற்பனையும் இடம்பெற்றது. உணவுக்கான வங்கிக் கடனுதவிகளும் வழங்கப்பட்டன. (த–7)

# பட்டிக்குடியிருப்பில் யானைகள் அட்டகாசம்

வவுனியா வடக்கு, பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட துவரங்குளம், பாவற்காய்குளம், பட்டிக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்குள் மாலை வேளைகளில் ஊடுருவும் யானைகள் மக்களின் வீடுகள், கொட்டகைகளைச் சேதப்படுத்துவதுடன், வீட்டில் உள்ள நெல் மூடைகள், பயன்தரும் பயிர்ச் செய்கைகளையும் நாசப்படுத்தி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குடியிருப்புக்களுக்கு முழுமையாக மின்சாரம் கூட இல்லாத நிலையில் இரவு இரவாக பரல்கள், தகரங்களை அடித்து யானைகளை விரட்ட வேண்டியுள்ளதாகவும், தமது பொருளாதாரப் பயிர்கள் முழுமையாக யானைகளால் நாசமாகிப் போவதாகவும் அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த)

# தாதியர் கல்லூரி விடுதிக்குள் திருட முயன்றவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். தாதியர் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்து, அங்கு திருட முற்பட்ட நபர் தப்பியோடிய போதும் அவர் துரத்திப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையுடன் இணைந்ததாக யாழ்.தாதியர் கல்லூரி உள்ளது. வைத்திய சாலையின் விபத்துப் பிரிவான 24 ஆம் விடுதியை அண்மித்து நின்றிருந்த சந்தேகநபர் தாதியர் விடுதியினுள் நுழைந்து திருட முற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் விடுதிக்குள் நுழைய முடியாமையால் ஜன்னல் ஊடாக நீண்ட தடியை உட்செலுத்தி கைத்தொலைபேசி உள்ளிட்ட பொருள்களைத் திருட முற்பட்டுள்ளார். இதன்போது தாதிய மாணவிகள் விழித்துக் கொண்டதால் அவர் அங்கிருந்து தப்பியோட முற்பட்டுள்ளார்.

அவ்வாறு தப்பி விடுதியின் அருகாகச் செல்லும் கழிவு நீர் வாய்க்காலுக்குள்ளும் அவர் விழுந்து எழும்பி ரயில் நிலையப் பக்கமாக ஓடியுள்ளார். எனினும் வைத்திய சாலையில் நின்றிருந்தவர்கள் அவரை விடாது தொடர்ந்து துரத்திச் சென்று ரயில் நிலையத்தில் வைத்துப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அவரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த இளைஞனே அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த–4)

# அமெ. தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேறும் சாத்தியம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 27

இலங்கைக்கு ஆதரவான அமெரிக்க பிரேரணை எதிர்வரும் 30 ஆம் திகதி வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படக்கூடிய நிலைமை உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அமெரிக்காவின் பிரதான அனுசரணையுடன் கொண்டுவரப் பட்ட இந்தப் பிரேரணைக்கு, பிரிட்டன், மசிடோனியா, மொன்டிநீக்குரோ ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ளன. ஆனால், இந்தப் பிரேரணை எந்த நாடு தொடர்பில் கொண்டுவரப்படுகின்றதோ அந்த நாடான இலங்கையே பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்க முன்வந்திருக்கின்றமை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத் தொடரின் சிறப்பம்ச மாக உள்ளது.

2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இலங்கை (ஆட்சியிலிருந்த மஹிந்த அரசு) கடும் எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தது. ஆனால், இம்முறை இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்காவால் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணைக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்குவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்க அறிவிப்பை விடுத்திருந்தார்.

இந்நிலையில், இந்தப் பிரேரணை எதிர்வரும் 30 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படவுள்ளது. 2012 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு 26 நாடுகள் ஆதரவாகவும், 15 நாடுகள் எதிராகவும், 8 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமலுமிருந்தன.

2013 தீர்மானத்துக்கு 31 நாடுகள் ஆதரவாகவும், 15 நாடுகள் எதிராகவும், ஒரு நாடு வாக்கெடுப்பில் பங்கேற்காமலும் இருந்தன. மேலும், 2014 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக 23 நாடுகளும், எதிராக 12 நாடுகளும், 12 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமலும் இருந்தன.

கடந்த மூன்று முறைகளும் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டால் அவை வாக்கெடுப்பினூடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலை இருந்தது. அதாவது, அந்தச் சந்தர்ப்பத்தில் தீர்மானத்தை நிறைவேற்றிய நாடான அமெரிக்காவுக்கு எதிரான கொள்கையுடையதாக ஆட்சியிலிருந்த இலங்கை அரசு தெரிவித்துள்ளது. அதனால், தமது பலத்தை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் அமெரிக்கா இருந்ததாக குறிப்பிடப்பட்டது.

ஆனால், இம்முறை அமெரிக்காவுடன் இணைந்து செயற்படக்கூடிய, ஆதரவான அரசொன்று அமைந்துள்ளதால், அமெரிக்கத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய அரசொன்று உள்ளமையால் இம்முறை வாக்கெடுப்பின்றி தீர்மானத்தை நிறைவேற்றும் நிலை ஏற்படலாம் என்று குறிப்பிடப்படுகின்றது. (த–சி)


## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 01 1959

உதிர்வு 17 09 2005



### அமரர் சரவணை தவராஜா

[கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை]

அதிசயமாய் எம்மை விட்டுப் பிரிந்த அப்பாவே !
ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த வாழ்வு ஏனோ முடிந்து போனது
உதவியென்றால் உங்கள் கரம் அரவணைக்கும் என்ற உண்மை
உறங்கிப் போனதோ மற்றவன் எப்படியும் வாழட்டும் என்று
எப்போதும் இருந்ததில்லை இப்படி வாழுங்கள் என்று
இதமாய் அறிவுரை சொல்வீர்.
பத்து ஆண்டுகள் உங்களைப் பிரிந்து வாழும்
எமக்கு எங்கோப்பா - ஆறுதல்
ஆண்டவன் பொன்னடியில் ஆராத இன்பமுடன் நீங்கள்
இருக்க என்றும் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

684, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.எஸ்.பி. பிளஸ் மீளப் பெறுவதில் அரசு மும்முரம்

## ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சு

கொழும்பு, செப் 27

ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டம் தொடர்பில் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதுவர் டேவிட் டாலிக்கும் இலங்கையின் பதில் வெளி விவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வாவுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டத்தை மீள இலங்கைக்குப் பெற்றுக் கொள்வது குறித்துப் பேசப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் முன்னைய அரசின் காலத்தில் சாத்தியப்பட்டிருக்கவில்லை. தற்போதைய அரசு அந்தச் சலுகை கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. அதனைப் பெறுவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது. அந்தத் திட்டம் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் அரச தரப்பால் சில மாதங்களுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் இன்னும் அது கிடைக்கப் பெறவில்லை. அதற்காகத் தொடந்து பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாக அரசு அறிவித்துக் கொண்டிருக்கிறது. அதன் ஒரு கட்டமாகவே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளதுஎன்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகைத் திட்டம், இலங்கை அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை உள்ளிட்ட சில காரணங்களினால் தொடர்ந்து அதனை வழங்க முடியாது என்று கூறி ஐரோப்பிய ஒன்றியம் அதனை நிறுத்தியிருந்தது.

இந்நிலையிலேயே சில நிபந்தனை



களுக்கு உட்படுவதாகப் புதிய அரசு கூறிய நிலையில் அந்தச் சலுகைத் திட்டத்தை மீளவும் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் இலங்கை அரசு தீவிரமாக இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# 90 பஸ்களுக்கு எதிராக வழக்கு

## யாழ்.-கொழும்பு சேவையில் அனுமதியின்றி ஈடுபடுவதால்

யாழ்ப்பாணம், செப் 27

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே அனுமதிப்பத்திரம் இன்றிப் பயணத்தில் ஈடுபடும் சுமார் 90 பஸ்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித் துள்ளது.



இதுதொடர்பில்பொலிஸ் பிரிவு மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்பனவற்றுக்குத் தெரிவித்துள் ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித் துள்ளார்.

அனுமதி பத்திரம் இன்றிப் பயணிக்கும் பஸ்களுக்குத் தற்போது ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படுகிறுது. ஆனால் அது போதுமானதல்ல. எனவே அந்த அபராதத் தொகையை ஒரு லட்சம் ரூபாவாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டவரைவைத் திருத்தியமைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக அமைச்சர் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபல அரசியல்வாதிகள் மற்றும் உயர் அரச அதிகாரிகள் மற்றும் அவர்களின் மனைவி, பிள்ளைகளின் பெயர்களில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுப் பல பஸ்கள் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் சேவையில் ஈடுபடுகின்றன. அவற்றில் சில தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

எனவே இத்தகைய பஸ்கள் தொடர்பில் யாருடைய அச்சுறுத்தலுக்கும் அடிபணியாது உரிய சோதனைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா பிரதேசத்துக்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது-என்றார். (த-4)

## சர்வதேசத்துடன்

திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் மேற் கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கை மனித உரிமைகள் நிலைமை தொடர்பான பிரச்சினை குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் இந்தியப் பிரதமர் கருத்துப் பரிமாறினார். இந்த விடயத்தில் நீதி கிடைக்க வேண்டும் என்ற கருத்துக்கு இந்தியா பொதுவாகவே ஆதரவளிக்கும். அதேநேரம் இலங்கையின் இறை யாண்மைக்கு மரியாதை யளிக்கின்றோம்.

இலங்கையின் புதிய அரசு ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தில் கொண்டுள்ள ஈடுபாடு மற்றும் அணுகுமுறை அந்தத் தீவின் கடல் மாற்றம் போன்று உள்ளது- என்றார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைக்குச் சர்வதேச நீதிபதிகள் அடங்கிய கலப்பு நீதிமன்றம் அமைக்கும் பரிந்துரை குறித்து இந்தியாவின் நிலைப்பாடு என்ன எனக் கேட்டதற்குப் பதிலளித்த இந்திய வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர்,

இது தொடர்பில் தற்போது கொண்டுரப்பட்டுள்ள வரைவுத் தீர்மானத்தின் இறுதி வரைவில் புதுடில்லிக்கு நம்பிக்கை உள்ளது. இதனை இலங்கை அரசும் ஒருமித்து ஏற்றுக் கொள்ளும்.

இந்தக் கட்டத்தில், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருமித்த தீர் மானமாக இது அமையும் என எமது எதிர்பார்ப்பு. இதனை இலங்கை அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகிறது-என்றார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைன் சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மற்றும் புலனாய்வாளர்கள் ஒருங்கிணைத்து, ஒரு கலப்பு சிறப்பு நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்ற அழைப்பை விடுத்திருந்தார். எனினும் இலங்கை அரசு உள்நாட்டுப் பொறிமுறை என வலியுறுத்தி வருகிறது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட விகாஸ் ஸ்வரூப்,

அது இலங்கை முன்பு இருந்த நிலையில் இருந்து ஒரு கடல் மாற்றம் போன்று மாறியுள்ளது. நீதிக்காக நாம் நிற்கிறோம். அதே நேரத்தில் நாங்கள் இலங்கையின் இறைமைக்கு மரியாதையளிக்கின்றோம். இந்தப் பிரச்சினைக்கு இலங்கை உள் நாட்டு மற்றும் சர்வதேச நீதிப் பொறி முறை கலந்த திட்டமொன்றை உருவாக்கினால் பொருத்தமாக அமையும். இது தான் அனைவருக்கும் வசதியாக அமையும்.- என்றார். (த-வ)

## மைத்திரி

நேற்று அதிகாலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஐ.நா பொதுச்சபையின் 70 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்தியப் பிரதமரும் பக்க நிகழ்வாக இந்தப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இந்த சந்திப்பின்போது, இரு தலைவர்களும் இந்தியா - இலங்கை இடையிலான உறவு குறித்து பேசியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா பொதுச் சபையின் 70 ஆவது கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஐ.நா. பாதுகாப்புச் சபை சீர்திருத் தங்களைக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தினார். இத னைத் தொடர்ந்து பிரதமர் மோடி, இலங்கை , பூட்டான், சைப்பிரஸ், ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பு இனிமையானதாக இருந்தது என்று தமது டுவிட்டர் தளத்தில் பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்து இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் கூறுகையில்,

இலங்கையில் மறுசீரமைப்பு, நல்லிணக்கப் பணிகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் சபைக் கூட்டம் குறித்து எந்த ஒரு விவாதமும் நடைபெறவில்லை- என்றார். (த-வ)

## ஐ.நாவுக்குப்

யுடன் இருக்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

ஐ. நா பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் காட்சிகளே இவ்வாறு வெளியாகியுள்ளன. உயர்மட்ட இலங்கைகுழுவின் ஓர் உறுப்பினராக தஹாம் பங்கேற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது புதல்வர் களையும் குடும்ப உறுப்பினர் களையும் உத்தியோகபூர்வ பயணங்களில் இணைத்துக் கொள்வதாக தற்போதைய அரசு கடுமையாக விமர்சனம் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஜனாதி பதி தேர்தலின் போதும் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங் கேற்கும் உறுப்பினர் எண்ணிக்கை தொடர்பில் விமர்சனங்கள் வெளி யிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## பக்தர்கள்

அடியழித்தும் அங்கப் பிரதட்சணம் செய்தும் வர இன்னும் பல பக்தர்கள் தேவாரதிருவாசகங்களைப் பாட ஆலய வீதிகளில் அழகாக நகர்ந்து வந்தது பெருமானின் திருத்தேர்.

தென்பகுதிகளிருந்தும் வெளிநாடுகளிலிருந்தம் யாழ். குடாநாட்டின் பலபாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மாயவனின் அருள் பெறத் திரண்டிருந்தனர்.

இதேவேளை, குடாநாட்டின் பல [illegible] தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள் எடுத்தும் தமதுநேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டனர்.

ஆழயச் சூழலில் பாதுகாப்பு பலப்பட்டிருந்தபோதும் பல திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆலயச் சூழலில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட வெளி மாவட்டத்தைச் சேர்ந்த கும்பல் ஒன்றைப் பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இன்று மாலை 5 மணிக்குச் சமுத்திரத் தீர்த்தம் இடம்பெறவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பெருமான் சமுத்திரத் தீர்த்தமாடுவதற்காக அடியார்கள் புடைசூழக் கடற்கரைக்கு எழுந்தருளுவார் . (த-108-422)

## இலங்கையின்

அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

நீண்டகாலமாக இந்தியா, இலங்கையின் சிறந்த நட்பு நாடாகக் காணப்படுகிறது. இந்த நிலையில் ஜனநாயகம் மற்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகளுக்கு இந்தியா முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்று பான் கீ மூன் இதன் போது வலியுறுத்தினார். (த-வ)

## இலங்கையின் முடி

ஒத்துழைக்க முன்வந்திருப்பது, முரண்பாட்டு மரபுக்குத் தீர்வு காணும், மற்றொரு நெருக்கமான நகர்வு.

அமெரிக்கா, பிரிட்டன், மசிடோனியா, மொண்டிநீக்ரோ ஆகிய நாடுகளால் ஐ.நா மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கவுள்ளதாக, இலங்கை அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (த-வ)

## ரவிராஜ்

என்பவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரைக் கைது செய்யச் சுவிட்சர்லாந்து அரசின் உதவியைப் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின் மிக நெருங்கிய சகாக்களில் ஒருவரான சரண் சுவிட்சர்லாந்தில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. ரவிராஜ் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர். ஏனையவர்கள் கடற்படை உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விசாரணைகளின் மூலம் ரவிராஜைக் கொலை செய்யப் பயன்படுத்திய துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.


கொலையாளிகள் கொலை செய்வதற்கு ஓட்டோவில் வந்ததாகவும், துப்பாக்கிச் சூடு நடத்தியதன் பின்னர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றதாகவும், இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் பற்றிய விவரங்களையும் திரட்டியுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.


கைது செய்யப்பட்டவர்களில் இருவர் அரச சாட்சியாளர்களாக மாற இணக்கம் தெரிவித்துள்ளனர். இவர்களின் தகவல்களின் அடிப்படையில் சுவிட்சர்லாந்துக்குத் தப்பிச் சென்றுள்ள சரண் என்பவரை கைது செய்ய, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சுவிட்சர்லாந்துக்குப் பயணிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் உத்தரவுக்கு அமைய, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து அரசுடன் இணைந்து கொண்ட கிழக்கு மாகாணத் தலைவர் ஒருவர் கொலையாளிக்கு உத்தரவிட்டதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகக் கொழும்பில் தகவல்கள் வெளியாகி உள்ளன. (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







கலரின் நுவியன் எனும் வனவியல்துறை இயக்குநரால் , சிங்கப்பூர் அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்ட கண்காட்சியில் , ஆழ் கடல் உயிரினங்கள் கட்சிப்படுத்தப்பட்டன . இவை ஆசியாவின் கடல் அடி ஆழங்களில் வசிக்கும் உயிரினங்களாகும் .(த–ரி4)

## 12 நிமிடங்கள் செயலிழந்த பேஸ்புக்

### தவித்துப்போன பயனாளர்கள்

வொஷிங்டன் , செப் .27




பேஸ்புக் சமூக வலைத்தளம் நேற்று 12 நிமிடங்களுக்குச் செயலிழந்ததால் இணையப் பயனாளர்கள் செய்வதறியாது தவித்துப்போனார்கள். சமூக வலைத்தளங்களில் முக்கியமான வலைத்தளமான பேஸ்புக் நேற்றுச் சரியாக 12 நிமிடங்களுக்குச் செயலிழந்ததாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக இலட்சக்கணக்கான பயனாளர்கள் பேஸ்புக்கைப் பயன்படுத்த முடியாமல் சிரமப்பட்டனர். இதையடுத்து பலரும் தங்கள் துயரத்தை டுவிட்டர்களில் வெளிப்படுத்தத் துவங்கினர்.சில நிமிடங்களிலேயே facebookdown என்ற ஹஷ்டேக்கை உருவாக்கி பிரபலப்படுத்தினர். சிலர் உலகம் அழிந்துவிட்டதாக வேடிக்கையாக டுவிட் செய்தனர்.

வட அமெரிக்கா, ஐரோப்பியா, ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய பகுதிகளில் இந்தக் கோளாறு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. பின்னர் சில நிமிடங்களில் பேஸ்புக்கில் ஏற்பட்ட கோளாறு சரி செய்யப்பட்டதும் மீண்டும் செயல்படத் தொடங்கியது. இதன் பின்னரே பயனாளர்கள் நிம்மதியடைந்தனர். (த–ரி4)

## அல் நுஸ்ராவுடன் இணையும் சிரியப் போராளிகள் அமைப்பு



வொஷிங்டன் , செப்.27

அமெரிக்காவால் பயிற்றுவிக்கப்பட்ட சிரியப் போராளிகள், அல் குவைதாவுடன் தொடர்புடைய குழுவான அல் நுஸ்ராவிடம் சரணடைந்ததாக அமெரிக்கா அறிக்கை வெளியிட்டுள்ளது.

சிரியாவின் போராளிகள் தமது வெடிபொருள்கள் ,இராணுவ வாகனங்கள் போன்றவற்றை கையளித்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 6 கனரக வாகனங்களுடன், போராடுவதற்கு வழங்கப்பட்ட வெடிபொருள்களும் கையளிக்கப்பட்டுள்ளதாக, நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் இராணுவ பாதுகாப்புத் தலைமையகச் செய்தித் தொடர்பாட்டாளர் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்துக்கு எதிராக 5,000 போராளிகளுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்ச்சிக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் பயிற்சி அளிக்கப்பட்ட 54 பேர் அல் நுஸ்ராவுடன் இணைந்துள்ளனர் என அமெரிக்க இராணுவம் தகவல் தெரிவித்துள்ளது. பயிற்சி அளிக்கப்பட்ட சிலரே இப்பொழுதும் தீவிரவாதத்துக்காகப் போராடுகின்றனர் என அமெரிக்க இராணுவ அதிகாரி கருத்துத் தெரிவித்துள்ளார். (த–ரி4)

# இந்தோனேசியாவில் பெரும் நில நடுக்கம்

## வீடுகள் இடிந்ததில் 60 பேர் காயம்



ஜகார்த்தா, செப்.27

இந்தோனேசியாவில் சுற்றுலாத்தலமான இடிலிக் தீவில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள் அசைந்தன.

இதனால் பீதி அடைந்த மக்கள் தூக்கத்தில் இருந்து விழித்தனர். வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் எடுத்தனர். சுற்றுலாப் பயணிகளும் அச்சத்தில் செய்வதறியாது நடுங்கினர். இதற்கிடையே அங்கு 6.6 ரிச்டரில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பப்புவாப் பகுதியில் கடலுக்கு அடியில் பூகம்பம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் இடிலிக் தீவில் 200 வீடுகள் இடிந்து தரைமட்டமாயின. 60 க்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கி காயம் அடைந்தனர். அவர்களில் 17 பேருக்குப் படுகாயம் ஏற்பட்டது. அவர்களுக்குத் தீவிரசிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த நிலநடுக்கத்தில் பல ஹோட்டல்களின் சுவர்கள் மற்றும் பெரிய கட்டடங்கள், அடுக்குமாடி வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்தோனேசியா பசிபிக் கடல் பிராந்தியத்தில் பூகம்ப அபாயப் பகுதியில் உள்ளது. இதனால் அங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகிறது. (த–ரி4)

## ரஷ்யச் சட்டத்துக்கு முரணான அப்பிள் செயலி

மொஸ்கோ , செப் .27,



அமெரிக்காவின் அப்பிள் தொழில்நுட்ப நிறுவனத்தின் மீது ரஷ்யா முறைப்பாடு அளித்திருப்பதாக ரஷ்ய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிள் நிறுவனத் தயாரிப்புகளில் காணப்படும் ஓரினச் சேர்க்கை சமந்தப்பட்ட செயலி தொடர்பில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டத்துக்கு முரணான வகையில் அந்த செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவில் குடும்ப அலகு சிதைவதால், எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி, ஓரினச் சேர்க்கை தொடர்பில் அதற்கு ஆதரவான கொடிகள் போன்ற எந்தவித பகிரங்க செயலுக்கும் ரஷ்யா தடை விதித்துள்ளது. இந்த வகையில் அப்பிளின் உற்பத்திகளில் பதிவிறக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட செயலினால் பல புகார்கள் எழுந்த வண்ணம் உள்ளன. அப்பிள் நிறுவனம் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறின் அந்த நிறுவன உற்பத்திகள் , ரஷ்ய அரசினால் தடை செய்யப்படவோ அல்லது குற்றப்பணம் செலுத்தும் நிலையோ ஏற்படலாம் என அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர். (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டக் கூடைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

பயிற்சிப் பட்டறையில் சர்வதேச கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நடுவர் புத்திக குமுத பெரேரா, இலங்கை கூடைப்பந்தாட்ட தேசிய அணியின் பயிற்றுநர் அஜித் குறுப்பு, இலங்கை கூடைப்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவர் விஜயரத்ன போல் நியூமன், ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப் பட்டறையை வழிப்படுத்தினர். (ம-23)





யாழ்.மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் அணிக்கும், மத்தியின் பழைய மாணவர் அணிக்கும் இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதே கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கிடையில் நடந்த தொடரிலும் 3:0 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸின் ஆசிரியர் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# மூன்றாமிடத்தைத் தனதாக்கியது சென். லூட்ஸ் கழுகுகளின் தொடரில் ஆதிசக்தியை வீழ்த்தி

கரணவாய், செப். 27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரின் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தியை வீழ்த்தியது சென்.லூட்ஸ்.

கழுகுகள் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த ஆட்டத்தில் வாய்ப்புக்களைத் தவற விடுவதையே வாடிக்கையாக கொண்டிருந்தது ஆதிசக்தி. ஆதிசக்திக்கு மேலும் இடியாக ஆட்டத்தின் பதினெட்டாவது நிமிடத்தில் சென்.லூட்ஸின் கோல் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. பழிதீர்க்கவேண்டும் என்ற ஆதிசக்தியின் முயற்சியோ அல்லது ஆதிக்கத்தை பலப்படுத்த வேண்டுமென்ற லூட்ஸின் முயற்சியோ எடுபடவில்லை. 1:0 என்ற லூட்ஸின் ஆதிக்கத்துடனே முடிவுக்கு வந்தது முதல் பாதி.

எதுவும் நடக்கலாம் என்ற நிலையில் இரண்டாம் பாதி ஆரம்பமான போதிலும் நேரம்செல்லச் செல்ல சென்.லூட்ஸின் வெற்றி உறுதியாகிக் கொண்டிருந்தது. எதிர்வு கூறலை உண்மையாக்கும் விதமாக ஆட்டம் நிறைவுக்குவர 12 நிமிடங்கள் இருக்கும் போது சென். லூட்ஸ் அணிக்குத் தண்டனை உதை யொன்று கிடைக்க கோல் கணக்கு 2:0 ஆனது. ஆதிசக்தியால் ஆதிக்கம் செலுத்தமுடியாத நிலை. முடிவில் மூன்றாம் இடத்தை வசப்படுத்தியது சென்.லூட்ஸ். (ம-108)

## இன்றைய மோதல்கள்

### ஏ.எல். வி.கழகத்தொடர்

யாழ்ப்பாணம், செப். 27

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஏ.எல். கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து துணைவி நியூஸ்ரார் அணி மோத வுள்ளது.

### பாடசாலைகளுக்கு இடையிலான ரி-20 தொடர்

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான ரி–20 தொடரின் ஆட்டங்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி மைதானங்களில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரான்லிக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி மோதவுள்ளது. பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

# பளுதூக்கலில் சாதித்த இந்துவின் மைந்தர்களுக்கு கல்லூரிச் சமூகத்தால் பெரும் எடுப்பில் கௌவம்



மாங்குளம், செப். 27

தேசியமட்டப் பளுதூக்கல் போட்டியில் ஆண்கள் பிரிவில்; 3தங்கம், 8 வெள்ளி உட்பட 11 பதக்கங்களைக் கைப்பற்றிச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்களுக்கு கல்லூரிச் சமூகத்தினால் பெரும் எடுப்பில் கௌரவம் வழங்கப் பட்டுள்ளது.

கல்லூரியின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்விவலய வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரராஜா கலந்து கொண்டதுடன், பழையமாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-422)

## வாலிபர் எதிர் வளர்மதி இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப். 27

நீர்வேலி சிறிகாமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்திய பி பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர், புத்தூர் வளர்மதி அணிகள் இன்று பலப்பரிட்சை நடத்தவுள்ளன.

முதலாவது அரையிறுதியில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து மல்லாகம் நியூ வொரியஸ் அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இந்த அரையிறுதியாட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி




மோதிக் கொண்டது. இதில் புத்தூர் வளர்மதி அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது. அச்சுவேலி தோப்பு வாலிபர், புத்தூர் வளர்மதி அணிகள் மோதும் இறுதியாட்டம் இன்று இரவு 8 மணிக்கு இடம் பெறும். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப் பிளாட்டரிடம் நீண்ட விசாரணை

## வெளிச்சத்துக்கு வருமா பிபாவின் தில்லுமுல்லுகள்



சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தில் நடந்த முறைகேடுகளின் எதிரொலியாக அதன் தலைவரான பிளாட்டரிடமும் நீண்ட விசாரணை நடத்த சுவிற்ஸர்லாந்து அரசு உத்தரவிட்டுள்ளதுடன் ஆரம்பக் கட்ட விசாரணைகளும் தொடங்கியுள்ளன.

உதைபந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர்களை நடத்தும் உரிமம் வழங்கியதிலும், ஒளிபரப்பு உரிமம் வழங்கியதிலும் முறைகேடு நடந்திருப்பதாக எழுந்த குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதன் எதிரொலியாக, சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உயர் அதிகாரிகள் சிலர் கைது செய்யப்பட்டதுடன் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாகவும் செப் பிளாட்டர் அறிவித்தார். இருப்பினும் புதிய தலைவர் தெரிவு செய்யப்படும்வரை அந்தப் பொறுப்பில் பிளாட்டர் நீடிக்கிறார்.

இந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ள அதிகாரிகளிடம் மட்டுமல்லாது பிளாட்டர் மீதும் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை ஆகியவற்றின் அடிப்படையில் விசாரணை நடத்த சுவிற்ஸர்லாந்து அரசு உத்தரவிட்டுள்ளது. இதையொட்டி பிளாட்டரின் அலுவலகத்தில் நேற்றுச் சோதனை நடத்திய அதிகாரிகள் முக்கியமான ஆவணங்களைக் கைப்பற்றினர். அவரிடமும் விசாரணை நடத்தினர். நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையிலும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் மைக் கல் பிளாட்டனிக்கு சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் நிதியில் இருந்து இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 28 கோடி ரூபாவை பிளாட்டர் வழங்கியதாகச் சந்தேகிக்கப்படுகிறது. (ம)



# யுனிஸ்கான் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த மூத்த வீரரான யுனிஸ்கான் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. இதன்மூலம் அவர் மீது நடவடிக்கை பாய்வது உறுதியாகியுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் பாகிஸ்தா[illegible] சூப்பர் லீக் ரி–20 தொடக்க விழா நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சிக்குத் தன்னைப் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அழைக்கவில்லை எனத் தெரிவித்த யுனிஸ்கான், கட்டுப்பாட்டுச் சபையைக் மீது கடுமையாகச் சாடினார். குறித்த விடயம் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பட்டுச்சபை விடுத்துள்ள அறிக்கையில்–யுனிஸ்கான் மீது பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மிகுந்த மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருந்தது. அவர் மீது எந்த தனிப்பட்ட வருத்தமும் கிடையாது.

எனினும் சமீ பத்தில் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக அவர் தெரிவித்த கருத்துகள் தொடர்பாக அவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பட்டுச்சபை ஆராய்ந்து வருகிறது என்றுள்ளது. (ம)

# நெய்மரின் சொத்துக்கள் முடக்கம்



வருமான வரியை முறையாகக் கட்டி முடிக்காமை மற்றும் சொத்துக்களில் வெளிப்படைத்தன்மை பேணப்படாமை என்பவை காரணமாகக் கிட்டத்தட்ட 900கோடி மதிப்பிலான நெய்மரின் சொத்துக்கள் முடக்கம் செய்யப்பட்டுள்ளன.

பிரேசில் அணியினதும், பார்சிலோனா கழக அணியினதும் நட்சத்திர வீரர் நெய்மர். நாட்டுக்காக விளையாடுவதைவிட பார்சிலோனா கழகத்துக்காக விளையாடுவதுக்காக ஆண்டுதோறும் கோடிக் கணக்கில் பணம் பெறுகிறார். மேலும் விளம்பரங்களில் நடித்துப் பணத்தை குவிக்கிறார். 2013ஆம் ஆண்டுவரை நெய்மர், ஸ்பெயினைச் சேர்ந்த ஒரு கழக அணியில் விளையாடினார். அதன்பின் பார்சிலோனா அணிக்கு மாறினார். இதற்காக கோடிக் கணக்கில் பணப்பரிமாற்றம் நடந்தது.

அணி மாறியதில் கிடைத்த பணத்தின் வெளிப்படைத் தன்மையைக் காட்டாமையாலும் நெய்மருக்கு என்று சொந்தமாக உள்ள 3 பெரும் நிறுவனங்களின் வருமான வரிகளை முறையாகச் செலுத்தாமையாலும் இவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த நிலையில் நெய்மரின் 900 கோடி பெறுமதியான சொத்துக்களை முடக்கம் செய்ய நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதில் அவரது வீடு, வாகனங்கள் போன்றவை அடங்கும். சொத்துக்கள் முடக்கம் செய்யப்பட்டதே ஒழிய பறிமுதல் செய்யப்படவில்லை. அதாவது நெய்மர் குறித்த சொத்துக்களைத் தாராளமாகப் பயன்படுத்தலாம். ஆனால் வழக்கில் இருந்து தப்புவதற்காக அவற்றை விற்க இயலாது. (ம)




# ஆஸியில் சிறந்த சதங்கள் கிளார்க்கின் சதம் முதலிடம்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தனது மைதானங்களில் 21ஆம் (2000ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை) நூற்றாண்டில் அடிக்கப்பட்ட மிகச்சிறந்த சதங்களைப் பட்டியலிட்டு வருகிறது.

இதில் 2012ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற இந்தியா – ஆஸ்திரேலியா ஆட்டத்தில் கிளார்க் ஆட்டமிழக்காமல் 329 ஓட்டங்களை குவித்தமை முதலிடம் பிடித்துள்ளது. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அதே ஆண்டில் தென்னாபிரிக்காவின் பிளாஸிஸ், ஆஸிக்கு எதிராக ஆட்டமிழக்காமல் விளாசிய 110 ஓட்டங்கள் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. 2003ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராக பொண்டிங் விளாசிய 257 ஓட் டங்கள் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. (ம)

# டோனியின் அதிரடி ஆரம்பம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் டோனி நான்காம் நிலை துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கப்போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வழமையாக இலக்குக்காப்பு மற்றும் உடல்தகுதிப் பயிற்சியில் நாட்டம்கொண்ட டோனி, தென்னாபிரிக்கத் தொடருக்கான பயிற்சி முகாமில் நீண்ட நேரம் துடுப்பாட்டப் பயிற்சியை மேற்கொண்டார். எனவே துடுப்பாட்ட வரிசையில் ஏதோ மாற்றம் நடைபெறப் போகிறது என்பதனை ஊகித்த செய்தியாளர்கள் ரவிசாஸ்திரியிடம் சென்று டோனியின் துடுப்பாட்ட நிலை தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

டோனி தொடர்பாக சாஸ்திரி தெரிவித்ததாவது – டோனியின் விளாசலுக்கான நேரம் வந்துவிட்டது என்று தோன்றவில்லையா? எவ்வளவோ ஆண்டுகள் அவர் பின்வரிசையில் களமிறங்கி அணியின் சுமையைத் தன் தோள்களில் சுமந்துள்ளார். எனவே அவர் தனது துடுப்பாட்டத்தை முழுமையாக மகிழ்ச்சியுடன் ஆட வாய்ப்பளிக்க வேண்டாமா? உலக கிரிக்கெட்டிலேயே டோனிக்கு ஈடாக எவரும் கிடையாது. அவரது சாதனைகளை எடுத்துப் பாருங்கள். குறைந்த பந்துப் பரிமாற்றத் தொடர்களில் டோனி சாதித்தவற்றை எண்ணிப்பார்க்கும்போது ஒருவரும் அவர் அருகில் கூட நிற்க முடியாது.

பழைய டோனியை (இளமைக் கால டோனியை) தென்னாபிரிக்காவுக்கு எதிராக உலகம் மீண்டும் பார்க்கப்போகிறது. என்றார். (ம)




# தாகிரிடம் கவனமாய் இருங்கள்

## இந்திய வீரர்களுக்கு சச்சின் அட்வைஸ்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இந்திய வீரர்கள் சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாகிரின் பந்துவீச்சை எதிர் கொள்வதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் தெரிவித்துள்ளார்.

இந்திய் – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடரில் தாகிரின் முக்கியத்துவம் தொடர்பாக சச்சின் தெரிவித்ததாவது – தாகிர் தலைசிறந்த பந்துவீச்சாளர். அவருடைய பந்துவீச்சை முறையாகவும், எச்சரிக்கையாகவும் எதிர்கொள்ள வேண்டும். எம்முடைய இந்திய அணியும் அற்புதமான அணிதான். இந்திய அணியில் மிகத்திறமையான வீரர்களும், அர்ப்பணிப்பு உணர்வோடு விளையாடக்கூடிய வீரர்களும் இருக்கிறார்கள். எம்முடைய வீரர்களைப் பற்றி நிறைய விடயங்களைச் சொல்லலாம். ஆனால் கிரிக்கெட் என்று வரும்போது குறுக்கு வழி எதுவும் கிடையாது. இந்திய அணி போராடும் தன்மை கொண்ட அணி. தென்னாபிரிக்க அணி முதல் தர அணி. இதனால் இந்தத் தொடர் மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக டெஸ்ட் தொடரைப் பார்ப்பதற்காக நான் மிகுந்த ஆர்வத்தோடு இருக்கிறேன். இரு அணிகளும் சமபலம் கொண்டவையாகும். நான் ஒருபோதும் பலவீனமான தென்னாபிரிக்க அணிக்கு எதிராக விளையாடியதில்லை. அந்த அணி எப்போதுமே மிகமிக வலுவான அணியாகவே இருந்திருக்கிறது. இப்போதும் அதில் எந்த மாற்றமும் இல்லை. மீண்டும் சொல்கிறேன் தாகிரிடம் கவனமாய் இருங்கள். என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பிள்ளைக்கு 2½ வயது நிறைவடைந்து விட்டதா?
எந்தவொரு பாடசாலை நாட்களிலும் Play Group இல் இணைந்து கொள்ளலாம்.
(British & National Curriculum)
ADMISSIONS For Montessori



BEEFORT INTERNATIONAL SCHOOL
# 136, Navalar Road, Jaffna | Tel: 0115925923
Colombo : #27, St.Lucia's Street, Colombo 13
Trinco : #59A, Green Road, Trincomalee
Manipay : #248, Jaffna Road, Manipay

ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2016
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
யாழ்ப்பாணத்தில்:
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
சாவகச்சேரியில்:
அன்பொளி கல்வி நிலையம்
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
அனுமதிகளை 28.09.2015 திங்கட் கிழமையிலிருந்து 05.10.2015 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 மணிதொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.
இயக்குநர்கள்.

# எந்த நிலையிலும் களமிறங்கத் தயார்

## ஆனால் ஆரம்பம் மட்டும் வேண்டாமாம் - ரெய்னா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்காக தெரிவாகியுள்ள ரெய்னா ஆரம்ப வீரராக அல்லாது வேறு எந்த நிலையிலும் களமிறங்கத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

துடுப்பாட்ட வரிசையில் மூன்றாம் நிலையிலிருந்த ரெய்னா படிப்படியாக நான்காவது நிலையிலும் தற்பொழுது ஐந்தாவது நிலையிலும் களமிறங்கப்படுகிறார். ரெய்னாவின் சராசரி 99ஆக இருந்த போதிலும் அவரது துடுப்பாட்டத்தில் அதிருப்தித் தன்மையாகவே பரவலாக பேசப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக ரெய்னா தெரிவித்ததாவது:– துடுப்பாட்டத்தில் 5ஆவது 6 ஆவது நிலைகளில் களமிறங்குவது எளிதான விடயமல்ல. ஏனெனில் நீண்ட நேரம் நிலைத்து நின்று துடுப்பாட வாய்ப்பு கிடைக்காது. ஆதலால் நிர்ணயிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் நான் 10 தொடக்கம் 30 ஓட்டங்களுக்குள் எடுத்து ஆட்டமிழக்காது களத்தில் இருந்தாலும் நான் சிறப்பாக செயற்படவில்லை என்றே எண்ணத்தோன்றும். எனக்கே என்னில் அதிருப்தித் தன்மை ஏற்படும். அவ்வாறிருக்கையில் மற்றவர்களின் நிலைப்பாட்டடை கேட்கவும் வேண்டுமா?. ஆனால் டோனி இவற்றையெல்லாம் கரைத்துக் குடித்தவர். அவருக்கு இந்த நுணுக்கமான விடயங்கள் பற்றி யெல்லாம் தெளிவாகத் தெரியும். அவர் எந்த இடத்தில் களமிறங்கச் சொல்கிறாரோ அந்த இடத்தில் களமிறங்கத் தயார்–என்றார். (ம)

மணமகள் தேவை
1983 யாழ் இந்து கௌரவ குடும்பம், கனடா PR உள்ள மணமகனுக்கு அழகான மணமகள் தேவை.
தொடர்பு : 077 644 6628 (64977) (13.15)

பிரபல்யமான நிறுவனமொன்றிற்கான ஆசிரியர் வெற்றிடம்
மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாணம்
01. ஆங்கில மொழிமூல முன்பள்ளி ஆசிரியர் (அனுபவமுள்ள மற்றும் Trainee Staffs)
02. Abacus ஆசிரியர் - பயிற்சி வழங்கப்படும் (O/L கணித பாடத்தில் A or B சித்திகள் தேவை)
03. IT Lecturer - Hardware & Network | Software (Degree holder or relevant qualification)
தொடர்புகளுக்கு : 0212231530 | 0776168584
Thushy22m@hotmail.com | prabu.myid@gmail.com

ஒரு சதுர அடி பனர் பிறிண்டிங் ரூபா 30/=
ஒரு சதுர அடி பெயர் பலகை ரூபா 195/=
சகல விளம்பரப் பலகைகளுக்கான வடிவமைப்புகளும் இலவசம் (Designing Charge Free)
2 வருட உத்தரவாதம்



வடக்கின் முதற்தர பிறிண்டிங் தொழிற்சாலையான
பிறிண்ட் மாஸ்ரரின் அதிரடி விலைச் சலுகைகள்
ஒரு சதுர அடி
- டிஜிற்றல் பனர் பிறிண்ட் (Banner) 30/=
- டிஜிற்றல் ஸ்ரிக்கர் (Sticker) 75/=
- பெயர்ப் பலகை (Name Board) 195/=
- பெயர்ப் பலகை Without Galvanize Sheet 165/=
- ஒளியூட்டப்பட்ட பலகை (Light Board) 490/=
பல நூற்றுக்கணக்கான டிசைன்களில் அலங்காரப் பந்தல் தட்டிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் Designing Charge Free
PRINT MASTER
136, கே.கே.எஸ் றோட், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
021 205 3322 077 898 3322

SIO STUDY VISA
உங்கள் கல்வித் தகைமைகளை சர்வதேச அங்கீகாரத்துடன் சர்வதேச பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்க......
"நம்பிக்கை, உத்தரவாதம்"
இன்றே இலவச ஆலோசனைகளுக்கு
SIO INTERNATIONAL STUDY VISA CONSULTANT
UK- Newzealand- Australia- Singapore- Malaysia- Russia- India.
நேரடி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி
100இற்கு மேற்பட்ட பாடநெறிகள்
100% இலவச ஆலோசனைகள்
தங்குமிடம் விசா சேவைகள் ஒழுங்குபடுத்தப்படும்.
SIO International Study Visa Consultant
80/37, Kasthuriyar road Jaffna.
Hot line- 0722364651, 0212217865
Email- Edusio.lk@gmail.com
(64925)(10.17)



கந்தன் கருணை
முருகன் அடியார்களுக்கு
கந்தசஷ்டியை முன்னிட்டு யாழ்.நகரில் இருந்து முதன் முறையாக ஆறுபடை வீடு தரிசனம்
தரிசனம் 10 நாள்கள்..... புறப்படும் திகதி 11.11.2015
ஆறுபடை வீடுகளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முருக படைத்தரிசனத்துடன் கடைசி 2நாள்கள் திருச்செந்தூரில் நடைபெறும் உலகப் பிரபல்யம் பெற்ற சூரன்போர் காட்சியை கந்த அடியார்கள் காண ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் போகும் வழியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களையும் தரிசனம் செய்யலாம்.
20% விசேட கட்டணக் குறைப்புடன் 75,000/=SL.Rs
சென்னையில் ஒரு நாள் சொப்பிங்குக்கு ஒதுக்கப்படும்
எங்கள் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டவை
- இருவழி விமான கட்டணம்
- இருவழி விமான நிலையத்துக்கான போக்குவரத்துக் கட்டணம்
- மூன்று நேர உயர்தர சைவ உணவுகள்
- இருவர் தங்கக் கூடிய அறை, இணைந்த குளியலறை
- 2 தண்ணீர் போத்தல் / காலை, மாலை தேநீர்
- இந்தியாவில் 9 நாள்களும் யாத்திரைக்கு தனி குளிரூட்டப்பட்ட வாகனம் பயன்படுத்தப்படும்.
முக்கிய குறிப்பு:
10 யாத்திரிகர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
தொலைபேசி இல: 021 221 7070 077 354 5115
தொடர்புகளுக்கு: சன்ஜெயா ருவறிசம் SUNJEYA TOURISUM 713, Hospital Road, Jaffna.

கவரிங் நகைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்!
விரையுங்கள் Oct. 15ஆம் திகதிவரை மட்டுமே
M&M FASHIONS
செயின் பென்டன் தோடுகள் காப்பு சிமிக்கி வகைகள் நெக்லஸ் வகைகள் ஆரங்கள் காசுமாலை கை செயின் முத்துமாலை
விசேட விலைக்கழிவு 50% வரை




திருமண மற்றும் நாட்டிய நிகழ்வுகளுக்கான ஆபரணங்கள் (Wedding Collections)
(இடுப்புப் பட்டி, நெற்றிச் சுட்டி, கைப்பட்டி, நாகசடம், காற்சலங்கைகள்)
ராஜா தியேட்டர் முன்பாக
205/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 0055 990, 021 221 6145
(64932)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 27.09.2015

# மீண்டும் ஒரு ஆணைக்குழு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு ஆணைக்குழு!

■ ஸூடோ ஸ்வாமி



"இந்தியத் தொலைக்காட்சிகளில் முதன்முறையாக.... திரைக்கு வந்து சில மாதங்களேயான.... புத்தம் புதிய அதிரடி திரைப்படம்" விடுமுறையுடன் கூடிய சிறப்புதினம் ஏதாவது ஒன்று வருகிறதெனில், இந்தியாவிலிருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி ஒன்றின் அறிவிப்பாளர் ஒருவர் தனது உடலின் சில பாகங்கள் அதிர்வுறக்கூடிய வகையில், அமுக்கத்தை மற்றும் அழுத்தத்தைக் கொடுத்து விடுக்கும் திரைப்பட முன்னறிவித்தலே மேற்கண்ட வசனங்கள்! மேற்படி விளம்பர சொற்கோவையின் முதல்வரி ஒலி பரப்பப்பட ஆரம்பித்ததுமே ஆரவ மிகுதியால், குறித்த சிறப்பு தினத்தில் என்ன திரைப்படம் ஒளிபரப்பப்பட இருக்கிறது என்பதை அறியும் ஆவலில் அறைகளுக்குள்ளும் அடுக்களையிலும் அலுவலில் இருந்து, மானசீகமாய் வரவேற்பறையில் உள்ள தொலைக்காட்சிப்பெட்டியுடன் இணைந்திருப்போர் உடனடியாகத் தொலைக்காட்சிக்கு முன்னதாகக் குழுமி விடுவர். காண்பிக்கப்படும் நறுக்கப்பட்ட காட்சிகளை வைத்து திரைப்படத்தை அதன் தலைப்புத் தோன்றுவதற்கு முன்னதாகவே இனங்காணுவோர், பலவேளைகளில் ஏமாற்றமடைந்து புறுபுறுத்தபடி செல்வதை நான் கண்டிருக்கிறேன். ஏமாற்றத்துக்கு காரணம், அந்தத் திரைப்படம், அறிவிப்பாளரினால் உச்சரிக்கப்பட்ட வசனத்துக்கு மாறாக, தொலைக்காட்சிகளில் மூன்றாம் நான்காம் முறையாகவோ, திரைக்கு வந்து பல(?) மாதங்கள் ஆனதாகவோ இருப்பதே.

அது மாத்திரமன்றி, இவ்வகையான அறிவிப்புடன் கூடிய திரைப்படங்களை குறிப்பிட்ட சிறப்புதினத்தில் தொலைக்காட்சியில் பார்க்க முயற்சித்தாலும் இரண்டரை மணித்தியாலமோ? மூன்று மணித்தியாலமோ? நுகரக்கூடிய திரைப்படத்தை, அனுசரணை வழங்குபவர்களின் விளம்பரங்களினால் திணித்து நிரப்பி, மேலதிகமாக சில மணித்தியாலங்களையும் களவாடி, நீட்டித்தான் முடிப்பார்கள் தொலைக்காட்சி நிறுவனத்தினர்!

அண்மையில் ஜெனிவாவில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவினால் முன்மொழியப் பட்டிருக்கும் உண்மைகள் அறியும் ஆணைக் குழு பற்றிய பரிந்துரையைக் கேட்டவுடன் கொடுப்புக்குள் சிரிப்புடன் மேலே சொன்ன சம்பவத் தொடர்தான் எனக்கு நினைவில் வந்துபோனது.

ஐ.நாவின் அறிக்கை வெளிவருவதற்கு முன்னதாக கடந்த 14ஆம் திகதி ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உரை நிகழ்த்திய மங்கள, தென்னாபிரிக்க முன்னெடுத்த பாணியினாலான உண்மைகள் அறியும் ஆணைக்குழுவை அமைப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஏற்கனவே தென்னாபிரிக்காவின் தலையீட்டுடன் கூடிய சமாதான முயற்சிகள் பற்றிய தகவல்கள் உலா வந்த நிலையிலேயே இந்த புதிய ஆணைக்குழு தொடர்பான அறிவிப்பும் வெளியாகியிருக்கிறது.

**இது ஒன்றும் புதிதல்ல**

Truth and Reconcilliation (TRC) எனப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, ஒன்றும் தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் மாத்திரம் உரித்தான விசேட அம்சமல்ல. உள்நாட்டு பிணக்குகள் ஏற்பட்ட நாடுகளில், கடந்த காலத் தவறுகளை கண்டறிவதற்கும் வெளிப்படுத்துவதற்குமாக இது போன்ற உண்மை அறியும் ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்ட வரலாறுகள் இருக்கின்றன. பிரேசிலில், கனடாவில், ஈக்குவடோரில், ஹெயிட் டியில், பிலிப்பைன்ஸில் என இந்தப் பெயரை மற்றும் குணாம்சத்தை ஒத்த ஆணைக் குழுக்கள் இருந்திருக்கின்றன.

ஆணைக்குழுக்களை அமைத்துக்கொள்வதென்பது இலங்கைக்கு ஒன்றும் புதிதான அம்சமல்ல. இலங்கையின் வரலாற்றில் இத்தகைய ஆணைக்குழுக்கள் முன்மொழியப்பட்ட, நிறுவப்பட்ட, பணியாற்றிய வரலாறுகள் நிறைய உண்டு. ஆனால் அவை தமது இலக்கு மற்றும் குறிக் கோளை நிறைவேற்றி ஓய்ந்தனவா என்பது ஆராயப்படவேண்டியது.

> **823/42 இலக்க, விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2013ஆம் ஆண்டு ஆவணி மாதம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப் பட்டதே காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு. மூவரை உள்ளடக்கிய இந்த ஆணைக்குழு, 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணாமல் போனோர் தொடர்பிலான விவரங்களை அறிக்கைப் படுத்துவதை நோக்காகக் கொண்டு நியமிக்கப்பட்டது.**



**கடந்து வந்த இரு ஆணைக்குழுக்கள்!**

2006க்குப் பிற்பட்ட சூழலில் இரண்டு ஆணைக்குழுக்கள் பிரதானமாக பேசப்பட்டன. இதில் முதலாவது, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு. மற்றையது, காணாமற்போனோர் தொடர்பானது.

பல்வேறுவித சர்வதேச அழுத்தங்களுக்குப் பிறகு மகிந்த ராஜபக்சவினால் 2010இல் நியமிக்கப்பட்டதே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு. சர்வதேசத் தலையீடுகளைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் கொடுக்கப்பட்ட ஒரு வகை மறுத்தான் செயற்பாடே அது. 18 மாதங்களாக விசாரணைகள், வாக்கு மூலங்கள் மற்றும் தரவு சேகரிப்புகள் நடந்து இறுதியில் 2011 கார்த்திகை மாதத்தில் 388 பக்கங்களைக் கொண்ட இறுதி அறிக்கை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது. பின்னர், நாடாளுமன்றில் அது முன்வைக்கப்பட்டுப் பொதுப் பார்வைக்கு வெளியிடப்பட்டது.

குறிப்பிட்ட இந்த ஆணைக்குழுவுக்கு சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது. காரணம், இந்த ஆணைக்குழு போதுமான சுயாதீனத் தன்மையையோ, மிகக்குறைந்த அளவிலேனும் சர்வதேச தராதரங்களையோ அல்லது சாட்சிகளைப் பாதுகாக்கும் முறையையோ கொண்டிருக்கவில்லை என்பதுதான்.

அதனால் எதிர்பார்க்கப்பட்டது போலவே, பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் நகரச்செய்யும் விதமான அறிக்கையே கடைசியில் வெளியிடப்பட்டது. பின்னர், அதன் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட இழுபறி, தனிக்கதை!

1823/42 இலக்க விசேட, வர்த்த மானி அறிவித்தல் மூலம் 2013ஆம் ஆண்டு ஆவணி மாதம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப் பட்டதே காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு. மூவரை உள்ளடக்கிய இந்த ஆணைக் குழு, 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பிலான விவரங்களை அறிக்கைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு நியமிக்கப்பட்டது.

இதுவரை 23,000இற்கு மேற்பட்ட முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழு உள்வாங்கியுள்ளதாக தனது இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது.

தனது முதலாவது இடைக்கால அறிக்கையை கடந்த சித்திரை மாதம் ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் சமர்ப்பித்திருந்த ஆணைக்குழு, அதன் இரண்டாவது இடைக்கால அறிக்கையை தயாரித்துவிட்டபோதிலும், இன்னும் அது ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவில்லை.

போதுமான நியாயத் தன்மை மற்றும் சுயாதீனத் தன்மைகளைக் கொண்டிராத அல்லது அது தொடர்பிலான சந்தேகங்களைக் கொண்டுள்ள இந்த ஆணைக்குழுவை நிராகரித்து ஆங்காங்கு ஆரப்பாட்டங்கள் சில நிகழ்ந்திருந்தன. இந்தப் பின்னணியிலேதான் பத்தியின் ஆரம்பத்தில் சொன்ன விளம்பர அறிவிப்பை ஒத்த வகையில் புதிய ஆணைக்குழுவின் அறிவிப்புப் வெளியாகியிருக்கிறது.

சர்வதேசத்துக்கு ஒருவகை செம்மஞ்சள் நிற சமிக்ஞையை வழங்கு வது போன்ற தோற்றப்பாட்டைக் காண்பிக்கும் இந்த உண்மைகள் அறி யும் ஆணைக்குழு பற்றிய முன்மொழிவுக்கு, சிறுபான்மைத் தரப்பினரிடமிருந்து எதிர்ப்பே கிடைத்திருக்கிறது.

குற்றவாளிகளைத் தண்டிப்பதைத் தவிர்த்து, அதே (ஒரே) குற்றவாளிகளை வெவ்வேறு அறிக்கைகள் ஊடாகவும் ஆணைக்குழுக்கள் ஊடாகவும் இனங்காட்டும் நடவடிக்கை தொடரும் வரை குற்றவாளிகளுக்கு கொண்டாட்டம்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்துக்கான நுழைவாயில்!

சிவா.செல்லையா

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் காலம் காலமாகப் பல்வேறு சக்திகளால் அழிக்கப்பட்டு வந்தது. மேலும், இந்திய அரசால் தமிழர்களின் அரசியல், இராணுவ நகர்வுகள் மோசமான முறையில் அடக்கப்பட்டன. அரசியல் மென் போக்காளர்களும் இனி ஒன்றுமே இல்லை. கிடைக்கின்றதை பெற்றுக் கொண்டு சௌகரியமாக வாழ்நாளை ஓட்டலாம் எனத் திட்டமிட்டனர். செப்ரெம்பர் 11 அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் விடு தலைப் போராட்டங்களைப் பயங்கரவாதப் போராட்டங்களாகச் சித்திரித்து அடக்கிய உலகம் இன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதத்தால் உலக ஒழுங்கை மாற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

ஐ.எஸ்.ஐ.எஸ். நடவடிக்கைகளும் ஐ.எஸ். ஐ.எஸ். எதிர் நடவடிக்கைகளும் உலகில் லட்சக்கணக்கான அகதிகளைப் புலம்பெயர வைத்துள்ளது. இவ்வாறு புலம்பெயர்ந்த மக்களை முன்னைய காலங்கள் போல் இறுக்கமான குடிவரவுச் சட்டங்களால் இனிமேல் கட்டுப்படுத்த முடியாது. அப்படிப் பெரும் எண்ணிக்கையான அகதிகளை ஒரு நாடு தனது பராமரிப்பில் எடுக்கும் போது அந்த நாடு தனது சுயத்தை இழக்கும். எனவே, உள்நாட்டு நெருக்கடியால் புலம் பெயரும் மக்களுக்கு, அவர்களை நிர்வகிக்க, நாடு கடந்த அரசுகளை உருவாக்கவேண்டிய கட்டாயம் மேற்குலகுக்கு ஏற்பட்டுவிட்டது. அன்றேல் மேற்குலகின் சுயம் இழக்கப்படுவதோடு, அவர்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகும். ஏனெனில் புலம்பெயர்ந்த அகதிகள் ஒடுக்கப்பட்டு வாழின் அவர்களிடத்தே நவீன புரட்சிகர விடுதலைக்கான தேடல்கள் உருவாகிவிடும். எனவே இனிவரும் காலங்களில் ஒரு நாட்டில் மக்களை தொடர்ச்சியாக இராணுவ அடக்குமுறைக்குள் வைத்திருக்க முடியாது. புலம்பெயர்ந்த மக்களுக்கு என, உலகில் நாட்டை உருவாக்கும் சிந்தனைகள் உருவாகிவிட்டன.

சிரிய அகதிகளுக்காக, எகிப்திய தனவந்தர் கிறீஸ் அல்லது இத்தாலி நாட்டில் இருந்து ஒரு தீவை விலைக்குப்பெற்று, புதிய நாட் டையே உருவாக்கிக்கொடுக்க முனைகிறார். இதற்கு ஐ.நா வின் அங்கீகாரமும் உடனடியாகக் கிடைக்கும்.

இவ்வாறு உலக ஒழுங்கு மாறுவதை அவதானிக் கும் ஈழத் தமிழர்களும், தமக்கு இழைக்கப்பட்ட அநீதி களில் இருந்தும் நீதியைப்பெற உரிய பொறி முறையை தேடிக்கொண்டு உள்ளனர்.

இதில் மிகவும் சந்தோஷமான செய்தி யாதெனில் தமிழீழம் என்பது சாத்திய மில்லை என ஏங்கிய மக்களுக்கு, தமிழீழம் என்பது மிகவும் இல குவாக அமைந்து விடும் என் பதாகும்.

இதனை இலங்கை அரசு மிகவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய காலமாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கில் இருந்து சிங்கள இராணுவத்தை வெளியேற்றி, ஈழத் தமிழர்களுக்கு சுயாட்சியை உடனடியாக அளிக்காவிடின் மாற்றமடைகின்ற புதிய ஒழுங்கில், ஐ.நாவின் அங்கீகாரத்துடன் தமிழீழ அரசு, நாடு கடந்த நிலையில் உடனடியாகச் சாத்தியமாகும். உலகில் வாழும் மக்களில் 20 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் புலம் பெயர்ந்து வாழும் சூழல் ஏற்பட்டால் நாடு கடந்த பல அரசுகளே உலக ஒழுங்கைக் கட்டுப்படுத்தும். அவற்றில் ஒன்றாக தமிழீழமும் அமையும்.

## சுடுகாட்டுப் பயணம்

கருஞ்சீலை புனைந்து
கார்மேகம் இன்னும்
காரிருளை உமிழ்ந்தபடி......
மின்மினிகளாய் கண்சிமிட்டும்
விண்மீன்களும் இன்றில்லை
கீறல்களாய் எஞ்சிப்போன
கிடுகு வேலிக்குள்
நாலுசுவர் மத்தியிலே
நாறலாய்ப்போன பிணவாடை மட்டும்
இளங்காலைப் பொழுததில்
மொட்டுக்களை விரித்த மலர்கள்
மாலைக் கருக்கலில்
மரத்தடியில் மண்டியிடுதலாய்
ஒட்டடைகளால் கறுத்துப்போன
களிமண் சுவர்களில்
நச்சரித்த பல்லிகளின்
முனகலையும் தாண்டி
மேலுமொரு முனகலொலி......
கறுத்த சுவர்களில்
வெண் வர்ணம் தெளித்து
கிறுக்கல் சித்திரம்
கீறி விளையாடும் சிலந்திகள்
அவற்றின் வீடுகளையும் ஊடறுத்து
இரத்தம் தேடியலைந்து
ஏமாறும் நுளம்புகள்
பாம்பு, பூச்சி, புழுக்களும்
சுதந்திரமாய்த் திரிய
அநாதையாய் ஓருயிர்
அனுக்கம் கொள்கிறது
முற்றத்துத் தென்னையில்
எட்டத்திலிருந்து வந்து
அமர்ந்த ஒரு கோட்டான்
கோசமிட்டபடி......
புதுமனை கட்டி புகுவிழா செய்த
மகிழ்ச்சியில் கறையான்கள்......
கூட்டுக் குடும்பமாய்
நாடுபோற்ற வாழ்ந்த நல்குடும்பம்
கூடிழந்த பறவையாய்
நாடு நாடாய் அலைந்துதிரிய
அறுந்த செருப்பாய்
மூலையில் அடங்கிக் கொள்கிறது
ஓர் ஆத்மா.
பலவருடம் முன்னொருநாள்
தொடங்கிவிட்ட பயணம்
இன்றோ நாளையோ
நிறைவுறும் தறுவாயில்......
பொய்யுடலைக் குடைந்து குடைந்து
விலைபோகும் உடலை
மலிவோடு [illegible]
புழுக்கள் [illegible]
மனிதம் மட்டும் பின்வாங்கிட
ஊர்கோலம் போகும்



எறும்புகளின் ஆரவாரம்
வைபவமொன்றின் அரங்கேற்றம்
மௌனமும் ஏக்கமும்
வரதட்சணைகளாய்!
ஆடியொடுங்கி அடுத்த
அடிவைக்க வலுவின்றி
வாடி வதங்கி சுடுகாட்டு
வங்கியின் சேமிப்பாய்ப் போகும்
சாம்பல் பணங்களின் பயணங்கள்......
எல்லைக்கோட்டை எட்டிப்பிடித்தபடி
பெற்றவரை மறந்து
உற்றவரைத் துறந்து
மற்றவரைப் புகழ்ந்து
முகநூலில் அகம்மகிழ்ந்து
செல்போனில் செல்ஃபி போட்டி
ஸ்கைப்பில் கைகுலுக்கி
வை (ய்)பரில் கதைபேசி
படுக்கையறைக் கசங்கல்களிடையே
பலசுகம் கண்டு
மகிழ்வோடு காலம் கடத்தும்
பெற்ற பிள்ளைகள்
வரார் எனவறிந்தும்
[illegible] தொலைத்த மனம்
இன்னும் அலைகிறது
பெற்றகடன் மறந்த
பிள்ளைகளைத் தேடி!
இறுதிவரை இருந்த
நம்பிக்கையும் இனியில்லை......
ஊர்க்காரர் உதவியுடன்
உந்தி வலிக்கப்பட்ட துடுப்பு
கலங்கரை விளக்கை அண்மித்தபடி!
முன்னர் எரிக்கப்பட்ட
சிதையிலிருந்து உதயமாகும்
புகையும் தீக்கனலும்
நன்றாய்த் தெரிகிறது
வாய்திறக்கும் பிணக்காடு
பசியாறத் துடித்தபடி வாய்பிழந்து......
உழைத்துழைத்து சேர்த்த பணம்
வங்கியிலே
களைத்துப்போய் ஓய்வெடுக்கவிட்டு
பெற்ற கடனை அடைக்க முடியா
பிள்ளைகளின் வாழ்வுக்காய்
எஞ்சும் ஒரு பிடி சாம்பலையேனும்
சேமிப்பாய் சேர்த்துவிட
துடித்தபடி அடங்கிப் போகிறது
ஆத்மா!
ஆனாலும்
பயணத்தின் முற்றுப்புள்ளி
இன்னும் எட்டியே நிற்கிறது.

கஜன்
மல்லாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரங்கன்



# நாங்கள் ஆச்சரியமானவர்கள்!

1. கோயில் வாசலில் இருக்கும் பிச்சைக்காரர்களுக்கு ஐந்து ரூபா கொடுக்க மாட்டோம். ஆனால் ஐம்பது ரூபாவுக்கு கர்ப்பூரம் வாங்கிக் கொழுத்துவோம். இந்தக் கர்ப்பூரப் புகையை இறைவன் விரும்பமாட்டார் என்றும் கோயில் வாசலில் பசியினால் வயிறு புகைந்து கொண்டிருக்கும் ஏழையின் சிரிப்பிலேயே இறைவனைக் காணலாம் என்றும் படித்து நமது மரமண்டைக்குள் தவறாமல் ஏற்றிக்கொள்வோம்.

2. இருக்கும் ஆலயங்களை இடித்துப் பெரிது பெரிதாகக் கட்டுவதற்கு கோடி கோடியாகப் பணத்தைச் செலவு செய்வோமே ஒழிய, போரினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக வீடு வாசல் இன்றி வானமே கூரையாக வாழும் ஒரு குடும்பத்தை என்றாலும் தத்தெடுத்து அவர்களுக்கு ஒரு சிறிய வீட்டை என்றாலும் கட்டிக்கொடுப்போம் என்று சிந்திக்கவே மாட்டோம்.

3.கோயில் திருவிழாக்கள் என்றால் நான்கு திசைகளிலும் ஒலிபெருக்கிகளைக் கட்டி திருவிழாக் காலம் முழுதும் அதிக சத்தத்துடன் ஒலிக்க விட்டு அயலிலுள்ள நோயாளிகள், முதியவர்கள், மாணவர்கள் போன்றோருக்கு இடையூறாக இருப்போம்.

4. இரண்டு சிற்றூர்திகளில் ஏற்றக்கூடிய பயணிகளை ஒரு சிற்றூர்தியிலே ஏற்றி அடுக்கும் பக்குவம் எங்கள் ஊர் நடத்துநர்களுக்கு மட்டும்தான் தெரியும். இதனால் பயணிகள் அடையும் அசௌகரியங்களைப் பற்றி எல்லாம் நாம் யோசிக்கவே மாட்டோம். எமது குறிக்கோள் பணம் மட்டும்தான்.

5. எங்கள் இ.போ.ச. சாரதிகளும் சிற்றூர்திச் சாரதிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர். போட்டி என்று வந்துவிட்டால் நாங்கள் சிங்கம். சுனில் நரேனுக்கே நாங்கள்தான் சாரதியம் பழக்கினனாங்கள். எங்களுக்கு ஒருத்தரும் சாரதியம் பற்றிச் சொல்லித்தரத் தேவையில்லை. உள்ளே இருக்கும் பயணிகளின் உயிர்கள் எங்களுக்கு முக்கியமல்ல. இந்தப் போட்டியில் நாங்கள் மட்டும்தான் ஜெயிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள்.

6.பேருந்தில் பயணம் செய்யும்போது எவரும் முதியவர்கள் எங்கள் ஆசனத்துக்கு அருகில் வந்து நின்றால் எழுந்து அவர்களுக்கு இடம் கொடுக்காது நித்திரை போல் கண்ணை மூடிக்கொண்டு இருப்போம்.



7. செல்லப் பிராணியான நாய்களை வீட்டில் கட்டி வைத்து அல்லது வீதிக்கு விடாமல் வீட்டு வளவுக்குள்ளேயே வளர்ப்பதுடன் அவற்றின் மலங்களை கிடங்கு வெட்டி புதைக்க மாட்டோம். அவற்றை மலங்கழிக்க வீதிகளில்தான் விடுவோம். இது வீதியால் செல்லும் வாகனங்களின் சில்லுகளில் ஒட்டி வீதிகளில் நீண்ட தூரம் பரவிவிடும். இதனால் நடந்து செல்லும் பாதசாரிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றார்கள் என்பதெல்லாம் எமக்கு முக்கியமல்ல. எங்கள் வீடு சுத்தமாக இருந்தால் சரி.

8. எவரும் புதிதாக வீட்டு மதிலுக்கு வர்ணம் தீட்டினால் எமக்குப் பொறுக்காது. இரவிரவாக அந்த மதிலுக்கு கழிவு ஓயில் ஊற்றி திருஷ்டி கழித்துவிடுவோம்.

9. மருத்துவமனைக்குச் சென்றால் நாங்கள்தான் முதலில் வைத்தியரிடம் காட்ட வேண்டும் என்று நினைப்போம். அங்கு வந்திருக்கும் மற்றைய நோயாளிகள் எல்லாம் வைத்தியரை நலம் விசாரிக்கவே வந்திருக்கிறார்கள். நாங்கள் மட்டும்தான் வைத்தியரிடம் நோய்க்கு மருந்தெடுக்க வந்திருக்கின்றோம் என்றுதான் நினைப்போம். மற்றவர்களும் ஏதோ ஓர் உடல் நலக்குறைவால்தான் வைத்தியரிடம் வந்திருக்கின்றார்கள் என்று ஒரு போதும் நினைப்பதில்லை.

10. அலுவலகங்களில் பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வந்தால் அவர்களுக்கான தேவைகளைக் கேட்டு நிறைவேற்றாது அவர்களைக் காத்திருக்கச் செய்து எங்கள் சொந்த வேலைகளை முடித்து (தொலைபேசி உரையாடல், பத்திரிகை வாசித்தல், முக நூல் பார்த்தல்......) அதன் பின்னரே அவர்களின் தேவைகளைக் கேட்டறிவோம். பொது மக்களாகிய அவர்களின் பணத்தில்தான் அரச உத்தியோகத்தர்களாகிய நாங்கள் சம்பளம் பெறுகின்றோம் என்பதை நாம் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை.

11. அரச பணத்தில் மக்களுக்கு ஏதும் வழங்குவதென்றால், நாங்கள் எங்கள் சொந்தப் பணத்தில்தான் இதை எல்லாம் செய்கின்றோம் என்பதைப்போன்று பத்திரிகைகளில் ஒளிப் படத்தைப் பிரசுரித்து விளம்பரம் தேடுவோம். அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா.

12. வெளிநாடுகளில் எமது உறவுகள் வெயிலிலும் (மத்திய கிழக்கு), குளிரிலும் (ஐரோப்பா) எவ்வளவு கஷ்டப்பட்டு எமக்கு பணத்தை அனுப்பினாலும், நாம் அதைப்பற்றி எல்லாம் யோசிக்கமாட்டோம். நிலத்தில் விழுந்தால் தூக்கி நிறுத்துவதற்கு இயலாதனவாக உள்ள பெரிய பெரிய மோட்டார் சைக்கிள்களை வாங்கி மது போதையில் அந்த வாகனங்களைச் செலுத்தி விபத்துக்குள்ளாவதுடன் சிவனே என்று வீதியில் தன்பாட்டில் செல்பவர்களையும் இடித்து முறித்து படுக்கவைப்போம்

13. வீதிகளிலுள்ள மைல்கற்களின் மீது அவற்றை மறைத்து விளம்பரங்களையும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களையும் ஒட்டுவோம். இதனால் வெளியூரிலிருந்து வரும் ஒருவர் தான் போகவேண்டிய இடத்தின் திசை, தூரம் என்பவற்றைத் தெரிந்துகொள்ள முடியாது அவஸ்தைப் படுவதெல்லாம் எமக்குத் தெரியாது. மற்றும் விளம்பரம் ஒட்டாதீர்கள் என்று எழுதப்பட்ட இடத்திலேயே பிரசுரங்களை ஒட்டும் கைங்கரியம் எம்மால் மட்டும்தான் முடியும். நக்குகிற மாட்டுக்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன?

14. மரங்கள் மனிதர்களுக்கு இறைவன் தந்த வரங்கள் என்பதை மறந்து மூட நம்பிக்கையினால் ஒவ்வொரு காரணங்களைக் கூறி வாசலிலுள்ள மரங்களைத் தறித்து விடுவோம். விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறினாலும் நாங்கள் எங்கள் மூடநம்பிக்கைகளை விடவே மாட்டோம். கூடவே வந்தது என்றைக்கும் மாறாது.

15. அரச நிறுவனங்கள் ஊடாக மர நடுகைத் திட்டங்களை முன்னெடுத்து பொது மக்களுக்கு நிழல் மரங்கள், பயன்தரு மரங்கள் என்று பெருமெடுப்பில் வழங்குவோம். ஆனால் எங்கள் அலுவலங்களில் அவற்றில் ஒரு சில நிழல் மரங்களை என்றாலும் நட்டு வளர்க்க வேண்டும் என்று யோசிக்க மாட்டோம். எமது அலுவலங்களில் ஒரு காக்கா, குருவிகூட ஒதுங்குவதற்கு நிழல் இல்லை. பொதுமக்களுக்கு மரங்களை வழங்குவதற்கு முன் நாங்கள் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும் என்றெல்லாம் யோசிக்கமாட்டோம்.

15. மின்சாரக் கம்பிகளுக்கு மரங்களின் கிளைகள் சென்றால், மின்கம்பங்களுக்குச் செல்லும் கிளைகளை மட்டும் வெட்டி மரங்களின் மற்றைய கிளைகளை வளரவிடுவோம் என்று சிந்திக்காமல் மரங்களை ஒரேயடியாக அடியுடன் தறித்து வீழ்த்தும் நாங்கள், இவ்வாறு பொறுப்பில்லாமல் மரங்களைத் தறித்து எமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு நாமே மண்ணை அள்ளிப் போடும் கைங்கரியத்தைச் செய்வோம்.

16. எங்கள் பெற்றோர்கள் உயிரோடு இருக்கும்போது அவர்களைக் கவனிக்கமாட்டோம். முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுவோம். முதியோர் இல்லங்களில் இருந்து அவர்கள் பிள்ளைகளினதும் பேரப்பிள்ளைகளினதும் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஏங்கும் ஏக்கம் எமக்குப் புரிவதில்லை. வருங்காலத்தில் எமது பிள்ளைகளும் நாங்கள் செய்தது போன்றே எங்களையும் முதியோர் இல்லத்தில் விடும்போதுதான் எமது பெற்றோர்களின் மனநிலை எப்படி இருந்திருக்கும் என்று எமக்குப் புரிய வரும். ஆனால் அவர்கள் இறந்த பின்பு அவர்களின் சடங்கை லட்சங்கள் செலவழித்து ஊரே பார்க்கும் வண்ணம் பகட்டாக நடத்தி முடிப்போம்.

17. மக்களின் தெய்வ நம்பிக்கையையும் மூட நம்பிக்கையையும் பயன்படுத்தி அவர்களை முட்டாள்களாக்கி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிகாரங்கள் செய்கிறோம் என்று கூறி தேசிக்காய் உருட்டியும் பாக்கு உருட்டியும் அவர்களிடம் இருந்து பெருமளவு பணத்தைச் சுருட்டிக் கொள்வோம். இது எங்களின் தவறல்ல. ஏமாறுபவர்கள் இருக்கும் வரைக்கும் நாங்களின் ஏமாற்றிக் கொண்டுதான் இருப்போம்.

18. நாங்கள் இப்படி எல்லாம் வாழ்ந்தாலும், எப்படியும் வாழலாம் என்று வாழாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று மனிதர்களாக வாழும் மனிதர்களும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அதனால்தான் அவ்வப்போது மழை பெய்கின்றது.

இப்படியெல்லாம் நாங்கள் இருப்பதால் நாங்கள் ஆச்சரியமானவர்கள் அல்லாமல் வேறென்ன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ட இடத்தில் கைது

அதிரன்

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வன்முறைகள், கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கின்றன. சிறுமிகளைக் கடத்திப் பாலியல் துஷ்பிரயோகம் செய்வது, கோஷ்டி மோதல்கள், தெருச் சண்டைகள், வாள் வெட்டுகள் ஆகியவற்றில் ஈடுபடுவது சர்வசாதாரணமாகி விட்டது. அதிலும் குறிப்பாக பொலிஸார் பார்த்திருக்கக்கூடியதாகவே இந்த வன்முறைச் சம்பவங்கள் நடப்பதும் வழமையாகிவிட்டது.

இதனால் மாலை 6 மணிக்குப் பின்னர் வீதிகளில் பொதுமக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வடமராட்சி, வலி.மேற்கு மற்றும் யாழ். நகர் பகுதிகளிலேயே இந்த வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றதாகப் பொலிஸ் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரம் இப்போது நீதிமன்றம் வரை சென்று பூதாகரமாகியுள்ளது. சுன்னாகத்தில் உள்ள ரவுடிகளை அடக்க விசேட அதிரடிப்படையினரைப் பயன்படுத்துமாறு யாழ்.மேல்நீதிமன்றம் வடக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளது. அத்துடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் உள்ள பொறுப்பதிகாரி உட்படச் சில பொலிஸார் திறமையற்றவர்களாக உள்ளமையால் அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்து திறமையான பொலிஸாரை அங்கு நியமித்துச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுமாறு மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் பொலிஸாரினால் காட்டப்பட்ட அசமந்தப்போக்கு– ஒழுங்கீனம் காரணமாகவே இந்தவிடயத்தில் உடனடியாக மேல்நீதிமன்றம் தலையிடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அத்துடன், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருப்பினும் அவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரைத் தீவிரமாகக் கண்காணிக்குமாறும் அவர்கள் மது அருந்திவிட்டுச் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா என்பதை உன்னிப்பாக அவதானிக்குமாறும் அவர் பொலிசாருக்குப் பணித்துள்ளார். மோட்டார் சைக்கிள்களில் சென்று அடாவடி செய்வோர், வீதிகளில் உரிய விதிகளுக்கு அமைய மோட்டார் சைக்கிள் செலுத்தாதோர் ஆகியோரையும் விட்டுவைக்கக் கூடாது என மேல்நீதிமன்ற நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் அதிரடி இத்துடன் நின்றுவிடவில்லை.

அண்மைக்காலமாக குடாநாட்டின் பல இடங்களிலும் மாணவர்கள் கஞ்சா பாவிப்பது, கோஷ்டி மோதல்களில் ஈடுபடுவது, இளைஞர்கள் கஞ்சா கடத்துவது, மதுபோதையில் அட்டகாசம் செய்வது எனக் குற்றச் செயல்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இவையே பிரதானமான காரணம் என நீதிமன்றம் கண்டுகொண்டது.

இதனை அடுத்து குடாநாட்டில் சகல பகுதிகளிலும் சட்டம் ஒழுங்கைத் தீவிரமாக நிலைநாட்டுமாறு மேல்நீதிமன்றம் பொலிஸாருக்குக் கடுமையான கட்டளையைப் பிறப்பித்துள்ளது. சுன்னாகம் ர்வுடிகளை அடக்குவதற்குப் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்குப் புறம்பாக கடந்த வெள்ளிக்கிழமை மேல்நீதிமன்ற நீதிபதியால் மேலும் பல இறுக்கமான கட்டளைகள் பொலிஸாருக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் ஓட்டைகள் இருந்தமை உணரப்பட்டதை அடுத்தும், இளைஞர்களிடையே எல்லை மீறிச் செல்லும் வன்முறைக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடனுமேயே இந்தக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

பாடசாலை மாணவர்கள் பகிரங்க இடங்களில் மது அருந்துவதாக முறைப்பாடுகள் வந்துள்ளன. அவ்வாறான மாணவர்களைச் சாராயப் போத்தல்களுடன் கையும் மெய்யுமாகக் கைது செய்யவேண்டும். மாணவர்கள் பாடசாலை நேரத்தில் சீருடையில் வீதிகளில் காணப்பட்டால் அவர்களை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். மாணவிகளின் பின்னால் மாணவர்கள் கூக்குரலிட்டுச் செல்வதை அனுமதிக்க முடியாது. அவ்வாறு செல்பவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் மாணவர்கள், இளைஞர்கள் சந்திகளிலும் மதகுகளிலும் கூடிநின்று கும்மாளம் அடிக்கும் செயல்களையும் கட்டுப்படுத்தவேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களின் முன்னால் நின்று மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் மாணவிகளிடம் சேஷ்டை செய்யும் இளைஞர்களையும், அங்கு மாணவிகளுக்குப் பாதுகாப்பு என்று கூறிக் கோஷ்டியாக மோதல்களில் ஈடுபடுபவர்களையும் கைது செய்யவேண்டும்.

கூட்டமாகக் கூக்குரலிட்டு மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் பவனி வருவது அவதானிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பாடசாலை மாணவ மாணவிகள், யுவதிகள் பொதுமக்கள் அச்சமடைய நேரிட்டுள்ளது. வீதிகளில் கூட்டமாக மோட்டார் சைக்கிள்களில் வேகமாக ஓடுவதால் வாகனப் போக்குவரத்துக்கும் பொதுமக்களின் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படுகின்றது. இவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்யவேண்டும்.

> இலங்கையில் தொடராக இடம்பெற்றுவரும் கொலை மற்றும் பாலியல் வல்லுறவு அதிகரிப்புச் சம்பவங்களை அவதானிக்கும்போது இலங்கையின் எதிர்காலம் மிகவும் மோச மான நிலைக் குத் தள்ளப்பட்டுக்கொண் டிருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

வேலையில்லாமல் மோட்டார்சைக்கிள்களில் வீதிகளில் வலம்வருவோர் குறித்து அதிக கவனம் செலுத்தவேண்டும். இவர்களைக் கட்டுப்படுத்தினால் யாழ்.நகரில் 90 வீதமான குற்றச் செயல்கள் குறையும் என்று நீதிபதி பொலிஸாருக்குக் கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

அவரது உத்தரவுகள் அனைத்தும் பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்பட்டால் யாழ்ப்பாணம் வெகுவிரைவில் வன்முறையற்ற நகரமாக மாறும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் பொலிஸார் அசமந்தம் காட்டியபோதும் இந்தவிடயத்தில் உடனடியாகத் தலையிட்டு பெரும் கலாசார பாரம்பரியங்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தை வன்முறையற்ற நகராக மாற்றவேண்டும் என்பதில் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. நீதித்துறை வடக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாக உள்ளது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.


இதேவேளை, நாட்டில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த சாவுத் தண்டனையை மீண்டும் கொண்டுவருமாறு கோரிக்கைகள் ஓங்கி ஒலிக்கின்றன. வன்முறைகளின் எல்லை மீறலே இந்தக் கோரிக்கைகளுக்குக் காரணம். சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை வழங்கு வதற்கு நாடாளுமன்றம் ஆதரவு வழங்கவேண்டும் என்று ஐக்கிய சமாதான முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தொடராக இடம்பெற்றுவரும் கொலை மற்றும் பாலியல் வல்லுறவு அதிகரிப்புச் சம்பவங்களை அவதானிக்கும்போது இலங்கையின் எதிர்காலம் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருப்பதை யாராலும் மறுக்க முடியாது. ஜனாதிபதி தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி சாவுத் தண்டனை விதிக்கும் நடைமுறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். அல்லது நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று நடைமுறைக்குக் கொண்டுவர முடியும். ஒரு வாரத்துக்கு முன்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றுகையில், இலங்கையில் சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் தாம் இணக்கமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். சமீபத்தில் ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட மிகவும் கொடூரமான சம்பவம் மட்டுமல்ல பல மோசமான கிரிமினல் குற்றங்களும் நாட்டில் இடம்பெற்றுள்ளன. சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி சில மாதங்களில் இவர்கள் வெளியே வந்து விடுகிறார்கள். நாட்டில் குற்றங்கள் அதிகரிக்க இத்தகைய குறைபாடுகளும் காரணமாக உள்ளன. சட்டத்தில் உள்ள குறைபாடு கள் நீக்கப்படவேண்டும்.

உலகின் பல நாடுகளில் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் கொலைகளுக்கு வழங்கும் கடுமையான தண்டனைகளால் அந்த நாடுகளில் இத்தகைய பெரும் குற்றங்கள் குறைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை நாளுக்குநாள் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. சமூகத்தைப் பாதிக்கக் கூடிய மோசமான குற்றச்செயல்கள் இடம்பெறும்போது சாவுத் தண்டனை குறித்துப் பலரும் பேசுவார்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். ஆனால் சில நாள் களின் பின்னர் எல்லோரும் மறந்துவிடுவது வழமை. புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர் வுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சமயமும் சாவுத் தண்டனைக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ஜனாதிபதி நேரடியாக யாழ்ப்பாணம் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். எனினும் தற்பொழுது இதுவும் மறக்கப்பட்ட விடயமாகிவிட்டது. ஆனால் கொட்டதெனியாவவில் சிறுமி சேயாவுக்கு நிகழ்ந்த கொடுமைக்குப் பின்னர் இந்த விவகாரம் மீண்டும் சூடுபிடித்து வருகின்றது. ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கும் அளவுக்கு இந்த விவகாரம் பூதாகரமாக உருவெடுத்திருப்பதால் இம் முறையாவது சாவுத் தண்டனை விதிக்கும் விடயத்தில் ஏதாவது ஒரு முடிவு எட்டப்படும் என்று நம்பப்படுகின்றது.

நாட்டை உலுக்கும் கொலைகள் நடக்கும்போது சிறைச்சாலைகளில் உள்ள, சாவுத் தண்டனை நிறை வேற்றும் செயலிழந்த தூக்கு மரத்தைப் புதுப்பிப்பதும் தூக்குமரத்தை இயக்க அலுகோசுகளைத் தேடுவதும் பின்னர் அந்த முயற்சியைக் கைவிடுவதும் இனியும் தொடரக்கூடாது. கொலை, கற்பழிப்பு போன்ற பாதகச் செயல்களை அடியோடு ஒழிக்கும் திட்டமொன்றை மிகவும் அவசரமாக அரசு மேற்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றி: தி ஹிந்து தமிழ்

# தமிழ்ப் படத்துக்கு ஒரு சர்வதேச விருது!

உலகப் புகழ் பெற்ற வெனிஸ் சர்வதேசத் திரைப்பட விழாவின் போட்டிப் பிரிவில் கலந்து கொண்டது தமிழகத்தின் திரைப்பட இயக்குநர் வெற்றி மாறன் இயக்கியிருக்கும் விசாரணை திரைப்படம். வெனிஸ் படவிழாவின் போட்டிப் பிரிவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தமிழ்ப் படம் என்ற பெருமையோடு மனித உரிமைக்கான படம் என்ற பிரிவில் விருதையும் பெற்றுத் திரும்பியிருக்கிறது. கதாசிரியர், நடிகர்கள், நிர்வாகத் தயாரிப்பாளர் உள்ளிட்ட தன் படக் குழுவுடன் வெனிஸ் படவிழாவில் கலந்துகொண்டு வெற்றியுடன் திரும்பி வந்திருந்த இயக்குநர் வெற்றி மாறனைச் சந்தித்தோம்...

***சர்வதேசப் பட விழாக்கள் உங்களுக்குப் புதிதல்ல. வெனிஸ் படவிழாவில் விசாரணை திரையிடப்பட்டபோது அதைப் பார்த்த ரசிகர்களின் உணர்வு எப்படியிருந்தது?***

செப்ரெம்பர் 10ஆம் தேதி வெனிஸ் பட விழாவில் விசாரணை படத்தின் 'ப்ரீமியர்' காட்சி திரையிடப்பட்டது. 1,400 பேர் அமரக்கூடிய மிகப் பெரிய திரையரங்கம். அதில் பாதி அரங்கத்துக்கும் மேல் பார்வையாளர்கள் அமர்ந்திருந்தனர். படம் முடிந்ததும் 8 நிமிடத்துக்கு இடைவிடாமல் கைதட்டினார்கள். என்னோடு வந்திருந்த அத்தனை பேருமே கண் கலங்கி அழ ஆரம்பித்து விட்டார்கள். அதன் பிறகு மூன்று நாள்கள் நாங்கள் திரைப்பட விழாவில் இருந் தோம். திரையிடலுக்குப் பிறகு விழாக் குழுவின ரும் சரி, சர்வதேச ஊடகத்தினரும் சரி எங்களுடன் கனிவுடன் பழகிய விதம் எங்களை மேலும் நெகிழச் செய்தது.

***எந்தப் பிரிவின் கீழ் தற்போது விருது கிடைத்திருக்கிறது?***

வெனிஸ் சர்வதேசப் பட விழாவின் விருதுக் குழுவும் சர்வதேச மன்னிப்புச் சபையும் இணைந்து மனித உரிமைக்கான படம் என்ற விருதை அறிவித்திருக்கின்றன. இந்த விருதை மிக முக்கியமானதாக நினைக்கிறோம். ஏனென்றால் மனித உரிமை மீறல்களைக் கேள்வி கேட்கும் படமாக இது இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தப் படத்தைத் தொடங்கினோம். அந்த வகையில் மனித உரிமைகளை உலகெங்கும் வலியுறுத்தவும் பாதுகாக்கவும் ஏற்படுத்தப்பட்ட வலுவான அமைப்பாகக் கருதப்படும் சர்வதேச மன்னிப்புச் சபை இந்தப் படத்தை மனித உரிமைக்கான படமாக அங்கீகரித்திருக்கிறது.

அவர்கள் விருதை அறிவிக்கும்போது, "மனித உரிமையை வலியுறுத்தும் பல படங்கள் இந்த ஆண்டு கலந்துகொண்டன. அவற்றில் மனித உரிமைக்கான மிகச் சிறந்த படமாக விசாரணையைத் தேர்வு செய்திருக்கிறோம். குறிப்பாக, படத்தின் ஒளிப்பதிவும், சொல்லாமல் விடப்பட்டிருக்கும் பல விடயங்களும் அத்துமீறல்களைப் படம்பிடித்துக் காட்டியிருக்கும் விதமும் துணிவுடனும் நேர்மையுடனும் இருக்கின்றன" என்று சுட்டிக்காட்டினார்கள். ஒரு வேலையைச் சரியாகச் செய்யத் தொடங்கியிருக்கிறோம் என்பதற்கான அங்கீகாரமாக இந்த விருது எங்கள் படக் குழுவுக்கு நிறைவைத் தந் திருக்கிறது.

***வெனிஸ் பட விழாவைத் தேர்வுசெய்ய என்ன காரணம்?***

நமது படம் எடுத்து முடிக்கப்பட்டு முழுவதும் தயாராகும்போது எந்தத் திரைப்பட விழா தயாராக இருக்கிறதோ அந்த விழாவுக்கு அனுப்புவதுதான் சரியாக இருக்கும். விசாரணையின் முதல் பிரதி தயாரானதும் வெனிஸ் பட விழா வெகு அருகில் வந்ததால் அவர்களுக்குப் படத்தை அனுப்பி, பார்க்கும்படி வேண்டுகோள் வைத்தோம். அவர்களும் படத்தைப் பார்த்துப் போட்டிப் பிரிவுக்கு ஏற்றுக்கொண்டார்கள். சின்னச் சின்ன நிபந்தனைகளை வைத்தார்கள். அதையெல்லாம் ஒப்புக்கொண்டுதான் போட்டிப் பிரிவில் கலந்துகொண்டோம்.

***ஓர் எளிய ஆட்டோ ஓட்டுநரான மு. சந்திரகுமாரின் வாழ்க்கைக் கதையைப் படமாக்கத் தூண்டியது எது?***

சந்திரகுமாரின் வாழ்க்கைப் பதிவாக வெளியான 'லாக் அப்' புத்தகத்தில் இருந்த உண்மைதான் என்னை அதைப் படமாக்கத் தூண்டியது. நான் வாழும் காலத்தில் வாழும் ஒரு சாமானிய சக மனிதனுக்கு ஏற்பட்ட அவலம் அது. அரசர்களின் வாழ்க்கை மட்டுமே வரலாறாகப் பதிவுசெய்யப்பட்டிருப்பதால் சாமானியர்களின் வாழ்க்கை என்ன என்பது நமக்கு எப்போதுமே தெரியாமல் போய்விடுகிறது. சாமானியர்களின் வரலாற்றைத் தெரிந்துகொள்வது நமது மரபிலேயே இல்லை என்று நண்பர்களில் ஒருவரான தங்கவேலன் அடிக்கடி சொல்வார். அது என்னை உறுத்திக் கொண்டே இருந்தது.

இந்த உண்மைக் கதையை நான் படமாக்கக் காரணம் அதிலிருந்த சக மனிதனின் வலிதானே தவிர, கலை நயம், இலக்கிய நயம் என்று எதற்காகவும் இல்லை. ஒரு சக மனிதர் பகிர்ந்திருக்கும் வலி, நாளை எனக்கான வலியாகவும் மாறிவிடும் சூழல் ஏற்படலாம். எதிர்காலத்தில் மாற்றங்களை உருவாக்குவதாகத்தான் எந்தக் கலையுமே இயங்க வேண்டும் என்று நினைக்கிறேன். எனவேதான், சந்திரகுமாரின் கதையைப் படமாக்கினேன்.

***உங்கள் நண்பர் தனுஷ் இந்தப் படத்துக்குப் பொருத்தமானவராக இல்லையா?***

மிகவும் பொருத்தமாக இருந்திருப்பார். ஆனால், அவரால் பண்ண முடியாமல் போய்விட்டது. நாங்கள் சூதாடி படம் பண்ணிக்கொண்டிருந்தோம். அவர் இந்திப் படம் ஒன்றை உடனடியாக நடித்துக் கொடுக்க வேண்டிய நிலை இருந்தது. அதனால் நான்கு மாதம் அந்தப் படத்துக்கு ஒதுக்கிவிடுகிறேன் என்றார். அப்படியானால் அந்த இடைவெளியில் நான் ஒரு படம் இயக்கிவிடுகிறேன் என்றேன்.

என்ன இப்படி சொல்கிறீர்கள் என்றார். பிறகு, என்ன கதை என்றார். நான்கு சாமானிய இளைஞர்களின் கதை என்று முழுக் கதையும் சொல்லலாம் என்று ஆரம்பித்தேன். உடனே அவர், வேணாம் சார், கதையைச் சொல்லாதீங்க. சொன்னால் நானே அதில் நடிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றும். மறுபடியும் உங்களுக்கு லேட் ஆகும் என்றார். உங்களுக்கு இந்தப் படத்துக்கு எவ்வளவு செலவாகுமோ சொல்லுங்கள், நான் கொடுக்கிறேன் என்று அவரே தயாரித்தார். இன்னும் படத்தை தனுஷ் பார்க்கவில்லை.

***தனுஷ் இல்லாத இடத்தை நீங்கள் தேர்வு செய்த தினேஷும் மற்ற நடிகர்களும் எப்படி நிறைவு செய்திருக்கிறார்கள்?***

இந்தப் படத்துக்காக எனக்குக் கிடைத்த நடிகர்கள் அனைவருமே வரம் என்றுதான் சொல்லுவேன். காரணம் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பெரும் கஷ்டத்தை ஏற்படுத்தக் கூடிய படம். காட்சிப்படுத்தல்களில் உண்மை தேவைப்பட்டதால் நடித்தவர்கள் எத்தனை வலியைச் சுமந்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் படத்தைப் பார்க்கும்போது உணர முடியும்.

***வெனிஸ் பட விழாவுக்கு கதாசிரியர் சந்திரகுமாரையும் அழைத்துச்சென்று அவருக்குக் கௌரவம் செய்திருக்கிறீர்களே?***

அவரது வாழ்க்கை அனுபவம்தான் எனக்குப் படமாக மாறியிருக்கிறது. எனது படத்துக்கான அங்கீகாரம் என்பது அவருடைய வலியிலிருந்து பிறந்திருக்கிறது. படம் முழுவதுமாக முடிந்ததும் அவருக்குப் படத்தைப் போட்டுக் காட்டினேன். என்னைக் கட்டிப்பிடித்து அழுதுவிட்டுச் சொன்னார், அந்தக் கொடுமையான நாள்களில் எங்கள் அழுகையும் கூக்குரலும் நாங்கள் அடைபட்டிருந்த நான்கு சுவர்களைத் தாண்டிக் கேட்காதா என்று ஏங்கிக்கொண்டிருந்தோம். இனி உலகம் முழுக்க எங்கள் குரல் கேட்கப்போகிறது என்றார். அப்படிச் சொன்னவர், அதை நேரே உணரவும் கேட்கவும் வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் அவரை அழைத்துச் சென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணக்கார நாடுகளை நோக்கி அகதிகள் படையெடுப்பு

## ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பெரும் சிக்கல்



ஐரோப்பிய நாடுகளின் ஏழ்மையான நாடுகளைக்கடந்து இடையூறுகளையும் சமாளித்துக் கொண்டு பணக்கார நாடான ஜேர்மனிக்குள் சென்றுவிட அகதிகள் முண்டியடிக்கிறார்கள். கடந்த வாரம் ஆயிரக்கணக்கான குடியேற்றவாசிகள் ஜேர்மனியின் மத்திய எல்லைப் பகுதியைச் சென்றடைந்திருந்தார்கள்.

போர் தீவிரமடைந்துள்ள சிரியாவிலிருந்து புறப்படும் ஆண், பெண், சிறுவர் என்று ஆயிரக்கணக்கான புகலிடம் தேடிவருவோருக்கு ஜேர்மனியே அதிக கவர்ச்சியைத்தரும் நாடாகத் தெரிகின்றது. இருந்தாலும் ஜேர்மனியும் இப்போது சோர்வடைந்து காணப்படுகிறது. அதிகாரிகள் சட்டதிட்டங்களை இறுக்கமாக்குவது பற்றி யோசிக்கிறார்கள். கடந்த வாரங்களில் ஆஸ்திரியா இருபதாயிரம் பேர் வரை நாட்டுக்கு வர அனுமதித்தது. இன்னும் அநேகர் ஜேர்மனியை நோக்கிச் செல்வதற்கு வந்து குவிகிறார்கள். ஆஸ்திரிய அதிகாரிகளும் இப்போது கோபமடைந்திருப்பது தெரிகின்றது. அகதிகள் பத்திரமாக ஏழ்மையான நாடுகளைக் கடந்து வசதியான செல்வந்த நாடுகளை நோக்கியே நகர விரும்புகிறார்கள் என்று ஆஸ்திரிய அதிகாரி ஒருவர் கூறினார். சிரியாவிலிருந்து தப்பி வந்துள்ள தொடர்பாடல் பொறியாளர் ஒருவர் எல்லையைத் தாண்டி வருகையில் சிரித்துக்கொண்டு ஒருமாதிரியாக நாங்கள் வந்து சேர்ந்து விட்டோம் எனக் கூறினார். டமாஸ்கஸிலிருந்து புறப்பட்ட அவர் ஆறு நாள்களை வீதிகளிலேயே கழித்துள்ளார். 28 வயதான அவர் தமது கெயித் என்ற முதல் பெயரை மட்டும் கூறினார். ஊரில் தங்கியிருக்கும் உறவினர்கள் பாதிக்கப்படலாகாது என்பது அவர் எண்ணம்.

**ஐரோப்பிய நாடுகளில் பெரும் சிக்கல்**

ஐரோப்பாவில் மத்திய கிழக்கு (மத்திய தரைக்கடல்) பகுதியிலிருந்தும் அரபு நாடுகள் மற்றும் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் அகதிகள் வந்து குவிந்து கொண்டிருப்பது பெரும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. பஸ்கள், ரயில்கள் மூலம் மட்டுமன்றி கால்நடையாகவும் அகதிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு வந்து குவிந்த வண்ணம் இருக்கிறார்கள்.

கடந்த வாரம் மாத்திரம் ஆஸ்திரியாவுக்குள் 20 ஆயிரம் பேர் அகதிகளாக வந்து சேர்ந்துள்ளார்கள். போர் காரணமாகவும் வறுமை காரணமாகவும் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகள் அலை அலையாக வந்து சாய்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

இதற்கிடையில் அகதிகளை ஏற்றி வந்த இருபடகுகள் துருக்கியின் எல்லைக்கப்பால் குடைசாய்ந்து கவிழ்ந்து போனதில் ஆறு சிறுவர்கள் உட்பட 40 பேர் வரை இறந்துள்ளார்கள் என்று செய்தி வந்துள்ளது. அதே சமயம் துருக்கிய கடற்கரைக்கு அருகில் இன்னுமொரு படகு வேறொரு பாதைப் படகுடன் மோதியதில் 13 குடியேற்றவாசிகள் கொல்லப்பட்டு அவர்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அகதிகள் அலை மோது வதால் சேர்பியாவுடனான எல்லையை மீண்டும் திறந்து விடுவதற்கு புடாபெஸ்ட் திடீர் தீர்மானம் செய்துள்ளது.

கடந்த வாரம் திங்கட்கிழமை ஹங்கேரி அதன் சேர்பியாவுடனான எல்லையை மூடி சீல் வைத்தது. ஏற்கனவே 54,000 அகதிகளை ஏற் றுக் கொண்டுள்ளதுடன் எல்லையை மீறு வது ஒரு குற்றவியல் குற்றமாகக் கருதப்படும் என்றும் அறிவித்திருந்தது.

இன்னுமொரு சம்பவத்தில் கிரேக்க வெஸ்வெரஸ் தீவின் கரைக்கப்பால் காணாமல்போன 26 குடியேற்றவாசிகளை தேடும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 21ஆம் திகதி அவர்களின் படகு ஒரு வர்த்தகக் கப்பலுடன் மோதிக் கவிழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

**கென்டி பெரி பேராயர் இருப்பிடம் அகதிகளுக்கு**

"யேசு நாதரும் ஓர் அகதியாகவே இருந்துள்ளார். இப்பொழுது இங்கு போர் நடைபெறும் நாடுகளில் இருந்து சரணாலயங்களைத் தேடிப் பெரும் அங்கலாய்ப்புடன் மக்கள் வந்து கொண்டிருக்கின்றார்கள்" என்றுகென்டிபெரிபேராயர்(ஆர்ச்பிஷப்) கூறியிருக்கிறார். லண்டனிலுள்ள தமது மாளிகையின் கீழ்மாடியின் ஒரு பகுதியில் ஒன்று அல்லது இரண்டு அகதிக் குடும்பங்களுக்கு இருப்பிடம் வழங்கவும் அவர் சம்மதித்திருக்கின்றார்.

அங்கிலிக்கன் தேவாலயத்தின் தலைவரான பேராயரின் பேச்சாளர் ஜஸ்டின் லெல்பி என்பவர் தகவல் தருகையில், இங்கிலாந்து தேவாலயத்தை முன்னகர்த்திச் செல்லுகின்ற ஒரு கிறிஸ்தவர் என்ற முறையில் இது அவரது மிகவும் உணர்ச்சிகரமானதொரு வெளிப்பாடு என்று கூறினார்.

நான்கு படுக்கை அறைகளைக் கொண்ட விடுதியானது ஒரு குடும்பத்தை அல்லது இரண்டு குடும்பங்களை உள்ளடக்கக் கூடியதாகும். இவற்றுக்கான செலவுகளைத் தமது நிதியில் இருந்து தாமே வழங்குவார் என்றும் பேச்சாளர் மேலும் கூறினார். வரும் ஐந்து ஆண்டு காலத்தில் இருபதாயிரம் அகதிகளைப் பொறுப்பேற்றுக் கொள்வது என்ற பிரதமர் டேவிட் கமரோனின் அறிவிப்பைப் பேராயரின் பேச்சாளர் குறை கூறினார். இது மிகவும் குறைவான ஏற்பாடு என்று கண்டித்தார்.

**சிரியாவில் ஆழமாகக் காலூன்ற அமெரிக்க அதிகாரிகள் யோசனை**

சிரியாவில் அமெரிக்க ஆதரவு குர்திஷ் படைகள் அண்மைக்காலத்தில் ஆச்சரியமூட்டும் வகையிலான வெற்றிகளைக் குவித்துள்ளதை அடுத்து அங்கு மேலும் வலுவான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விடுவது குறித்து ஒபாமா நிர்வாகம் ஆலோசித்து வருவதாக வோஷிங்டன் போஸ்ட் நிருபர்கள் கூறுகிறார்கள். ஈராக்கில் பெரும் நிலப் பரப்புக்களைக் கைப்பற்றி உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து அப்பகுதிகளை மீட்டெடுக்க பெரும் எடுப்பில் இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இப்போது சிரியா குறித்து ஒபாமா அரசு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

சிரியாவில் குர்திஷ் படைகள் அடைந்துள்ள எதிர்பாராத விதமான வெற்றிகளை அடுத்து அதனை சாதகமாக எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றி வெள்ளை மாளிகையில் மிக உயர்மட்ட அதிகாரிகள் ஆலோசித்து இருக்கிறார்கள். இது குறித்து விரைவில் அவர்கள் மீண்டும் கூடி ஆலோசிக்க இருக்கிறார்கள். சிரியாவில் போரிடும் கிளர்ச்சிக் குழுக்களில் மேலும் பல குழுக்களுக்கு ஆயுதங்களும் அவைக்குரிய குண்டுகளையும் வழங்குவதற்கு அவர்கள் விரும்புவதாகத் தெரிகின்றது. அந்தக் குழுக்கள் மீதான தகுதிகாண் தரங்களில் ஓரளவு தளர்வுகளை ஏற்படுத்திக் கொண்டு உள்நாட்டுப் போரில் அமெரிக்காவின் ஈடுபாட்டை செயற்றிறத்துடன் மேலும் ஆழமாக்கிக் கொள்வது பற்றி அவர்கள் ஆலோசிப்பதாகத் தெரிகின்றது. சிரியப் போராளிகளை சிரியாவுக்கு வெளியில் துருக்கி மற்றும் இடங்களில் பயிற்றுவிப்பதில் இருந்து வரும் தட்டுப்பாடுகள் இதன்மூலம் தளர்த்தப்படும் என்று கருதப்படுகின்றது.

இதன் முக்கிய நோக்கம் என்னவென்றால் ஐ.எஸ். தீவிரவாதிகளின் அதிகாரத் தலமாக விளங்கும் ரக்கா நகரை தனிமைப்படுத்துவதும் அங்கிருந்த போராளிகளும், வளங்களும் சிரியாவுக்கும் ஈராக்கில் அவர்கள் பிடியிலுள்ள முக்கிய நகரமான மோசுலுக்குமிடையில் பரிமாற்றங்கள் தடுக்கப்படுவதுமாகும்.

அண்மைய கோடை காலத்தில் துருக்கியுடனான சிரிய எல்லைப் பகுதியில் தல் அப்யாத் மற்றும் பகுதிகளை இஸ்லாமியத் தீவிரவாதிகளிடம் இருந்து மீட்பதில் குர்திஷ் படையணிகளின் தலைமையில் செயற்பட்ட சிரியப் படைகளின் வெற்றியை முன்மாதிரியாக வைத்து செயற்படுவது பற்றியும் அமெரிக்க அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

சிரியாவின் வடக்கில் போராடி வரும் ஆயிரக்கணக்கான சிரிய அரபு கூட்டணிப் படையினருக்கு ஆயுதங்கள் மற்றும் தளபாட உபகரணங்களையும் வழங்கி உதவுவது பற்றி வெள்ளை மாளிகை அதிகாரிகள் முடிவெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


இது அங்கீகரிக்கப்படுமானால் சிரியாவில் போராடும் சில போராளிக் குழுக்களுக்கு அது வழங்கியுள்ள பயிற்சிகளுக்கு மேலதிகமாக முதன் முறையாக சிரியாவில் போராளிகளுக்கு அமெரிக்கா முதன்முதல் நேரடியாக ஆயுதம் வழங்கி தலையீடு செய்திருப்பதாகக் கருதப்படும். சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு குற்றவியல் புலனாய்வு நிறுவனம் (சி.ஐ.ஏ) பயிற்சி அளித்து களத்தில் இறக்கிவிடும் செயற்பாட்டை தனியாக மேற்கொண்டு வருகின்றது.

இப்போதைக்கு சிரியாவில் விமானத் தாக்குதல்கள், அமெரிக்காவால் பயிற்றப்பட்ட போராளிகளை ஆதரிப்பது மற்றும் ஏனைய போராடும் குழுக்களுக்கு மறைமுக ஆதரவளிப்பது ஆகிய செயல்களை மட்டுமே அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது என்கிறார்கள் அதிகாரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது காதல்?



> நம் வாழ்விலும் எத்தனை எத்தனை ஏற்றத் தாழ்வுகளை வேண்டுமானாலும் சந்திக்க நேரிடலாம். எண்ணற்ற சண்டை சச்சரவுகள் வரலாம். ஆனால், மீண்டும், மீண்டும் நம்மில் அன்பு சுரப்பதுடன், அது நதி நீரைப் போலவே தூய்மையானதாக இருக்குமென்றால் அந்த வாழ்க்கை இனிமையானதாக இருக்கும்.

இ.பாரதி

சங்க கால இலக்கியங்களில் தொடங்கி சமகால திரைப் படங்கள் வரை அனைத்திலும் பேசப்பட்டது, இனியும் பேசப்பட இருப்பது, பருவ வயதில் பலருக்கு பிடித்தமானது எல் லாமே ஒன்றுதான். அதுதான் காதல். காதல் என்றால் என்ன? எல்லோருக்கும் காதல் வருமா? அதை உணர்வது எப்படி? எல்லாவற்றுக்கும் மேலாக தெய்வீகக் காதல் என்றால் என்ன? இதுபோன்ற எண்ணிலடங்கா கேள்விகள் நம் முன்னே எழுகின்றன.

சாதி – மத வேறுபாடுகளையும், ஏழை – பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகளையும் பார்க்காமல் தோன்றுவதுதான் காதல் என்றும், காதலுக்கு கண்ணில்லை என்றும் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் மறுப்பதற்கில்லை. அதேவேளையில், பருவ வயதில் எதிர் பாலினத்தவர் மீது ஈர்ப்பு ஏற்படுவதும், நம் மனதுக்குள் குறுகுறுப்பான எண்ணங்கள் தோன்றுவதும் இயல்பானதே. அது கண்டிப்பாக காதல் அல்ல.

என்றைக்கு நம் வாழ்க்கையை நாமே தீர்மானிக்கும் அளவுக்கு பக்குவம் அடைகிறோமோ அன்றைக்கு நம் வாழ்க்கைத் துணையை தேர்வு செய்வதுதான் சரியான முடிவாக இருக்க முடியும். அது என்ன பக்குவம்? அது எந்த வயதில் வரும்? என்ற கேள்விகள் எழலாம்.

ஒரு குடும்பத்தை வழிநடத்திச் செல்ல தந்தையும், தாயும் செய்யும் காரியங்களை என்றைக்கு நாம் சுயமாக செய்யத் தொடங்குகிறோமோ அன்றைக்கு நாம் பக்குவம் அடைந்திருப்பதை உணர முடியும். அது எந்த வயதினருக்கும், எப்போது வேண்டுமானாலும் வரலாம்.

அப்படியொரு தருணத்தில் நம் மனதுக்குள் காதல் தோன்றினால் நிச்சயம் ஒரு தெளிவான முடிவை எடுப்பவராக இருப்போம். நம் மனதைக் கவர்ந்த எதிர் பாலினத்தவர் நமக்கும், நமது குடும்ப வாழ்க்கைச் சூழலுக்கும் சரியான தேர்வாக அமைவார்களா என்பதை மனம் சிந்திக்கும்.

ஆம் எனில், நாயகன் அல்லது நாயகியை திருமணம் செய்வதில் சாதி, மத, பொருளாதார ரீதியாகத் தடை ஏற்படுமா? அப்படி இல்லாவிட்டாலும் யாரேனும் ஒருவரது குடும்பத்தில் தீவிர எதிர்ப்பு இருக்குமா? என்பதை நம் மனம் கணக்கீடு செய்துவிடும்.

அதன் பின்னர், பிரச்சினைகள் எதுவும் வேண்டாம் என தொடக்கத்திலேயே ஒதுங்குவது அல்லது தடைகளைத் தாண்டி திருமணம் செய்வது என்ற தெளிவான முடிவை எடுப்பவராக நாம் இருப்போம். இரண்டில் எது நடப்பினும் நன்மையே.

ஆனால், இதுபோன்ற தெளிவான சிந்தனைகள் எதுவுமே இல்லாமல் நடை, உடை, பாவனை என அழகியலை மட்டுமே பார்த்து உருவாகும் குறுகுறுப்பான எண்ணம் வெறும் பாலின ஈர்ப்பாக மட்டுமே அமையும்.

ஆச்சரியம் என்னவெனில் இந்தக் காதலில்(?) ஒருவர் மீது ஒருவர் மிக இறுக்கமான அன்பு வைத்திருப்பதாக நம் மனம் நினைத்துக் கொள்ளும். ஆனால், கடற்கரை, பூங்கா, திரையரங்கு எனச் சுற்றித் திரிந்து பாலின ஈர்ப்புக்கான தேவைகள் முடிந்தவுடன் இந்தக் காதல் காணாமல் போய்விடும்.

சில சமயங்களில், இதில் யாரேனும் ஒருவரின் காதல் உண்மையாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்குப் பிடித்தமான ஆணோ அல்லது பெண்ணோ தவறான தேர்வாக இருப்பார்கள்.

நான் ஓர் ஏழையைக் காதலிக்கிறேன் என்று கூறுவது ஒரு பெண்ணின் பெருந்தன்மையாக இருக்கலாம். ஆனால், வாழ்வில் எவ்வித இலக்குமின்றி ஊதாரியாய் சுற்றித் திரிபவரைக் காதலிக்கிறேன் என்று கூறினால் அதை சரியென ஏற்க முடியுமா? இதேபோல், எளிமையான குடும்பத்தைச் சேர்ந்த ஓர் ஆண், குடும்பத்தை வழி நடத்தும் திறன் ஏதும் இல்லாமல் ஆடம்பர வாழ்வை விரும்பும் பெண்ணைக் காதலிக்கிறேன் என்று கூறுவதும் ஏற்புடையதாக இருக்காது.

இது எல்லாவற்றையும் மீறி இப்படியொரு வாழ்க்கைத் துணையின் (ஆண் / பெண்) கரம் பற்றும்போது அந்தத் திருமணம் கசப்பானதாக மாறுகிறது. ஏனெனில், காதலிக்கும் போது கண்ணே, மணியே, முத்தே என கொஞ்சியதைப் போல எதார்த்த வாழ்வு அமைவதில்லை.

எல்லாம் சரிதான், பக்குவம் அடைந்ததோ அல்லது துடிப்பு மிக்கதோ எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். காதல் என்பது தானாக இணைபவர்களுக்கு மட்டுமே சொந்தம் எனக் கூறுவது சரிதானா? நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் இணைபவர்கள் காதலிக்கும் வாய்ப்பை பெறாதவர்களா என்ன? கண்டிப்பாக அப்படியொன்றும் இல்லை.

காதல் திருமணம், நிச்சயிக்கப்பட்ட திருமணம் எதுவாக இருப்பினும் ஓர் ஆணுடன், பெண் கைகோர்த்து குடும்ப வாழ்வில் அடியெடுத்து வைக்கும்போதுதான் உண்மைக் காதலுக்கான கதவுகள் திறக்கின்றன.

அப்படிப் பார்த்தால் திருமணத்துக்கு முன்பு அல்லது அதற்குப் பிறகு என ஏதேனும் ஒரு சூழலில் அனைவருக்குமே காதலிக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால், இதில் எத்தனை பேர் தெய்வீகக் காதலுடன் வாழுகின்றனர்? முதலில், தெய்வீகக் காதல் என்றால் என்ன? இந்தக் கேள்விக்கு விடை காண்பது அவசியம்.

ஆனால், கடலில் சங்கமிப்பது இயற்கையின் நியதிதானே தவிர நதிகளின் நோக்கம் அதுவல்ல. எத்தனை முறை வறட்சி ஏற்பட்டாலும் மீண்டும், மீண்டும் நீரை சுரக்கச் செய்து காடு, பள்ளம், மலை முகடுகளைத் தாண்டிச் சென்று மண்ணை வளமாக்குவதுதான் நதிகளின் நோக்கம்.

இதைப் போலவே, நம் வாழ்விலும் எத்தனை எத்தனை ஏற்றத் தாழ்வுகளை வேண்டுமானாலும் சந்திக்க நேரிடலாம். எண்ணற்ற சண்டை சச்சரவுகள் வரலாம். ஆனால், மீண்டும், மீண்டும் நம்மில் அன்பு சுரப்பதுடன், அது நதி நீரைப் போலவே தூய்மையானதாக இருக்குமென்றால் அந்த வாழ்க்கை இனிமையானதாக இருக்கும்.

நம் சதைகள் இளமையுடன் இருக்கும்போது கைகோர்த்து நடப்பதல்ல காதல். அறுபது, எழுபது வயதுகளைத் தாண்டி முதுமையை எட்டிய நிலையில், கைகோர்த்து நடந்து செல்ல நம் மனம் விரும்புமென்றால் அதுதான் தெய்வீகக் காதல்.

வாழ்வின் அனைத்துத் தருணத்திலும் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி வாழ்ந்தால் மட்டுமே எந்தவொரு தம்பதியும் தெய்வீகக் காதலை அடைவது சாத்தியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணென வாழும் உலகு என்று வள்ளுவர் சொன்னது பெண் உலகையே என்பது பெறப்படும். உலகுக்கு கண்ணாக வாழ்பவள் பெண் தானே! பெண் அறிவுள்ளவளாக இருந்தால் தான் அவள் குழந்தை அறிவுள்ளவனாக, தெளிந்த சிந்தனை ஆளனாக வளருவான் என்ற சிந்தனைத் தெளிவு நமது முன்னோரிடம் இருந்தது. அதனாலேயே பெண் கல்வியைச் சிறப்பித்துப் போற்றினர்.

# பெண்மை என்னும் புதுவெள்ளம்

அன்பும் அரவணைப்பும் பெண்மையின் இருகண்கள் எனக் கூறலாம். அசையும் உயிர் அனைத்துக்கும் இது பொதுவானதாகும். உதாரணத்துக்கு விலங்குகளையோ பறவைகளையோ எடுத்துப் பார்த்தாலும் அவற்றின் குட்டிகளையும் குஞ்சுகளையும் உணவூட்டிப் பாதுகாத்து, உணவு தேடுவது எப்படி என்பதையும் கற்றுக் கொடுப்பது பெண்ணினமே. உலகின் பெரும்பான்மையான உயிர்களுக்கு இது பொருந்தும். இந்த உண்மையை யாரும் மறுப்பதற்கு இல்லை. மானிட வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாலும் தாய் என்ற உறவே முதலில் அறியப்பட்டதாக இருக்கிறது. ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டுப்பாடு இல்லாது, காட்டில் வாழ்ந்த ஆதிமனித இனத்தின் ஆண் பெண் உறவில் பிறந்த குழந்தை தாயிடமே இருந்தது. தன்னைப் பெற்ற தாய் யார் என்று அறிந்திருந்த குழந்தைக்கு, தனது தந்தை எவர் என்பது தெரியாதிருந்தது. குடும்பக் கட்டமைப்பு தோன்றும் வரையும் அந்த நிலை நீடித்திருந்திருக்கிறது. பண்டைய மானிடரின் அறிவு சார்ந்த வளர்ச்சியும் உலக உயிர் நேயமும் பெண்களிலேயே தங்கியிருந்திருக்கிறது. பெண் தன்னை ஒறுத்து பொதுநலம் பேணியமையே அதற்குக் காரணம் எனலாம். ஆதலால் ஆதிமனித வாழ்க்கையின் தொடக்கத்தில் அதாவது காட்டுவாழ் சமூகமாக இருந்த மானிடரை நாட்டுவாழ் சமூகமாக மாற்றியதன் பெரும்பங்கு பெண்களையே சாரும். மனிதன் காடுவாழ் சமூகமாக இருந்த காலத்தில் வாழ்ந்திருந்த பெண்களின் அரிய கண்டுபிடிப்பே வேளாண்மை என்பது உலகவரலாற்று அறிஞர் கூறும் கருத்தாகும். ஓரிடத்தில் நிலைத்து வாழாது காடோடியாய்த் திரிந்த பண்டைய மனிதனை ஓரிடத்தில் நிலைத்து வாழவைத்தது பெண்களின் கண்டுபிடிப்பாகிய வேளாண்மையே ஆகும். பண்டைக்காலத்தில் உலகெங்கும் பெண்ணைத் தெய்வமாக வணங்கியதற்கு அதுவும் ஒரு காரணம். கொடிய விலங்குகளான யானை, புலி, பன்றி போன்றவை வந்து திரிந்து பயிர்களையும் அவர்களின் உயிர்களையும் அழிப்பதைக் கண்டு பெண்கள் வாளும் வேலும் வில்லும் ஏந்திப் போரிட்டனர்.

இவ்வாறு மானிட சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பொங்கிப் புது வெள்ளமாய் பெண்கள் முக்கிய பங்கு ஆற்றியமையால் அவர்கள் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டு பெண் தெய்வங்களாகப் போற்றப்பட்டார்கள். தொல்காப்பியரும் கொற்றவைநிலை என பெண்தெய்வ வழிபாட்டைக் கூறியிருப்பது தமிழினமும் அதற்கு விதிவிலக்கு அல்ல என்பதற்கு வலுச் சேர்க்கிறது. அதனாற் தான் என்னவோ தமிழரின் மனித நேயத்தை வளர்க்க அரிய கருத்துக்களைக் கொட்டித்தந்த திருவள்ளுவரும் பெண்ணிற் பெருந்தக்க யாவுள எனத் தன்னையே கேள்விகேட்டு வியந்து கடைசியில் பெண்ணிற் பெருந்தக்கது இல் என்று சொன்னார் போலும். அன்றைய மேற்குலகப் பெண்கள் ஆண் ஆதிக்கர்களிடம் இருந்து சமத்துவமும் சுதந்திரமும் கேட்டுப் போர்க்கொடி தூக்கினர். ஆனால் இந்த நிகழ்வுக்கு 2000 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சங்ககாலத் தமிழ்ப் பெண்கள் அரசர்களுக்கே புத்திமதி கூறுபவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஔவையார், குறமகள் இளவெயினி போன்ற பல சங்ககாலப் பெண்புலவர்களின் பெயர்களைச் சொல்லலாம். பாரதியார் பாடியது போல வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த நிலையோ ஏட்டையும் பெண்கள் தொடாத நிலையோ சங்ககாலத் தமிழரிடம் இருந்திருக்கவில்லை எனலாம். அப்படி இருந்திருந்தால் சங்க இலக்கியத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்புலவர்கள் உலகுக்கு நீதி கூறி தம் கருத்துக்களை கவிதையில் வடித்திருப்பார்களா? அதுமட்டுமல்ல தமிழரிடம் இருந்த மருத்துவம், சோதிடம், தத்துவம், கணிதம் போன்றவற்றைக் கற்பித்த ஏட்டுச்சுவடிகள் யாவும் பெரும்பாலும் சுடர்கொடி கேளாய்! வேயன்ன தோளாய்! என பெண்களை விழித்தே கற்பிக்கின்றன. சங்க இலக்கிய நூல்களான பதினெண் கணக்கு நூல்களுள் நாலடியார், ஏலாதி போன்ற நூல்களும் பெண்களுக்கு கல்விபுகட்டி இருப்பதைக் காணலாம்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென வாழும் உலகு என்று வள்ளுவர் சொன்னது பெண் உலகையே என்பது பெறப்படும். உலகுக்கு கண்ணாக வாழ்பவள் பெண் தானே! பெண் அறிவுள்ளவளாக இருந்தால் தான் அவள் குழந்தை அறிவுள்ளவனாக, தெளிந்த சிந்தனை ஆளனாக வளருவான் என்ற சிந்தனைத் தெளிவு நமது முன்னோரிடம் இருந்தது. அதனாலேயே பெண் கல்வியைச் சிறப்பித்துப் போற்றினர். அன்றைய பெண்கள் கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் சிறந்து விளங்கினர்.

இப்படி எல்லாம் உலகைப் பற்றிய சிந்தனையோடு பொங்கிப் புதுவெள்ளமாய்ப் பாய்ந்த தமிழ்ப் பெண்களின் அறிவு இன்று ஊர் வம்பு பேசி, மூடநம்பிக்கைகளில் மூழ்கி, தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் முடங்குதல் தகுமா? பண்டைய தமிழ்ப் பெண்கள் போல இன்றைய பெண்கள் பொங்கும் புது வெள்ளமாய் மனித நேயத்துடன் நமது தமிழ் இனத்தை வாழ்விக்கப் புறப்பட்டால் என்ன? இந்த உலகு வாழும்வரை பெண்மை என்னும் புதுவெள்ளம் பாய்ந்து உலகை வாழ்விக்கும்.


# பெண்மை என்னும் பெரும் கருணை...

நேற்றுவரை... பெண் என்னும்
அடையாளங்களோடு பிறந்தால்...
கள்ளிப்பால் தந்து...
குப்பைத் தொட்டியின் குழந்தையாக்கி...
பிழைத்தால்... அடுக்களைக்குள்...
எரியும் நெருப்புடன் கருக வைத்து...
களைத்த கணங்களில்...
கடவுளோடும்...காற்றோடும் பேசித் திரிய
வைத்து...
எப்பொழுதும் பருத்திருக்கும் கருப்பையுடன்
வாழ்வின் சுமை சுமந்து திரிந்து...
மூன்று முடிச்சுக்குள்...மூச்சுத் திணறி...
கசங்கிய காகிதமாய்..
கேட்பாரற்றுக் கிழிந்து போய்க் கிடக்க... நீ
துடைத்தெறிந்த குப்பையல்ல நான் இன்று நீ
பெருந்தன்மையாய் வீசி எறியும்...
இட ஒதுக்கீட்டுப் பிச்சைப் பாத்திரத்தின்
நசுங்கிய பாகமல்ல இன்று நான்.
இந்தக் கணத்தில்...
என்னை வாசிக்கும் கவிதை நான்...
எனக்கேயான அர்த்தங்களுடனும்...
எனக்கேயான விருப்பங்களுடனும் கூட.
நேற்றுவரை... நீ என்னை
அடைத்திருந்த மண் புழுதியில்...
புழுவாய் நெளிந்து... நத்தை என நகர்ந்து...
கூடு என உன்னையும் சுமையாய் சுமந்த
நாள்களை உடைத்து....
என் வெப்பத்தில்
இன்று என்னை அடைகாத்து...
நானே வெளியேறி இருக்கிறேன்...
ஒரு சிறகு முளைத்த பறவை என..
இந்தக் கணங்களில்.
யுகம்...யுகங்களாய்...
கறை படிந்து... கடவுளின் பெயரால்...
நீ நிகழ்த்திய பெண் வர்க்கப் படுகொலையின்...
இரத்தம் வழிந்த அழுக்கு நதியில்..
நீ நீந்தித் திரிய...
திசையற்றுத் திரிந்த துரும்பென...
அலைந்த நாள்களைக் கடந்து வந்திருக்கிறேன்...
உன் அகந்தையில்...
நீ ஒரு போதும் அறிய இயலாத எதிர் நீச்சலோடு.
காலம் காலமாய்...
கண் குனிந்து வரைந்த சிக்குண்ட புள்ளிகள்
நிறைந்த கோலங்களிளிருந்து
என் கண்களை அகற்றி...
கொடித் துணியோடு.. உலர்ந்த காலங்கள் அகற்றி..
பாண்டி ஆட்டங்களையும்...பல்லாங்குழிகளையும்
மூடி விட்டு...
எப்பொழுதும்...என் விதியைக் கிறுக்கலாய் எழுதும்
பனிரண்டு கட்டங்களைக் கலைத்துவிட்டு...
இந்தக் கணத்தின் பெண்ணாய்...
வாழ்ந்து...எழுதிக் கொண்டிருக்கிறேன் இந்தக்
கவிதையை. இன்று வரை...
பெண் எனப் பிரித்து பேதையாக்கி
நீ என் மேல் குத்தி அடுக்கிய
முள் சிலுவைகளைக் கழற்றி வீசி
எறிந்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்...இந்தக்
கணத்தில் என்றாலும்... வழி தவறிய ஆடாய்த்
திரியும் உன் பாதை திருத்தி...
நல் மேய்ப்பனாய் இருப்பேன் நான்...
இன்றும்...என்றும்...
பெண் என்னும்
பெண்மையின் பெரும் கருணையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடலின் ஆச்சரியம்



- ★ மனித உடலில் காணப்படும் தசைகளின் எண்ணிக்கை 639.
- ★ மனித மூளையில் மொத்தம் 1200 கோடி நரம்பு செல்கள் உள்ளன.
- ★ மனிதன் இறந்த மூன்று நிமிடம் கழித்து மூளையின் குருதி ஓட்டம் நின்று விடுகின்றது.
- ★ மூளையில் உள்ள நியுரான்க்ளின் எண்ணிக்கை 1400.
- ★ மனிதனின் முதுகுத்தண்டின் எலும்புகள் 33.
- ★ மனித மூளையின் நிறை 1.4 கிலோ.
- ★ மனித உடலில் உள்ள குருதியின் சராசரி அளவு 5 லீற்றர்.
- ★ உடலின் மெல்லிய சருமம் கண் இமை.
- ★ மனித உடலில் இள்ள குரோம்சோம்களின் எண்ணிக்கை 23 சோடி.
- ★ ஒரு மனித உடலில் கிடைக்கும் கொழுப்பில் இருந்து 10 சோப்புக்கட்டிகள் தயாரிக்கலாம்.
- ★ மனிதனின் கண் நிமிடத்துக்கு 25 முறை மூடித்திறக்கிறது.
- ★ நாம் ஒருவார்த்தை பேசும் போது நம் முகத்தில் 72 தசைகள் அசைகின்றன. மனித நாக்கின் நீளம் 10 செ. மீ.
- ★ ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாக குடிக்கும் தண்ணீரின் அளவு 60,000 லீற்றர்.
- ★ மனித உடலில் கெட்டியான பகுதி பற்களிலுள்ள இனாமல்.
- ★ நமது கால்ப் பாதங்களில் 2,50,000 வியர்வை சுரப்பிகள் உள்ளன.
- ★ நாம் வாழ்நாளில் சராசரியாக சாப்பிடும் உணவின் மொத்த அளவு 30,000 கிலோ.
- ★ நமது உடல் நிறையில் 9 சதவிகிதம் குருதியால் ஆனது. இந்த குருதியில் 91 சதவிகிதம் நீர்தான்.
- ★ நமது உடல் முழுவதும் குருதி ஒரு முறை சுற்ற 64 வினாடிகள் ஆகின்றன.
- ★ நாம் குள்ளமாக இருப்பதற்கு காரணம் பிட்யூட்டரி சுரப்பி குறைவாக இருப்பது.
- ★ நமது தசைகள் உண்டாக்கும் வெப்பம் ஒரு லீற்றர் நீரை ஒரு மணி நேரம் கொதிக்க வைக்கப் போதுமானது.
- ★ நாம் வெளியேற்றும் சிறுநீரில் நீரின் அளவு 96 சதவிகிதமும், யூரியா 2 சதவிகிதமும், கழிவுப் பொருள்கள் 2 சதவிகிதமும் உள்ளன.
- ★ நாம் பிறக்கும்போது சுமார் 300 எலும்புகளுடன் பிறந்து முழுவளர்ச்சியடைந்த பின் 206 எலும்புகளே இருக்கும். நாளடைவில் ஒன்றோடொன்று இணைவதால் சுமார் 94 எலும்புகள் குறைகின்றன.
- ★ நமக்கு நாள்தோறும் 16 கிலோ காற்று சுவாசிக்கத் தேவைப்படுகிறது.
- ★ உடலின் மிகப் பெரிய பகுதியாக விளங்குவது தோல் பகுதியாகும்.
- ★ வளர்ந்த ஒரு மனித உடலில் சுமார் 2 சதுர மீற்றர் பரப்புள்ள தோல் பகுதி, உடலை நீரிலிருந்தும் வெப்பத்திலிருந்தும் பாதுகாக்கும் போர்வையாக விளங்குகிறது.
- ★ நமது உடலில் உள்ள ஈரல் 500 வகையான வேலைகளை செய்கிறது. மிகவும் சிக்கல் நிறைந்த, பெருமளவு செயல்களைச் செய்யும் உறுப்பாக மனித உடலில் விளங்குவது ஈரல் ஆகும். ஈரல் தசைகளில் உள்ள செல்கள் பாதிக்கப்பட்டு அவை சிதைவடைவதாலும் தாறுமாறான வளர்ச்சியாலும் ஈரல் புற்றுநோய் ஏற்படுகிறது.
- ★ புகை பிடிப்பதானது உடல்நலத்துக்குப் பெரிதும் தீங்குவிளைவிக்கும் செயலாகும். நுரை ஈரல் புற்று நோய், இதய நோய் உள்ளிட்ட பல நோய்களுக்கு இது ஊற்று மூலமாகும்.
- ★ தற்போது உலகில் சுமார் 110 கோடி பேர் புகைபிடிக்கின்றனர். இதன் விளைவாக, ஆண்டுதோறும், 35 லட்சம் பேர் சாவடைகின்றனர்.
- ★ மனித உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி கல்லீரல்தான். மனித நுரையீரலில் உள்ள நுண் காற்றுப் பைகளின் எண்ணிக்கை 300 மில்லியன்.
- ★ ஒவ்வொரு நுண் காற்றுப்பையும் 0.2 மில்லி மீற்றர் விட்ட அளவு கொண்டது.
- ★ மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு. ஒவ்வொரு மனிதனும் வாழ்நாளில் நடக்கும் கணக்கைப் பார்த்தால் அவன் பூமியை இரண்டு முறை சுற்றி வந்ததுக்குச் சமம்.
- ★ நாம் தும்மும் போது நமது மூக்கின் வழியாக செல்லும் காற்றின் வேகம் சுமார் 150 கிலோமீற்றர்கள். அதுபோல தும்மும் போது கண்டிப்பாக கண்களை மூடிவிடுவோம்.
- ★ 900 பென்சில்களை தயாரிக்கும் அளவுக்குமனித உடலில் கார்பன் சத்து உள்ளது.
- ★ கண் தானத்தில் கண்களில் விழித்திரை நோயால் பார்வையிழந்த இரு நபர்களுக்கு பொருத்தப்படுகின்றன.
- ★ மனித உடலில் மிகவும் பலமானது விரல் நகங்களே. அதில் கெராடின் சத்து உள்ளது, இது காண்டாமிருகத்தின் கொம்புகளில் காணப்படுவது, சாவுக்குப் பின்னரும் கூட நகத்துக்கு ஒன்றுமே ஆகாது.



ந.யோகப்பிரியா
தரம் 5 சி,
யா/சென்.பெனடிற் றோ.க.த.க. வித்தி.



செ.தீர்கஜன்,
தரம் 8 சி,
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தி.



எஸ்.ஹரிஸ்ராம்,
உடுவில் மகளிர் கல்லூரி.



சிவகுகன் பிருத்வி
வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்



# சொன்னதை சொல்லும் கிளிகள்

ஒருநாள், ஒரு காட்டுக்கு வேடன் ஒருவன் வந்தான். காட்டின் உட்பகுதிக்குச் சென்ற அவன், ஒரு மரத்தில் ஏராளமான பச்சைக் கிளிகள் இருந்ததைக் கண்டான். அநேக பச்சைக்கிளிகளை மரத்தில் பார்த்ததும் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

பச்சைக்கிளிகளைப் பிடிக்கும் நோக்கத்துடன் மரத்தினடியில் வலை விரித்து, அதில் தானியங்களைத் தூவினான். பின்னர் அங்கிருந்து ஒரு மரத்தின் பின்னால் சென்று மறைந்து நின்றுகொண்டான். சிறிது நேரத்தில், அவன் எதிர்பார்த்தபடியே பச்சைக்கிளிகள் பறந்து வந்து வலையில் சிக்கிக்கொண்டன.

வேடன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து, வலையில் சிக்கிய பறவைகளைப் பிடிக்கச் சென்றான். அப்போது அந்த வழியாக முனிவர் ஒருவர் வந்தார். வலையில் சிக்கியிருந்த கிளிகளைப் பார்த்ததும், முனிவரின் மனதில் கருணை உண்டாயிற்று. கிளிகளைப் பிடிக்கும் நிலையில் இருந்த வேடனைப் பார்த்து அவர், வேடனே ! இந்தக் கிளிகளைக் கொல்லாதே என்று கூறினார்.

முனிவரின் வேண்டுகோளுக்கு வேடன் உடன்படவில்லை. அவன் முனிவரிடம், சுவாமி ! எனக்கு இந்தக் கிளிகள்தான் இன்றைய உணவு. எனவே, இவைகளைக் கொல்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. கிளிகளுக்குப் பதிலாக வேறு ஏதாவது மாற்று உணவு நீங்கள் எனக்குத் தருவதாக இருந்தால், இந்தக் கிளிகளை நான் கொல்லாமல் விட்டு விடுகிறேன். என்று கூறினான்.

முனிவர், என்னிடம் சிறிது உணவு இருக்கிறது. அதை நான் உனக்குத் தருகிறேன். இந்தக் கிளிகளை விட்டுவிடு. என்று கேட்டுக் கொண்டார். அதற்கு வேடனும் சம்மதித்தான். தான் கூறியபடியே முனிவர் தன்னிடமிருந்த உணவை வேடனுக்குக் கொடுத்தார். வேடன், முனிவர் தந்த உணவைப் பெற்றுக் கொண்டான். பிறகு அவன் வலையில் சிக்கியிருந்த கிளிகளை விடுவித்தான். அப்போது முனிவர், கிளிகளைப் பார்த்து, கிளிகளே ! இவன் வேடன். வேடன் வருவான். வலை விரிப்பான். அதில் தானியங்களைத் தூவுவான். நீங்கள் மரத்திலிருந்து கீழே பறந்து வந்து, வேடன் விரிக்கும் வலையில் சிக்கிக்கொள்ளாதீர்கள் என்று கூறினார். இவ்விதம் கூறிய பின்பு முனிவர் தன்வழியே சென்றார்.

ஒருவாரம் கடந்தது. வேடன் மீண்டும் கிளிகளைப் பிடிக்கும் நோக்கத்துடன் வலையுடன் அதே மரத்தின் அருகில் வந்தான். வேடனைக் கிளிகள் பார்த்தன. அவனைப் பார்த்ததும் எல்லாக் கிளிகளும் ஒன்று சேர்ந்து, கிளிகளே ! இவன் வேடன், வேடன் வருவான், வலை விரிப்பான், அதில் தானியங்களைத் தூவு வான், நீங்கள் மரத்திலிருந்து கீழே பறந்து வந்து, வேடன் விரித்த வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள் என்று கூறின. கிளிகள் கூறியதைக் கேட்ட வேடன், இந்தக் கிளிகள் முன்பு நடந்ததை இன்னும் மறக்கவில்லை ! இங்கு நான் வலை விரித்தாலும், இந்தக் கிளிகள் என் வலையில் வந்து சிக்காது.

'எனவே இங்கு வலை விரிப்பதால் பயனில்லை ! என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். ஆதலால் அங்கு வலை விரிக்காமல், வேறு இடம் தேடிச் சென்றான். ஒரு மாதம் கடந்தது. மீண்டும் கிளிகள் இருந்த அதே மரத்தின் அருகில் வேடன் வலையுடன் வந்தான். இப்போதும் வேடனை கிளிகள் பார்த்தன. உடனே அவை வேடனை நோக்கி, கிளிகளே ! இவன் வேடன். வேடன் வருவான். வலை விரிப்பான். அதில் தானியங்களைத் தூவுவான். நீங்கள் மரத்திலிருந்து பறந்து வந்து, வலையில் சிக்கிக்கொள்ளாதீர்கள், என்று ஒரே குர லில் கூறின. வேடன், முன்பு நடந்ததை இந் தக் கிளிகள் இன்னும் நினைவில் வைத்திருக்கின்றனவே ! இவைகள் என்வலையில் வந்து விழாது. எனவே இங்கு நான் வந்து பயனில்லை என்று நினைத்து, வலை விரிப்பதற்கு வேறு இடம் தேடிச் சென்றான். அதன்பிறகு சுமார் ஆறு மாதங்கள் கழிந்தன.

வேடன் மீண்டும் கிளிகள் இருந்த அதே மரத்தினடியில் வலை விரிக்க வந்தான். அவனைப் பார்த்ததோ இல்லையோ, உடனே எல்லாக் கிளிகளும் ஒன்று சேர்ந்து, கிளிகளே ! இவன் வேடன். வேடன் வருவான். வலை விரிப்பான். அதில் தானியங்களைத் தூவுவான். நீங்கள் மரத்திலிருந்து கீழே பறந்து வந்து, வேடன் விரித்த வலையில் சிக்கிக்கொள்ளாதீர்கள் ! என்று ஒரே குரலில் கூறின.

வேடன், இது என்ன ஆச்சரியம் ! இன்னும் இந்தக் கிளிகள் என்னை நினைவில் வைத்திருக்கின்றன ! இவை என் வலையில் விழாது ! என்று நினைத்தான். என்றாலும் அவன், நான் இன்றைய தினம் எங்கெங்கோ அலைந்தும், எனக்கு வேட்டையாடுவதற்கு எந்த மிருகமோ பறவையோ கிடைக்கவில்லை. இங்கு இந்தக் கிளிகளும் என்னை மறக்கவில்லை. நானோ இப்போது காட்டில் சுற்றி அலைந்து மிகவும் களைத்துப் போயிருக்கிறேன். சரி ! இந்தக் கிளிகள் என் வலையில் சிக்காமல் போனாலும் பரவாயில்லை. வேறு ஏதேனும் பறவைகள் இந்த வலையில் வந்து சிக்கலாம் என்று நினைத்து, வலையை விரித்து அதில் தானியங்களைத் தூவினான்.

இப்படி வேடன் செய்ததை அங்கிருந்த கிளிகளெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தன. வேடன் தானியம் தூவி முடிந்ததும் கிளிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து, கிளிகளே ! இவன் வேடன். வேடன் வருவான். வலை விரிப்பான். அதில் தானியங்களைத் தூவுவான். நீங்கள் மரத்திலிருந்து கீழே பறந்து வந்து, வேடன் விரித்த வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள் என்று கூறிய படியே அத்தனை கிளிகளும் பறந்து வந்து வேடனின் வலையில் சிக்கிக்கொண்டன !

அப்போதுதான் வேடனுக்கு, இவை சொன்னதைச் சொல்லும் பச்சைக் கிளிகள். முனிவர் சொன்னதைச் அப்படியே இவை சொல்கின்றன. ஆனால் அந்தச் சொற்களுக்கு என்ன அர்த்தம் என்று இந்தக் கிளிகள் புரிந்துகொள்ளவில்லை. அதனால்தான் அனைத்து கிளிகளும் இப்போது என் வலையில் வந்து விழுந்திருக்கின்றன என்பது புரிந்தது. பிறகு அவன் வலையில் சிக்கிய கிளிகள் அனைத்தையும் பிடித்து சென்றான். அன்பு நண்பர்களே ..

இந்தக் கதையில் சொல்லப்பட்ட கிளிகளைப் போன்றுதான் மக்களில் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல விடயங்களை நிறைய கேட்கவும், படிக்கவும் செய்கிறார்கள்.

ஆனால்,அவர்கள் அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றுவதில்லை. நாம் நல்ல விடயங்கள் பலவற்றை அதிகமாகக் கேட்கவும் படிக்கவும் வேண்டும்.

அவற்றை. கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்று திருவள்ளுவர் கூறியபடி. நாம் நம் வாழ்க்கையில் பின் பற்றவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**27.09.2015 முதல் 03.10.2015 வரை**

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

சுக்கிரன், குரு, சூரியன், ராகு அதிக நன்மை அளிப்பர். உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். வருமானம் புதிய வழியில் கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை அளிக்கும். வம்பு, வழக்கில் வெற்றி உண்டாகும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சியும், இலாபமும் கூடும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடிப்பர். பெண்கள் மனம்போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்களுக்கு ஆசிரியரின் நல்ல வழிகாட்டுவர். கிருஷ்ணரை வழிபடுவதால், பொன், பொருள் சேரும்.

### இடபம்

சுக்கிரன், புதன், கேதுவினால் நன்மை உண்டாகும். நண்பரால் உதவி கிடைக்கும். சமூகத்தில் உயர் அந்தஸ்து பெறுவீர்கள். பணிகள் அனைத்தும் குறித்த காலத்தில் நிறைவேறும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். பிள்ளைகள், உங்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். ஆடம்பர விடயத்தில் ஆர்வம் உண்டாகும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் படிப்பில் உற்சாகமுடன் ஈடுபடுவர். வைரவக் கடவுளை வழிபட்டால் துன்பம் விலகும்.

### மிதுனம்

சனி, சுக்கிரனால் நன்மை கிடைக்கும். சூழ்நிலை அறிந்து நிதானமாகச் செயல்படுவது நல்லது. வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு உண்டாகும். பிள்ளைகள் ஆடம்பர விடயத்தில் நாட்டம் கொள்வர். எதிரியின் கெடுசெயல் கூட நன்மை தருவதாக மாறும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில், புதிய உத்தி மூலம் இலாபம் உண்டாகும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பு தவிர; பிற விடயங்களில் ஈடுபட வேண்டாம். காமதேனு வழிபாடு, செல்வ வளம் தரும்.

### கடகம்

சுக்கிரன், குரு, சூரியன், ராகுவால் நன்மை உண்டாகும். பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். சமூகத்தில், பெரிய மனிதரின் உதவி கிடைக்கும். சகோதரர்களின் வளர்ச்சிக்குத் தேவையான பணிபுரிவீர்கள். வாகன பயணம் எளிதாக அமையும். புத்திரரின் தவறுகளை இதமான அணுகுமுறையால் சரிசெய்வீர்கள். கடனில் பெரும்பகுதி அடைபடும். மனைவியின் அன்பை பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான புதிய மாற்றத்தில் ஈடுபடுவீர்கள்; இலாபம் கூடும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்கு காண்பர். மாணவர்களுக்கு கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். துர்க்கை வழிபாட்டால், தொழில் வளர்ச்சி உண்டாகும்.

### சிங்கம்

சுக்கிரன், சந்திரன் நற்பலன் அளிப்பர். பணிகளை நிறைவேற்ற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். வீண் விவாதங்களில் ஈடுபடுவது கூடாது. கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. புத்திரர்கள் பிடிவாதக் குணத்துடன் நடந்து கொள்வர். சீரான ஓய்வு உடல்நலனைப் பாதுகாக்கும். மனைவி, உங்களின் செயற்பாடுகளில் சமபங்கு ஏற்றுக் கொள்வார். தொழில், வியாபாரத்தில் இடையூறு ஏற்பட்டாலும், இலாபம் குறையாது. பணியாளர்களுக்கு பணிச்சுமை உண்டாகலாம். பெண்கள் பணப்பொறுப்பு ஏற்பது கூடாது. மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை தவிர்க்கவும். விநாயகர் வழிபாடு, நன்மை அளிக்கும்.

### கன்னி

சுக்கிரன், செவ்வாய், சனியால் நன்மை உண்டாகும். தாமதமான பணிகளை விடாமுயற்சியால் நிறைவேற்றுவீர்கள். உறவினரின் செயல்களைக் குறை சொல்ல வேண்டாம். சகோதரர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். மனைவியின் நற்செயல் குடும்பத்துக்குப் பெருமை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வளர்ச்சி உண்டாகும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடத்துக்குச் செல்ல வேண்டாம். ஆஞ்சநேயர் வழிபாடு வெற்றியளிக்கும்.

### துலாம்

கேது, குரு, புதன் நற்பலன் வழங்குவர். மனதில் தைரியம் மேலோங்கும். இடம், சூழ்நிலை உணர்ந்து பேசுவீர்கள். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவு ஏற்படும். வெளியூர் பயணம் இனிதாக அமையும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகைப் பயன் கிடைக்கும். பெண்கள் மற்றவர் விடயத்தில் தலையிட வேண்டாம். மாணவர்கள், ஆசிரியர்களின் அறிவுரையை ஏற்பது நல்லது. அம்மன் வழிபாடு, சகல நன்மையும் தரும்.

### விருச்சிகம்

சுக்கிரன், புதன் சூரியன், ராகு அனுகூல அமர்வில் உள்ளனர். நற்செயல்களில் ஈடுபட்டு பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில், ஒற்றுமை சிறக்கும். புத்திரரின் செயற்பாடு பெருமையளிக்கும். பகைவரால் இருந்த தொல்லை மறையும். மனைவியின் அன்பைக் கண்டு மகிழ்வீர்கள். விருந்து விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில், விற்பனை சிறந்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர், குறித்த காலத்தில் பணிகளை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள், உறவினர் இல்ல சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர். லட்சுமி வழிபாட்டால், செல்வ வளம் சேரும்.

### தனுசு

சுக்கிரன், புதன் சூரியனால் நன்மை கிடைக்கும். தாமதமான பணிகளும் புதிய முயற்சியால் நிறைவேறும். நண்பரால் உதவி உண்டு. வீடு, வாகனத்தில் பராமரிப்புப் செலவு உண்டாகும். புத்திரர்கள் வளர்ச்சி பெற, தேவையான ஆலோசனை வழங்குவீர்கள். எதிரியால் ஏற்படும் மறைமுக இடையூறு விலகும். இல்லறத்துணை இணக்கமாக நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் அறிவுத்திறனில் மேம்படுவர். சிவனை வழிபடுவதால், வாழ்வு சிறக்கும்.

### மகரம்

கேது, புதன், சனீஸ்வரர் நற்பலன் தருவர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனதில் ஆன்மிகச் சிந்தனை அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் தேவை. புத்திரர்களின் செயற்பாடு அதிருப்திக்கு ஆளாவீர்கள். கடனில் பெரும்பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவியின் உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி இலாபம் காண்பீர்கள். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் அறிமுக இல்லாதவரிடம் பழக வேண்டாம். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது. தட்சிணாமூர்த்தி வழிபாடு, நன்மை தரும்.

### கும்பம்

செவ்வாய், குரு நன்மை தருவர். மனதில் தெளிவு ஏற்படும். பணி நிறைவேற்ற புதிய உத்திகளில் ஈடுபடுவீர்கள். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் பிடிவாதக் குணத்துடன் நடந்துகொள்வர். உடல் நலனில் அக்கறை தேவை. மனைவியின் செயல் குறையை விமர்ச்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் வாடிக்கையாளர்களைக் கவர்வீர்கள். பணியாளர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு, சம்பள உயர்வு கிடைக்கும். பெண்கள் உறவினர்களுடன் சுற்றுலா செல்வர். மாணவர்கள் நண்பர்களுடன் நிதானமாகப் பழகுவது நல்லது. சனீஸ்வரர் வழிபாடு, செய்வது நல்லது.

### மீனம்

சுக்கிரன், புதனால் நன்மை உண்டாகும். இடம், சூழல் அறிந்து பேசுவது நல்லது. மகளின் ஜாதக யோக பலத்தால் நன்மை காண்பீர்கள். வாகன பயணத்தால் இனிமை உண்டாகும். புத்திரர் மதிநுட்பத்துடன் செயற்படுவர். வழக்கு விவகாரத்தில் சுமுகத் தீர்வு உண்டாகும். மனைவியின் செயற்பாடு வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி சிறந்து ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள், தாய்வீட்டு உதவி கேட்டுப் பெறுவர். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து கல்வி வளர்ச்சி காண்பர். சூரிய வழிபாடு, தொழில் வளர்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முக அழகுக்கு குங்குமப்பூ

சிவப்பழகைப் பெறத் துடிக்கும் பெண்மணிகள் முக அழகு கிரீம்களை தேட வேண்டியதில்லை. குங்குமப்பூ ஒன்றே போதும். இந்தக் குங்குமப்பூவை எப்படி பயன்படுத்துவது என்று பார்க்கலாம். குங்குமப்பூவை உரசி ஒரு மேசைக்கரண்டி தண்ணீர் விட்டு சிறிது நேரம் ஊற விடவும். குங்குமப் பூவின் நிறம் முழுக்க நீரில் ஊறியதும் சிறிது வெண்ணெய் கலந்து நன்றாக குழைக்கவும். இந்தக் கலவையை தினமும் முகத்திலும்,உதடுகளிலும் பூசிவர, உதடுகள் செவ்வாழை நிறம் பெறும். உதடுகளின் வறட்சி இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும். முகத்தில் உள்ள கரும்புள்ளிகளும் மறைந்து விடும்.

இந்தக் கலவையை நகங்கள் மீது பூசி வர நகங்களும் இயல்பான நிறம் பெறும். நக சுத்தி வந்து அழுகிப் போன நகங்கள், உடைந்து போன நகங்கள் போன்ற வற்றை குங்குமப்பூ வெண்ணெய்க் கலவையானது சீர்படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும். முகத்துக்கு வசீகரத்தை தருவது கவர்ச்சி மிகு கண்கள் தான். அந்தக் கண்களுக்கு பளிச் அழகைத் தருவது அடர்த்தியான இமைகள். பட்டாம்பூச்சி போல படபடக்கும் இமைகள் அமைய குங்குமப்பூ உதவுகிறது. எந்தப் பூவிலும் இல்லாத புதுமை குங்குமப்பூவில் உண்டு. உடல் நிறத்தை சிவப்பாக மாற்றக் கூடிய அற்புதக் குணம் இதில் நிறைந்து காணப்படுகிறது. குங்குமப்பூவைப் பொடியாக்கி வைத்துக் கொள்ளவும். அதில் தினமும் ஒரு சிட்டிகை அளவு எடுத்துக் கொள்ளவும். அதில் சில சொட்டுக்கள் பால் விட்டு கலந்து குழைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையை முகத்தில் பூசி வர முகத்தில் படர்ந்துள்ள கருமை நிறம் குறைவதை கண் கூடாகக் காணலாம். சில பெண்கள் நல்ல நிறமாக இருப்பார்கள். ஆனால் உதடுகள் மட்டும் கருமை படர்ந்து அசிங்கமாக இருக்கும். இப்படிப்பட்ட பெண்கள் குங்குமப்பூவை பயன்படுத்தினால் அழகு தேவதையாக மாறி விடுவார்கள்.

# பிரட் போண்டா

## தேவையான பொருள்கள்:

பாண்: 1 இறாத்தல்
பெரிய வெங்காயம்: பொடியாக நறுக்கியது சிறிதளவு
பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி:சிறிதளவு
உப்பு: தேவையான அளவு
எண்ணெய்: தேவையான அளவு



## செய்முறை:

உருளைக்கிழங்கை வேக வைத்து தோலுரித்து உதிர்த்துக் கொள்ளவும். அத்துடன் உப்பு சேர்க்கவும்.

அடுப்பில் தாச்சியை வைத்து கடுகு உளுந்தம் பருப்பு தாளிதம் செய்து, அத்துடன் இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி போட்டு வதக்கவும். பின்னர் உதிர்த்த உருளைக்கிழங்கைப் போட்டு வதக்கி ஆறவிடவும். சூடு ஆறியதும் எலுமிச்சை அளவு உருட்டிக் கொள்ளவும். பாண் துண்டை எடுத்து தண்ணீரில் நனைத்து உடனே பிழிந்துவிட்டு அதில் மசால் உருண்டையை வைத்து உருட்டிக் கொள்ளவும். உருட்டிய உருண்டைகளை நான்கைந்தாக போட்டு எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

தேங்காய் சட்னியுடன் பரிமாறசுவையாக இருக்கும்.

# முகப் பூச்சுகள்



**முட்டைப் பூச்சு**

தேவையான பொருள்கள் :
முட்டை – ஒன்று
தேன் –சிறிதளவு

**செய்முறை :**

முட்டை வெள்ளை கருவை மட்டும் நன்கு நுரை வரும் வரை அடித்துத் தேனைக் கலக்கவும். முகத்தில் கண்ணைத் தவிர மற்ற இடங்களில் தடவவும். 10 நிமிடம் கழித்து குளிர் நீரால் கழுவவும். இவ்வாறாக வாரம் இருமுறை செய்து வந்தால் தோல் சுருக்கம் இல்லாமல் இளமையுடன் இருக்கும்.

**பால்பவுடர் பூச்சு**

தேவையான பொருள்கள் :
பால் பவுடர்
இளம் சூடான நீர்
பால்

**செய்முறை :**

மூன்றையும் நன்கு குழைய கலக்கவும். முகம், கழுத்தில் தடவவும். சில நிமிடங்களுக்குப் பிறகு முகம் கழுவி மீண்டும் தடவவும். 10 நிமிடத்துக் குப் பின்னர் முதலில் இளம் சூடான நீரிலும், பின் குளிர் நீரிலும் கழுவவும்.முகம் மிருதுவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

**நான் என்ன செய்ய? முப்பது வயதாகியும் எனக்குத் திருமணம் செய்து வைக்கும் எண்ணமேயில்லாது பெற்றோர் தங்கள் பாட்டிலேயே இருந்தனர். ஒன்றும் முடியாதவிடத்து மொட்டைக் கடிதமும் போட்டுப் பார்த்தேன். மரமண்டைகள் அசையவேயில்லை.**



# பால்ப் பாயாசம்

மிருசுவில்
தமிழ்தாசன்

சிவகாமி ரீச்சரின் அந்தப் பெரிய நாய் என்னைப் பார்த்துப் பயங்கரமாகக் குரைக்கின்றது. அதை நாய் என்று சொல்ல முடியாது. ஆரம்பத்தில் அது ஒரு கழுதைக் குட்டியாக அல்லது வேறு ஏதாவது விலங்கினமாக இருக்கலாம் என்றே நினைத்தேன். அது குரைக்கின்றபடியால் அப்படியொன்றுமில்லை. நாய்தான்! நாயேதான்! கட்டுக்கொடியில் நின்றபடியால் அவ்வளவுக்குப் பயப்பட வேண்டியதில்லை. எனவே மீண்டும் துணிவை வரவழைத்துக் குரலை இன்னும் சற்று உயர்த்தி சிவகாமி ரீச்சரைக் கூப்பிடுகின்றேன். அப்பாடா ! ரீச்சர் வந்துவிட்டார். சிவகாமி ரீச்சர் வந்துவிட்டார்.

"செவிட்டுச் சென்மம்" மனதுக்குள் திட்டியபடி எனது கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

"ரீச்சர்! உங்கடை சமையற் கலை எண்ட புத்தகத்தை ஒருக்கால் தாறியளே!" இதுதான் என்னுடைய கோரிக்கை. இந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு போய் இண்டைக்கு வீட்டிலே பால்ப்பாயாசம் செய்து மனைவி பிள்ளைகளுடன் ரசித்து உருசித்துப் பருகவேண்டும்.

அன்றைக்கொரு நாள் எனது மனைவி, பிள்ளைகள் கலந்து கொண்ட திருமண விருந்திலே ருசி கண்ட எனது இரண்டாவது மகள் செண்பகம் தினமும் பாயாசம் பாயாசம் என்று வீட்டிலே ரகளை பண்ணுகிறாள். அவளுடைய தொல்லை தாங்க முடியாது இன்று பால்ப் பாயாசம் தயாரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். ஞாயிற்றுக்கிழமையானபடியால் பாடசாலை விடுமுறை. எனக்கும் வேலையில்லாத ஓய்வுநாள். பெருத்த வசதியாகிவிடத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

"அது என்னட்டை இல்லைமோனை. மக எடுத்துக் கொண்டு போயிற்றா. அங்கை போய் வாங்கலாம்."

ரீச்சர் மெதுவாகச் சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைகின்றார். என்ன செய்ய! இன்றைக்கு எப்படியும் பால்ப்பாயாசம் செய்தே ஆகவேண்டும். இல்லையென்றால் மனைவியும், பிள்ளைகளும் உயிரை எடுத்து விடுவார்கள்.

மீண்டும் கோகிலா ரீச்சர் வீட்டுப் படலையில் தவம் கிடக்கின்றேன். சிவகாமி ரீச்சரின் மகள்தான் கோகிலா ரீச்சர். தாயைப்போல இவளுக்குச் செவிட்டுத் தன்மையில்லை. கூப்பிட்ட முதற்குரலுக்கே ஓடி வந்துவிட்டாள். எனக்கோ சந்தோஷம் ! மகா சந்தோஷம்!

விடயத்தைக் கூறினேன். சிநேகிதமாகச் சிரித்தாள். மனம் குளிர்ந்தது.

"இஞ்சை சின்னத்துரை! புத்தகம் தாறன். அதுக்கு முந்தி எனக்கொரு உதவி செய்வீரோ?"

என்னை கேள்விக்குறியுடன் நோக்கினாள். நானும் அதே கேள்விக்குறியுடன் அவளை நோக்கினேன்.

"உதிலை இரத்தினசிங்கம் கடையிலை போய் ஒரு மூடை தவிடு கட்டிக் கொண்டு வந்து தாரும்!"

தவிடு வாங்குவதற்கு நான் வருவேன் எனக் காத்திருந்தவள் போலக் கூச்சமின்றி வாய்விட்டுக் கேட்டவள் மீது எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தாலும் எதுவும் செய்ய முடியாத நிலை. எப்படியும் பால்ப்பாயாசம் செய்ய வேண்டுமே!

உச்சி வெயில் மண்டையைப் பிளக்க எனது பழைய சைக்கிளிலே தவிட்டு மூடையைக் கட்டிக்கொண்டு சைக்கிளை வேகமாக ஓட்டிவர, தவிட்டு மூடையின் வாய்க்கட்டுக் கிழிந்து தவிடு முழுவதும் தெருவீதியெங்கும் காற்றாகப் பறக்க வெற்றுச் சாக்கு மட்டும் மிஞ்சியது. இதைப் போய் கோகிலாவிடம் சொல்ல முடியுமா! இந்த இலட்சணத்தில் அவளிடம் போய் புத்தகம் வாங்கலாமா! மீண்டும் அதே கடைக்குத் திரும்பி என்னுடைய காசில் தவிட்டு மூடையொன்றை வாங்கிக் கோகிலாவிடம் கொடுத்து அந்தக் கண்டறியாத புத்தகத்தை கையகப்படுத்துவதற்குள் எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது.

எப்படியும் பால்ப்பாயாசம் செய்ய வேண்டுமே! என்ன செய்வது? எல்லாவற்றையும் சகிக்கத்தான் வேண்டியிருந்தது. என்னுடைய மனைவி குஞ்சுக்கிளி கோபத்தின் உறைவிடம். முரட்டு ஆத்மாக்களுக்கெல்லாம் பேரரசி. நினைத்ததைச் சாதிக்க விழையும் பிடிவாதக்காரி. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரமாம். எனக்கும் இவள் ஒரு வரம் தானே!

நான் என்ன செய்ய? முப்பது வயதாகியும் எனக்குத் திருமணம் செய்து வைக்கும் எண்ணமேயில்லாது பெற்றோர் தங்கள் பாட்டிலேயே இருந்தனர். ஒன்றும் முடியாதவிடத்து மொட்டைக் கடிதமும் போட்டுப் பார்த்தேன். மரமண்டைகள் அசையவேயில்லை.

எனது ரூட்டை மாற்றினேன். யாரையாவது காதலிப் போமென்று. யாருமே என்னைக் கண்டுகொள்வதாயில்லை. என்னுடைய முக அழகைக் கண்ணாடியில் பார்த்து மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டு தெருத் தெருவாக காதல் பிச்சை தேடி அலையோ அலையென்று நாயாகப் பேயாக அலைந்த வேளையில்தான் இந்தக் குஞ்சுக்கிளியைக் காணும் அரிய பாக்கியம் கிடைத்தது.

எதேச்சையாக நான் சைக்கிளில் வரும்போது, என்பார்வையில் பட்டாள். அவளும் பார்த்தாள். நானும் பார்த்தேன். அவளும் சிரித்தாள். நானும் சிரித்தேன். அடுத்த நாளும் அதேநேரம். அதே பாதை! நான் திட்டமிட்டுப் போனேன். அவளும் வந்தாள். அவள் திட்டமிட்டு வந்தாளோ பட்டம் விட்டு வந்தாளோ நானறியேன்! அதேபார்வை. அதே சிரிப்பு. இப்படியே தினமும் சிரித்துச் சிரித்துக் கொண்டிருந்தால் எப்போது காதலிப்பது! சிலவேளை அவள் ஊமையாகவுமிருக்கலாம். ஒருமுறை பேசிப் பார்த்திடவேண்டும். மனதில் உறுதியை வரவழைத்தேன்.

"நீ சொல்லுறதைப் பார்க்க மச்சான்! உவள் அந்தச் சண்டியன் சண்முகத்தின்ரை பெட்டை போல கிடக்கு."

நண்பன் பகீரதன் ஆரூடம் சொன்னான். நான் எதையுமே மனதில் மறைத்து வைத்திருப்பதில்லை. இதனால் நன்மையும் உண்டாகலாம். தீமையும் உண்டாகலாம். நடப்பது நடக்கட்டும்.

எல்லாம் சரி சண்டியன் சண்முகம் என்றவுடன் எனது உற்சாகம் சடும் பிரேக்கில் தரித்து நின்றது. இருக்கும்வரை இருந்துவிட்டுப் போயும் போயும் சண்டியன் குடும்பத்திலை சம்பந்தம் வைத்து....

"போடா! அப்படியொண்டுமில்லை. அந்த மனிசன் ஓர் அப்பாவி. எப்போதுமே சாரத்தை இழுத்துச் சண்டி கட்டிக்கொண்டு திரியுறபடியால் சண்டியன் எண்டு பட்டப் பெயர். நீ பயப்புடாதை!"

மூன்றாம் நாளும் சந்தித்தாள் குஞ்சுக்கிளி. இன்றைக்கு எப்படியும் பேசிப் பார்க்க வேண்டும். என்ன பேசுவது? காதலிப்பது பற்றி எந்த அனுபவமுமில்லாத ஒரு முன்பள்ளி மாணவன்தானே நான்.

"[illegible] நீங்களே!"

"நாளைக்கு!" என்று சிரித்துவிட்டு என்னை ஓரக் கண்ணால் பார்த்தபடி மறைந்துவிட்டாள். ரெலிபோனில் பயமில்லாது கதைக்கலாம். பலதும் பத்தும் கதைக்கலாம் அல்லவா!

ஒரு சிறிய கசங்கிய காகிதத்துண்டில் குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நான் எதிர்பார்த்த நம்பரைத் தந்து விட்டாள். மனம் இராட்டினமாடியது.

இதென்னடா இது! இதிலை ஒன்பது நம்பர் தானேயிருக்கும். அதோடை கடைசியிலை வி (rr) எண்டு இங்கீலிசு எழுத்தும் கிடக்குது. எடி சண்டாளி! ரெலிபோன் நம்பர் எண்டு அடையாள அட்டை நம்பரைத் தந்திட்டாள் பாவி!

எப்படியோ எமது காதல் கப்பலும் ஓடியோடித் திருமணமென்னும் கரையில் நங்கூரமிட்டுக் கொண்டது.

நீண்ட நாள்களுக்குக் குழந்தைப் பாக்கியமில்லை. ஒருவரையொருவர் மலடி மலடன் என மாறிமாறித் திட்டிக்கொண்டோம். சன்னதி முருகனை வேண்டி நின்றோம். தாயை உரித்துப் படைத்து ஒரு திருமகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய. சண்முகன் என்னும் சன்னதியானின் பெயரையே சூட்டி விட்டோம். தாயைப் போல பிள்ளை. பழமொழியை மெய்யாக்கி விட்ட அருந்தவப் பிள்ளை.

குஞ்சுக்கிளியும் கறுப்பாகவேயிருந்தாள். கறுப்பாயிருந்தால் காரியமில்லை. இருக்கட்டும். அகலமான நீளமான உடல்வாகையும் அதற்கேற்ற எடையையும் கொண்டிருந்தாள். மகனும் அவளின் அச்சில் வார்த்த அசல் வார்ப்பான்.

ஆஸ்பத்திரியில் அவனின் நிறையை அறிந்து கொள்ள அவனை நிறுக்கக் கூடியளவுக்கு அங்கே தராசுகளிருக்கவில்லை. இறுதியில் பக்கத்து விறகு காலையில் விறகு நிறுக்கும் தராசில் வைத்து நிறுக்கலாமென்று நான் ஆலோசனை கூறினேன். என்ன நினைத்தார்களோ! ஏதோ குத்து மதிப்பாக நிறையைப் பதிவு செய்து கொண்டனர்.

அடுத்தவள் அவனுக்குப் போட்டியாக வந்திறங்கினாள். இராவணனுக்கு ஒரு தங்கை சூர்ப்பனகை. இங்கே சண்முகனுக்கு செண்பகம் என்று ஒரு தங்கை! கடைக்குட்டியும் ஒருபெண் குழந்தைதான். யார் கண்பட்டதோ! இவள் மட்டும் ஒரு நோஞ்சான். வயது ஒன்றரைக்கு மேலாகியும் தாயிடமிருந்த தாராளமான தாய்ப்பாலை லீற்றர் கணக்கில் குடிப்பாள். எதைக் கொடுத்தாலும் வஞ்சனையில்லாது குஞ்சு வாயில் வைத்து நொறுக்கித் தள்ளி விடுவாள். இருந்தும் வளர்ச்சியில்லை. பிறந்த வீட்டில் இவளுக்கு மேலாகத் தேரை பாய்ந்திருக்குமோ என்று பக்கத்து வீட்டுப் பத்மாக்கா அடிக்கடி சொல்லிக் கொள்வாள். உண்மையாயிருக்குமோ!

இப்போது பாயாசத்திற்கு வேண்டிய பொருள்களை எவை எவையென்று புத்தகத்தைக் கவனமாகப் படித்தாள் குஞ்சுக்கிளி.

"சவ்வரிசி, ரின்பால், சீனி, முந்திரிப்பருப்பு....."

நீண்டு கொண்டே போனது.

"கடவுளே ஒரு பெருஞ் செலவுதான் வரப் போகுது. மனிசர் படுறபாட்டுக்கை எடுக்காத எடுப்பு எடுத்துப் போட்டு இப்ப நிண்டு மாய்ஞ் சடிக்க வேண்டியிருக்கு."

மனத்திற்குள் சற்றுச் சலித்துக் கொண்டாலும் கைலாயரின் கடையை நோக்கிப் போகிறேன். மனைவி சொல்லி விட்ட அத்தனை பொருள்களும் தயார்.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சி....

# பால்ப் யாசம்

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இனிப்பானையை அடுப்பில் வைத்து சவ்வரிசியைப் போட்டுக் கொதிக்க வைத்து சமையற் கலைப் புத்தகத்தில் உள்ளபடி பாயாசத்தைக் காய்ச்ச வேண்டியதுதான். எமது வேலைத்திட்டம் மிக மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அடுப்பில் நெருப்புச் சற்றுக் குறைவது போலக் காணப்பட, ஓடோடிப்போய் ஒரு கொக்காரையை எடுத்து வந்து அடுப்பிற்குள் வைத்தாள் இரண்டாவது மகள் செண்பகம். மூத்தவன் சண்முகம் மிகுந்த உற்சாகத்துடன் அடுப்பை ஊதிப் புகையைக் குடித்தான். மொத்தத்தில் ஏவாமலே பணிசெய்தார்கள். அத்தனை உற்சாகம்!

எத்தனை நாள்களாக ஆசைப்பட்டு ஆவற்பட்டு இன்று தானிந்தப் பால்ப்பாயாச ஆசை தீரப் போகின்றது. பிள்ளைகளுக்கு மட்டுமல்ல. மனைவிக்கும், ஏன் எனக்கும்கூட அதை நினைக்க வாயில் நீரூறுகின்றது. எல்லோருமே அடுப்பைச் சுற்றிக் காத்திருந்தனர். எப்போது அடுப்பை விட்டுப் பாயாசம் இறங்கும்! எப்போது அதைக் குடிப்பது என்பதைவிட யாருக்கும் வேறெந்த விதமான சிந்தனைகளும் கிடையாது.

"இஞ்சாருங்கோப்பா! ஒரு சாமான் வாங்க மறந்து போனியள்!"

மனைவி குஞ்சுக்கிளி அலாதிப்பட்டாள்.

போச்சடா! இதென்ன புதுப்பிரச்சினை! தலையைப் பிய்த்துக் கொண்டேன்.

"ஏலக்காய் வாங்க மறந்து போனியள். புத்தகத்திலை ஏலக்காயெண்டும் கிடக்குதெல்லே! அதுவும் போட்டால் தானே வாசமாயிருக்கும்." சொல்லியபடி என்னைப் பார்த்தாள்.

"எடி நாசமறுத்தவளே! உதை நேரத்துக்குச் சொல்லியிருக்கலாம்தானே!" மனைவியைத் திட்டினேன் மனதிற்குள்தான்.

"தம்பி சண்முகம்! என்ரை பிள்ளையெல்லே! ஓடிப்போய் உங்கை தவமண்ணையின்ரை கடையிலை இரண்டு பக்கெற் ஏலக்காய் வாங்கிக் கொண்டு வாடி! என்ரை குஞ்சுக் குட்டியெல்லே!"

பத்து வயது மூத்த மகனை ஏதோ எல்லாம் சொல்லி கெஞ்ச வேண்டியிருந்தது. கெஞ்சினேன்.

"நான் மாட்டேன். நீங்கள் என்னைக் கடைக்கனுப்பிப் போட்டுப் பாயாசமெல்லாத்தையும் குடிச்சுப் போடுவியள்." தன்னுடைய வயதுக்குரிய பாணியில் குறும்புத்தனமாகச் சொன்னான் சண்முகம்.

"இல்லை ஐயா! உன்னை விட்டிட்டு நாங்கள் குடிக்க மாட்டோம். இந்தா! இதிலை இருபது ரூபா கிடக்குது. மிச்சக் காசு வந்தால் அதுக்கு நீ ரொபியோ, ரிப்பிரிப்பியோ வாங்கு. ஓடிவானை. வாங்கிக் கொண்டு ஓடிவா!" ஒருவாறு சண்முகனைக் கெஞ்சிக் கூத்தாடிக் காசும் கொடுத்தாயிற்று.

சின்னக் குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும். எப்படியெல்லாம் அவர்களைத் தாஜா பண்ண வேண்டுமென்று எனக்கு யாரும் சொல்லித் தர வேண்டியதில்லை. இத்தனை நேரமாக மனைவியும் கெஞ்சித்தானே பார்த்தாள். எதற்கும் மசியாத சண்முகன் இப்போது நான் சொன்னவுடன் போய் விட்டான் தானே! கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் எனக்குள் நான் பெருமைப்பட்டுக் கொள்கின்றேன்.

"என்னப்பா கடைக்குப் போனவனை இன்னும் காணயில்லை. உவன் எங்கை போய் விளையாடிக் கொண்டிருக்கிறானோ!"

"மனைவி இப்படிச் சொல்லும்போது எனக்கும் ஒரு சந்தேகம் வரத்தான் செய்தது.

உங்கை கடையடியிலை உவனோட்டப் பொடியள் நிண்டு போளையடிக்கிறாங்களப்பா! உவன் அங்கைதான் நிண்டு மினைக்கடுறான்." எனக்குப் புரிந்ததை நானும் சென்னேன்.

செண்பகம் பாயாசம் கேட்டு அழுது அடம்பிடிக்கின்றாள். பார்க்கப் பாவமாயிருந்தது. சண்முகனை இனியும் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை. அவன் வாறநேரம் வரட்டும். ஏலக்காயில்லாவிட்டால் இப்ப என்ன! பொறுமையாயிருக்க முடியவில்லை. பானையிலிருந்து பக்குவமாகப் பாயாசத்தை இறக்கிப் பெரியதொரு சில்வர் சட்டியில் ஊற்றி அகப்பையால் துழாவி ஆறவைத்துக் கொண்டிருக்க, நானும் கொஞ்சத்தை ஊற்றி ருசி பார்த்து விட்டுச் செண்பகத்திற்கும் பருகக் கொடுத்தேன்.

புயல் வேகமாக ஓடி வந்தான் சண்முகன். "எனக்குத் தெரியும்! நீங்கள் என்னை அனுப்பிப்போட்டு பாயாசம் முழுவதும் குடிச்சிடுவியளெண்டு தான் நானின்னும் கடைக்குப் போகாமல் ஒளிச்சிருந்து பார்த்துக் கொண்டிருந்தனான். பாத்தியளே! என்னை ஏமாத்திப் போட்டு..." சத்தமிட்டு அழுதான் சண்முகம்.

அழுதபடி கோபத்தில் கால்களால் உதைத்தான். பாயாசச் சட்டி இப்போது முகக் குப்புறக் கிடந்தது. பாற்பாயாசம் மிச்சமேயில்லாது தரை முழுவதும் கொட்டிப் பரவிக் கிடக்கின்றது.

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 388

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ✿ | 5 | 6 |
| 7 | | ✿ | 8 | | 9 | | |
| 10 | | 11 | | ✿ | 12 | | |
| 13 | | | ✿ | 14 | | | ✿ |
| | ✿ | 15 | 16 | | | ✿ | 17 |
| ✿ | 18 | | | | ✿ | 19 | |
| 20 | | | ✿ | 21 | 22 | | |
| 23 | | ✿ | 24 | | | | ✿ |

அனுப்புபவர் பெயர்:.......................................

பூரணமான தபால் விலாசம்: .......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. காந்தி அமைத்த ஆச்சிரமம்
5. இரட்டை
7. யானை
8. பார்வையிட்டு அறியும் அறிவு
10. பத்திரிகைகள்/சஞ்சிகைகளின் ரசிகன்
12. வாழை நார்
13. பணத்தை இப்படியும் அழைப்பதுண்டு
14. சிறு குழந்தை
15. இரப்பவன்
18. போட்டியில் ஈடாக வைக்கப்படுவது
19. தயிர் கடைந்து பெறுவது
20. கை
21. முதல் திதி
23. வான்
24. வெகுமதி

### மேலிருந்து கீழ்

1. பழக்க தோஷம்
2. சிறு ஓடம்
3. புத்திரன்
4. பலம்
5. கெட்ட செயல்களில் ஈடுபடுபவன்
6. ஊதல் (ஆங்கிலப் பெயரையே பயன்படுத்துவர்)
9. காதலி மனம் கவர்ந்தவன்
11. திருமணம்
14. சொத்தைப் பங்கீடு செய்
16. ஒரு குறியீடு
17. கூரிய தன்மை
18. வீட்டின் கூரையை ஒட்டி அமைக்கப்படும் களஞ்சியம்
19. இரு குழுக்கள் மத்தியில் இடம்பெறும் சண்டை
20. குரங்கு
21. ஒன்றில் மனந்தோன்றி அவதானித்தல்

---

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 386 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)சிவிகை, (4)கசகசா (8)பிரதியுபகாரம் (10)கடி (11) ஆதாரம் (13)தகுதி (15)தபதி (16)தலைவிரி (17)ரம் (18)நிலைமை (19)மனைவி (20)சில (21)பாதி (22)திரவம்

**மேலிருந்து கீழ்**

(1)சிபி (2)விரகதாபம் (3)கைதி (4)கபடி (5)சகா (6)கரங்குவி (7)சாம் (9)யுகம் (11) ஆதரவு (12)ரதி (13)தலைமை (14)திரிசூலம் (16)தலைவிதி (18)நிலை (19)மதி (20)சிவ

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 386 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

பா.தர்ஷிகா,
இல.73/7, காட்டுப்பள்ளிவாசல் வீதி,
மூர் வீதி, மன்னார்.

**2 ஆம் பரிசு**

தி.வினுஷியா
செட்டியார் வளவு, நவிண்டில்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**

செல்வன் த.இந்துயன்,
தரம் 4 B,
யாழ்.புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**

செல்வன் த.இலக்கியன்
"தேன் தமிழ்"
கைதடி வடக்கு, கைதடி.

**5 ஆம் பரிசு**

சிவானந்தம் தயூரா,
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

**பாராட்டுப் பெறுவோர்**

மு.பாஸ்கரகுமார்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

ப.சகுந்தலராணி,
இல. 18/15A, மாரியம்மன் வீதி,
முருகேசர் வளவு, திருநெல்வேலி.

அ.மேரி பிறக்ஸீடா
இல 13, அண்ணாநகர், பிரதானவீதி,
வவுனியா.

சொற்சிலம்பம் போட்டி
இல.388
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(07.10.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.388 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 11.10.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 386 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாயா

## செம திகில்

இரண்டு கதைகள் திரையில் ஓட ஆரம்பிக்கின்றன. ஒரு கதை, மாநகரின் புறத்தே இருக்கும் மாயவனம் என்ற காட்டையும் மனநலக் காப்பகம் ஒன்றின் மர்மங்களையும் பற்றியது. காப்பகத்தில் கர்ப்பவதியாகச் சேர்க்கப்பட்டு இறந்து போன ஒரு பெண்ணைப் பற்றி ஆராய்ந்து எழுதப்படும் தொடர் கதையின் கதாசிரியர், அதை வெளியிடும் பத்திரிகை முதலாளி, அவரது மனைவி, அதற்குப் படம் வரையும் ஓவியர் ஆகியோரின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள் வழியே பரபரப்பாக நகர்கிறது அந்தக் கதை.

இரண்டாவது கதையில் கணவரைப் பிரிந்து கைக்குழந்தையுடன் வாழும் அப்சரா (நயன்தாரா) என்ற பெண் பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார். கணவன் மீதிருக்கும் மனத்தாங்கல் காரணமாகத் தனித்துப் போராடும் அவருக்குக் கடும் பண நெருக்கடி.

இதற்கிடையில் மாயவனம் குறித்து எடுக்கப்பட்ட பேய்ப்படம் ஒன்று வியாபாரம் ஆகாமல் முடங்கிக் கிடக்கிறது. அதை இரவுக் காட்சியில் தனியாளாகப் பார்ப்பவர்களுக்கு ரூ. 5 லட்சம் பரிசு என அறிவிக்கிறார் அதன் இயக்குநர். பண நெருக்கடியால் வாடும் அப்சரா அந்தப் படத்தைப் பார்க்க ஒப்புக்கொள்கிறார். அந்தப் படத்தைப் பார்க்கும்போது அவருக்கு ஏற்படும் அமானுஷ்யமான அனுபவங்கள் தாம் மீதிக்கதை.

இரண்டு கதைகளையும் இணைக்கும் புள்ளியை மிகத் திறமையாகவும் படைப்பூக்கத்துடனும் உருவாக்கியிருக்கிறார் புது இயக்குநர் அஸ்வின் சரவணன். முதல் பாதியில் எழுப்பப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் நம்பகமான பதில்களைத் தந்து பேய்ப் படம் பார்க்கும் அனுபவத்தை அற்புதமானதாக ஆக்கி விடுகிறது திரைக்கதை. கதாபாத்திரங்களையும் அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிக்கான காரணங்களையும் மிகையாக நீட்டிமுழக்காமல் சின்னச் சின்னக் காட்சிகள் மூலமே பார்வையாளர்களை நம்ப வைத்துவிடுகிறார். உதாரணத்துக்கு ஓவியர் வசந்த் (ஆரி) தனது முன்னாள் காதலை மறக்க முடியாமல் தவிப்பதும், அவரது முன்னாள் காதலி (ரேஷ்மி மேனன்) அவரைச் சமாதானப் படுத்த முயலுவதும், தனக்குத் திருமண வாழ்வில் ஏற்பட்ட சிக்கலை வசந்திடம் சொல்ல முயல்வதுமான காட்சிகள் சிலவே. என்றாலும் அவை முறிந்துபோன காதல் ஒன்றின் வலியையும் கூண்டில் சிக்கிய திருமண வாழ்வொன்றின் தவிப்பையும் நமக்குள் அழுத்தமாகக் கடத்தி விடுகின்றன. சின்னச் சின்னக் கதாபாத்திரங்களும் தமக்கான முழுமையுடன் வந்துபோகின்றன. தலையற்ற உருவம் மரம் வெட்டிக் கொண்டிருக்கிறது என்னும்படிமம் முதலில் வசனமாகச் சொல்லப்படுகிறது. ஒரு கட்டத்தில் காட்சியாக அது வரும்போது அந்தக் காட்சியின் வலிமையும் திரைக்கதையின் ஒருங்கிணைப்பும் அசரவைக்கின்றன.

இருவேறு பாதைகளில் பயணிக்கும் பாத்திரங்களுக்குள் இருக்கும் தொடர்பைத் திரைக் கதை கச்சிதமாக நிறுவுகிறது. ஒவ்வொரு கதாபாத்திரத்தின் பிரச்சினையும் மற்றொரு கதாபாத்திரத்துடன் எவ்வாறு தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைக் காட்சியமைப்புகளில் ஊடுபாவாகப் பின்னியிருக்கும் விதம் ஆச்சரியப்படுத்துகிறது. இரண் டாம் பாதியில் வரும் சுடுகாட்டுக் காட்சி பார்வையாளர்களை உலுக்கி எடுக்கிறது.

படத்தில் சில குறைகளும் இருக்கவே செய்கின்றன. ரூ. 5 லட்சத்துக்காகப் படத்தைப் பார்த்து ஏற்கெனவே ஒருவர் இறந்துபோன சூழலில் பொலிஸாரின் விசாரணைக்கு உட்பட்ட இயக்குநர், அதை மறந்து உடனடியாக அப்சராவுக்குப் படத்தைக் காட்ட ஒப்புக் கொள்வது ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. மாயவனம் பற்றிய இரண்டாம் பாகப் படப்பிடிப்பும் தேவையற்ற திணிப்பாகவே தோன்றுகிறது. தனது படத்தில் வரும் இயக்குநரைக் கொல்வதற்கு அஸ்வின் சரவணனுக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டது போலிக்கிறது.

நயன்தாரா தன் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். தோற்றத்தை முன்னிறுத்தும் வேடங்களில் பிரகாசிக்கும் அவர், முழுக்க முழுக்கக் கதாபாத்திரத்தை முன்னிறுத் தும் வேடத்திலும் ஜொலிக்கிறார். அளவான ஒப்பனை அவரது பாத்திரத்தின் நம்பகத்தன்மையைக் கூட்டுகிறது.

அப்சராவின் தோழியாக வரும் ஸ்வாதி, ஓவியராக வரும் ஆரி, திரைப்பட இயக்குநரான மைம் கோபி ஆகியோர் வெகு இயல்பாகத் தத்தமது கதா பாத்திரங்களைக் கையாள்கிறார்கள்.

நாமும் மாயவனத்துக்குள் வந்துவிட்டோமோ என்ற உணர்வைத் தந்துவிடுகிறது சத்தியன் சூர்யனின் ஒளிப்பதிவு. இருளும் ஒளியும் சேர்ந்து விளையாடியிருக்கும் விதமே படத்தின் வெற்றி மற்றும் பார்ப்பவனின் அனுபவம். இருள் எப்போதும் மனிதனுக்குள் பயத்தைக் கவ்வ வைக்கிறது என்கிற உளவியலை நன்கு பயன்படுத்தியிருக்கிறார்கள். வெளிச்சப் புள்ளி விழும் இடம் தவிர சுற்றியிருக்கும் அனைத்தும் இருண்டிருக்கையில் அச்சம் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை ஊடுருவிப் பாய்கிறது. காட்சிகளுக்கு ஏற்ற கச்சிதமான பின்னணி இசையைத் தந்திருக்கிறார் ரோன் ஈதன் யோகன்.

பேய்க் கதை என்றாலும் தாய்மையின் தவிப்பே கதையின் அடிநாதம். வஞ்சிக்கப்படும் பெண்களின் கதையே மாயவனமாக விரிகிறது.

இத்தகைய கதைக்குப் பெண் பாடலாசிரியர்களையே தேர்வு செய்தது பாராட்டத்தக்கது. ஆயிரம் ஆயிரம், தூங்கா கண்கள் ஆகிய பாடல்களை எழு திய குட்டி ரேவதி, நானே வருவேன் பாடலை எழுதிய உமாதேவி ஆகிய இருவரும் கதா பாத்திரங்களின் வலியை எளிமையும் உருக்கமுமாகப் பிரதிபலித்திருக்கிறார்கள். படத்தின் ஓட்டத்துக்குக் குறுக்கே வராத வண்ணம் பாடல்களை இயக்குநர் பயன்படுத்தியிருக்கிறார். நேர்த்தியான திரைக்கதை அமைப்பு, சிறந்த நடிப்பு, வலுவான காட்சிகள் ஆகியவற்றுடன் மாயா உண்மையிலேயே வித்தியாசமான பேய்ப் பட அனுபவத்தைத் தருகிறது. நகைச்சுவைப் பேய்களினால் குளிர்விட்டுப் போயிருந்த தமிழ்ச் சினிமான ரசிகர்களுக்கு மீண்டும் பேய் பற்றிய திகில் அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது மாயா.

# ஊழித் தீ


ஊழித் தீ
ஊரை எரிக்கத் தொடங்கியது
உயிர் தப்பினால்
போதுமென்று
மக்கள் அலறியடித்துக்
கொண்டு
அங்குமிங்குமாகச்
சிதறியோடினோர்கள்
பல்லாயிரக்கணக்கான
மக்கள்

தீயில் கருகி மாண்டனர்
எஞ்சியோர்
தீக்காயங்களுடன்
தப்பியோடி
அகதி முகாம்களில்
அடைக்கலமாயினர்

ஏழெட்டு மாதங்களின்
பின்பு
ஊருக்குத் திரும்பிச்
சென்று
பார்த்தபோது
அவர்களின்
வீடு வாசல்களும்
பொருள் பண்டங்களும்
எரிந்து சாம்பராக
மாறியிருக்கக்
கண்டார்கள்

காம்பர் மேட்டில்
பீனிக்ஸ் பறவைகளாக
மக்கள்!

கா. தவபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்

## எங்க அந்த உருட்டு கட்டை

*கணவன் வீட்டுக்குள் வந்ததைக் கண்டதும்...*
**மனைவி :** வந்துட்டீங்களா...! உங்களைத்தான் தேடிக்கிட்டே இருந்தேன்!.
**கணவன் :** ஏன்?... என்னாச்சு..?..
**மனைவி :** இன்றைக்கு ஒருத்தன் எங்க அப்பாவைப் பத்தி தப்பா பேசிட்டான்,...நானும் அவங்கப்பனை நல்லா திட்டிட்டேன்! ...
**கணவன் :** சரி...!
**மனைவி :** இருந்தாலும் ஆத்திரம் அடங்க மாட்டேங்குது..!அவன் அப்பனோட மண்டைய உடைச்சாத்தான் நிம்மதி!.
**கணவன் :** (கலவரப் பீதியில்...) நமக்கெதுக்கும்மா இந்த வம்பு?மன்னிச்சு விட்டுட வேண்டியதுதானே!.
**மனைவி :** மன்னிக்கிறதா?..அந்த பேச்சுக்கே இடமில்ல.
எங்க அந்த உருட்டு கட்டை.....(என்று தேடிக் கொண்டே செல்ல...)
(வாசலிலிருந்து வந்த மகன்...) மகன் : யப்பா...சீக்கிரம் ஓடிடுப்பா!..
**அப்பா :** ஏண்டா..?
**மகன் :** நான்தான் கோபத்துல தாத்தாவ திட்டிட்டேன்பா!!
**அப்பா :** அடப்பாவி மகனே! வீட்டுக்குள்ள வந்தாலே உசுர கையில பிடிச்சிகிட்டு அலைய வேண்டியதா இருக்கே., அய்யய்யோ ... இப்ப நான் என்ன செய்வேன்..! எங்க போவேன்..! செய்யாத குற்றத்துக்கு நாயா, பேயா அலைய வைக்கிறாங்களே..... இத கேட்க நாதியில்லையா....



என்னம்மா... இப்படி பண்றீங்களேம்மா..!!!



"செத்தது என் மாமியார்...நீ ஏண்டி அழறே..?"

"எனக்கு அந்த நாள் எப்போ வருமோன்னுதான்...!"



"என் பொண்ணு நம்பருக்குஅடிக்கடி ரீ-சார்ஜ் பண்றது நீதானா...!"

"அது... அங்கிள்...!"

"இனிமேல் என் நம்பருக்கும் பண்ணிடு...!"





**மனைவி:** கொஞ்ச நாளைக்கு என்கூடச் சந்தோஷமா இருக்கிற மாதிரி நடிங்க
**கணவன்:** ஏன் .. .. ?
**மனைவி:** அதைப் பார்த்துட்டுத் தான் கண்ணை மூடுவேன்னு உங்கம்மா அடம் பிடிக்கிறாங்களே

-------------------

**பொலிஸ்:** என்னம்மா உங்க கணவர் காணாம போய் இருபது நாள் ஆச்சுன்னு சொல்றீங்க..... ஏன் இவ்வளவு நாள் கழிச்சு வந்து கம்ப்ளைண்ட் பண்றீங்க ?
**பெண்:** இன்னிக்குத் தான் சார் அவரோட சம்பள நாள்.

-------------------

தரகரே.. நீங்க பெரிய விடயத்தை மறைச்சுட்டீங்க.. இப்படி செய்யலாமா..?

ஏங்க.. என்ன ஆச்சு இப்போ..?

பொண்ணு அஞ்சரை அடி உயரம்ன்னு சொன்னீங்க.. சரி.. மூணு அடி அகலம்ன்னு சொன்னீங்களா..?

-------------------

என்ன இவ்வளவு சோகமா இருக்கீங்க... என்னோட மனைவி ஒரு மாசம் என்கூட பேசமாட்டேன் என்று சொல்லிட்டா.

அதுக்கு நீங்க சந்தோஷம் தானே படணும்...

எப்படிங்க...இன்னையோட அந்த ஒரு மாசம் முடியுதே...

**மீனம்மா** @maenammakaval
கைகோர்த்து கூட்டிச் செல்வது அன்பு. தேவையானபோது கையை விலக்குவது பேரன்பு.

**The king makeR** @muthubala_1 4h
மேக்கப் செலவை கம்மி பண்ண எடுத்த முடிவு மாதிரியே இருக்கு பேய் படங்கள் வருகை.

**Priya** @oviyachaaral Sep 4
பாராட்டைப் பொறுத்த வரை, யார் சொல்லுகிறார்கள், யாரை சொல்கிறார்கள் இரண்டுமே கவனிக்கப்படும்.

**manjula** @S1Manjula
குழந்தைகள் எல்லோரும் நாத்திகர்களே... பெரியவர்கள் அவர்களிடம் கடவுளைப் பற்றி பேசாதவரை...

**சேட்டைக்காரன்**
அனைத்து மொழிகளிலும் மௌனம் ஒரே மாதிரி உச்சரிக்கப்படுகிறது.

**Kathir Kaman Mannan**
நான் நல்லவன் என்பதற்கு சாட்சி நான் செய்த எந்த தவறுக்கும் சாட்சி இல்லை என்பதே.

**ஆல்தோட்டபூபதி**
மனைவி பிரசவ அறையில் இருக்கும்போது எவனுமே முழு நாத்திகன் இல்லை.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செ.உமாசுதன்

# புன்னகை தேடுகின்ற விழிகள்!

**புலமைப் பரிசில் பரீட்சை...!!**
**எங்களால் தாங்கிக் கொள்ள**
**முடியவில்லை......**
**நாங்கள் உங்களோடு பேசவுள்ளோம்...**

**சுருள் சுருளளான கேசம்**
**வட்ட வடிவான முகம்**
**அகன்ற கருமையான கண்கள்**
**சிவந்த றோஜா இதழ்கள்**
**சிரிக்கும் போது குழிவிழும் கன்னம்**
**சிறுதுன்பமும் எமை அணுகவில்லை**
**உம் அரவணைப்பில் பாதுகாப்பாய்**
**வளர்ந்து வந்தோம்**
**தத்தித் தாவி பள்ளி நடந்தோம்**
**ஆசிரியம் எனும் புலமையால் எம் அறிவில்**
**புதுமை கண்டோம்**
**ஈர் ஐந்து பத்து வயதினில் புதுத் தடையை**
**எதிர்கொண்டோம்**
**புலமைப்பரிசில் பரீட்சையெனும்**
**தடைதாண்டலில்**
**தட்டுத்தடுமாறி நின்றோம்**
**புலமை கொள்ள புத்தகப் பூச்சியானோம்**
**படி...படி... என்ற நர்த்தனத்தால்**
**சிறகொடிந்த பறவையானோம்....**
**பரீட்சை நெருங்க..... நெருங்க....**
**கல்விச் சுமையின் கனதியால்**
**துவண்டுபோனோம்**
**இருந்தும், பரீட்சை எனும் தடையை**
**விரைவாய் தாண்டினோம்**
**ஆனால், புலமைப் பரீட்சையுடன் சேர்த்தே**
**பரிசிலை தொலைத்தோம்**
**எம்மிடமிருந்த புன்னகை என்ற**
**அந்தப் பரிசிலைத்தான் உண்மையாய்**
**தொலைத்தோம்**
**தொலைந்த அந்த புன்னகையை**
**தேடித்தேடி அலைகிறோம்**
**பூப்போன்ற எம்மனம் வாடி நிற்குது**
**காயம்பட்டு வீழ்ந்து விடாமல் இருக்க**
**துடிக்குது**
**நாம் வாடி வீழ்ந்திடாமல் புன்னகை**
**தந்திடுங்கள்**
**விருட்சமாய் வேரூன்ற நல்வழி**
**தந்துவிடுங்கள்**

எதிர்காலத்தின் முத்தான சிற்பிகள் சிறார்கள். புதிதாய் பூத்த பிஞ்சு உள்ளங்கள். போரின் அவலம் தந்த வலிகளைவிட பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். தமிழர்களின் மூலதனம் கல்வி. அந்தக் கல்வியில் உயர்ச்சி பெற இந்தச் சிறுவர்கள் படாதபாடுபடுகின்றனர். புலமைப் பரிசில் பரீட்சை எனும் பேர் அவதாரம் கண்டு வெலவெலத்துப் போகின்றனர். நசியும் பிஞ்சுகளாய் மாறி வலிகளின் விளிம்பில் தத்தளித்து தங்கள் சிரிப்பைத் தொலைத்து விட்டனர். அந்தச் சிரிப்பைத்தேடி அங்கும் இங்கும் அலைகின்றனர். சிரிப்பை மூடைகட்டிக் கொண்டுவரப் படாதபாடுபடுகின்றனர்.
செயல்திறன் அரங்க இயக்கத்தினர் மேடையேற்றிய சிரிப்பு மூடை நாடகத்தைப் பார்த்த பின்னர் இவையெல்லாம் என் மூளையைக் குடைகின்றன. ஈழத்தின் புகழ்பூத்த நாடக நெறியாளரான தே.தேவானந்தின் இந்த நாடகம், உண்மையில் பெரியவர்களை, ஆசிரியர்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது.
இலங்கையின் கல்வித் திட்டங்களும் கொள்ளையிடல்களும் மாணவர்களைப் பிழிந்தெடுக்கின்றன. ஓடிவிளையாடி, மகிழ்வாய் நண்பர்களுடன் கூடித்திரிகின்ற வயதில் புலமைப் பரிசில் பரீட்சை என்ற தடுப்பு, பெற்றோர்களின் கடுமையான பாதுகாப்பு வலயத்தினுள் தண்டனைகளோடிணைந்த நச்சரிப்புக்கள், க.பொ.த. சாதாரணதரத்திலே ஓர் தடைதாண்டல். அதில் மீண்டால் பல் கலைக்கான தரப்படுத்தல் செயற்றிட்டம். திட்டங்கள், திட்டமிட்டு முடக்குகின்றன. இந்தச் சோதனைகள் எல்லாவற்றுக்குமான அச்சாரத்தை – பிள்ளையார் சுழியை – தரம் ஐந்து புலமைப் பரீட்சையே போட்டுவிடுகிறது. அங்கு தொலைகிறது பிள்ளையின் சிரிப்பு.





அதன் பின்னர் தொடர்ந்து இந்தப் போட்டி உலகத்தில் வெற்றிக்கான ஓட்டம்தான். கண் மண் தெரியாத ஓட்டம்.
கல்வி எங்கள் மூலதனம். அதை நாங்கள் தெளிவாகப் பெறவேண்டும். அதற்காக கட்டுப்பாடுகளை அதிகப்படுத்தக்கூடாது. உறவின் பரிமாணத்தை [illegible] உடல், உள வ[illegible] தைகளின் விடயங்களைப் பெரியவர்கள் அலட்சியப் போக்குடன் அணுகுதல் என்பது பாரதூரமான விளைவுகளை தந்திடும் என்பதை உணரவேண்டும். இன்றைக்குப் பிள்ளை நேயக் கல்வி பற்றி பேசுகிறோம். ஆனால் வகுப்பறை களில் எவ்வளவு தூரம் அதனைக் கடைப்பிடிக்கிறோம்?
குழந்தைகள் எப்போதும் அடம் பிடிப்பவர்கள். அந்தச் சின்ன வயதில் எந்தப் பொருள்களையும் தம்முடன் வைத்திருக்கவே விரும்புவார்கள். அதை நாம் தடுக்க முயல்வோம். எந்த நேரமும் படி படி எனக்கூறி அதை நாம் பறித்து ஒளித்து விடுவோம். இதனால் அந்தக் குழந்தை அடக்கமுடியாத வேதனையால் அழத் தொடங்கும். ஆத்திரம் அடையும். பெரியவர்கள் குழந்தையை அதட்டி அடக்க முயல்வதும், அடங்காத குழந்தைக்கு அடித்து அச்சுறுத்தவும் தலைப்படுகிறோம். இதனால் அந்தப் பிஞ்சு உள்ளம் பாதிக்கப்படுகிறது. உடல் உபாதைக்கு ஆளாகிறது. மகிழ்ச்சி தொலைகிறது.
பிள்ளை கல்வியை விரும்பிக் கற்கவேண்டும். அது விரும்பும் விதத்தில் கற்பிக்கப்படவும் வேண்டும். வகுப்பறையில் உள்ள 40 குழந்தைகளும் ஒரே விதத்தில் கல்வியை விரும்பிக் கற்காது. ஆனாலும் எம்மிடம் உள்ள முறைமை அதைத்தான் சொல்கிறது. இந்த நிலையை உணர்ந்து ஆசிரியர்தான் பிள்ளை விரும்பிக் கற்பதற்கான நுட்பங்களைஅறிமுகப்படுத்தவேண்டும். பல சமயங்களில் அப்படி நடப்பதில்லை. படிப்பு பிள்ளைகள் மீது அழுத்தமாக விழுந்துவிடும்படிதான் ஆசிரி யர்கள் பலர் நடந்துகொள்கிறார்கள்.
குழந்தைகளின் விடயத்தில் சிறந்த அணுகுமுறைகளைப் பெரியவர்கள் கடைப்பிடிக்கத் தவறும் பட்சத்தில் எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தைக் காணும் வாய்ப்புத் தவறிவிடும். [illegible]ால் கொடூரமான விளைவு [illegible]றுவடை செய்ய நேரிடும். பெரியவர்கள் சிறுவர்கள் மீது ஆதரவை, அன்பைக் காட்டி நன்னடத்தை உடையவர்களாக அவர்களை மாற்றிக்கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவது அவசியமாகிறது.
இந்த மனப்பாங்கு மாற்றம் பெறும்வரை குழந்தைகளின் உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். பூப்போன்ற அந்த மென்மையான மனங்கள் வாடி வீழ்ந்து விடாமல் பாதுகாப்பதாலேயே எதிர்கால விருட்சங்கள் வேரூன்றி வளரும். பூ, காயம்பட்டு வாடி விழுந்து விடுமானால் வெறும் சருகு மட்டுமே மிஞ்சும் என்பதைப் பெரியவர்கள் கருத்தில் கொள்ளுதல் நல்லது. இதைத்தான் தேவானந்தின் சின்னஞ் சிறு நடிகர்கள் பெரியவர்களோடு இணைந்து நடிப்பின் ஊடாகச் சொன்னார்கள். பூப்போன்ற சிறார்கள் மேடையில் ஏறிநின்று தங்களின் அவலங்களை நடிகர் அவதாரம் எடுத்து வெளிப்படுத்தினார்கள். நசியும் பிஞ்சுகளாய் மாறியும், வலிகளின் விளிம்பில் தத்தளித்தும் தங்கள் சிரிப்பைத் தொலைத்துவிட்டு அந்தச் சிரிப்பைத்தேடிப் பெறுவதற்காக வாரத்தில் ஒரு நாள் பூங்கா என்றும் விளையாட்டு என்றும் அலையும் தமது நிலையை அவர்கள் அழகுற வெளிப்படுத்தினார்கள்.
எங்களின் சிரிப்பை, சந்தோசத்தை திருப்பித் தாருங்கள் அன்பான பெற்றோரே, அன்பான சமூகத்தவரே, அன்பான குருவே எனக் கேட்கின்றனர் அந்தப் பிள்ளைகள். சிரிப்பும் மகிழ்ச்சியும் தங்களுக்குள்ளேயே இருக்கிறது; அதைக் கொன்றுவிடாதீர்கள் என்று பெரியவர்களிடம் மன்றாடுகிறார்கள். பதிலாக பெரியவர்களிடம் இருந்து அன்பைத் தரும், அரவணைப்பைத் தரும் புன்முறுவலை எதிர்பார்த்திருக்கின்றனர் அந்தப் பிஞ்சுகள்.

**ஓடி விளையாடு பாப்பா......**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா........**
**கூடி விளையாடு பாப்பா......**
**ஒரு குழந்தையை வையாதே பாப்பா...!!**

என்றான் மகாகவி பாரதி. தேவா[illegible] சிரிப்பு மூடை நாடகமும் அதனைத்தான் [illegible] அளிக்கை வடிவிலே எமக்குச் சொல்கிறது. எல்லாப் பெற்றோரும் கட்டாயம் பார்க்க வேண்டிய நாடகம் அது. பார்த்து முடிந்து வீடு திரும்பிய பின்னும் அந்த நாடகத்தின் தாக்கம் எம்மைவிட்டு அகலவில்லை என்றால் அது மிகச்சிறந்த நாடகம்தானே! வாய்ப்புக் கிடைக்கும்போது நாடகத்தைப் பாருங்கள் பெற்றோர்களே உங்கள் மனச்சாட்சி [illegible] நிச்சயம் கேள்வி கேட்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பே சுகத்தின் வழி



ஆர்.கார்த்திகேயன்

உலகின் தீமைகள் ஒரு எதிர்மறை எண்ணத்தில்தான் தோன்றுகின்றன. அதற்கு நியாயமான காரணங்கள்கூட இருக்கலாம். ஆனால் தீமைகள் கண்டிப்பாக ஒரு ஆரோக்கியமற்ற சிந்தனையில்தான் உருவாகின்றன. ஒரு மனதில் வரும் ஒரே எண்ணம்தான் விதை. அது வெளியில் சொல்லாய்ச் செயலாய் மாறுகையில் பலரைப் பாதிக்கிறது. பின் அது சங்கிலித் தொடராகிச் சரித்திரமாய் மாறுகிறது. ஆரம்ப எண்ணம் மட்டும் மட்டுப்பட்டிருந்தால் பல எதிர்வினைகள் நிகழாமல் மட்டுப்பட்டிருக்கும்.

***உறவுச் சிக்கல்கள்***

வெறுப்பு, நிராகரிப்பு, அச்சம், சந்தேகம், ஆத்திரம், பொறாமை என ஏதோ ஒரு எதிர்மறை உணர்வுடன் தான் முதல் எண்ணம் பிறக்கிறது. உங்கள் உணர்வு எதிர்மறையாக இருந்தால் எண்ணம் நிச்சயம் எதிர்மறையாகத்தான் இருக்கும். கடுங்கோபத்திலோ அல்லது துக்கத்திலோ நேர்மறை எண்ணங்கள் வர முடியுமா என்ன?

ஒருவர் உணர்வும் சிந்தனையும் இன்னொருவரைத் தீவிரமாகப் பாதிக்கிறது. இதனால்தான் நம் உறவுகள் நம் உணர்வுகளைப் பல சமயம் தீர்மானிக்கின்றன. உறவுகளில் காயங்களும் விரிசல்களும் பிளவுகளும் நிகழ்வதற்கும் ஆயிரம் நிகழ்ச்சிகளைக் காரணமாகச் சொல்லலாம். ஆனால், அத்தனைக்கும் மூல காரணம் சில ஆதார எதிர் மறை உணர்வுகளும் எண்ணங்களும் தான்.

இன்றைய சந்ததியினரிடம் உறவுச் சிக்கல்கள் ஏராளமாக உள்ளன. பெற்றோர்கள், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள், உறவினர்கள், பணியிடத் தோழர்கள் என அனைவரிடமும் கருத்து வேறுபாடுகளும் ஒவ்வாமைகளும் பெருகி வருகின்றன.

***காப்பது எம்பதி***

குடும்ப வாழ்க்கை பெரிதும் மாறி விட்டது. மனிதர்களின் எண்ணிக்கையைவிட அறைகளின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. நாமே சுவர்களை எழுப்பிக்கொண்டு நாமே தனிமையில் வாடுவதாகப் புலம்புகிறோம். எல்லா மனிதர்களின் மேலும் புகார் பட்டியல் இருக்கிறது. நீங்கள் யாருடனும் நிம்மதியாய், அமைதியாய் இல்லை என்பது உண்மை என்றால் ஒன்று தான் நிஜம். நீங்கள் உங்களிடம் மனதளவில் நிம்மதியாய், அமைதியாய் இல்லை!

உறவுகள் யாரையும் தனியாகக் குற்றம் சொல்ல முடியாது. உங்களைப் போலவே உங்கள் எதிராளியும் அமைதி கெட்டுப்போய்ப் புகார் பட்டியலோடு சுற்றிக்கொண்டிருக்கிறார் என்பதுதான் பல நேரங்களில் நிஜம். யாரோடு பிரச்சினையோ அவரிடம் பேசினால் அவர் தரப்பு நியாயங்களைப் புட்டு புட்டு வைப்பார். யாராவது அதை முதலில் தனியாகக் கேட்டிருந்தால் உங்களைத் தான் குற்றவாளியாகப் பார்ப்பார்கள்.

உறவுகளைப் புரிந்து கொள்ளப் பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் திறன் வேண்டும். இதை ஆங்கிலத்தில் எம்பதி என்பார்கள். அலோபதி, ஹோமியோபதியை விட வெங்கடாஜலபதிக்கு அடுத்து உங்கள் உறவைக் காப்பது இந்த எம்பதியாகத் தான் இருக்கும்!

உறவுச் சிக்கல் வரும் நேரத்தில் அடுத்தவர் நிலையில் நம்மை நிறுத்திப் பார்ப்பது தான் புரிதலை ஏற்படுத்தும். இது சுலபமல்ல. ஆனால் சற்று முயன்றால் சாத்தியப்படும்.

அதற்கு முதலில் சில பாலபாடங்கள் அவசியம்.

***பார்வைக் கோணம்***

எந்த விடயத்திலும் ஒருவர் மட்டும் சரி, மற்றொருவர்தான் தவறு என்ற நிலையிலிருந்து விலகி வர வேண்டும். இருவரும் சரியாகவோ அல்லது இருவரும் தவறாகவோகூட இருக்கலாம். அதனால் குற்றத்தை யார் மீது திணிக்கலாம் என்ற பார்வையை விடுத்து நடுநிலைக்கு வாருங்கள்.

எங்கிருந்து பார்க்கிறோமோ அங்கிருந்து உண்மைகள் மாறும். நமக்குப் பகத் சிங் விடுதலை வீரர். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு தீவிரவாதி. அதே போல நாம் தீவிரவாதி என்று கருதுபவர்களை வேறுபலர் விடுதலை வீரர்களாகக் கொண்டாடுவார்கள். இது பார்வைக் கோணம் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

பிறரைக் குற்றம் சொல்லுமுன் அந்த நிலையில் நாம் இருந்தால் என்ன செய்வோம் என்று கற்பனை செய்து பார்ப்பது இந்த எம்பதியை வளர்க்கும். லஞ்சம் பற்றிப்

**எந்த வியியத்திலும் ஒருவர் மட்டும் சரி, மற்றொருவர்தான் தவறு என்ற நிலையிலிருந்து விலகி வர வேண்டும். இருவரும் சரியாகவோ அல்லது இருவரும் தவறாகவோகூட இருக்கலாம். அதனால் குற்றத்தை யார் மீது திணிக்கலாம் என்ற பார்வையை விடுத்து நடுநிலைக்கு வாருங்கள்.**

புலம்புபவர்கள் அவ்வளவு பெரும் பணம் உங்களைத் தேடி வந்தால் கண்டிப்பாக மாட்டேன் என்று சொல்வீர்களா? என்று யோசியுங்கள். அரசு இலவசங்கள் பற்றிக் குறை சொல்பவர்கள், உங்கள் ரேன் கார்டில் இலவசமாகக் கார் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று யோசியுங்கள். அந்த ஆள் கேரக்டர் சரியில்லை என்று குற்றம் சொல்லுமுன் அந்த வாய்ப்பும் வசதியும் வந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று யோசியுங்கள்.

இது பிறர் குற்றங்களை நியாயப்படுத்தும் செயலில்லை. பிறர் சூழலைப் புரிந்து கொள்ளும் முயற்சி. அவ்வளவுதான்.

எல்லா மனிதர்களும் தங்களுக்கு அந்த நேரத்தில் சரி என்று படும் விடயங்களைச் செய்கிறார்கள். அந்த நேர அறிவுக்குத் தக்க முடிவுகள் எடுக்கிறார்கள்.

***மன்னிப்பு***

பிறர் செய்த தீங்கால் மனதில் வரும் வன்ம எண்ணம் கூட மிகவும் தீமையானது என்று சொல்கிறார் புத்த மகான்.

வெறுப்பு அன்பை வளர்க்காது. பழி உறவைச் சரி செய்யாது. ஒன்று மட்டும்தான் உறவைச் சுகப்படுத்தும் வழி. அது மன்னிப்பு.

மன்னிப்பவர்கள் திடமானவர்கள். அன்பு மயமானவர்கள். அறிவாளிகள். வெறுப்பும் கோபமும் எதிராளியைவிட தன்னை அதிகமாக அழிக்கும் என்று உணர்ந்தவர்கள். சிக்கல் சங்கிலியைத் தங்கள் பக்கத்திலிருந்து அறுக்கத் தெரிந்தவர்கள்.

மன்னிப்பவர்கள் தாழ்ந்து போவதில்லை. மாறாகப் பெரும் ஆன்மப் பலம் பெறுகிறார்கள். உறவுகளில் குற்றம் பார்த்தால் நீங்கள் தனிமைப் பட்டுப் போவீர்கள். எதிராளியின் பலவீனத்தை உணர்ந்து, அந்த நிலையில் தன்னை வைத்துப் பார்த்து, மன்னித்து விடும்போது மீண்டும் உறவு பலப்படும்.

மன்னிக்க முடியாத தவறு என்று ஒன்று இல்லை. அதை உங்கள் எதிராளி மட்டும் செய்யவில்லை. அதே போல நீங்களும் தவறே செய்யாத பிறவி அல்ல. பிறர் தவறை மன்னிக்கையில் நீங்கள் உங்கள் தவறுகளுக்கு உங்களை மன்னிக்கிறீர்கள். அன்பும், மன்னிப்பும், கருணையும் தான் இந்தப் பூமியை வாழ்விக்க வல்ல சக்திகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானம் கோட்பாடல்ல செயற்பாடு!

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

உலக சர்வதேச சமாதான தினம் புரட்டாதி 21ஆம் திகதியாகும். ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதம் 21 ஆம் நாளிலே சமாதான தினம் கொண்டாடப்படுகிறது. 1981இல் இருந்து ஒவ்வோர் ஆண்டும் செப்ரெம்பர் மாதத்தில் வரும் மூன்றாம் செவ்வாய்க்கிழமையிலே கொண்டாடப்பட்டு வந்தது. 2002ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தினம் செப்ரெம்பர் 21இல் கொண்டாடப்படுகிறது.

உலக சமாதானம் என்பது, உலக மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து, அரசியல் சுதந்திரம், அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றில் பங்கேற்கின்ற இலட்சியத்தைக் குறிக்கின்றது. உலகில் சகல முன்னேற்றத்துக்கும் அடிப்படையானது சமாதானமாகும். சமாதானம் என்பது வெறுமனே ஓரிரு செயற்பாடுகளை ஒட்டியது அல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட சில கூட்டுச் செயற்பாடுகளின் பேறாகவே நிலையான சமாதானமும் அதனூடாக நிலைபேண்தகு அபிவிருத்தியும் ஏற்படும் என்பது ஏ.பீ.சி.ஐ.யூவின் நம்பிக்கை ஆகும். உலகின் நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் பெரும்பணி யுனெஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உலக சமாதானம் ஆண்டுக் கொரு முறை கொண்டாடப்படும் ஒன்றல்ல. நாளும் பொழுதும் மனதில் நினைத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு தினமாகும். இதன்மூலம் சமாதான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படும். யதார்த்தமாக உலகை நோக்கும்போது எங்கே சமாதானம்? எது சமாதானம்? அடைந்து விட்டோமா? அடைவதில் உள்ள தடைகள் எவை? எனச் சிந்திக்கும் ஆர்வம்கூட இந்த விழிப்புணர்வால் ஏற்படுகின்றது. எனவே சமாதான தினம் கொண்டாடப்பட வேண்டிய ஒரு தினமாகும். இன்றைய சூழ்நிலையில் சமாதானம் என்பது முக்கியத்துவமான ஒன்றாகும்.

மனித உரிமைகளையும், கடமைகளையும் செயற்படுத்துவதற்கு இன்றியமையாது தேவைப்படுவது சமாதானமாகும். சமாதானம் கோட்பாடல்ல. அது செயற்பாடு. செயற்பட்டால்தான் சமாதானம் அர்த்தமுள்ளதாகும். உருவாகும் சமாதானம் வன்முறையற்ற வழிகளில் உருவாக வேண்டும். ஒற்றுமையின் உச்சப் பயனே சமாதானத்தின் ஊன்றுகோல். நல்ல மனநிலையின் மூலம் சமாதானம் தோற்றுவிக்கப்படலாம். நல்ல மனநிலை முரண்பாடுகளை நீக்கிக் கொள்ள உதவும். நல்ல எண்ணம், அதன் வழி முரண்பாடற்ற சமுதாயம் என அதன் தொடரே, சமாதானம் ஆகும். எனவே முரண்பாடுகளற்ற நல்ல மனநிலை ஏற்படுவதன் மூலம் நல்லொழுக்கத்துடன் கூடிய மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த வாழ்வு கிடைக்கும்.

சமாதானத்தின் அவசியம் ஒவ்வொருவராலும் உணரப்பட வேண்டும். அதுவே சமாதானத்தின் தூண்டியாகும். தற்கால சூழ்நிலையில் உறவுகளை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களை நினைப்பதன்மூலம் சமாதானத்தின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. அத்துடன் போரின் விளைவால் உடல், உள, பொருளாதார நிலைகளில் பாதிக்கப்பட்டவர்களையும் குறிப்பாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் எண்ணும்போது மனவெதும்பலோடு சமாதானத்தின் அவசியம் உணரப்படுகிறது.

அடிப்படையில் மனித இனம் நல்லது. சூழ்நிலைதான் அதைக் கெடுக்கின்றது. எனவே பொருத்தமற்ற சூழ்நிலைக்குள் அகப்படாது நேர்ப்பாங்கான மனதுடன் வாழ்வோமாயின் அதுதான் ஆரோக்கியமான சமாதானத்துக்கு வழிவகுக்கும். அத்துடன் வார்த்தைப் பிரயோகங்களும் சில சந்தர்ப்பங்களில் சமாதானத்தை எட்ட முடியாத நிலையை தோற்றுவிக்கக் கூடும். ஆகவே உரியவர்கள், பெரியவர்கள் பேசும் போது நிதானித்து நன்மை பயக்கும் வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும். நாவை அழிவுக்கன்றி ஆக்கத்துக்குப் பயன்படுத்த வேண்டும். கனிவான அமைதியான சூழலைக் குழப்பாத சொற்களைப் பரிமாற வேண்டும். நாவினால் எம்மைக் கட்டுப்படுத்தி நேரிய வழியில் செல்வோமாக. நாவடக்கம் கோடி நன்மை தரும்.

மிகச்சிறிய வயதிலே சமாதானத்துக்கான அறிவு புகட்டப்படவேண்டும் பாடசாலைகளிலும் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டு வடிவம் கொடுக்கப்பட வேண்டும். அறிவியலிலும், சமயத்திலும் சொல்லப்படுவது போல மனம்தான் எல்லாவற்றுக்கும் முன்னோடி. எனவே மனதில் மாற்றம் ஏற்படவேண்டும். சிறுவர்களிடையே காணப்படும் வேற்றுமைகள், பிரிவினைகளைக் களைவதன் மூலம் நிலையான ஒற்றுமை, சமாதானம் மலரும்.

ஒரு மனிதனின் ஆரோக்கியம்மிக்க நீண்ட ஆயுளைத் தீர்மானிக்கும் பல்வேறு காரணிகளில் நாடு என்பது மிக முக்கியமானது. அமைதியான சூழலும், பொருளாதார வளர்ச்சியில் ஒரு மனிதன் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் காரணிகளில் மிகமுக்கியமாகக் காணப்படுகிறது. இவற்றின் அடிப்படையில் பிரிட்டனின் பொருளாதார புலனாய்வுப் பிரிவு 2013ஆம் ஆண்டு மேற்கொண்டுள்ள ஆய்வின் பிரகாரம் பிறந்து வாழ்வதற்குரிய அமைதியான சூழலைக் கொண்ட நாடாகச் சுவிற்ஸர்லாந்து தெரிவு செய்யப்பட்டது. இதில் இலங்கை 63ஆவது இடத்தில் காணப்பட்டது.

உலகில் உள்ள 162 நாடுகளில் வன்முறைகளற்ற, பண்புகள் மற்றும் அளவீடுகள் போன்ற 22 தரக்கணிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு 2013இல் சமா தானச் சுட்டெண் கணிக்கப்பட்டது. உலகளாவிய சமாதான சுட்டெண்களில் இலங்கை 110-ஆவது இடத்தில் இருந்தது.

ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட பொருளாதார மற்றும் அமைதிக்கான நிறுவகத்தின் 162 நாடுகள் தொடர்பாக எடுக் கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 2014 இல் உலக அமைதிச்சுட்டியில் இலங்கை 105ஆவது இடத்திலும், 2015இல் இலங்கை 114 ஆவது இடத்திலும் பின்னடைவில் உள்ளது.

மேற்குறித்த தரவுகளின் அடிப்படையில் நோக்கும்போது இலங்கையில் சமாதானம் என்பது மிக எளிதாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல என்பது புலனாகிறது. இருப்பினும் நல்லாட்சி கொண்ட தேசிய அரசால் சாத்தியமாகலாம் என்ற தன்னம்பிக்கையுடனும் மனோபலத்துடனும் இருந்துதான் பார்ப்போமே.

அத்துடன் பலவகை வித்தியாசங்கள் எமக்கிடையே இருப்பினும் நாம் மனித குலத்தினரே என்ற எண்ணம், எல்லோர் மனதிலும் இன, மத, மொழி வேறுபாடின்றித் தோன்றுமாயின் அதுவே சமாதானத்தின் முதற்படியாகும். எனவே முதலில் சமாதானம் எல்லோர் மனங்களிலும் மலரட்டும். அதுவே ஆரோக்கியமான நிலையான சமாதானம் மலர வழிசமைக்கும்.

## சர்வதேச விசாரணையே வேண்டும்

கந்த பேரின்பம்

ஆண்டாண்டு காலமாய் எம்மினம் அழிக்கப்பட்டபோது
எத்தனை குழுக்கள் கண்துடைப்புக் கொமிசன்கள்
சன்சோனி ஆணைக்குழு, காணாமற்போனோர் ஆணைக்குழு
சர்வதேச மாண்பு மிக்கோர் குழு மகிந்த அரசின்
நல்லிணக்க ஆணைக்குழு எத்தனை குழுக்கள், கொமிசன்கள்
வெலிக்கடை கொலைகள், அக்சன் பாம் ஊழியர்கள்,
திருமலை மாணவர்கள், செஞ்சோலைச் சிறார்கள்,
செம்மணிப் படுகொலைகள் இவற்றில்
எதற்கு நீதி வழங்கினார்கள் எல்லாம் வெளிவேசம்...
ஐம்பத்தெட்டில் இருந்தே அழிக்கப்படும் தமிழினம் எங்கே முடிவு?
ஐ.நாவும், சர்வதேசமும், அமெரிக்காவும், மன்னிப்புச் சபையும்
பாதிக்கப்பட்ட எம்மினத்துக்குக் காதில் பூச்சுற்றுகிறார்கள்
இப்போதும் உள்ளக விசாரணை, ஏமாற்றுவேலை
கள்ளரே நீதிபதி கொலைகாரரே மத்தியஸ்தம்
கடைசியாக முள்ளிவாய்க்காலில் முடிந்த அவலம்
இலட்சத்துக்கு மேல் கொன்று குவித்தார்கள்
சாட்சிகளின்றியே சம்காரம் செய்தார்கள் இறந்த எம்
பெண்களையும் நிர்வாணமாக்கி ஈனத்தனம் செய்தார்கள்
மகிந்த ராஜபக்சவின் மாண்புறு படையினரும் உலக நாடுகளும் சேர்ந்து
உயிர்க் கொலை செய்தார்கள் அகால்மாய்க் கொன்றபின்
ஆறு ஆண்டுகள் கடந்து போனதை உள்ளக
விசாரணை என்பது உலகும் சேர்ந்த ஏமாற்றல்
தாமதிக்கப்பட்ட நீதி சாய்ந்து போன நீதி
எம்மினத்தைக் கொன்று குவித்த மகிந்தவையும்
படையையும் போர்க் குற்றங்களிலருந்து காப்பாற்றி
விடுவிக்க மைத்திரி அரசு எடுத்த உள்ளக விசாரணை
ஒப்புக்குச் சப்பாணி ஊருக்கடி பெண்ணே...
மகிந்த போயென்ன? மைத்திரி வந்தென்ன?
பேரினவாதக் குட்டையில் ஊறிய மட்டைகள் இவர்கள்...
சர்வதேச விசாரணையே தமிழருக்கு வேண்டும்.....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முதலாவது யாழ்ப்பாண சர்வதேச விழாவில் விருது வென்றவர்கள்.

> “யார் யாரோ முதலாளிகள் வந்து ஈழச் சினிமாவை நாசமாக்கிவிடும் முன்பாக, நாம் புகுந்து அதை நல்லபடியாக்கி விடவேண்டும்
> –இயக்குநர் லெனின்

# யாரும் நாசமாக்கிவிட முன்னர்...

■ தட்சா ஜோ, செ.ஷேபா

யாழ். சர்வதேச திரைப்பட விழா 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெற்று முடிந்துள்ளது. குடாநாட்டில் சுயாதீன திரைப்படங்களை கொண்டாடுதல் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வை சிலோன் தியேட்டர்ஸ் மற்றும் அஜன்டா 14 ஆகியவையுடன் இணைந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை ஏற்பாடு செய்திருந்தது.

“குடாநாட்டில் சுயாதீனமான திரைப்படங்களைக் கொண்டாடுவதே எமது நோக்கம். நடைபெறவுள்ள நிகழ்வு போர் அழிவுகளிலில் இருந்து மீண்டெழுவதாக அமைவதோடு கலையைப் பயன்படுத்தலானது மக்களைச் சென்றடைதல் என நம்புகின்றோம். இந்த விழா சினிமாவின் ஊடாக சமூகங்கள் தமது எல்லைகளைக் கடந்து ஒருவர் மற்றவருடன் இடைவினை புரிவதற்கான ஓர் வெளியினை உருவாக்கும் என எண்ணுகின்றோம்” எனத் தெரிவித்திருந்தார் விழாவின் இயக்குநரான அனோமா ராஜகருணா.

ஆறு நாள்கள் நடைபெற்ற இந்தத் திரைப்படவிழாவில் வடமாகாணத்தில் தயாரிக்கப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட குறும்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. விழாவில் 20 நாடுகளின் திரைப்படங்கள் பங்குபற்றின. ஏற்கனவே விருதுகள் வென்ற, விமர்சனபூர்வமாகப் பாராட்டப்பட்ட 22 ஐரோப்பிய திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 45 கதைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மூத்தோரைக் கௌரவித்தல் மற்றும் இளம் தலைமுறையினை ஊக்குவித்தல் என்கிற வகையில் யாழ். சர்வதேச திரைப்பட விழாவானது மூன்று விருதுகளினையும் அதனது முதலாவது அமர்வில் வழங்கியது. வாழ்நாள் சாதனை விருது யாழ்ப்பாணத்தின் மூத்த திரைப்பட விமர்சகரான அ.ஜேசுராசாவுக்கு வழங்கப்பட்டது. பார்வையாளர்களின் விருது வென்ற குறுந்திரைப்படமாக இயக்குநர் சி.சிவராஜின் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'பை' (த பாக்) தெரிவு செய்யப்பட்டது.

இலங்கையைத் தவிர ஏனைய நாடுகளில் இருந்து காட்சிப்படுத்தப்படும் 12 அறிமுகத் திரைப்படங்கள் அறிமுக திறனாய்வு விருதுக்காக போட்டியிடுவதாகவும் யாழப்பாணத் திரைப்பட விழாவுக்கு வந்து பார்வையிடும் பார்வையாளர்கள் சிறந்த குறும்படங்களை வாக்களித்து தேர்ந்தெடுக்கலாம் எனவும் அது மிகச் சிறந்த குறும்படத்துக்கான பார்வையாளர் விருதாக வழங்கப்படும் எனவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் சிறந்த அரங்கேற்ற திரைப்படமாக 'த ஸ்டேஜ் ஒப் பமிலியர்' திரைப்படம் நடுவர்களின் தீர்ப்பால் விருதை வென்றது. அதன் இயக்குநர் மலித் ஹெகொட.

தென்னிந்திய வர்த்தக – மலின – சினிமாக் களையே பார்த்துப் பழக்கப்பட்டுப் போன யாழ்ப்பாணத்துப் பார்வையாளர்களுக்கு சர்வதேச திரைப்பட விழா என்பது புதிய அனுபவம் தான். ஆனால், எத்தனை பேர் அந்த அனுபவத்தைப் பெற்றனர்? விழாவின் ஆரம்ப நிகழ்வில் கைலாசபதி அரங்கு நிறைந்த பார்வையாளர்கள் இருந்தனர். மாணவர்கள் அதிகளவில் இருந்தனர் என்றாலும்கூட அது ஒரு பெரும் ஈர்ப்பாக அமைந்தது. ஆனால் அடுத்தடுத்த நாள்களில் காட்சிக் கூடங்களிலும் திரையரங்குகளிலும் ரசிகர்களின் வருகை மிக மிக மந்தமாகவே இருந்தது. ஒரு காட்சியில் 30 அல்லது 40 பேர் இருந்தால் அதிகம் என்பதுதான் நிலை.

துறைசார்ந்தோருக்கு இந்த விழா அரிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதை மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் திரைத் துறை சார்ந்து ஈடுபாட்டோடு உள்ளவர்கள் பலர் இருந்தாலும் அவர்களுக்கான பயிற்சிகள் போதாது என்பதே விழாவிற்கு வந்திருந்த தேசிய விருது பெற்ற தென்னிந்திய தொகுப்பாளர் லெனினின் கருத்து. அவர் மட்டுமல்ல வெளிநாட்டுத் திரைத்துறையினர் பலரும் அதைத்தான் கூறியிருந்தனர். எனவே இந்தக் காலத்தில் அவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளும் நிகழ்த்தப்பட்டன. யாழ்ப்பாணத்தின் இளம் குறும்பட இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், இசையமைப்பாளர்கள், நடிகர்கள் உள்ளடங்கலாக துறை சார்ந்த அனைவரும் இந்த விழா தமக்கான வாய்ப்பை வழங்கியுள்ளது என்றே சொல்கின்றனர்.

“யாழ்ப்பாணத்தில் இப்படியான சர்வதேச விழா நடக்கவேண்டும் என நாங்கள் விரும்பினம். இது எமக்கான களம். இதனால் என்ன என்ன நன்மைகள் கிடைக்கும் என்று துறைசார்ந்தோருக்குத் தான் தெரியும். வெளியில் இருந்து பார்க்கிற சிலருக்கு இப்போது இந்த விழா தேவைதானா என்று நினைக்கத்தோன்றும். ஆனால் தேவைதான். எமது திறமைகள், படைப்புக்களை சர்வதேசத்துக்குக் காட்ட இந்த விழாக்கள் வாய்ப்புக்களை வழங்குகின்றன. சர்வதேச திரைப்படங்களைப் பார்த்துக் கற்றுக்கொள்வதற்கும் இது ஒரு வாய்ப்பு” என்பதே துறைசார்ந்த இளம் கலைஞர்களின் கருத்து.

ஆனால், யாழ். மண்ணில் நடைபெற்ற ஓர் சர்வதேச நிகழ்ச்சி தக்க களையுடன் இல்லை என்றும் பலர் குறைப்படுகிறார்கள். “விழா என்னவோ வெற்றிகரமாகத்தான் நடைபெற்றது. ஆனால் அதற்கான ஆர்ப்பரிப்புகள் சர்வதேசம் எனும் மகுடத்திற்குத் தகுந்தனவா? ஏற்பாடுகளின் போதாமைகளின் இதற்குக் காரணம். பத்திரிகைகளே வந்த ஒரு சில செய்திகள் தவிர, ஒரு சர்வதேச நிகழ்வுக்கான ஏற்பாடு கள் எவையும் மேற்கொள்ளப்பட வில்லை. பெரும் எண்ணிக்கையில் மக்களை நிகழ்வு கவராமல் போனமைக்கு இதுவே காரணம்” என்கிறார்கள் அவர்கள். இது உள்ளூர் ஏற்பாட்டாளர் களின் முழுத் தவறு என்றும் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஒரு சர்வதேச திரைப்பட விழா இப்படி நடந்து முடிந்திருக்கக் கூடாது என்பதே அவர்களின் ஆதங்கம்.

“முதல் தடைவை என்பதால் பார்வையாளர்களின் திரட்சி அவ்வளவாக இல்லை. மக்களுக்கு இது பழக்கப்பட்ட ஒன்றல்ல. இது பற்றிப் புரிந்துகொள்ள சில காலம் தேவைப்படும். எதிர்காலத்தில் மக்களைத் திரட்ட முயற்சிகள் எடுக்கலாம்” என்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள்.

நிகழ்வு ஈழத் தமிழ்ச் சினிமாவுடன் எந்தவிதத்திலும் தொடர்புபடாதவர்களின் கைகளில் இருந்தமையும் அது எடுபடாமல் போனமைக்குக் காரணம் என்கிறார் இளம் இயக்குநர் ஒருவர். “யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் பலர் தமது சொந்தப் பணத்தைக் கொட்டிக் குறும்படங்களை எடுத்து வருகின்றனர். நிறையப்பேர் அத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். அப்படியானவர்கள் எவரும் இந்த நிகழ்வுகளுக்குள் உள்வாக்கப்படவில்லை. திறந்த அணுகுமுறை ஒன்று இதில் கடைப்பிடிக்கப் படவில்லை. அவர்களுக்குத் தெரிந்த யாராவது ஒன்றிரண்டுபேர் உள்வாங்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது பொதுவான அணுகுமுறையல்ல. அதைச் செய்திருந்தால் விழா இன்னும் சிறப்பாக மக்களிடம் எடுபட்டிருக்கும்” என்றார் அவர்.

இந்த விமர்சனங்களை எல்லாம் தாண்டி, விழா வெற்றிகரமானதாகவே முடிந்திருக்கிறது என்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள். கிடைக்கப் பெற்ற நேர்மறையான வரவேற்பை எண்ணி நெகிழ்கிறார்கள். எதிர்காலம் இன்னும் வெற்றிகரமாக அமையும் என்று நம்புகிறார்கள்.

“ஈழத் தமிழ்ச் சினிமா இன்னும் கட்டமைக்கப்படாமலேயே இருக்கிறது. தென்னிந்தியாவின் குப்பைகளைப் பார்த்துவிட்டு அதைப்போலவே ஒரு படத்தை எடுக்க முயற்சிக்கிறார்கள். சிவகார்த்திகேயன் மாதிரி நடித்து ஒரு படம் எடுத்திருக்கிறார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றம் இல்லை. அவர்களுக்கு நல்ல படங்களை நாம்தான் காட்டாமல் விட்டுவிட்டோம். இதுபோன்ற நிகழ்வுகள் அந்தப் பணியைச் செய்யும். யார் யாரோ முதலாளிகள் வந்து ஈழச் சினிமாவை நாச மாக்கிவிடுவதற்கு முன்பாக, நாம் புகுந்து அதை நல்லபடியாக்கிவிடவேண்டும்” என்கிறார் இயக்குநர் லெனின்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும்



# ஊடகத் துறையின் சுதந்திரம் 2

ரம்யன்

அந்தக் காலத்தில் போக்குவரத்து இடையூறுகள் தொடர்பாடல் வசதிக் குறைபாடுகள் – நவீனஇயந்திர சாதனங்கள் இல்லாமை போன்ற பிரச்சினைகளை உள்ளூர் பத்திரிகை எதிர்நோக்க நேர்ந்தமை ஒரு புறமிருக்க, உள்ளூர் வர்த்தகர்களின் ஆதரவும் மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஒரு பத்திரிகையை ஆர்வத்தின் காரணமாக அல்லது சேவை மனப்பான்மையில் ஆரம்பித்துவிடலாம். ஆனால் அதனை நிரந்தரமாக நடத்துவதற்கு மக்கள் .ஆதரவு மட்டும் இருந்தால் போதாது. விளம்பரதாரர்களின் ஆதரவும் முக்கியம்.

இதில் மூன்று முக்கிய நிலைகளை நாம் அவதானிக்கலாம். முதலில் ஒருவர் பத்திரிகையை ஆரம்பிக்கவேண்டும். அதற்கான அடிப்படை வசதிகள், ஆளணி மற்றும் விநியோகத்துக்கான அடிப்படைகளை அவர் உருவாக்கிக் கொள்வது முக்கியம். இதில் அவர் என்ன நோக்கத்துக்காக அதனை ஆரம்பிக்கிறார் என்பது கவனிக்கப்படவேண்டியது. நாம் இங்கு பொது நோக்கத்தைக் கொண்டவர்களைப் பற்றியே குறிப்பிடுகின்றோம். அந்தப் பத்திரிகை பொது மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகளையும் கருத்துக்களையும் கொண்டதாக இருப்பதுடன் பிரதேசம் முழுவதும் மூலை முடுக்குகள் தோறும் செல்லும் வகையில் விநியோகமுறை செய்யப்படவேண்டும்.

இரண்டாவது மக்கள் ஆதரவு, மக்கள் ஆதரவு என்பது அந்தப் பத்திரிகையை பொதுமக்கள் விரும்பிப் படிக்கிறார்கள் என்ற நிலையாகும். அதாவது மக்கள் ஆதரவு இருக்கும்போது பத்திரிகை பட்டி தொட்டிகளில் எல்லாம் பேசப்படுவதாகவும் இருக்கும் – கிடைப்பதாகவும் இருக்கும். அவ்வாறான ஒரு நிலைமையில்தான் விளம்பரங்களை எதிர்பார்க்க முடியும். பத்திரிகையின் விற்பனை அதிகரிக்கும்போது விளம்பரங்கள் அதனைத்தேடி வரும் என்பார்கள். இதுவே மூன்றாவது நிலை.

விற்பனையின் மூலம் வரும் வருமானம் பொதுவில் அச்சிடுவது, விநியோகிப்பது, காகித முதலீடு முதலியவற்றை ஈடுசெய்யக்கூடியதாய்க்கூட இருப்பதில்லை. அதனால்தான் பத்திரிகையின் ஆயுள் – அதன் நீடித்த நிலைப்பாடு விளம்பரங்களிலேயே தங்கியிருக்கின்றது.

அந்தக் காலத்தில் அரசியல் போராட்டங்கள் விறுவிறுப்படைந்திருந்த அளவுக்கு அரசுத் துறையினரின் கெடுபிடிகளும் தீவிரமாகவே காணப்பட்டன. அதனால் அடிக்கடி செய்தித் தணிக்கை மற்றும் அரச அதிகாரிகளின் நெருக்குதல்களும் அதிகமாகவே இருந்தன. இந்த நிலையில் தணிக்கை செய்யப்பட்ட செய்திகளையும், அரசு வெளியிடும் அறிக்கைகளையும் மட்டுமே வெளியிட வேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளூர் பத்திரிகைக்கு ஏற்பட்டிருந்தது. இது உள்ளூர்ப் பத்திரிகையின் வளர்ச்சியைப் பெருமளவில் கட்டப்படுத்தியது.

எழுபதுகளில் தென்னிலங்கையில் சேகுவாரா கிளர்ச்சி தீவிர மடைந்திருந்த சமயத்தில் தணிக்கை மிக மோசமாக நடைமுறையில் இருந்தது. அதனால் கிளர்ச்சி பற்றிய செய்திகளைக் கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்ட அளவுக்குக்கூட உள்ளூர் பத்திரிகையால் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது. இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் அரசின் அறிக்கைகளை மட்டுமே பிரசுரிக்க முடிந்தது. அதனால் கிளர்ச்சி பற்றிய விரிவான செய்திகளை மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு வழங்க முடியாமையால் பத்திரிகை பெரிதும் பாதிப்புக்குள்ளானது. ஆனால் அதற்கு பிந்திய ஒரு கால கட்டத்தில் குடாநாடு முழுவதும் அரசு இயந்திரம் முடக்கப்பட்டு, பொலிஸ் தரப்பு செயல் இழந்து இராணுவமும் கோட்டை மதில்களுக்குள் அடக்கப்பட்ட நிலைமை ஒன்று தோன்றியபோது உள்ளூர் பத்திரிகைக்கு பெரும் வரவேற்பு ஏற்படலாயிற்று.

அதேசமயம் பல பத்திரிகைகளும் தோன்றி வெற்றிகரமாகச் செயற்படத் தொடங்கியிருந்தன. தமிழ்ப் பிரதேசங்களில் ஆங்காங்கே அடிக்கடி இடம்பெற்ற சம்பவங்களை விவரமாக வெளியிடக்கூடிய வாய்ப்பு இந்தப் பத்திரிகைகளுக்குக் கிடைத்தது. கொழும்பிலிருந்து வந்த பத்திரிகைகளில் அவை வெளிவந்தாலும் அந்தப் பத்திரிகைகள் காலம் தாழ்த்தியே தமிழ்ப் பகுதிகளில் கிடைப்பதாய் இருந்தது ஒருபுறமிருக்க, காலப்போக்கில் அவை முற்றாகவே தடைப்பட்டுவிட்டன. இந்தக் காலத்தில் அரசின் தணிக்கை முறை கெடுபிடிகளும் செல்லாக்காசாகிப் போய்விட்டன. இதேசமயம் உள்ளூர் விளம்பர தாரர்களும் இங்கே பிரசுரமாகும் பத்திரிகைகளிலேயே அதிக விளம்பரங்களை வெளியிடலானார்கள்.

இந்த நிலைமையில் இந்திய அமைதி காக்கும் படையினரின் வருகை மீண்டும் உள்ளூர் பத்திரிகைகளின் இயல்பான செயற்பாட்டை பெரிய அளவில் பாதிக்கலாயிற்று. அந்தக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கியிருந்தமையால் அவர்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்ள மக்கள் பெரிதும் விரும்பினார்கள். ஆனால், அவை வெளியிடப்படுவதை இந்தியப்படை விரும்பவில்லை. பத்திரிகை காரியாலயங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளமுயன்றது. அது ஒருபுறமிருக்க அந்தக் காலத்தில் செல்வாக்குடன் இருந்த ஈழநாடு பத்திரிகையை இந்திய இராணுவம் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளும் முயற்சியில், ஏனைய பத்திரிகை நிறுவனங்களுக்கு இடையூறு விளைவித்தார்கள். அதன் விளைவு ஈழநாடு புலிகளின் தாக்குதலுக்குள்ளானது.



இலங்கையில் உள்நாட்டுப்போர் தொடங்கி அது முடிவடைந்த காலம் வரையில் ஊடகத் துறையினர் அனுபவித்த தாக்கங்கள் மற்றும் அவை எதிர்கொண்ட சவால்கள், அவைகளையும் மீறி இன்றையநிலை தோன்றியமைக்கான வரலாறு தனியாக ஆராய்ந்து விரிவாக எழுதப்பட வேண்டிய விடயம்.

**பத்திரிகைச் சுதந்திரம்**

பத்திரிகைச் சுதந்திரம் என்பது ஊடக சுதந்திரத்துக்குள் அடங்குவதாகும். மக்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக செய்திகளையும் அவை தொடர்பான விடயங்களையும் வெளியிட்டு வருகின்ற அமைப் புக்களை – சாதனங்களை ஊடகம் என்கிறார்கள். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, தொலைநகல் போன்றவை இதில் அடங்கும்.

இவைகளில் செய்திப் பத்திரிகைகளே இலங்கை–இந்தியா போன்ற நாடுகளின் அதிக சக்திவாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. சகல தரப்பு மக்களையும் சென்றடையும் வாய்ப்பை இந்தப் பத்திரிகைகளே பெற்றுள்ளன.

ஒரு மனிதன்தான் எங்கே போய்க் கொண்டிருக்கிறான் என்பதை அவனுடைய கண்கள்தான் உணர்த்துவதாய் உள்ளன. அதேபோல் ஒரு சமுதாயம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதை அறிய செய்திகள் அவசியமாகின்றன என்கிறார் – டேம் ஒபேகா வெஸ்ட் என் கின்ற பிரிட்டிஷ் எழுத்தாளர். ஒரு சமுதாயத்தின் சமூக, அரசியல், கலை, கலாசாரப் போக்குகளை அந்த சமுதாயத்திலிருந்து வெளிப்படும் செய்திகளில் இருந்தே புரிந்து கொள்ளலாம். அதனால்தான் இன்றைய செய்திகளானைய வரலாறு என்றுகூறப்படுகின்றது.

துப்பாக்கி முனையில் ஆள்கள் கடத்தப்படுகிறார்கள், எவர் எவரோ இனந்தெரியாதவர்களால் சுட்டு அல்லது வெட்டிக் கொல்லப்படுகிறார்கள், அரசியல் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது, நீதிமான்கள் வாய் திறக்காமல் மௌனம் காக்கிறார்கள், உயர்நிலைப் பதவிகளில் இருப்பவர்கள் மனமறிய பொய் பேசுகிறார்கள், பத்திரிகையாளர்கள் தாக்கப்படுகிறார்கள், கடத்தப்படுகிறார்கள், கொலையும் செய்யப்படுகிறார்கள்.

இவ்வாறான செய்திகள்தான் ஒரு சமுதாயம் அல்லது நாடு எந்தத் திசை நோக்கிச் செல்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்ற அறிகுறிகளாகும். இதைத்தான் அந்த எழுத்தாளர் சுட்டிக்காட்டியுள்ளார். ஊடகங்கள் குறிப்பாக செய்திப் பத்திரிகைக்கள் எங்கே சுதந்திரமாக இயங்க முடிகின்றதோ அங்கே ஜனநாயகம் தழைத்தோங்குகின்றது என்பது கருத்தாகும். புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகள் பலவற்றில் ஊடக சுதந்திரம் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடியது. ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் ஊடகத் துறை செழிப்புறப் பேணப்படுவதைப் பார்க்க முடிகின்றது. சிறிய மாநில பத்திரிகைகளும்கூட அரசுகளின் விளம்பரங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.




கிராமிய மட்டத்திலான பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு அரசுகள் வழங்கும் இந்தவித ஊக்குவிப்பானது அவைகள் நின்று நிலைக்கவும் கிராமிய மக்களுக்கு சேவைகளைப் புரியவும் உதவுகின்றது. அதுமட்டுமன்று, அரசுகளின் அறிவித்தல்கள், கிராமிய மட்டங்களில் வசதி குறைந்த மக்களுக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள், சேவைகள் போன்றவைகள் அறிக்கைகள் மூலமும் விளம்பரங்கள் வாயிலாகவும் இலகுவில் போய்ச் சேருவதற்கு உதவுகின்றது.

இந்த விதமான அரசுத் தரப்பு செயற்பாடுகளினால் மூன்று தரப்புக்கள் பயனடைவதைக் கவனிக்கலாம்.

1. அரசுகளின் கிராமிய மற்றும் பின்தங்கிய மக்களுக்கான சேவைகள், சலுகைகள் மற்றும் உதவிகள் பற்றிய அறிவிப்புக்கள் – பணிப்புரைகள் போன்றவை இலகுவாக சம்பந்தப்பட்டவர் களுக்கும் போய்க் கிடைக்கின்றன. இது அரசு தரப்பின் நோக்கம் நிறைவேற உதவுகிறது.

2. இந்த அறிவித்தல் மற்றும் விவரங்கள் யாருக்குச் சென்றடைய வேண்டுமோ அவர்களுக்கு (பின்தங்கிய கிராமிய மக்களுக்கு) இலகுவாகச் சென்றடைகின்றது அவர்கள் அதன் மூலம் பயனடை கிறார்கள்.

3. இந்த அறிவித்தல்கள் மற்றும் பணிப்புரைகள் அரசுகளால் விளம்பர ரூபத்தில் வழங்கப்படும்போது அவைகளை வெளியிடும் பத்திரிகை நிறுவனம் அரசுகளிடமிருந்து உரிய காலத்தில் தனக்குரிய வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றது. இந்தச் செயற்பாடுகள் இலங்கையில் கடந்த காலத்தில் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவு காத்த கிளிகளாகாமல் இருப்போம்!



**சந்திரசேகர ஆசாத்**

இலவம் காய் மெல்ல மெல்ல நிறம் மாறி முற்றிக் கனியும் வரை கிளி அந்தப் பழத்தை உண்டு சுவைக்கக் காத்திருக்குமாம். ஆனால் அது முற்றியதும் வெடித்துப் பஞ்சாகப் பறந்து விடுமாம் அதனால் பலநாள் காத்திருந்த கிளி ஏமாந்து போய்விடுமாம்.

இதன் காரணமாகவே தமிழில், நம்பிக்கையோடு காத்திருந்து ஏமாறுவதை இலவு காத்த கிளி என்ற பழமொழியில் குறிப்பிடுவதுண்டு. இன்று தமிழ் மக்களின் நிலையும் இலவு காத்த கிளியாக மாறிவிடுமோ என்ற அச்சம் பலர் மத்தியில் தோன்றியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கை ஒரு நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தியபோதிலும், அது தொடர்பாக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் பற்றி வெளிவரும் தகவல்கள் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன. இது 47 நாடுகள் கொண்ட கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. முதல் வரைவில் இருந்ததிலும் பார்க்க முன்மொழியப்பட்ட வரைவில் பல விடயங்கள் மாற்றப்பட்டுவிட்டன. இதில் ரஷ்யா, சீனா, கியூபா ஆகிய நாடுகள் மேலும் இந்தத் தீர்மானத்தை நீர்த்துப் போகும் வகையில் செயற்படவுள்ளதாகவும் தெரிகிறது.

## இலவு காக்கும் தமிழர்கள்

2002 தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை தமிழ் மக்கள் மேல் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகள் தீவிர அக்கறை காட்டி வருகின்றன. அப்படியான அழுத்தங்கள் ஏற்படுத்தப்படும் போதெல்லாம் இலங்கை அரசு நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு போன்ற கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சர்வதேசத்தை ஏமாற்ற முயன்று வந்தது. எனினும் 2012ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர்களில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால் அப்போதும் இலங்கையின் ஆட்சியாளர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுத்து சர்வதேசத்துடன் ஒரு சண்டித்தனப் போக்கையே கடைப்பிடித்து வந்தனர்.

இதன் காரணமாக 2014ஆம் ஆண்டு அமெரிக்காவும் வேறு சில நாடுகளும் இணைந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இந்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தன. அந்த விசாரணையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் தற்சமயம் 30 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையில் இல்லாதபோதும் நியாயங்களைத் தேடும் பணியில் அது பல காத்திரமான பரிந்துரைகளைக் கொண்டிருந்தது. குறிப்பாக இலங்கையால் நடத்தப்படக்கூடிய உள்ளக விசாரணைகள் நியாயங்களை வெளிக்கொண்டு வர மாட்டா எனவும் ஒரு கலப்பு நீதிமன்றத்தின் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அது பரிந்துரை செய்திருந்தது.

தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அந்தப் பரிந்துரைகள் அமைந்திருந்தன. ஆனால் அந்த அறிக்கையின் அடிப்படையில் அமெரிக்கா எதிர்வரும் 30ஆம் திகதியளவில் நிறைவேற்றவுள்ள புதிய தீர்மானம் தமிழர்களை இலவு காத்த கிளியின் நிலைக்குத் தள்ளிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி விட்டது.

## நீதிப் பொறிமுறையின் குழப்பம்

ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கலப்பு நீதிமன்றம் என்பது நீக்கப்பட்டு சர்வதேசப் பொறிமுறையுடன்கூடிய நம்பகமான விசாரணை என்ற பதம் முதல் வரைவில் பயன்படுத்தப்பட்டது. பின்னர் அது மேலும் மாற்றப்பட்டு, சர்வதேச மற்றும் பொதுநலவாய நீதியாளர்கள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கியதான இலங்கையின் நீதிப் பொறிமுறை என்று ஆக்கப்பட்டுள்ளது.

அதாவது 2014 இல் அமெரிக்கா முன்வைத்த முதலாவது முன் வரைவிலேயே தற்போதைய தீர்மானமும் திரும்பிப்போய் நிற்கப் போகிறதோ என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சில பகுதிகள், இலங்கையில் உள்ளக விசாரணை இடம்பெறுமானால் அது நியாயங்களைத் தேடுவதில் வெற்றிபெறுவது கடினம் என்பதைச் சுட்டிக்காட்டி இருப்பதைக் கவனத்தில் கொள்ளாமல் விடமுடியாது. குறிப்பாக இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கான கட்டமைப்பின் அடுக்குகள் இன்னும் குலைக்கப்படாமலேயே நிலைபெற்றுள்ளன எனவும் சர்வதேசச் சட்டங்களுக்கு அமைய சர்வதேச நீதிபதிகள், சட்டவியலாளர்கள் கொண்ட ஒரு கலப்பு நீதிமன்றம் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலமே பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயத்தைத் தேட முடியும் என அந்த அறிக்கை பரிந்துரை செய்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம், இராணுவ புலனாய்வுப் பிரிவுகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றவாளிகளைத் தப்ப வைக்கும் செயற்பாடுகள், பொலிஸாரின் நடவடிக்கைகளில் அரசியல் ஊடுருவல்கள், எங்கும் புரையோடிப் போயிருக்கும் பௌத்த சிங்கள மேலாதிக்கம் என்பன இங்கு நீதியைத் தேடுவதில் பெரும் தடைக்கற்களாக உள்ளமையை நாம் அவதானிக்க முடியும்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பும் இந்தக் கட்டமைப்புக்கள் அப்படியே நிலவி வரும் காரணத்தாலேயே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை உள்ளக விசாரணைகள் மூலம் நீதியைத் தேட முடியாது என்பதை வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவின் முன் வரைவில் கலப்பு நீதிமன்றம் என்பதற்குப் பதிலாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள புதிய முறைமை அந்த அறிக்கையின் அடிப்படை நோக்கமான நீதியின் தேடலையே சீர் குலைத்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

## இலங்கையின் நிலைப்பாடு

ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை வெளிவந்த பின்பு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலப்பு நீதிமன்றம் இலங்கைக்குப் புதியது அல்லவெனவும், 1971இல் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது கதிர்காம அழகி மன்னம்பெரி சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டமை தொடர்பாக ஒரு கலப்பு நீதிமன்றம் நிறுவப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கலப்பு நீதிமன்றத்தில் இலங்கையின் சார்பில் நியமிக்கப்படும் நீதிபதிகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக இருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

அதாவது அறிக்கையில் கருத்துகளுக்கு எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்காமலே அதனுடன் இணைந்து போகும் வழியில் அவர் தனது கருத்துகளை வெளியிட்டிருந்தார். ஆனால் அமெரிக்காவின் தீர்மான நகல் முன்வைக்கப்பட்ட பின்பு இலங்கையின் தொனியில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளக விசாரணையே இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்ட விதத்தில் இடம்பெறும் என அறிவித்துள்ளார். அதேநேரம், பொதுநலவாய நீதிபதிகள், சர்வதேச நீதிபதிகளை அடக்கிய இலங்கையின் நீதிப் பொறிமுறையை உருவாக்கக் கோரும் அமெரிக்கத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாகவும் இலங்கை அரசு அண்மையில் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கலப்பு நீதிமன்ற விசாரணையை நான் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. நீதியான ஒரு விசாரணை நடத்தப்பட்டால் அவரும் கூண்டில் ஏற்றப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே மங்கள சமரவீர குற்றங்களில் நேரடியாக ஈடுபட்ட படையினர் மட்டுமன்றி குற்றங்களுக்குக் கட்டளையிட்டவர்களும் தண்டிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்து விட்டார். எனவே மகிந்தவும் அவரின் ஆதரவாளர்களும் கலப்பு நீதிமன்றத்துக்கு மட்டுமன்றி எந்த ஒரு நீதியான விசாரணைக்கும் எதிராகப் பெரும் போராட்டங்களை நடத்தினால் ஆச்சரியமில்லை.

அவரின் தீவிர ஆதரவாளரான உதய கம்பன்பில இராணுவத்தினர் தண்டனை பெறாமல் தப்பும் விதத்தில் நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப் போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் இந்த அறிக்கையை வரவேற்றதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டுமெனவும் உரக்கக் கோரி வந்த ஜே.வி.பியும் திடீரெனக் குரலை மாற்றி கலப்பு நீதிமன்றத்தை ஏற்கப் போவ்தில்லை எனத் தெரிவித்துவிட்ட்து.

அதேவேளையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தமிழ் மக்களுக்குப் பெரும் வெற்றி என அறிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கத் தீர்மானத்தை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளது.

திருமலையில் இரா.சம்பந்தன் சர்வதேச விசாரணை வேண்டும் என உரையாற்றிய போதும் சில நாள்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்கத் தீர்மானத் தில் சர்வதேச விசாரணையும் உள்ளடங்கப்போவதில்லை என்பது தெளிவாகி விட்டது.

## எதிர்ப்பும் அவதானமும்

எப்படியிருந்த போதிலும் பலம் வாய்ந்த சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஒரு சர்வதேசத்தின் கட்டுப்பாட்டிலான விசாரணையை வலியுறுத்துவதுடன் உள்ளக விசாரணை மீதான நம்பிக்கையீனத்தையும் வெளிப்படுத்தி வரும் நிலையில், வரவுள்ள நீதி விசாரணைகள் நியாயமானதாக நடந்தேற வேண்டிய தேவையும் இருக்கிறது.

சர்வதேச இடர்களுக்கான அமைப்பு சர்வதேசப் பொறிமுறை மூலமே நீதியை நிலைநாட்ட முடியும் எனத் தெரிவித்துள்ளது. மேலும் 9 தமிழ் அமைப்புக்கள் உட்பட 22 சர்வதேச அமைப்புக்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில் இலங்கையில் சிங்களவர்களைத் தண்டனைகளிலிருந்து பாதுகாக்கும் போக்கு மேலோங்கியிருப்பதாகவும் கலப்பு நீதிமன்றில் சர்வதேச நீதியாளர்கள் தீர்மானம் எடுக்குமளவுக்கு வலிமையான தரப்பாக விளங்க வேண்டுமெனவும், இலங்கையில் போர்க்குற்றங்களை விசாரிக்கும் தகுதி பெற்ற சட்ட வல்லுநர்கள் இல்லையெனவும் தெரிவித்துள்ளன.

170 கத்தோலிக்க குருமார்கள், சர்வதேச நிபுணர்கள் குழு ஆகிய தரப்புகளும் சர்வதேச விசாரணை மூலமே நீதியை நிலை நாட்ட முடியுமென வலியுறுத்தியுள்ளன.

இப்படியான ஒரு தேசிய சர்வதேசச் சூழலிலேயே அமெரிக்கத் தீர்மானம் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

2014இல் அமெரிக்காவால் முன் வைக்கப்பட்ட முதலாவது முன் வரைவு சர்வதேச மனித உரிமை அமைப்புக்களாலும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள் காரணமாக மூன்றாவது வரை வளர்ந்து பயனுள்ள வகையில் மாற்றமுற்றது. எனவே, அமெரிக்காவின் தற்போதைய வரைவையும் எமது அமைப்புக்கள் கொடுக்கும் அழுத்தங்கள் மூலமாகப் பயனுள்ள வகையில் மாற்றியமைக்க வேண்டும். நம்பகமான விசாரணை, சர்வதேச அனுசரணை போன்றவை ஆணித்தரமான முறையில் வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்.

நாம் இலவு காத்த கிளியாக ஏமாந்து விடாமல் விழிப்பாய் இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நெருப்பை விழுங்கியவள்! 3

கண. மகேஸ்வரன்

தொடர்கதை



அப்பா வரவில்லை.
அம்மா மட்டுமே வந்திருந்தாள்
அதுகூட ஒரு வகையில் நல்லதாய்ப் போயிற்று மகளின் கலக்கத்தை முகத்தாலுணர்ந்த செல்லம்மா கேட்டாள்
"ஏன் பிள்ளை....? என்ன நடந்தது? ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்? முகமெல்லாம் இருண்டு.... இதென்ன கோலம்...?"
அனித்தாவுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது.
நெடுநாள் சிறையிருந்த ஒரு அப்பாவிக் கைதி, தண்டனையிலிருந்து விடுதலை கிடைத்து வெளியே வந்து, தன் தாய் தந்தை சுற்றத்தைப் பார்த்ததும் எப்படி ஆவலும் அவதியும் ஒருசேர ஒருவித சங்கடத்துள் குமுறுவானோ, அப்படி ஒரு நிலையில் அனித்தா தன்னை மறந்து அழுதாள்.
செல்லம்மாவுக்கு ஆச்சரியமான ஆச்சரியம். உடை நசுங்கவில்லை. கூந்தல் கலையவில்லை. ஒரு கீறல் காயம்கூட இல்லை. அப்படியொரு விபரீதம் நடக்கவும் வாய்ப்பில்லை. அதனை முதற்பார்வையிலேயே புரிந்துகொண்டாள். ஆனாலும், மகளின் முகத்தில் அப்பியிருந்த சோகம் கண்டு மனம் வெந்து, தாயின் வாஞ்சையுடனான ஒரு ஆறுதலுக்காகத்தான், மகளின் கூந்தலைத் தொட்டு வருடியவாறு அவள் கேட்டாள்.
இப்படி விம்மி வெடித்து மகள் அழுவாள் என்று கொஞ்சம்கூட எதிர்பார்த்ததில்லை.
இப்படி இவள் அழுவதற்குக் காரணமென்ன? வீட்டுக்குள் பூட்டி வைத்துத் தன்னைச் சிறைப்படுத்தியிருப்பதான மன விசாரமாய் இருக்குமோ?
தனது இளமைப்பருவத்தில்கூட இப்படி நடந்ததில்லையே என்று, செல்லம்மாவும் மெய்யாகவே விசனப்பட்டாள்.
உண்மைதான். இப்படிப்பட்ட பகலிலேயே பூட்டிச்சிறை வைத்துப் போவதிலும் பார்க்க, கூடவே அவளையும் கூட்டிச் சென்றிருக்கலாம். அல்லது அவளின்ர சிநேகிதி வீட்டுக்காவது போய்வர அனுமதித்திருக்கலாம். அதற்கும் பாவி மனிதன் அனுமதிக்க வேண்டுமே.
"குமர்ப் பிள்ளையளைக் கண்ட கண்ட இடத்துக்கெல்லாம் கூட்டிச் செல்லப்படாது. அதுகள் அடக்க ஒடுக்கமாய் வீட்டுக்கதான் அடங்கிக் கிடக்கவேணும். அதுகளுக்கென்று ஒரு வாழ்க்கை அமைந்தாப்பிறகு என்னவும் செய் யட்டும். ஆனால் ஒருதன்ர கையில பிடிச்சுக் கொடுக்கு மட்டும் இது தவிர்க்க முடியாதது" என்று அடித்துச் சொல்வார் மனிதர்.
"அவளுக்கும் ஒரு வேல வெட்டியெண்டு வந்தாலும், இப்பிடி வைச்சு அடைகாப்பியள் போலத்தான் கிடக்கு...?"
செல்லம்மா அலுத்துக்கொண்ட வேளையில் அவர் சினந்து சொன்னார்.
"அப்படி ஒரு வேலைவெட்டிகூடக் கிடையாமலே அவள் தன் படிப்பைப் பாதியிலேயே முடித்துக்கொண்டாளே...?"
அவள் காதலைச் சுட்டி, அவர் அடித்த ஆப்பு அது.
"அதுக்குக்கூட ஒருவகையில் நீங்கள்தானே காரணம். அதை நினைத்தும் நீங்கள் என்றோ ஒரு நாள் வருத்தப்படப்போகும் நிலையும் வரத்தான் போகுது."
செல்லம்மா கணவனைத் தேவையான இடத்தில் கண்டிக்கக்கூடத் தவறியதில்லை. ஆனால் காலம் என்னவோ அவர்கள் கனவுகளைச் சட்டைசெய்யாமல் தன்பாட்டிலல்லவா நகர்ந்து போகிறது.
பழைய நினைவுகளைத் தகர்த்துக்கொண்டே, மீண்டும் நனவிடை புகுந்தாள் செல்லம்மா.
"எழும்பம்மா... எழும்பி முகத்தைக் கழுவிக் கொண்டு வா? ஆறுதலாய்க் கதைப்பம்."
தன்தோளில் புதைந்திருந்த தலையைத் தொட்டு நிமிர்த்தி ஆசுவாசப்படுத்தினாள்.
தலையைச் சிலுப்பிக்கொண்டாள், அனித்தா.
"அம்மா, இப்பிடியே ஒரு நரகவேதனையில் கிடந்து அழுந்திச் செத்துப்போவதைவிட, என்னை ஆர் தலையிலையாவது கட்டி அடித்து விட்டால் அப்பாவும் சந்தோசமாய் இருக்கலாம். இப்பிடி ஒரு சிறை வாழ்வும் எனக்கு இருக்காது. என்னம்மா...? நான் சொல்லிறது உனக்குப் புரியுதாம்மா?"
அனித்தா அம்மாவின் முகத்தை ஏறிட்டாள்.
அதை ஆமோதிப்பது போல் தலையை மேலும் கீழும் ஆட்டிய செல்லம்மா, கண்களை மெல்லத் துடைத்துக்கொண்டாள்.
அம்மாவின் நிலைமை புரிந்ததும், அனித்தா மீண்டும் சுயத்துக்கு வந்தாள்.
"அம்மா! களைச்சுப்போய் வந்திருக்கிறியள்... ஒரு தேத்தண்ணி கூடப்போட்டுத்தராமல்... சீ, இதென்ன வேலை செய்யிறன்..."
அனித்தா தன்னை விடுவித்துக்கொண்டாள்...
"பிள்ளை, எனக்கவசரமில்லை. நீபோய் முகத்தை அலம்பிக்கொண்டுவா. நான் போய் உடுப்பு மாத்திக்கொண்டுவாறன்."
அம்மாவும் அனித்தாவும் அவரவர் வழியில் பிரிந்து போனார்கள்.
நீண்ட நேரம் மூக்குச்சிந்தி, முகம் கழுவித் துடைத்து பாத்ரூமை விட்டு அனித்தா வரும்போதே, அம்மா தேநீர்க் கோப்பைகளுடன் காத்திருந்தாள்.
தாயும் மகளும் சிறு புன்னகைப் பரிமாறல்களுடன், சகலதையும் மறந்தவர்கள்போல் டைனிங் ரேபிளருகே அமர்ந்தார்கள்.
"குடி பிள்ளை, ரீ ஆறப்போகுது..."
அம்மா பரிவுடன் குழைந்தாள்.
அனித்தாவும் மறுக்காமல் தேநீர்க் கோப்பையை எடுத்து உறிஞ்சிக் கொண்டே சொன்னாள்.
"அம்மா, இப்ப கொஞ்சம் முன்னம் கேசவன் அத்தான் வந்தது...."
செல்லம்மா, மகளின் முகத்தையே இமைக்காமல் பார்த்தாள்.
"அவன் ஏன் இங்கை........?"
"அதெனக்கென்ன தெரியும்? வந்தாலும் வந்தார், பெல்லை அடிச்சுப் பார்க்கிறது... ஒருத்தரும் ஏனென்று கேட்காவிட்டால் திரும்பிப் போறதுதானே... சும்மா சும்மா அடிச்சுக்கொண்டே.... நான் என்ன மாதிரிப் பயந்துபோனன் தெரியுமே! சரி, போனாலும் போனியள்... கேற்றையும் பூட்டிக்கொண்டு போயிருக்கலாமல்லே..."
கடைசி வார்த்தையைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே அம்மா கேட்டாள்..
"நீ ஏன் கதவைத் திறந்தனி? திறந்தனியோ?"
"நான் ஏன் திறக்க....? ஆனால் ஆரெண்டு தெரியாமல் பயந்திட்டன். தொடர்ந்து றிங் பண்ணினதால ஆரும் பிள்ளையள்தான் விளையாடுகினமோ எண்டு யன்னலுக்கு மேலால பார்த்தன். இவர் நின்றார்..."
"...ச்சீ... அந்தக் கழுதைக்கு எங்கை எப்ப போறதெண்டு ஒரு விவஸ்தையே இல்லை... நீ என்ன சொன்னனி?"
"நான் ஒண்டுமே கதைக்கயில்லை. ஸொறி சொல்லி, தான் பிறகு வாறதாய்ச் சொல்லிப் போனார். எனக்குத்தான் தனிய இருக்கப் பயமாயிருக்கம்மா... இனி என்னைத் தனிய விட்டிட்டு எங்கையும் போகாதையுங்கோ பிளீஸ்..."
அனித்தாவின் கெஞ்சுதலில் நியாயம் இருப்பதாக அம்மா உணர்ந்தாள்.
"வரட்டும், கண்டிச்சு வைக்கிறன்!"
அம்மா கறுவினாள்
"அப்பாட்டைச் சொன்னாலும் ஆபத்து... சொல்லாவிட்டாலும் பிழை... என்ன செய்யப் போறியள்...?"
"அதை நான் பார்த்துக்கொள்ளிறன். இதை அவரிட்டச் சொல்லி ஒண்டும் ஆகப்போறதில்லை. அவற்றை வரட்டுக்கௌரவம்தான் உன்னை இந்தப் பாடாய்ப்படுத்துது. இல்லாட்டி இந்நேரம் உன்னையும் ஆரோ ஒருத்தன் கவ்விக்கொண்டு போயிருக்கமாட்டானே... இன சனத்துக்கையும் பொருத்தமாய் வேறை ஆக்களில்லை. எவரைப் பேசுவம் என்றாலும் அதுக்கு கொப்பர் ஒரு நொட்டை. இப்பிடியே இருந்தால் என்ன செய்யிறது? எனக்கும் ஒரு பேரக்குழந்தை எப்பவடா வீட்டில் தவழும் எண்டொரு தவனம்..... ம்.....வெறும் காத்திருப்புத்தான் மிச்சம்."
அம்மா பெருமூச்சு விட்டாள்
திறந்திருந்த கதவினூடே அப்பாவின் தலை கறுப்புத் தெரிந்தது. பிறகு பேசலாம்.
அம்மா எழுந்து வாசலுக்கு நடந்தாள்.

*(நெருப்பு உமிழும்)*

# அகதிகளால் நன்மைகளே அதிகம்!

மூலம்: நியூயோர்க் ரைம்ஸ்
தமிழில்: வெ. சந்திரமோகன்

உயிரைப் பணயம் வைத்து புகலிடம் தேடும் அகதிகள், ஐரோப்பாக் கண்டத்துக்குத் தலைவலியாக இருப்பார்கள் என்று அந்தக் கண்டத்தின் பல தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், அகதிகள் ஐரோப்பாவிலிருந்து பெற்றுக்கொள்வதைக் காட்டிலும் அக்கண்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் பெருமளவில் பங்கேற்பார்கள் என்பதுதான் உண்மை.

தொழிலாளர் சக்தியையும் நுகர்வோர் தேவையையும் அதிகரிப்பதன் மூலம் வளர்ச்சியை அதிகரிப்பதில் அகதிகள் உதவுகின்றனர் எனப் பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அரசிடமிருந்து சலுகைகளைப் பெறுவதிலும் பார்க்க அதிகமாக, வரிகள் மூலம் அரசுக்கு வருமானத்தைத் தருகிறார்கள் அகதிகள்.

ஒரு நாட்டுக்குள் கூட்டம் கூட்டமாக அகதிகள் நுழைவது என்பது, அங்கிருக்கும் மக்களின் வேலைவாய்ப்பைக் குறைக்கும் என்று அர்த்தமல்ல. ஏனெனில், பொருளாதாரத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் வேலைவாய்ப்புகள் இருக்கும் என்றெல்லாம் கிடையாது. அகதிகள் தங்களுடன் பல திறன்களையும் கொண்டுவருகிறார்கள். சிலர் புதிய வேலைவாய்ப்புகளையும்கூட.

தொழில்வளர்ச்சி கண்ட 20 நாடுகளில், பொருளாதார நிபுணர்கள் நான்கு பேர் கடந்த ஆண்டு நடத்திய ஆய்வில், 19 நாடுகளில் உள்ள உள்ளூர் மக்கள், அகதிகளின் வருகையால் பயனடைந்திருக்கின்றனர் என்பது தெரிய வந்திருக்கிறது. 1990களில் டென்மார்க்கில் பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் குடியேறிய பிறகு, அந்த நாட்டு மக்களில் பலர் உடலுழைப்பு சார்ந்த பணிகளிலிருந்து திறன்மிகு தொழில்களுக்கு மாறினர் என்றும், உள்ளூர் மக்கள் கைநிறையச் சம்பளம் வாங்கினர் என்றும் மற்றொரு ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

பிறப்பு விகிதம் குறைவாகவும் முதியோரின் எண்ணிக்கை அதிகமாகவும் இருக்கும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு அகதிகள் வருகை முக்கியத்துவம் வாய்ந்தது. ஏற்கெனவே, ஐரோப்பிய ஒன்றியத்தின் மற்ற நாடுகளிலிருந்து வந்த தொழிலாளர்களை வைத்துத்தான் ஜெர்மனி சமாளித்துக்கொண்டிருக்கிறது. பிறப்பு விகிதம் அதிகமாக உள்ள பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளை விடவும் சிரிய அகதிகளை வரவேற்பதில் ஜெர்மனி அதிக ஆர்வம் காட்டுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக பிரிட்டனைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் அகதிகளின் வருகைக்கு எதிராக இன்னொரு வாதத்தை முன்வைக்கிறார்கள். அது, சலுகைகளை எதிர்பார்க்கும் சுற்றுலா! அதாவது ஐரோப்பிய அரசுகள் வழங்கும் சலுகைகளைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு அகதிகள் வருவதாகச் சொல்லும் வாதம் அது. ஆனால், இதற்கு எந்த ஆதாரமும் இல்லை. பொருளாதார நிபுணர்கள் இருவர் அளித்த ஆய்வறிக்கையின்படி, பிற ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குள் குடிபுகுந்தவர்கள், அரசு அளிக்கும் சலுகைகளை விடவும் அதிகமாக வரி செலுத்துகிறார்கள்.

அகதிகளின் வருகையால் அச்சமடைந்திருப்பது ஐரோப்பியத் தலைவர்கள் மட்டுமல்ல. பொருளாதார ரீதியாக நிறையப் பலன் கிடைக்கும் என்றபோதிலும், குடியேற்றச் சீர்திருத்தத்தை அமெரிக்காவின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கிறார்கள். மேற்கத்தைய நாடுகளில் குடியேற்றங்களை ஆதரிக்கும் நிலைப்பாடு அரசியல் ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம், புதியவர்களால் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஏற்படும் என்று அதன் எதிர்ப்பாளர்கள் ஏற்படுத்தியிருக்கும் வலுவான கருத்தாக்கம் தான். அவர்களுடைய தவறான வாதங்கள், போரிலிருந்தும் ஏழ்மையிலிருந்தும் தப்பமுயலும் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையைக் கடுமையாகச் சிதைத்து விடுகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொனால்டோவை அழைத்துவந்த சிரியச் சிறுவன்



ஸ்பெயினில் நடைபெற்ற உதைபந்தாட்டம் ஒன்றில் வீரர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வில் ரொனால்டோவின் கையைப்பிடித்து அவரை அழைத்து வந்துள்ளான், பெண் நிருபரால் காலை இடறி விழவைக்கப்பட்ட சிரிய அகதியின் மகன்.
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கும் சிரியாவில் இருந்து தமது உயிரைக் காத்துக்கொள்ளும் விதமாக ஆயிரக்கணக்கான அகதிகள் ஐரோப்பிய நாடுகளை நோக்கி படையெடுத்துச் செல்கின்றனர். இவ்வாறு சிரியாவில் இருந்து ஹங்கேரிக்குச் சென்ற அகதிகளை கணக்கெடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது பெண் நிருபர் ஒருவரால் குழந்தையுடன் இருந்த ஒசமா அப்துல் என்ற சிரிய அகதி காலை இடறி கீழே விழ வைக்கப்பட்டார். இந்த வீடியோ தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி பரபரப்பை ஏற்படுத்தியது. நிருபரின் செயலுக்கு கடும் கண்டனங்கள் எழுந்தன. இதைத் தொடர்ந்து அவரைப் பணி நீக்கம் செய்வதாக அவர் வேலைப்பார்த்த நிறுவனம் அறிவித்தது.
இந்த நிலையில் பாதிக்கப்பட்ட ஒசமா அப்துல் சிரிய நாட்டை சேர்ந்த புகழ்பெற்ற கால்பந்து அணிகளுக்கு பயிற்சியாளராக இருந்தவர் என்று தெரியவந்தது. இதனையடுத்து ஸ்பெயின் அவருக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதுடன் தலைநகர் மாட்ரிட் நகரில் உள்ள கால்பந்து பாடசாலை ஒன்றில் அவருக்கு கால்பந்து பயிற்சியாளராக நியமனமும் கொடுத்துள்ளது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஸ்பானிய லீக் ஆட்டமொன்றில் ரியல்மாட்ரிட் – கிரனடா அணிகள் மோதின. இதில் கால்பந்து வீரர்களை மைதானத்திற்கு அழைத்து வரும் குழந்தைகளில் ஒசாமா அப்துல் மகன் சையதும் இடம்



பெற்றிருந்தான். அவன் பிரபல கால்பந்து வீரர் ரொனால்டோவின் கரம் பற்றி மைதானத்திற்குள் அழைத்து வந்தான்.
காலை இடறி விழவைக்கப்பட்ட பொழுது அவன் முகத்தில் இருந்த கவலை, அழுகை அத்தனையும் காணாமல் போய் குறும்பு மிகுந்த சிறுவனாக ரொனால்டோவின் கையைப்பிடித்து தொங்கிக்கொண்டே வந்தான். ரொனால்டோவும் அவனை தட்டிக்கொடுத்து அவர் குறும்புகளை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

# உதைபந்தாட்ட உலகில் ஆரம்பமானது பனிப்போர்



உலகக்கிண்ண உதைப்பந்தாட்டத் தொடர்களை நடத்தும் உரிமங்களை வழங்குவதில் முறைகேடு நடந்திருப்பதாக எழுந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அதிகாரிகள் சிலர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் கைதுசெய்யப்பட்ட சில தினங்களிலேயே சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக இருந்த பிளாட்டர் பதவி விலகினார். இவை அனைத்தும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் நடந்து முடிந்தன.
2022ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரின் உரிமம் கட்டாருக்கு வழங்கப்பட்டதில் அதிக முறைகேடு நடந்ததாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டதனால் திட்டமிட்டபடி தொடர் நடைபெறுமா என்ற குழப்பத்தில் இருந்தனர் ரசிகர்கள். இந்த குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக 2022ஆம் ஆண்டு திட்டமிட்டபடி தொடர் நடைபெறும் என்று தெரிவித்த சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் திகதிகளையும் அறிவித்துள்ளது. இதன்படி 2022 ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி முதல் டிசெம்பர் 18ஆம் திகதி வரை 28 நாட்கள் உலகக் கிண்ணத் தொடர் நடைபெறும்.
சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளபடி தொடர் நடைபெற்றால் ஐரோப்பிய கால்பந்து சம்மேளனம் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஏனெனில் தற்பொழுது நடைபெற்றுவரும் லா லிகா தொடரின் சில முக்கிய ஆட்டங்களும், ஐரோப்பிய உதைபந்தாட்டத் தொடர்களில் சிலவும் குறித்த திகதிகளில் நடைபெற ஏற்கனவெ திட்டமிட்டாயிற்று. இதனால் திகதியை மாற்றியமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆனால் திகதியை மாற்றியமைக்கப்போவது யார்? என்பதே தற்போதிருக்கும் பெரிய கேள்விக்குறி. ஏனெனில் தனது தொடர்களை நடத்தத்திட்டமிட்ட திகதிகளை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு ஏற்கனவே அறிவித்திருந்தும் ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்தை வீழ்த்த திட்டமிட்டு சதி செய்கிறது சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் என்று சாடுகிறது ஐப்ரோப்பிய கால்பந்து சம்மேளனம். ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்தை புறந்தள்ளிவிட்டு தொடரை நடத்தவும் முடியாது. மீறி நடத்தினால் அது உலகக்கிண்ண கால்பந்து தொடராகவே இருக் காது. மொத்தத்தில் ஐரோப்பிய கால்பந்து சம்மேளனமும் இறங்குவதாயில்லை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனமும் இறங்குவதாயில்லை. எது எப்படியோ ஆரம்பமானது பனிப்போர்.



2022ஆம் ஆண்டின் உலகக் கிண்ணத் தொடருக்காக கட்டாரில் அமைக்கப்பட்டுள்ள முழுவதும் குளிரூட்டப்பட்ட மைதானங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org